

# அறிவியல் தமிழின் விடிவெள்ளி

# அறிவியல் தமிழின் விடிவெள்ளி

*தொகுப்பாசிரியர் :*
**ஆர். ராமசாமி**

விலை ரூ.50/-

**மீரா பப்ளிகேஷன்**
AE-5 (103), அண்ணா நகர்,
சென்னை - 600 040.

# ARIVIAL TAMILIN VIDIVELLI

(The Morning Star of Scientific Tamil)

*Compiler :*

**R. RAMASAMY**

**Price : Rs.50/-**

**MEERAA PUBLICATION**

**AE-5 (103), Anna Nagar,**

**Chennai - 600 040.**

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | - | Arivial Tamilin Vidivelli<br>(The Morning Star of<br>Scientific Tamil) |
| Compiler | - | R. Ramasamy |
| Copyright Holder | - | Meeraa Publication<br>AE-5 (103), Anna Nagar,<br>Chennai - 60 040. |
| Language | - | Tamil |
| First Edition | - | 1998 |
| Second Edition | - | 2003 |
| Paper used | - | 11.6 kg. Maplitho |
| Size of the bok | - | Crown Octavo |
| Printing points used | - | 10 points |
| No of pages | - | 200+8 = 208 pages |
| Laser Typesetting | - | Laser Impression<br>.12-B/4, Pulla Avenue,<br>Shenoy Nagar,<br>Chennai - 600 030. |
| Printed at | - | Karis Offset Printers<br>60, Nelson Manickam Road,<br>Aminjikarai,<br>Chennai - 600 029. |
| Binding | - | Paper Back |
| Price | - | Rs.50/- |
| Publishing House | - | Meeraa Publication<br>AE-5 (103), Anna Nagar,<br>Chennai - 600 040 |

# பொருளடக்கம்

**அணிந்துரை** - வலம்புரி ஜான் **1**

**தொகுப்புரை** - தொகுப்பாசிரியர் **5**

**அறிவியல் தமிழின் விடிவெள்ளி** **17**
- ஆர். ராமசாமி

**தமிழ் வளர்ச்சியில் மணவையார் செய்த புரட்சி!** **27**
- மீரா

**மணவையாரின் இஸ்லாமிய இலக்கியப் பணி** **40**
- டாக்டர் வா.சா. பானு நூர்மைதீன்

**சிறுவர் இலக்கியத்தில் மணவையார் பங்கு** **92**
- டாக்டர் பூவண்ணன்

**மணவையாரின் சமய நல்லிணக்கப் பணிகள்** **106**
- அமுதன் அடிகள்

**கலைச் சொல்லாக்கத்தில் மணவையாரின் பங்கும் பணியும்** **126**
- டாக்டர் இராதா செல்லப்பன்

**தமிழில் அறிவியல் இலக்கியமும் மணவையார் சிந்தனையும்** **140**
- ராம் குமார்

**'தமிழ்க் களஞ்சியம்' மணவையார்** **157**
- மு. அறிவானந்தம்

**மொழிபெயர்ப்புப் பணியில் மணவையார்** **175**
- அமுதன்

**தமிழ் வளர்ச்சியில் ''கூரியர்'' பங்கு** **187**
- இரா. நடராசன்

# தமிழ்நாடு பெற்ற நற்பேறு
## மணவையார்

"Tamil nadu was fortunate in securing as able and devoted Editor in Manavai Mustafa as a result of which the Tamil edition of the Courier has not only appeared punctually and regularly every month's, it has maitained Unesco's high standard of Journalism in Tamil."

- மாமேதை டாக்டர் மால்கம் எஸ். ஆதிசேஷையா
(யுனெஸ்கோ அறிக்கை, நவம்பர் - 1985)

# மணவையாரின் அரும்பணியைப் பாராட்டிப் பாட பாரதியார் இன்றில்லையே!

*''சென்றிடுவீர் திக்கெங்கும் திரட்டிவந்தே*
*செந்தமிழைச் செழிக்க வைப்பீர் என்று சொன்னோன்*
*இன்றிருந்தால் எங்கள் மணவை முஸ்தபா*
*இயற்றிவரும் புது ஆக்கம் கண்டு போற்றி*
*வெற்றி கொண்டே புது இயல்கள் அனைத்தையுந்தான்*
*வேகமுடன் தமிழ் வளரும் நின்னால் ! என்றே*
*மன்றினிலே உயர்த்திவைத்துப் பாடி நிற்பான்*
*வரகவிஞன் பாரதியும் இன்றில்லையே!''*

- பெருங்கவிஞர் **தெசிணியார்**

# அணிந்துரை

ஞானபாரதி வலம்புரிஜான்

## இல்லந்தோறும் இடம்பெற வேண்டிய இதயமான நூல்!

*முதுபெரும் அறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் செம்மாந்த தமிழ்ப்பணி பற்றிய சிந்தனைகளின் சேர்க்கை இது. இப்படிப்பட்ட வியர்வை மணக்கும் வித்தகத்திற்குப் புத்தகம் என்பதும் பொருந்துமா என்பதே கேள்வி. மொழி, இலக்கியப் போராளி ஒருவரின் பங்களிப்பை ஏறத்தாழ இப்பக்கங்கள் வெளிச்சத்தைப் பார்க்க வைப்பதில் வெற்றி பெற்றிருக்கின்றன.*

*புலவர்கள் பொதுவாக பழம்பெருமை அரியணைகளி லிருந்து படியிறங்கி வரமாட்டார்கள். அப்படியே வந்தாலும் இடம் சுட்டிப் பொருள் விளக்குகிற ஒன்றுதான் பெரும் பாலும் தங்கள் வாழ்க்கைப் பணி என்று இருந்து விடு வார்கள். மணவை முஸ்தபா அவர்கள் தமிழ்ப்பணி என்பது காலத்தால் ஆற்றுகிற பணி என்பதைக் கண்டுகொண்டு தமிழ் மொழியை முன்னெடுத்துப் போனவர் என்பதை எதிரிகளும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.*

அறிவியல் தமிழுக்கு ஆக்கம் தந்தவர்களில் சிலர், அறிவியல் பார்வை உள்ள அளவிற்குத் தமிழ் சிலராக உள்ள போலி புலமை நெறியாளர்களுக்கும் மணவை முஸ்தபா வுக்கும் வேறுபாடு வேர் பிடிக்கிறது. ஆகவேதான் 'அறி வியல் தமிழின் விடிவெள்ளி' என்று மணவையாரை அழைக்கிறபோது மனம் மயிலாகிறது.

பரிபாயச் சொற்களின் கலைச் சொல்லாக்கத்தில் எளிமை, பரவல், பழக்கம், மொழிச் செழுமை, பயன்பாடு இவற்றை அடித்தளமாகக் கொண்டு மணவையார் ஆற்றி யிருக்கிற பணி எப்படிப்பட்டவரின் விழிப்புருவங்களையும் வில்லாகவே வளைக்கும். திருமிகு ஆர். ராமசாமி அவர்கள் ஆழமாக இப்பணியை அணுகியிருக்கிறார்கள்.

கதை புனைய, கவிதை வடிக்கப் பலர் இருப்பதால் மொழியைச் செழுமைப்படுத்தலைத் தமது முழுநேர வேலையாகக் கொண்டார் மணவையார் என்கிற திருமிகு மீராவின் கட்டுரையில் மூதறிவாளர் மணவையாரை பக்கத் திலிருந்து படம் பிடிப்பதாக அமைந்திருக்கிறது.

மணவையாரின் இஸ்லாமியப்பணி பொதுமை நெறியில் புதுமை வளர்க்கும் பெரு நெறி என்பதைத் தக்க சான்றுகளுடன் தந்துள்ளார் டாக்டர் திருமதி. பானு நூர்மைதீன் அவர்கள்.

சிறுவர் இலக்கியத்திற்கு மணவையாரின் பங்குபற்றி எழுதுவதற்கு டாக்டர் பூவண்ணனை விட்டால் பொருத்த மான வேறொருவர் கிடைப்பது அரிது. எட்டாத வானத்தில் கிட்டாத நிலவு. 'விழா தந்த விழிப்பு' என்கிற புத்தகத்தின் வாயிலாக மணவையார் பிஞ்சு நெஞ்சங்களில் வற்புறுத்தி வளர்க்க நினைக்கும் சேமிப்பு உணர்வு செம்மையாய் படிந் திருக்கிறது.

தனிநாயக அடிகளாருக்குப் பிறகு தமிழ்த் தொண்டு ஆற்றுதலில் அவருக்கு நிகர் அவரே என்கிற அளவில் அளப்

பரிய தமிழ்ப்பணி ஆற்றி வருகிற அருள்மிகு அமுதன் அடிகளாரின் ‘மணவையாரின் சமய நல்லிணக்கப் பணிகள்’ என்ற கட்டுரை அடிகளாரின் ஆழப்பார்வைக்கு ஓர் அளவு கோலாகவே அமைந்துள்ளது. வரலாற்றுப் பார்வை, வழுக்கல் இல்லாத சமரச உணர்வு, சமயம் வேறு, சமயர்கள் வேறு என்று விலக்கிப் பார்க்கிற அறிவியல் அணுகல் தப்பறைகளைத் தகர்ப்பதற்காக மணவையாரின் கருத்துப் போர்க்களம் அமைகிற நுணுக்கத் தளங்கள் ஆகியவற்றை அடிகளார் நிரல்பட வழங்கியிருக்கிறார்.

டாக்டர் இராதா செல்லப்பன் அவர்களின் மணவையாரின் கலைச் சொல்லாக்கம் பற்றிய கட்டுரை ஓர் ஆழமான நதியைப்போலவே அசைகிறது. எதிலும் நுண்மாண் நுழைபுல உள்ளத்தோடு அணுகிப் பார்ப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளார் அம்மையார் அவர்கள். Phobia என்கிற சொல்லுக்கு அச்சம், வெறுப்பு என்கிற சொற்களுக்குப் பதிலாக ‘மருட்சி’ என்கிற பொருத்தமான சொல்லைப் பெய்துள்ள மணவையாரின் மகத்தான பணிக்கு பதச்சோறு ஒன்றினைப் படைத்துள்ளார்கள்.

அறிவியல் புனைகதைகளை எழுதுவோர் துரோணர்களைத் துணைக்கு அழைக்காது, தம் வழியில் தாம் சென்று புதிய களங்களைப் புதுக்க வேண்டும் என்கிறார் மணவையார். இத்தகைய வழிகாட்டுதலுக்கு அவர் வாழ்க்கையே வரலாற்றுச் சான்றாகிறது என்பதை திருமிகு ராம்குமார் அவர்கள் சொல்லாமல் சொல்லுகிற இடம் நேர்த்தியாய் இருக்கிறது.

‘துறை தோறும் துடித்தெழுந்து தமிழுக்குத் தொண்டு செய்வாய்’’ என்கிற பாவேந்தரின் பாடல் வரிகளுக்கு ஏற்ப மணவையார் வியர்வையால் எழுதிய விதியாக பல்வேறு கலைக் களஞ்சியங்கள் வெளிவந்துள்ளன. திருமிகு

மு.அறிவானந்தம் அவர்கள் மணவையாரின் ஆய்வுகளில் ஆழங்கால்பட்டவர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

படைப்பிலக்கியவாதிகள் பலர் மொழிபெயர்ப்புப் பணியினை இரண்டாம் தர வேலையாக கருதி வருகிற இந்நாளில், இப்பணியினைத் தமது மொழிக்கும் இலக்கியத் திற்கும் ஆற்றுகிற அளப்பரிய சேவை என்கிற அளவிலே மணவையார் செய்துவருகிறார் என்பதை திருமிகு அமுதன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ் வளர்ச்சியில் 'கூரியர்' பங்கு என்கிற திரு இரா.நடராசன் அவர்களின் கட்டுரை கருதத்தக்க ஒன்று. 'கூரியர்' வாழ்வில் அது தொடர்ந்து நடைபோட நானும் நாடாளுமன்றில் ஆற்றிய பணி ஒரு காரணம் என்பதை மண வையாரே பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நிகழ்காலத்தில் விழுதுகளைப் பரப்பி, எந்தக் காற்றுக்கும் அசையாமல் நிற்கிற ஆலமரத்தைப் போல அமைதிப்பணி ஆற்றிவருகிற மணவையார் அவர்கள் சிம்மாசனத்திற்கே தகுதி ஆனவர்கள்; சின்ன நாற்காலிதான் தமிழர்கள் இப்போது தந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத் தவரை கைகால் முளைத்த கனிந்த விந்தைக்கு இன்னொரு பெயர்தான் மணவை முஸ்தபா. அவரைப் பற்றி நூலே எழுத வேண்டிய எனக்கு இப்போது அணிந்துரை வழங் கத்தான் அவகாசம் இருக்கிறது.

''மணவையார் - அறிவியல் தமிழின் விடிவெள்ளி'' என்கிற அறிவாளர் ராமசாமி அவர்களின் தொகுப்பு தமிழர் இல்லம் தோறும் இடம்பெற வேண்டிய தகுதிமிக்க இதயம் போன்ற நூல்.

சென்னை
15.9.98

ஞானபாரதி
**வலம்புரிஜான்**

# தொகுப்புரை

உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்நூல் அறிவியல் தமிழறிஞர் மணவையாரின் பல்துறை நூல் களையும் பன்முகப்பட்ட அவர்தம் பணிகளையும் பற்றி தக்கவர்களைக் கொண்டு ஆயும் ஆய்வு நூல் என்பதைவிட அறிவியல் தமிழ் என்ற ராஜபாட்டையில் தமிழை 21ஆம் நூற் றாண்டுக்குப் பீடு நடைபோட்டு மணவையார் அழைத்துச் செல்லும் பாங்கை விவரித்துக் கூறுவதே நோக்கமாகும்.

கற்றறிந்த தமிழறிஞர்களெல்லாம் கடந்த காலத் தமிழை - சங்க காலத் தமிழைப்பற்றி அசைபோடுவதையே பெருந்தொண்டாக, தமிழ்ப் பணியாகக் கருதிக் கொண்டி ருக்கும் சூலகட்டத்தில், அடுத்துவரும் நூற்றாண்டுக்கு ஈடு கொடுக்கும் வகையில் தமிழை - அறிவியல் தமிழாக - வளர்த்தெடுக்கும் முயற்சியில் கடந்த நாற்பதாண்டுகளாக முனைப்போடு உழைத்து வரும் அன்னாரின் தகைமையை - முயற்சிகளை - அதனால் தமிழ் பெற்றுள்ள வளமிகு சிறப்பை - ஆய்வு உரைகல்லில் உரைத்துப் பார்ப்பதே இந்நூலின் நோக்கமாகும்.

மணவையாரின் மாண்புகளை விவரிக்க முனைந்த பேராசிரியர் அறிவரசன், மணவை முஸ்தபா தன் தனித் துவத் தமிழ்த் தொண்டால் பிற தமிழறிஞர்களைக் காட்டி லும் எவ்வகையில், எதனால் வேறுபட்டு விளங்குகிறார் என்பதை ''உண்மை'' இதழில் விவரிக்கும்போது,

''மணவை முஸ்தபா - தமிழை அறிந்தவர்கள் அனை வரும் அறிந்த பெயர்; தமிழை அறிந்தவர்கள் அறிந்திருக்க வேண்டிய பெயர்; தமிழை எந்த வகையில் அறிந்திருக்க வேண்டுமோ, அந்த வகையில் அறிந்த அனைவர்க்கும் அறிமுகமாகியுள்ள பெயர்.

'தமிழ் அறிஞர்' என்று பலர் தங்களைச் சொல்லிக் கொள்ளலாம்; சில ஆண்டுகள் தமிழ் இலக்கிய, இலக்கணங் களைக் கற்று தேர்வில் வெற்றி பெறுவதற்காக மட்டுமே படித்துப் பட்டம் பெற்றுத் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பினால் தம் வாழ்க்கைக் குறிக்கோள் நிறை வேறி விட்டதாக எண்ணி மகிழ்ந்து, அவ்வப்போது சில மேடைகளில் பேசி - சில இதழ்களில் இலக்கியக் காட்சிகள் சிலவற்றைக் கட்டுரையாக்கி விட்டு-அந்த அளவிலேயே தாம் தமிழ் அறிஞர் ஆகிவிட்டதாகத் தருக்கித் திரிகின்ற பலரிட மிருந்தும் மணவை முஸ்தபா வேறுபட்டு விளங்குகிறார்.''

''உண்மையாகவே 'தமிழ் அறிஞர்' என்று சொல்லப் படுவதற்கு என்னென்ன தகுதிகளெல்லாம் தேவையோ அத் துணைத் தகுதிகளையும் பெற்றிருப்பவர் மணவை முஸ்தபா.''

என முத்தாய்ப்பு வைத்தாற்போல் கூறியுள்ளார். மணவை முஸ்தபா பல்கலைக்கழகப் படிப்பை முடித்தவுடன் கல் லூரி ஆசிரியர் பணிக்கு அழைப்பு வந்தபோதிலும் 'கிளிப் பிள்ளை' தமிழ்ப் பணி செய்ய விரும்பாமல் காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப, அறிவியல் ஊழிக்கு ஈடு கொடுக்கும் வகையில் தமிழை வளர்க்க, வளப்படுத்த வேண்டும் என்ற திட உணர்வுடன் உழைப்பை உறிஞ்சும் கடுமையான அறிவியல் தமிழ்த் தொண்டுக்குத் தன்மை முழுமையாக ஒப்படைத்து, தன் தளரா முயற்சியின் விளை வாகத் தமிழின் பேராற்றல் கண்டு உலகை வியக்க வைத்துக் கொண்டிருப்பவர்.

ஆனால், இவரது அறிவியல் தமிழ்ப் பணியின் முழுவீச்சைத் தமிழ் மக்கள் முழுமையாக அறிந்து உணர்ந்து தெளிந்திருக்கிறார்களா? என்பது இன்றுவரை கேள்விக் குறியாகவே உள்ளது என்பதை,

''தமிழின் புதிய துறையை எடுத்துக் கொண்டு சுயமாகச் சிந்தித்துச் செயல்பட்டு வரும் திரு. மணவை

முஸ்தபாவை தமிழர்கள் சரியாகக் கண்டு கொண்டிருக்கிறார் களா என்று தெரியவில்லை. கண்டு கொள்ளவில்லை என்றால் அது நாம் செய்யும் தவறு''

(சுப மங்களா - மாத இதழ், மார்ச்சு '93)

எனச் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மக்களால் ஓரளவு புரிந்து கொள்ளப்படா நிலை நிலவியபோதிலும் தமிழ் வளர்ச்சியில் உண்மையான ஆர்வமும் அக்கறையும் உள்ள பெருமக்கள் மணவையாரை சிறப்பாகவே புரிந்து கொண்டு, அவரது தொண்டைப் பாராட்டிப் பரிசும் விருதும் தந்து ஊக்குவித்து வருகிறார்கள் என்பதை நன்றியறிதலுடன் நினைவுகூரத்தான் வேண்டும்.

அத்தகைய ஊக்குவிப்பாளர்களில் தலையாய பெருந் தகையாக விளங்குபவர் தமிழினத் தலைவர், முத் தமிழறிஞர், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களாவார். மணவையாரின் அருந்தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1988ஆம் ஆண்டில் மணவையாருக்கு ''அறிவியல் தமிழ்ச் சிற்பி'' விருதளித்துப் பாராட்டியபோது கூறிய புகழ் மொழி கள், ஊக்க மொழிகள் மணவையாருக்குப் பேரூக்கியாக அமைந்ததெனலாம்.

''மணவை முஸ்தபாவுக்குக் கிடைக்கின்ற பாராட்டுக் கள், வாழ்த்துக்கள் எனக்குப் பெருமகிழ்வூட்டக் கூடியவை; பெருமைத் தரக்கூடியவை. ஏனென்றால், இந்த மரியாதை உழைப்புக்குக் கிடைக்கின்ற மரியாதை; உண்மைக்குக் கிடைக்கின்ற மரியாதை; அவருடைய ஆர்வத்திற்குக் கிடைக்கின்ற மரியாதை; தமிழ் மேலும் வளர வேண்டும், முன்னேற வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு இடையறாது பாடுபடுகிறாரே அந்தப் பணிக்குக் கிடைக் கின்ற மரியாதை'' (முரசொலி 19.6.88)

என்ற டாக்டர் கலைஞரின் சொற்கள் மணவையின் வேக முடுக்கியாக மணவையாருக்கு அமைந்ததென்பதை இன் றும் அவர் பெருமையாகக் கருதுகிறார்.

மணவையாரின் தமிழ்ப்பணி ஆரவாரமேதுமின்றி அமைதிப் புரட்சியாக அமைந்துள்ள ஒன்றாகும். இதைப் பற்றி மறைந்த பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள்:

''வெறும் இலக்கியங்களை மட்டுமே தெரிந்து அல்லது அறிந்து அல்லது ஆய்ந்து தமிழறிஞர்களாக உலா வந்து கொண்டிருப்போரே பொது மக்களுக்கும் புல மக்க ளுக்கும் அறிமுகம் ஆகிவருகின்ற இந்நாளில் தமிழ்ச் சொல்லியல், மொழியியல், அறிவியல் ஆகிய கூறுகளை நன்கு உணர்ந்து கொண்டு, நம் இயற்றமிழ் மொழியை அறி வியல் மொழியாக வளர்த்து வருவதில் பேருழைப்பை நல்கிவரும் தமிழறிவியல் பேரறிஞர் மணவை முஸ்தபா அவர்கள் அனைவரும் பாராட்டும் வகையில் மிகச்சிறப் பாகப் பணிசெய்து வருகிறார். அவரின் தமிழ்த் தொண் டுக்கே பெருஞ்சிறப்புத் தன்மை தருவது, தம் அளவில் அவர் எவ்வகை ஆரவாரமும் விளம்பரத்தனமும் தன்மு னைப்பும் இன்றி, அமைதியாகப் பாடாற்றி வருவதுதான்.

''அவர் எப்பொழுதும் தமிழியலைப்பற்றியே சிந்தித் துக் கொண்டிருப்பது, அவருடன் தொடர்பு கொண்டிருப்ப வர்களுக்கு நன்கு தெரியும். அவர் சிந்தனை, பேச்சு, எழுத்து, செயல் அனைத்தும் தமிழ் வளர்ச்சியை, அதுவும் அறிவியல் தமிழை வளர்த்தெடுப்பது பற்றியே சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதை, அவரை நெருங்கிப் பார்ப்பவர் நன்கு விளங்கிக் கொண்டிருக்க முடியும். அறிவியல் தமிழுக்காக அவர் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணிகள் அள விறந்தனவாகும்''

என 'தென் மொழி' மார்ச் '95 இதழில் தெளிவாகக் கூறி விளக்கியுள்ளார்.

அது மட்டுமல்ல, மணவையாரின் தமிழ்ப்பணி மற்றவர் தமிழ்ப்பணியினின்றும் எவ்வகையில் வேறுபட் டுள்ளது என்பதை விளக்கும்போது,

"வெறும் தமிழை மட்டுமே மேலோட்டமாகக் கற்று விட்டு, ஒன்றுக்கும் உதவாத வெற்றுக்கட்டுரைகளையும் பாடல்கள் என்ற பெயரில் சொற்கூட்டு மடக்குவரிக் குப்பை கூலங்களையும் தகவில்லா சிறுசிறு கட்டுக் கதைகளையும், அடுக்கு நிகழ்வுகளை, நிகழ்ச்சிச் சருகுகளை, பாலியலுணர் வேற்றி பருத்த தாள் கட்டுகளாக வெளியாகும் புதினப் பொக்குகளையும் பரப்பிக் கொண்டு, தமிழறிஞர்களாகவும், தமிழ்க் கவிஞர்களாகவும் கதையாசிரியர்களாகவும் பெருகி வரும் தக்கைத் தமிழர்களுக்கிடையில் தமிழ் வைரங்களா கவும் மாணிக்க மணிகளாகவும் சுடர்விட்டுக் கொண்டி ருக்கும் விரல்விட்டு எண்ணத்தக்க தமிழ்ப் பேரறிஞர்களுள் மணவை முஸ்தபாவும் ஒருவர் என்பதைப் பெருமை யோடும் பெருமிதத்தோடும் குறிப்பிடவேண்டியுள்ளது"

(தென்மொழி - மார்ச் '95)

என விளக்கமாகக் கூறியுள்ளார் பாவலரேறு பெருஞ் சித்திரனார்.

காலத்துக்கேற்ற பணியை மணவையார் உய்த்து ணர்ந்து ஆற்றிவருவதனால் தமிழ் வளர்ச்சி வரலாற்றில் தனக்கெனத் தனிப் பெரும் அத்தியாயத்தை உருவாக்கிக் கொண்டுள்ளார் என்பது மறக்கவோ, மறைக்கவோ இயலாத தொன்றாகும். இதனை 'உண்மை' இதழ்.

"திரு. மணவை முஸ்தபாவுக்கு, தமிழ் வளர்த்த சான்றோர்கள் வரிசையில் மிகுந்த தனித்துவம் உண்டு. காரணம், ஆங்கில மொழியினிடம் அவலப் பிச்சையேற்ற அறிவியல் தமிழனுக்கு உறங்கிக் கிடந்த தமிழின் கருவூ லத்தைத் திறந்து காட்டிய புரட்சியாளர் அவர்"

என்று கூறுவதன் மூலம் தமிழின் திறத்தை, தமிழனின் பெருமையை வானுற உயர்த்திய பெருமைக்குரியவர் மண வையார் என்பது தெளிவாகிறது.

பெறற்கரிய பேராகத் தமிழுக்குக் கிடைத்துவரும் மணவையாரின் தமிழ்ப் பணியைத் தமிழ்கூறு நல்லுலகம் இன்று ஏற்றிப் போற்றத் தவறவில்லை. தமிழ் நாடு அரசு 'கலைமாமணி', 'திரு.வி.க' விருதுகளோடு, சிறந்த மொழிப் பெயர்ப்பாளர்க்குரிய சிறப்பு விருதையும் அளித்துள்ளது. இதன் மூலம் அரசு விருதுப் பட்டியலில் முதலிடத்தை மணவையார் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க சிறப்புச் செய்தியாகும்.

இவரது அறிவியல் தமிழ்ப் பணியைப் பாராட்டி தமிழ் நாடு கூட்டுறவு வங்கி அதிகாரிகள் மன்றம் வழங்கிய 'தமிழ்த் தூதுவர்' பட்டம், இளையான்குடி டாக்டர் ஜாகீர் உசேன் கல்லூரி அறிவியல் மன்றம் வழங்கிய 'வளர் தமிழ்ச் செல்வர்' விருது, சென்னை சிந்தனையாளர் பேரவை சார்பில் டாக்டர் கலைஞர் தந்த 'அறிவியல் தமிழ்ச்சிற்பி' பட்டம், கேரளப் பல்கலைக்கழக விருதுக் கேடயம், பம் மல்-நாகல்கேணி தமிழ்ச்சங்கம் தந்த 'புகழ் பூத்த தமிழர்' பட்டம், ஈரோடு அல்லமா இக்பால் இலக்கியக் கழகம் தந்த 'அறிவியல் தமிழ் வித்தகர்' விருது, மணவைத் தமிழ் மன்றம் வழங்கிய 'அறிவியல் தமிழேறு' விருது, உலகப் பண்பாட்டுக்கழகம் தந்த 'முத்தமிழ் வித்தகர்' பட்டம், ஆழ்வார்கள் ஆய்வு மையம் தந்த எம்.ஜி.ஆர். விருது, திரா விடர் கழக முத்தமிழ் மன்றம் வழங்கிய 'பெரியார்' விருது, தமிழ் மாநில காங்கிரசின் ஒருமைப்பாட்டு மன்றம் தந்த 'மூப்பனார்' விருது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பேரங்கமான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் வழங்கிய குன்றக்குடி அடிகளார் விருது, காஞ்சி காமகோடி பீட, சென்டினேரியன் டிரஸ்ட் தந்த 'சேவா ரத்னா' பட்டம், அண்ணாமலைச் செட்டியாரின் அறக்கட்டளை வழங்கிய ராஜா சர். முத்தையா செட்டியார் விருது முதலாக பல விருது களையும் பல பரிசுகளையும் பெற்று, தன் தமிழ்ப்பணியை முத்திரைப் பணியாக்கிக் கொண்டு வருகிறார் மணவையார்.

சாதாரணமாக ஒரு அரசியல் கட்சியினர் ஒருவரைப் பாராட்டி விருதோ பரிசோ தந்தால், அப்பரிசு பெற்றவரை பரிசளித்த கட்சி சார்புடையவராகவே கருதி, கட்சி முத்திரை குத்திவிடுவார்கள். பிற கட்சியினர் அவரை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். இதுதான் வழக்கம். ஆனால், மணவை யாரைப் பொறுத்தவரை அதற்கு முற்றிலும் மாறுபட்ட நிலையில் விதி விலக்குப் பெற்றவராகத் திகழ்கிறார்.

முதன் முதலாக அ.தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது முதல்வராயிருந்த எம்.ஜி.ஆர். ''கலைமாமணி'' விருது தந்தார். அடுத்து திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டில் ஏறியவுடன் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''திரு.வி.க.'' விருது தந்து பாராட்டினார். அதன்பின்னர் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. முதல்வர் செல்வி ஜெயலலிதா தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் உலகத் தமிழர்களே பாராட்டும் வகையில் 'சிறப்பு விருது' தந்து போற்றினார். தமிழ் மாநில காங்கிரஸின் அங்கமான தேசிய ஒருமைப்பாட்டு அமைப்பினர் ''மூப்பனார்'' விருது தந்தனர். திராவிடர் கழகப் பேரங்கமான முத்தமிழ் மன்றத்தினர் ''பெரியார்'' விருது தந்தனர். எம்.ஜி.ஆர் கழகத் தலைவர் இராம. வீரப்பனைத் தலைவராகக் கொண்ட ஆழ்வார்கள் ஆய்வு மையம் ''எம்.ஜி.ஆர்'' விருதளித்தது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பேரங்கமான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ''குன்றக் குடி அடிகளார் பரிசு'' தந்து பாராட்டியது. இவ்வாறு தமிழக அரசியல் கட்சிகள் பலவும் ஏதாவது ஒருவகையில் இவருக்குப் பரிசும் பாராட்டும் விருதும் தந்து பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இதிலிருந்து ஒரு உண்மை தெளிவாகப் புலனாகிறது. கட்சி மாச்சாரியங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் அரசியல் கட்சியினர் அனைவரும் மணவையாரின் அறிவியல் தமிழ்ப் பணியை ஏற்கின்றனர். போற்றிப் பாராட்டி ஊக்குவிப்பது தங்கள் இன்றியமையாக்

கடமை எனக் கருதுகின்றனர். அனைத்துக் கட்சிகளுக்கும் அப்பாற்பட்ட தமிழ்த் தொண்டாக இவரது தமிழ்ப் பணியைக் கருதுகின்றனர். இது இவரது பணிக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகும். மேலும், அனைத்துக் கட்சியினரும் ஏற்றிப் போற்றும் தனிச்சிறப்புப் பெற்ற அறிவியல் தமிழ றிஞர் இவராகத்தான் இருக்க முடியும்.

ஒரு சமயம் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா தலை மையில் மணவையாரின் நூலை வெளியிட்டுப் பேசிய டாக்டர் தெ.பொ.மீ. அவர்கள் மணவையாரைப் பற்றி,

''திரு. மணவை முஸ்தபாவை ஒரு தனி மனிதராக என்னால் காண முடியவில்லை. அவரை ஒரு இயக்கமா கவே காண்கிறேன்'' எனக் குறிப்பிட்டார்.

இதே உணர்வின் அடிப்படையில் 'தாய்' வார இதழ் தன் தலையங்கத்தில் மணவையாரைப் பற்றியும் அவரது அறிவியல் தமிழ் தொண்டைப் பற்றியும் விவரிக்கும்போது,

''திரு. மணவை முஸ்தபா ஒரு தனி மனிதரல்லர்; இவரே ஓர் இயக்கம். தமிழ் இயக்கத்தைத் தாங்கி வழி நடத்துகிற தனி இயக்கம் இவர். அறிவியல் உலகத்திற்குத் தமிழை அழைத்துவர வேண்டும் என்றுதான் எல்லோரும் சொல்லுகிறோம். சத்தம் சந்தடியே இல்லாமல் அறிவியல் தமிழுக்கு அகல் விளக்கு ஏற்றி வைத்திருக்கிறவர் திரு. மணவை முஸ்தபா. தமிழ் அறிவியல் மொழி என்று அவர் வாதிடுகிறார். இப்படி வாதிடுகிற தகுதி அவருக்கு நிறை யவே உண்டு. காரணம் தனி ஒரு மனிதராக அறிவியல் துறையில் பயன்படத்தக்க ஆயிரமாயிரம் தமிழ்க் கலைச் சொற்களைக் கண்டுபிடித்திருக்கிறார். இந்தச் சொற்கள் நீண்டு வளர்ந்து தெரிகிற நகம் போல் இல்லாமல் உருண்டு திரண்டு ஒட்டித் தெரிகிற சதைபோல தமிழின் உயிரே கலந் திருப்பதைப் போல காணப்படுகின்றன. இவரை ஆசிரிய ராகக் கொண்டு வெளிவரும் 'யுனெஸ்கோ கூரியர்' - 'கலைக்

கதிர்' உட்பட வேறு எந்தத் தமிழ் இதழும் அறிவியல் தமிழுக்குச் செய்திருக்காத சேவையைச் செய்து வருகிறது''

என 'தாய்' வார இதழில் வெளிவந்த தலையங்கம், மணவையாரே ஓர் இயக்கமாக இயங்கி அறிவியல் தமிழை வளர்த்து வருவதைப் பாராட்டுகிறது.

தமிழ் வளர்ச்சியில் அதிலும் அறிவியல் தமிழ் வளர்ச்சியில் தனி வழி கண்டு, அதை வலுவான ராஜபாட்டையாக்கி, ஆற்றல்மிகு அறிவியல் மொழியாகத் தமிழை ஆக்கி வரும் பாங்கை, பாட்டுக்கொரு புலவன் பாரதி இன்றிருந்தால் மணவையாரின் தமிழ்ப் பணி பற்றி என்ன பாடியிருப்பான் என்பதை நினைத்துப் பார்க்கும் கவிஞர் தெசிணி,

''சென்றிடுவீர் திக்கெங்கும் திரட்டிவந்தே
செந்தமிழை செழிக்க வைப்பீர் என்று சொன்னோன்
இன்றிருந்தால் எங்கள் மணவை முஸ்தாபா
இயற்றிவரும் புது ஆக்கம் கண்டு போற்றி
வெற்றிகொண்டே புதுஇயல்கள் அனைத்தையுந்தான்
வேகமுடன் தமிழ் வளரும் நின்னால்! என்றே
மன்றினிலே உயர்த்தி வைத்துப் பாடி நிற்பான்
வரகவிஞன் பாரதியும் இன்றில்லையே!''

என்று தன் ஏக்க உணர்வை வெளிப்படுத்துகிறார். இவ்வாறு பலதரப்பட்டவர்களாலும் ஏற்றிப் போற்றும் வகையில் ஆக்கப்பணி செய்து தமிழின் ஆற்றலை அனைத்து வகையிலும் வெளிப்படுத்தி வரும் மணவையாரின் முயற்சிகளை, அவரது அறிவியல் மற்றும் சமூக, இலக்கியப் பணிகளின் பதிவுகளான நூல்களை அடியொற்றி விரிவான கருத்தரங்கு ஒன்றை நடத்த நண்பர்கள் சிலர் முயற்சி மேற்கொண்டோம். அதற்காகப் பல்வேறு தலைப்புகளையும் ஆய்வாளர்களுக்குத் தந்தோம். அத்தலைப்புகளில் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுகளை திறம்பட நிகழ்த்தி, அவ்வாய்வின்

அடிப்படையில் கட்டுரைகளைத் தீட்டி வழங்கினர். அக்கட்டுரைகளின் தொகுப்புத்தான் இப்போது உங்கள் கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் இந்நூல்.

எனினும், இது மணவையாரைப் பற்றி முழுமையான ஆய்வு நூலன்று. அவரது அறிவியல் தமிழ் வளர்ச்சி முயற்சிகளையும், சிந்தனைகளையும் கோடிட்டுக் காட்டும் முயற்சி மட்டுமேயாகும். ஆய்வாளர்கள் ராம்குமார், மீரா, டாக்டர் இராதா செல்லப்பன், மு. அறிவானந்தம், அமுதன் ஆகியோரின் ஆய்வுக்கட்டுரைகள் இதனை வெகு சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பணியையும் மணவையார் செவ்வையாக செய்து வந்துள்ளார். இஸ்லாமிய சமுதாயச் சிறைக்குள் சிக்கிக் கிடந்த இஸ்லாமிய இலக்கியங்களை மற்ற சமயத்தவர் மத்தியில் கொண்டு வந்து ஆய்வுப் பொருளாக்கிய பெருமை மணவையாரையே சாரும். சீறாப்புராண கருத்தரங்காகட்டும், சூஃபிமார்கள் உருவாக்கிய இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியக் கருத்தரங்காகட்டும் அனைத்துச் சமயத்தவர்களையும் கொண்டு ஆய்வு செய்வித்த பெருமை மணவையாரையே சாரும். 'தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்' போன்ற ஆய்வு நூல்கள் மூலம் இஸ்லாமியப் புலவர்கள் தமிழுக்கு வழங்கிய தன்னிகரற்ற பங்களிப்பை ஆதாரபூர்வமாக வழங்கிச் சிறப்பித்த ஆய்வுகள் ஆகும். இவைகளைப் பற்றி திருச்சி சீதாலட்சுமி இராமசாமி கல்லூரிப் பேராசிரியை டாக்டர் பானு நூர்மைதீனின் 'மணவையாரின் இஸ்லாமிய இலக்கியப்பணி' என்ற ஆய்வுக் கட்டுரை மிகச் சிறப்பாக இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சிக்கு மணவையாரின் பங்களிப்பை விளக்குகிறது.

இன்றைய சமுதாய ஒற்றுமைக்கும் சமய நல்லிணக்கத்துக்கும் மணவையார் இலக்கியம்வழி மேற்கொண்ட முயற்சிகளையும் சமய ஆய்வாளர் என்ற அடிப்படையில்

எழுதிய 'இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்',மற்றும் 'பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்' என்ற நூலையும் ஆய்வுப் பொருளாகக் கொண்டு கிருஸ்தவப் பாதிரியாரான அருட்டிரு அமுதன் அடிகள் எழுதிய 'மணவையாரின் சமய நல்லிணக்கப் பணிகள்' என்ற கட்டுரை மணவையார் இளம் பருவம் முதலே தான் கொண்டிருந்த சமய நல்லிணக்கச் சிந்தனைகளைச் சிந்தைகொள் மொழியில் எடுத்தெழுதி யுள்ளார்.

மணவையாரை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு கடந்த 32 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் சர்வ தேச திங்களிதழான 'யுனெஸ்கோ கூரியர்' இதழ் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்கை, அதனோடு நீண்டகாலத் தொடர்புடைய இரா. நடராசன் திறம்பட விளக்கியுள்ளார்.

இந்த ஆய்வு நூலுக்கு மிக அருமையான அணிந்துரையை வழங்கியுள்ளார் வார்த்தைச் சித்தர், ஞானபாரதி வலம்புரி ஜான் அவர்கள். மணவையார் மீது மிகுந்த பற்றும் பாசமும் கொண்டவர். மணவையாரின் அரிய நூலான 'காலம் தேடும் தமிழ்' படைப்பு வெளிவந்தபோது, அந் நூலுக்கு வெளியீட்டு விழாவையும், அந்நூலின் அடிப்படையில் ஒரு நாள் கருத்தரங்கையும் நடத்தியவர். 'யுனெஸ்கோ கூரியர்' இதழுக்கு நடுவணரசில் இடையூறு ஏற்பட்டபோது, மாநிலங்களவையில் அற்புதமாக பேசி, இதழ் தொடர்ந்து வர வழிவகுத்தவர். இதை மணவையார் எப்போதும் நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறார். அவரது அணிந்துரை நூலுக்குப் பெரும் அணிகலனாக அமைந்துள்ளதெனலாம்.

இந்த ஆய்வுத் தொகுப்பு வாயிலாக மணவையார் ஆற்றிவரும் பன்முகத் தமிழ்த் தொண்டை ஓரளவேனும் சுட்டிக் காட்ட உதவும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழர்களின் எதிர்காலமும் தமிழின் எதிர்காலமும் டாக்டர் கலைஞர் அவர்களைச் சார்ந்தே அமைந்துள்ளது என அழுத்தமாக நம்பும் மணவையார், அன்னாரையே

தமிழ்த் தலைவராகக் கருதிப் போற்றுகிறார். அதனால் தானோ என்னவோ மணவையார் உள்ளத்துள் டாக்டர் கலைஞரும் டாக்டர் கலைஞர் உள்ளத்துள் மணவையாரும் அழுத்தமாக இடம்பெற நேர்ந்துள்ளது.

இன்றைய அறிவியல் வளர்ச்சியின் விளைவாக உலகம் கணினி மயமாகி வருகிறது. அத்துறையில் தமிழினம் தனித்திறன் காட்டி முன்னிலை பெற முனைந்துள்ளது. இதை நன்கு உணர்ந்து தெளிந்துள்ள டாக்டர் கலைஞர் தமிழகத்தை கல்வி, வணிகம், சமுதாயம் ஆகிய அனைத்து மட்டங்களிலும் தமிழ்நாட்டை கணினி மயமாக்க முனைந்துள்ளார். இதை பல ஆண்டுகட்கு முன்பே தன் தூரநோக்குப் பார்வையால் உய்த்துணர்ந்தவர் போன்று, தமிழில் மட்டுமல்லாது, இந்திய மொழிகளிலேயே முதலாவதாக ''கணினி கலைச் சொல் களஞ்சியம்'' அகராதி நூலை வெளியிடுவதோடு, அதனை டாக்டர் கலைஞர் அவர்களின் பவள விழாவுக்குக் காணிக்கையாக்கியுள்ளார். இஃது டாக்டர் கலைஞர் மீது மணவையார் கொண்டுள்ள பெருமதிப்பையும் ஆழ்ந்த நம்பிக்கையையும் முழுமையாக வெளிப்படுத்துவதாயுள்ளது.

தமிழ் வளர்ச்சிக்காக முனைப்பான முயற்சிகளை மேற்கொண்டு கடுமையாக உழைத்து ஆக்கப் பணிகளை முறைப்படி, திட்டமிட்டுச் செயல்படுத்தி வரும் தமிழ்த் தாயின் தலையாய தமிழ்த் தொண்டரை - அவரது பணிகளை அவரது வாழ்நாளின்போதே தக்கவாறு ஆய்வு செய்ய வேண்டும் என்பது என் பேரவா. அதன் மூலம் அவரது பணியின் குறை, நிறைகளை சுட்டிக்காட்டி ஆய்வதோடு, அவரொத்த பணி செய்ய முற்படும் தமிழார்வலர்களை - தமிழ் வளர்ச்சிப் பணியாளர்களை ஊக்குவிக்கவும் இதன் மூலம் வாய்ப்பேற்படும் என்பது என் திடமான நம்பிக்கை. அதற்கு இந்த ஆய்வு நூல் ஆற்றல்மிகு அருங்கருவியாகப் பயன்படும் என்பது திண்ணம்.

**- தொகுப்பாசிரியர்**

# அறிவியல் தமிழின் விடிவெள்ளி

ஆர். ராமசாமி

*தமிழ்த் தொண்டு*

*தமிழ்த் தொண்டாற்றுதல் என்றாலே இலக்கியத் தமிழுக்கு, இயற்றமிழுக்குத் தொண்டாற்றுதல் மட்டுமே தமிழ்த் தொண்டு என்று மிகப் பலர் எண்ணிச் செயல்பட்டு வருகின்றனர். ஒருவர் எத்தனை பாடல்களை எழுதினார், எத்தனை புனைகதைகளை எழுதினார், எத்தனை மேடைகளில் முழங்கினார், எத்தனை பட்டிமன்றங்களில் பலரையும் சிரிக்க வைத்தார் என்பதைக் கொண்டே ஒருவரது தமிழ்த்தொண்டு மதிப்பிடப்படுவது நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.*

*முடியும் தருவாயில் உள்ளது இருபதாம் நூற்றாண்டு அறிவியல் ஊழி, வாசலில் நிற்கும் இருபத்தொன்றாம் நூற்றாண்டு கணினி - தகவல் தொடர்பின் காலமாக விளங்கப் போகிறது. இந்தச் சூழ்நிலையில் அறிவியல் தமிழ் மேம்படவும், தமிழில் அறிவியல் கருத்துகள், சிந்தனைகள், கண்டுபிடிப்புகள், ஆய்வுகள் வெளிவரவும் எவர் பாடுபடுகிறாரோ அவரது பணியையே மற்ற அனைத்துத் துறைகளிலும் ஒருவர் ஆற்றும் பணியைவிட மேம்பட்டதாகக் கருதப்பட்டு போற்றப்படும்; பட வேண்டும். அதுவே தமிழுக்கும் நல்லது; தமிழ்ச் சமுதாயத்துக்கும் நல்லது; அதுவே தமிழர்கள் முன்னேற வழி வகுக்கும்.*

அந்த வகையில் தமிழில் அறிவியல் மேம்படப் பாடுபட்டவர்களில் மணவை முஸ்தபா அவர்களை முதனி லைப்படுத்திக் குறிப்பிட வேண்டும்.

''வளர்ந்து வரும் 'அறிவியல் தமிழ்' என்னும் இளம் குழவிக்கு செ ப்தவத்தால் வாய்த்த செவிலித்தாயாக விளங்கு பவர் 'கலைமாமணி மணவை முஸ்தபா'' என்று தமிழ்ப் பேராசிரியர் எழில் முதல்வன் கூறியுள்ளது (தமிழில் அறி வியல் படைப்பிலக்கியம் - பக். 8) முற்றிலும் சரியே.

பேராசிரியர் மது விமலானந்தம் எழுதியுள்ள ''தமிழ் இலக்கிய வரலாற்றுக் களஞ்சியம்'' என்ற நூலில், ''திரு. மணவை முஸ்தபா ஓர் மறுமலர்ச்சித் தமிழறிஞர்; தமிழ்த் தொண்டே தலையாய பணியாகக் கொண்டவர்; பன் மொழிப் புலமையாளர்; கலைச் சொல்லாக்கச் சிந்தனை யாளர்; அறிவியல் பேரார்வலர்; அருமையான மொழி பெயர்ப்பாளர்; கருமமே கண்ணாயினார்; எளிமையே உரு வான, இனிமையே வடிவான தமிழ்க் கருமயோகி; செயற் படு சிந்தையர்; சுற்றிச் சுழலும் தமிழ்த்தும்பி; தொண்டே துடிப்பாகக் கொண்ட தூயர்; உழைப்பே உயிராக உடை யவர்'' என்று மணவையாரின் மாண்புகளைப் பலபடக் கூறி யுள்ளார்.

## காலம் தேடிய தமிழர்

மணவையாரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக் களைப் பார்க்கும்போது அறிவியல் தமிழுக்கு அருந் தொண்டு ஆற்றுவதற்கென்றே இவரைக் காலம் தேடிக் கண்டுபிடித்து உருவாக்கியதாகக் கருத இடம் தருகிறது. அறி வியல் தமிழ் ஒன்றே தனது இலக்காக, உயிர்மூச்சாகக் கருதித் தன் வாழ்வை முழுமையாக அதற்கு அர்ப்பணித்துக் கொண்டவர்.

''தமிழுக்கு எல்லா வகையிலும் ஆக்கம் தேடி இடை யறாது உழைத்து வரும் திரு. மணவை முஸ்தபா தமிழுக்குக் கிடைத்தது தமிழ்நாடு செய்த பெரும் பேறு'' என்று பொரு ளாதாரப் பேரறிஞரும், யுனெஸ்கோ உதவித் தலைமை இயக்குநருமான மால்கம் எஸ். ஆதிசேஷையா போற்றிப் புகழ்ந்துள்ளார்.

## இளமையில் வறுமை

திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பிலாத்து என்ற கிராமத்தில் 1935 ஜுன் 15இல் மீராசா என்பவரின் மகனாகப் பிறந்தவர் முஸ்தபா. அவருக்கு நான்கு வயது இருக்கும் போது உறவினர்களின் மோசடியால் சொத்துக்களை இழந்து குடும்பம் இடம்பெயர்ந்தது.

மணப்பாறையில் குடியேறிய பின்னர், நெல்லை வாங்கி, அவித்து, அரிசியாக்கி விற்று; அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் குடும்பம் நடந்து வந்தது. 'அரிசிக் காரக் குடும்பம்' என்று அவரது குடும்பத்துக்குப் பெயர் இருந்தது. முஸ்தபாவின் அண்ணன்கள் இருவரும் பள்ளியில் ஐந்து, ஆறு வகுப்புகளைத் தாண்டாமல் நிறுத்தி விட்டதால், இவரைப் பள்ளியில் சேர்க்கவே இவர் தந்தைக்கு விருப்பம் இல்லை.

பின்னர் தன்னுடைய ஏழாவது வயதில் உள்ளூர் பள்ளிக்குச் சென்று 'எனக்குப் படிக்க ஆர்வமாக உள்ளது. என்னையும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளுங்கள்' என்று ஆசி ரியரிடம் அழுது, கெஞ்சி, பள்ளியில் சேர்ந்தார். சேர்க்கைப் பதிவேட்டில் கையெழுத்திட தந்தையை அழைத்து வரு வதே பெரும்பாடாயிருந்தது. பள்ளிக்குப் போனாலும் இரண்டு அண்ணன்களுக்குச் சமமாக வீட்டு வேலைகளை செய்வதாகச் சம்மதித்தால் மட்டுமே பள்ளிக்குப் போ என்று

நிபந்தனையுடன்தான் இவரைப் பள்ளியில் சேர அனும தித்தார் தந்தை மீராசா. வீட்டு வேலைகள், தேநீர்க் கடைக ளுக்குப் பால் கொண்டு கொடுத்து பணம் பெற்று வருவது, விடுமுறை நாட்களில் மிட்டாய் பாக்கெட்டுகளை சைக் கிளில் எடுத்துச் சென்று ஊர், ஊராக விற்பனை செய்தல் போன்ற பல வேலைகளைச் செய்து கொண்டு இரவில் தெரு விளக்கில் படித்து தன் கல்வியைத் தொடர்ந்தார்.

## நெருக்கடியிலும் படிப்பு

பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்காக சிறு வய திலிருந்தே செய்தித் தாள்களைப் படிக்கும் பழக்கம் கொண்டிருந்தார். ஆனால், சொந்தமாகக் காசு கொடுத்து செய்தித்தாள் வாங்கும் வசதி இல்லாததால் அருகில் இருந்த மண்டிக் கடையில் அதிகாலை ஐந்தரை மணிக்கெல்லாம் கத விடுக்கில் நுழைத்து வைக்கப்படும் செய்தித்தாள்களை தெருவிளக்கு வெளிச்சத்தில் படித்து வந்தார். மணப்பாறை கிளை நூலகம் அவரது பள்ளிப்பருவ அறிவுப் பசிக்கு விருந்து அளித்தது வந்தது.

மணப்பாறையிலிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பொய்கைமலை அடிவாரத்தில் நிலம் வாங்கி அவரது தந்தை பயிரிடத் தொடங்கினார். மணப்பா றையில் மாலையே இரவு உணவை முடித்துவிட்டு பொய்கைமலை களத்து வீட்டுக்கு நடந்து சென்று அங்கே இரவில் இலாந்தர் விளக்கொளியில் படிப்பார். செல்லும் போது சாலையோரமாகப் படித்துக் கொண்டே செல்வார். காலையில் குளித்துவிட்டு களத்து வீட்டிலிருந்து மணப்பா றைக்கு நடந்து வரும்பொழுது கையில் ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு வரும் வழியிலேயே அதைப் படித்து முடித்து விடுவார். அன்றாடம் ஒரு நூலாகப் படித்து

வந்தார். மற்றவர்களுக்கு நெடுஞ்சாலையாக இருந்தது. ஆனால், மணவையாருக்கு அதுநெடும் வாசக சாலையாக அமைந்தது. அந்த சாலைக்குத்தான் அண்மையில் 'மணவை முஸ்தபா நெடுஞ்சாலை' என்று மணப்பாறை நகராட்சி யினர் அச்சாலைக்குப் பெயரிட்டு மகிழ்ந்துள்ளனர். மணப் பாறை உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போதும், திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 'இன்டர்மீடியட்' படிக்கும் போதும் மாவட்ட, மாநில அளவிலான பல போட்டிகளில் கலந்து கொண்டு முதல் பரிசுகளைப் பெற்று வந்தார். போட்டிகளில் வெற்றி பெற்று ஏராளமான நூல்களைப் படித்துத் தன்னை தயார்படுத்திக் கொண்டார்.

## அண்ணாமலை அனுபவம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது அங்குள்ள நூலகத்தினை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டதுடன் தமிழ் மொழிப் புலமை, இலக்கிய வேட்கை, தமிழ் உணர்வு, பகுத்தறிவு ஆகியவைகளை வளர்த்துக் கொண்டார். அங்கே தமிழறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மணவையாரைத் தன் சிறப்பு அணுக்க மாணவராக ஏற்றுத் தடுத்தாட் கொண்டார். வாக்குவாத முறையில் அவருடன் நீண்ட நேரம் வாதமிட்டுத் தன் தமிழ றிவை மேம்படுத்திக் கொண்டார். பட்டிமன்றத்தில் வாதங் களை இவர் அடுக்கி வைக்கும் முறையைப் பார்த்து 'நச்சி னார்க்கினியர்' என்று தெ.பொ.மீ. அவர்கள் பெருமையாக அழைத்ததுடன் இறுதிவரை மணவை முஸ்தபாவைப் பார்க்கும் போதெல்லாம் 'நச்சினார்க்கினியர்' என்றே அழைத்து வந்தார்.

தமிழறிஞர் மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் போன்ற தமிழ்ப் பேரா

சிரியர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மணவை யாருக்கு தமிழ் இலக்கிய அறிவையும், தமிழ் உணர்வையும் ஊட்டி வளர்த்த பேராசிரியப் பெருமக்கள்.

## அறிவியல் தமிழுக்காக வாழ்க்கை அர்ப்பணம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் படிப்பை முடித்த வுடன் சேலம் அரசினர் கலைக் கல்லூரியில் நல்ல சம்ப ளத்தில் ஆசிரியராகப் பணியாற்ற ஆணை வந்தது. கல்லூரி வேலையை ஏற்றுக் கொள்ளும் முன்பு அவரது பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரிடம் வாழ்த்துக்களைப் பெற சிதம்பரம் சென்றபோது, அங்கு நடைபெற்ற ''பயிற்சி மொழி தமிழா? ஆங்கிலமா?' என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டார். தமிழில் அறிவியல் பாடங்களை நடத்துவ தற்குக் கலைச் சொற்களின் பற்றாக்குறை பெரும் தடையாக உள்ளது'' என்று பேசினார்கள்.

பேராசிரியர் இராமானுஜாச்சாரி என்பவர் ''பயிற்சி மொழி என்பது எதிர்காலச் சந்ததிகளின் முன்னேற்றத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் முயற்சி. அனைத்து அறிவியல் துறைகளும் ஆங்கிலத்திலேயே உள்ளது. எனவே, தமிழே பயிற்சி மொழி என்ற கானல் நீரை விட்டுவிட்டு, உண்மை யைச் சிந்திக்க வேண்டும்'' என்று பேசியபோது முஸ்தபா அவர்களின் உள்ளமும், உடலும் பற்றி எரிவது போலா யிற்று. உடலில் மின்சாரம் பாய்ந்தவர் போலாகி, மின்னல் வேகத்தில் ஒலிபெருக்கி முன்னே சென்று, ''தமிழை வளப் படுத்துவோம் என்று சொல்லுங்கள். ஆனால், தமிழால் முடி யாது என்று சொல்லாதீர்கள். வெறும் சொல்லினால் அல்லாது செயல் மூலம் தமிழால் முடியும் என்பதை நிரூ பிப்பதே என் வாழ்வின் ஒரே இலட்சியம். அறிவியல் தமிழ்

வளர்ச்சிக்காக என் வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொள் கிறேன். இப்பணிக்கு என்னை அர்ப்பணித்துக் கொள்வதன் அடையாளமாக எனக்கு இப்போது கிடைத்துள்ள கல்லூரி ஆசிரியர் பதவியைத் தூக்கி எறிகிறேன்'' என்று கூறி அவ ருக்கு வந்த வேலை நியமன ஆணையை சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தார். துணைவேந்தர் முதலான அனைவரும் இவரை நீண்ட நேரம் கைதட்டிப் பாராட்டினார்கள்.

அன்று முதல் அறிவியல் தமிழ் ஒன்றை மட்டுமே தன் வாழ்வின் ஒரே குறிக்கோளாகக் கொண்டு கண்ணடை போட்ட குதிரை போல் நேர்பாதையில் பயணம் சென்று கொண்டிருக்கிறார். அறிவியல் நுட்பங்களைக் கூறும் சொல்லாக்கம் தமிழில் செய்ய இயலாது என்ற கருத்தரங்கப் பேச்சு இவரது காதில் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. அறிவியல் தமிழ் வளர்ச்சியின் இரு கண்களாகக் கருதப் படும் சொல்லாக்கமும், மொழி பெயர்ப்புமே அவரது அறி வியல் தமிழ்ப் பணிகளாக இருக்க வேண்டும் என்பதில் உறுதி ஏற்பட்டது.

### யுனெஸ்கோ கூரியர் பணி

தென் மொழிகள் புத்தக டிரஸ்டில் பகுதி நேரத் தமிழ்ப் பதிப்பாசிரியர் பணி மாதம் ரூ. 150/- சம்பளத்தில் இவருக்குக் கிடைத்தது. கல்லூரி ஆசிரியர் ஊதியத்தில் அது நான்கில் ஒரு பங்காக இருந்தபோதிலும் அவருக்கு இலட் சியப் பயணத்துக்கு ஏற்ற பாதையில் பயணம் செல்ல உதவும் என்பதால் அவ்வேலையை ஏற்றுக் கொண்டார். 'டிரஸ்ட்' வெளியிட்ட 'புத்தக நண்பன்' என்ற தமிழ் காலாண்டிதழ் பணியையும் ஏற்றுச் செய்யத் தொடங் கினார்.

1967இல் யுனெஸ்கோ கூரியர் தமிழ்ப் பதிப்பு தொடங்கப்பட்டபோது பல புகழ் பெற்ற இதழாசிரியர்கள் ஆசிரியர் வேலைக்குப் போட்டியிட்டபோது தேர்வுக் குழுவில் இருந்த பேராசிரியர் தெ.பொ.மீ. தலையிட்டு ''அறிவியல் தமிழுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு இலட்சியப் பயணம் மேற்கொண்டுள்ள முஸ்தபாவை இதற்குப் பொறுப்பாசிரியராக நியமிப்பதே பொருத்தம் என்று கூறியதுடன் ''முஸ்தபாவால் முடியாது என்றால் அது தமிழாலேயே முடியாது என்பதற்கு ஒப்பாகும்'' என்று பெருமையுடன் கூறி அப்பணியை இவருக்குப் பெற்றுத் தந்தார்.

அன்று முதல் இன்றுவரை 32 ஆண்டுகளுக்கும் மேலாக கூரியர் ஆசிரியராக இருந்து வருகிறார். தமிழ்க் கூரியர் ஆசிரியர் என்ற முறையில் இவரது சிறப்பான சேவையைப் பாராட்டி யுனெஸ்கோ 1972இல் சிறப்பு விருதளித்துப் போற்றி உள்ளது. யுனெஸ்கோ பாராட்டிய 'முதல் தமிழன்' என்ற பெருமையும் இவருக்குண்டு.

உலகின் பலமொழிகளில் வந்து கொண்டிருக்கும் கூரியர் பதிப்புகளில் சொல்லாக்கம், மொழிபெயர்ப்பு, வடிவமைப்பு போன்றவற்றில் தமிழ்ப் பதிப்பு நான்காவது இடத்தினைப் பெற்றுள்ளது, மணவையாரின் கடும் உழைப்புக்கும், திறமைக்கும் கிடைத்த வெற்றியாகும். சமுதாயம், அறிவியல், கலை, பண்பாடு போன்ற பல்வேறு துறைகளில் ஆங்கிலக் கட்டுரைகளை சொற்செறிவு, பொருட்செறிவு உடையதாக மொழிபெயர்ப்பு மூலம் கொண்டுவருகின்றார். பல்துறை ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை உருவாக்கி மொழிபெயர்ப்புகளை ஒருங்கிணைத்து வருகிறார். கூரியர் மூலமும் அவர் தொகுத்து வரும் அகராதிகள் மூலமும் ஆயிரக்கணக்கில் அல்ல இலட்சக்கணக்கில் புதிய கலைச் சொற்களை தமிழில் உருவாக்கி வருகிறார்.

## வாழும் தமிழ்ப் பண்பாடு

உலகில் 30 மொழிகளில் வெளி வந்து கொண்டிருக்கும் கூரியரில் இதுவரை மறைந்து போன சுமேரிய, ரோமானிய, கிரேக்க, கார்த்தேஜியப் பண்பாடுகளைப் பற்றி மட்டுமே கூரியர் சிறப்பிதழ்கள் வெளிவந்துள்ளன. மூவாயிரம் ஆண்டுகளாக உயிர்ப்புடன் இருந்து வரும் தமிழ்ப் பண்பாடு பற்றி உலகம் முழுவதும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக யுனெஸ்கோவுடன் பல ஆண்டுகள் போராடி 'வாழும் தமிழர் பண்பாடு The Living Culture of the Tamils' என்ற தலைப்பில் சிறப்பிதழ் ஒன்றைக் கொண்டு வரச் செய்தார். 30 மொழிகளில் 40 இலட்சம் பிரதிகள் விற்பனையாகும் இந்த இதழின் மூலம் வாழும் தமிழரின் பண்பாட்டின் அருமையை உலகம் முழுவதும் உணரச் செய்தார்.

## அறிவியல் கலைச் சொல்லாக்கம்

புதிய கலைச் சொற்களை ஒவ்வொரு அறிவியல் துறையிலும் உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 'அறிவியல் கலைச் சொற்களஞ்சியம்' என்ற நூல் இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். 'தொழில் நுட்பக் கலைச் சொல் களஞ்சிய அகராதி' என்ற பெருந்தொகுதி ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

ஒவ்வொரு அறிவியல் துறையிலும் கலைச் சொல் களஞ்சியங்களை உருவாக்கி வெளியிட வேண்டும் என்று திட்டமிட்டு, முதல் முயற்சியாக 'மருத்துவக் கலைச் சொல் களஞ்சிய'த்தினை வெளியிட்டுள்ளார். அதையடுத்து 'கணினி கலைச் சொல் களஞ்சியம்' ஒன்றை உருவாக்கி வருகிறார். அதுவும் முடியும் நிலையில் உள்ளது. கணினி கலைச் சொல் களஞ்சிய அகராதி உருவாக்கத்தில் துணைத் தொகுப்

பாளனாக இருக்கும் வாய்ப்பைப் பெற்றவன் என்பது எனக்கு மனநிறைவு அளிப்பதாக உள்ளது. இன்னும் பல தொகுதிகளையும் அவர் எழுதவிருக்கின்றார் என்பது மகிழ்ச் சியளிக்கக் கூடிய ஒன்றாகும்.

## அறிவியல் தமிழின் விடிவெள்ளி

அறிவியல் தமிழுக்கு ஒரே இலக்குடன் அரும்பணி ஆற்றிவரும் மணவை முஸ்தபா அவர்களைத் தமிழ் உலகம் மனம் திறந்து பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அவர் அறி வியல் தமிழின் விடிவெள்ளி; நாளும் தமிழ்ப்பணி ஆற்றி வரும் நற்றமிழ்த் தொண்டர்; அறிவியல் தமிழின் அறங்கா வலர்; அறிவியல் தமிழ் முன்னோடி; தமிழ் வளர்ச்சிக்கு சரி யானதொரு பாதையைக் கூறிய தகைமையாளர்; தமிழுக்குப் புத்திலக்கணம் காண விரும்பும் புதுமை விரும்பி; காலம் தேடிய தமிழர் மணவையாரின் பணி மேலும் தொடர்ந்து, வருங்காலத் தமிழ்ச் சமுதாயம் வளம் பலபெற உதவும் என்பது உறுதி.

★

# தமிழ் வளர்ச்சியில் மணவையார் செய்த புரட்சி!

மீரா

## *தமிழ்ப் பெயர்கள்*

*பள்ளியில் படிக்கும் பருவம் தொட்டே தமிழ் மொழி மீது தணியாப் பற்றுக் கொண்டவர் மணவையார். அதற் கேற்ப இளமையிலேயே தமிழை ஆழ்ந்து கற்றவர். தமிழ் இலக்கியத்தில் பெரும் ஈடுபாடு கொண்டு புலமையைச் செம்மையாய் வளர்த்துக் கொண்டவர். எட்டாம் வகுப்புப் படிக்கும்போதே தனது இயற்பெயரான 'முகமது முஸ்தபா' என்பதை 'இளமொழி' என மாற்றியமைத்துக் கொண்டவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கால் வைத்தவுடன் மணவை முஸ்தபாவின் தமிழ்ப் பற்றையும் தமிழ்ப் புலமை யையும் அறிந்த பேராசிரியர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் மணவையாரை 'நச்சினார்க்கினியர்' என்ற நற்றமிழ்ப் பெயரால் அழைத்து மகிழலானார். அப்பெயரே பல்கலைக் கழகத்தில் நிலைபெறலாயிற்று.*

## *இனங்காண மூலப் பெயர்*

*பல்கலைக் கழகப் படிப்பை முடித்து பணியிலமர்ந்த போது பேரா. தெ.பொ. மீ. அவர்கள் மணவையாரிடம் ''இனி, நீ உன் சொந்தப் பெயரில் நடமாடுவதையே நான்*

பெரிதும் விரும்புகிறேன். உன்னால் சில தமிழ்ப் பணிகளை தமிழில் சில சாதனைகளைச் செய்ய முடியும் என்பது என் திடமான நம்பிக்கை. நீயும் அப்படிப்பட்ட இலட்சிய வெறியோடு இருப்பதை நான் நன்கறிவேன். பிற்காலத்தில் உலகம் உன்னை இனங்காணவும், இஸ்லாமியப் பெயரின் மூலம் உன் இஸ்லாமியச் சமுதாயத்தின் பெருமை உயரவும் வாய்ப்பாக இருக்கும்'' என்று கூறி முஸ்தபாவை ஊக்குவித்தார். தன் குருநாதர் தெ.பொ.மீ அவர்களின் கருத்துக்கு எப்போதும் முக்கியத்துவம் தந்து அக்கருத்தை அப்படியே பின்பற்றும் முஸ்தபா, எப்போதும் தன்பெயரோடு தன் ஊரான 'மணப்பாறை'யின் சுருக்கமான 'மணவை'யை இணைத்துக் கொள்வது வழக்கம். அவ்வூரின் மீது அவருக்கு எப்போதும் அலாதிப் பிரியம். தான் இளமையில் திறம்பட உருவாகக் காரணமாக இருந்த ஊர் என்ற நன்றியுணர்வால் தன் பெயரை 'மணவை முஸ்தபா' என அமைத்துக் கொண்டார். அதுவும் கூட இன்று 'மணவையார்' எனச் சுருங்கி விட்டது. தமிழார்வமும் தமிழறிவும் இவருள் பொங்கிப் பொழியவே தமிழை வளர்க்க, வளப்படுத்த இவர் உள்ளம் அவாவியதில் வியப்பொன்றும் இல்லை.

## தொடர்ந்து பரிசுகள்

இவர் பள்ளியில் படிக்கும் காலத்தில் திராவிட இயக்கச் செயல்பாடுகள் தமிழார்வலர்களிடையே ஒருவித மலர்ச்சியை - மனக்கிளர்ச்சியை உருவாக்கிக் கொண்டிருந்தற்கொப்ப, இவரும் அவ்வுணர்வுகட்கு ஆட்பட்டவராக இருந்தார். இந்தி எதிர்ப்புணர்வும் தனித்தமிழார்வமும் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்ப் பற்றை வளர்க்கலாயின. பேச்சுப் போட்டிகளிலும் கட்டுரைப் போட்டிகளிலும் தொடர்ந்து பள்ளி அளவில், மாவட்ட அளவில், மாநில

அளவில் பெற்ற பரிசுகள் இவரை தொடர்ந்து ஊக்குவிக்கும் உந்து சக்திகளாயின.

இவர், தான் எழுதும் கட்டுரைகளிலும் பேச்சுகளிலும் தூய தமிழ்ச் சொற்களைக் கையாள்வதில் தனிக்கவனம் செலுத்தினார். சங்க இலக்கியங்களையும் தற்கால உரை நடை நூல்களையும் கற்றதன் பயனாக நல்ல தமிழ்ச் சொற்கள் இவர் பேச்சிலும் எழுத்திலும் சரளமாக வந்து விழுந்து, பேச்சுக்கும் எழுத்துக்கும் ஒருவித கவர்ச்சியை - கனத்தைக் கொடுத்து வந்தன.

### அறைகூவலான தலைப்புகள்

இவருக்கிருந்த சொல்லாட்சித் திறன் கவிதை எழுதத் தூண்டிய போதிலும் அதில் அவர் உள்ளம் முழு ஈடுபாடு கொள்ளவில்லை. கல்லூரிக் காலத்தில் கதை எழுதத் துவங்கினும் அதிலும் அவருக்கு முழு ஈடுபாடு ஏற்படவில்லை. இதற்கு ஒரு சிறப்பான காரணமும் இருந்தது. கவிதை புனையவும் கதை எழுதவும் எத்தனையெத்தனையோ பேர் இருக்கிறார்கள். அத்தனை பேருள் ஒருவனாகத் தான் இருப்பதை அவர் உள்ளம் விரும்பவில்லை. யாரையாவது முன்மாதிரியாகக் கொண்டு தமிழ்ப் பணி செய்யவும் அவர் உள்ளம் உடன்படவில்லை. அடுத்தவர் வழித்தடத்தின் மீது தன் வழித்தடம் அமைவதை அவர் உள்ளம் எப்போதுமே ஒப்பியதில்லை. சிறியதோ பெரியதோ தான் பதிக்கும் தடம் தனித்தன்மை மிக்கதாக இருக்க வேண்டும் என்ற வேட்கை இவருக்கு எப்போதுமே உண்டு. இந்த உணர்வே இவரை பிற்காலத்தில் வலுவான சுய சிந்தனையாளராக உருமாற்ற உதவியதெனலாம். இவ்வுணர்வு இவர் படிக்கும் காலம் தொட்டே இவர் பேச்சிலும் எழுத்திலும் இடையறாது இழையோடிக் கொண்டிருந்ததெனலாம். பள்ளி தொட்டு பல்கலைக் கழக இறுதிவரை தொடர்ந்து எழுத்துக்காகவும்

பேச்சுக்காவும் பல பரிசுகளைத் தவறாமல் பெற்று வந்த தற்கு இதுவே அடிப்படைக் காரணமெனலாம். தன் எழுத்து, பேச்சுப் போட்டிப் பரிசுகளின் வெற்றி ரகசியத்தைப் பற்றி மணவை முஸ்தபா கூறுவதைக் கேட்போம்:

''போட்டி என்று வந்துவிட்டால் எனக்கு அறை கூவலான தலைப்புகளே மிகவும் பிடிக்கும். சாதாரணமான எளிதான தலைப்புகளில் பலரும் எழுதுவார்கள்; பேசுவார் கள். இது இயல்பு. அதே தலைப்பில் நானும் எழுதினால், பேசினால் மற்றவர்கள் அரைத்த மாவையே நானும் அரைப் பதுபோல் அமைந்துவிடும். அதில், புதுமைக் கருத்துகள், புதிய சிந்தனைகள் இடம்பெற்றபோதிலும் அவை பரிசுக் கட்டுரையை அல்லது சிறந்த பேச்சாளனைத் தேர்ந்தெ டுக்கும் நடுவர்களின் கவனத்தை ஈர்க்கத் தவறிவிடும். எவரும் எளிதாகப் பேச எடுக்கஞ்சும் கடினமான தலைப் பைத் தேர்ந்தெடுத்துப் போட்டிக் கட்டுரை வடித்தால் அல்லது பேசினால் அது கட்டுரை தேர்வு செய்யும் நடுவர் களின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கவே செய்யும். ஏனெனில் கடினமான தலைப்புகளில் ஒருசில கட்டுரைகளே எழுதப் படும் அல்லது ஒருசிலர் மட்டுமே பேசுவர்.

''மேலும் போட்டி என்று வரும்போது நம்முடைய சிந்தனையின் தனித்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். அதுவே நடுவர்களைப் பெரிதும் ஈர்த்து அதிக மதிப்பெண் களைப் பெற்றுத் தரும். அதற்காகவே எப்போதும் கொடுக் கப்பட்ட தலைப்புகளில் மிகக் கடினமான தலைப்புகளை யே தேர்ந்தெடுப்பதில் கவனமாக இருந்து வருகிறேன்''. எனத் தெளிவாகத் தன் மன உணர்வுகளை, கொள்கைகளை பள்ளியில் படிக்கும் காலத்திலேயே தெளிவுபடுத்தியுள்ளார். (காலம் தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு பக்கம் 80, 81).

## தனித்துவப் போக்கு

மற்றவர்களினின்றும் மாறுபட்டு, அதே சமயத்தில் தனக்கென ஒரு தனித்துவத் தன்மையுடன் செயல்படத் துடித் தவர் மணவையார் என்பது இளமையிலேயே உறுதியாகி விட்ட ஒன்று. அதிலும் தமிழ்ப் பணியைப் பொறுத்தவரை காலத்தின் போக்குக்கும் தேவைக்கும் ஏற்ப, தன் தமிழ்ப் பணி அமையவேண்டும் என்ற வேட்கை இருந்த அளவுக்கு அப்பணி எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதில் தெளிவு இல்லாதவராகவே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் காலடி எடுத்து வைத்தார்.

## திருப்புமுனை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சிறப்புத் தமிழ் பட்டப் படிப்பில் சேர்வதற்காக தமிழ்த் துறைத் தலைவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரம் அவர்களிடம் நேர்மு கத்துக்குச் சென்றபோது நடந்த நிகழ்ச்சி மணவையாரின் தமிழ் பற்றிய சிந்தனை போக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது எனலாம். நேர்முகத் தேர்வுக்கு வந்த மணவை முஸ்தபாவை நோக்கி "நல்ல வருமானமும் மதிப்பான பதவிகளும் பெறத்தக்க மருத்துவ, பொறியியல் படிப்புப் படிக்க போதிய மதிப்பெண் பெற்றிருந்தும் சாதாரணத் தமி ழாசிரியர் வேலைக்கு மட்டுமே பயன்படக் கூடிய தமிழ்ப் படிப்பை ஏன் தேர்ந்தெடுக்கத் துணிந்தே? தமிழ் படிச்சு நீ என்ன பெரிய சாதனையைச் செஞ்சிடப்போறே? அதிகமாப் போனால் கல்லூரிப் பேராசிரியராக உயரலாம். அதற்கு மேலே இப்படிப்பில் வேறென்ன இருக்கு?"

தமிழ்ப் பேராசிரியராக அமர்ந்துகொண்டு, தமிழ்ப் படிக்க ஆர்வத்தோடு வரும் மாணவனின் ஆர்வத்தைச் சிதைக்கும்படியான கேள்வி கேட்டு நிலைகுலையச் செய்

கிறாரே என மணவை முஸ்தபாவின் உள்மனம் ஒருபுறம் துடித்தாலும் அதை வெளிக்காட்டாமல்,

''தமிழ் படித்தால் தமிழாசிரியர் வேலைக்குத்தான் போக வேண்டுமென்று கட்டாயமில்லையே'. மற்ற துறைப் படிப்பெல்லாம் பணம் சம்பாதிக்கவும், பதவி சுகம் பெறுவ தற்காகவும் மட்டும் பயன்படலாம். ஆனால், தமிழ் படிப் பதன் வாயிலாக தாய்மொழி அறிவை வளர்த்துக் கொள் வதன் மூலம், தமிழ் வளர்ச்சிக்கு உதவவும், தாய்மொழி மூலம் அறிவு வளர்ச்சிக்குப் பாடுபடவும் முடியுமே; அதற் காக நான் ஏன் தமிழ் படிக்கக் கூடாது?'' என்று எதிர்வினா தொடுத்தார். (காலம் தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு - பக்கம் 150)

இவரது உணர்வையும் விருப்பத்தையும் முழுமை யாக ஏற்ற பேரா. தெ.பொ.மீ. அவர்கள் ''ரொம்ப நல்லது. நோக்கமேதும் இல்லாமல் வெறுமனே எளிதாகப் படிக்க லாம்னு தமிழ் படிக்க வந்திருக்கிறாயா இல்லை ஏதேனும் குறிக்கோளோடு தமிழ் கற்க வந்திருக்கியான்னு தெரிஞ்சுக் கத்தான் உன் ஆர்வத்துக்கு எதிராக இப்படியெல்லாம் கேள்வி கேட்டேன். படிப்பானாலும் அல்லது வேறு எந்தச் செயலானாலும் ஏதாவது ஒரு நோக்கத்தை முன்வச்சு செயல் படணும். அது உன்கிட்டே கொஞ்சம் இருக்கிறதாக நெனக் கிறேன். உனக்கு என் வாழ்த்துக்கள்'' என்று கூறி சிறப்புத் தமிழ் பட்ட வகுப்பில் சேர அனுமதிக் கடிதம் வழங்கினார் பேரா. தெ.பொ.மீ. (காலம் தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு பக்கம் - 150).

எதிரும் புதிருமான இந்த முதல் சந்திப்பே தெ.பொ.மீ மனதில் மணவை முஸ்தபாவும் மணவை முஸ்தபா மனதில் தெ.பொ.மீ.வும் அழுத்தமான இடம்

பெறும் அரிய வாய்ப்பாக அமைந்துவிட்டது. அத்துடன் பேராசிரியர் கேள்வியும் அதற்கு மணவையார் அளித்த பதிலும் மணவை முஸ்தபா மனதில் எப்போதும் எதிரொலித்துக் கொண்டே இருந்தது. தன் எதிர்கால முயற்சிகள் தமிழ் வளர்ச்சியைக் குறியாகக் கொண்டிருந்தபோதிலும் அது வெறும் இலக்கியத் தமிழ் முயற்சியாக அமையாது பிற துறை சார்ந்த தமிழ் வளர்ச்சியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாளடைவில் அழுத்தங் கொள்ளலானார்.

இதன் விளைவாக வகுப்பறையில் சிறப்புத் தமிழ் கற்றாலும் வகுப்புக்கு வெளியே படிக்கும் நூல்கள் பிறதுறை நூல்களாகவே இருந்தன. அவற்றைப் படிக்கும்போதே, இதையெல்லாம் தமிழில் சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற ஏக்க உணர்வு ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருந்தது. இவர் படிக்கும் நூல்களில் அதிகம் இடம் பெறுவது எளிமையான ஆங்கிலத்தில் அமைந்த அறிவியல் நூல்களேயாகும்.

## தமிழில் பிறதுறை நூல்கள்

ஒரு சமயம் டாக்டர் ஏ.எல். முதலியார் ஆங்கிலத்தில் எழுதியிருந்த 'அறுவை மருத்துவம்' பற்றிய மிகப் பெரிய நூலைப் ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக வந்த பேராசிரியர் தெ.பொ.மீ. மணவை முஸ்தபாவுக்குப் பின்புறம் நின்று என்ன படிக்கிறான் என்பதை கவனித்தார். படிப்பு சுவாரசியத்தில் பேராசிரியர் தன் பின்னால் நின்று கவனிப்பதை அறவே அறியாமல் படிப்பிலேயே கவனமாக இருந்தார். இடையிடையே அவர் வாய் தமிழிலில் எதையோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. இதை கவனித்த பேராசிரியர் மணவையாரின் கையிலிருந்த நூலை வாங்கிப் பார்த்து ஆச்சரியத்தில் மூழ்கினார். மணவையாரை நோக்கி,

''பாடமாகப் படிப்பது சிறப்புத் தமிழ். ஆனால் விரும்பிப் படிப்பது மருத்துவம். மருத்துவப் படிப்பில் இவ்வளவு ஆர்வமுள்ள நீ மருத்துவம் படிக்கச் சென்றிருக்க லாமே?''என்ற பேராசிரியரின் கேள்விக்குப் பதிலாக,

''பொதுவாக அறிவியல் நூல்களைப் படிப்பதில் எனக்கு எப்போதுமே ஆர்வம் அதிகம். பொருளறிவு பெற வேண்டும் என்பதைவிட இச்செய்திகளையெல்லாம் தமிழில் தரவேண்டும் என்ற வேட்கையோடுதான் இவை களைப் படிக்கிறேன். அவ்வப்போது படிக்கும்போதே ஆங்கிலப் பகுதிகளைத் தமிழில் சொல்லிப் பார்ப்பேன்'' என்று கூறியதைக் கேட்ட பேராசிரியர், மணவை முஸ்த பாவின் உள்மனதுள் அறிவியல் தமிழ்ப் பணிக்கான அடி வேர் அழுத்தம் பெற்று வருவதைக் கண்டு மகிழ்ந்தவராய் ''நல்ல முயற்சி'' என்று கூறிப் பாராட்டினார். இதை முஸ்தபா, பேராசிரியர் தன் முயற்சிக்கு வழங்கிய அங்கீகார மாகவும் ஆசீர்வாதமாகவும் எடுத்துக் கொண்டார்.

## சிந்தனை விரிவு

இவ்வுணர்வுக்கு வேகமுடுக்கியாக தெ.பொ.மீ.யின் செயல்பாடுகள் அமையலாயின. குறிப்பாக சொல்லாக்க முயற்சியில் - மொழியியல் அடிப்படையில் ஈடுபடுத்தலா னார். இதன் விளைவாக தமிழ் நாடு அளவில் தன் சிந்தனை யோட்டத்தைச் செலுத்தி வந்த மணவையாரை அனைத்திந் திய அளவில் சிந்திக்க வைத்தார். பேரா. தெ.பொ.மீ. மண வையாரை இந்திய அளவில், மட்டுமல்லாது உலக அளவில் காலப்போக்குக்கேற்ப தமிழ் வளர்ச்சி பற்றி ஆழச் சிந்திக்கத் தூண்டியவர் சேவியர் தனிநாயக அடிகளார் ஆவர். அறி வியல் வளர்ச்சிக்கேற்ப அறிவியல் தமிழாகத் தமிழை உரு மாற்ற வேண்டியதன் அவசியத்தைப் பற்றி முஸ்தபாவை உரக்கச் சிந்திக்கத் தூண்டியவர் சேவியர் தனிநாயக அடிகளே

என்பதை இன்றும் மணவை முஸ்தபா நன்றியறிதலுடன் நினைவு கூர்கிறார்.

## மொழி பெயர்ப்பு ஆர்வம்

பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறும் முன்பே தன் எதிர்காலத் தமிழ்ப்பணி வெறும் இலக்கியப் பணி என்ற அளவில் அமையாது, பிற துறைகளைச் சார்ந்தே அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இதற்கு உறுதுணையாக இவர் தேர்ந்தெடுத்த முதன்மைத் துறை மொழி பெயர்ப்புத் துறையாகவே இருந்தது.

படிக்கும் போதே மலையாளம் மொழி அறிந்திருந்த இவர் அவ்வப்போது மலையாள மொழிக் கதைகளையும் கட்டுரைகளையும் தமிழில் பெயர்த்து பல்வேறு இதழ்களுக்கு அனுப்பி வந்தார். அவைகளும் இதழ்களில் அவ்வப் போது வெளிவரவே, இவருக்கு மொழி பெயர்ப்புத் துறையில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டிருந்தது. அதிலும் அறிவியல் செய்திகளையும் அறிவியல் சார்புள்ள செய்திகளையும் மொழிபெயர்க்கும்போது அவற்றின் கலைச் சொற்களுக்குத் தமிழில் கலைச் சொற்களைக் கண்டறிவதில் தனி ஆர்வமும் தனி முயற்சியும் இவருக்கு இருந்து வந்ததை இவரே பலமுறை எழுதியும் பேசியும் உள்ளார்.

இவர் வீர நடை போட வேண்டிய ராஜபாட்டையைச் சுட்டிக் காட்டும் சூழல் வெகு விரைவிலேயே இவருக்கு ஏற்பட்டது. அதுவே இவரது வாழ்வின் திருப்பு முனையுமாகும்.

## பாதை மாற்றிய கருத்தாங்கு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'பயிற்சி மொழி தமிழா? ஆங்கிலமா?' என்ற கருத்தரங்கு

தான் இவர் எதிர்காலப் பணி 'அறிவியல் தமிழ்ப் பணியே' என இனங்காட்டியது. அன்று முதல் இன்றுவரை அவரது முயற்சிகள் அனைத்தும் அறிவியல் தமிழ்ப் பணியாகவே இருந்து வருகிறது. இலக்கியப் பணியும் கூட ஏதாவது ஒரு வகையில் அறிவியல் சார்ந்துள்ள பணியாகவே அமைய வேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறார்.

## காலம் தேடும் தமிழ்

காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப நம் எதிர் காலத் தமிழ்ப் பணி அமைய வேண்டும், அப்பணியும் எவ்வகையில் அமைய வேண்டும் என்பதைத் தெளிவாக உணர்த்தும் நூலே இவர் எழுதிய 'காலம் தேடும் தமிழ்'. 1987ஆம் ஆண்டில் எழுதிய அந்நூலில், காலம்தோறும் காலப்போக்குக்கும் தேவைக்குமேற்ப தமிழ் வளர்ந்து வந்ததைத் வரலாற்று அடிப்படையில் அற்புதமாகச் சித்தரித் துள்ளார்.

ஒவ்வொரு கால கட்டமும் ஒருவிதமான தமிழைத் தேடியுள்ளது. அவ்வக்காலப் போக்குக்கேற்ப நம்மவர்களும் அத்தமிழை சீர்மை செய்து காலத்தின் கையில் ஒப்படைத் துள்ளனர். அதனால் அஃது உயிர்ப்புள்ள மொழியாக இன்றும் விளங்குகிறது. அவ்வகையில் இன்றைய கால கட்டம் எம்மாதிரியான தமிழைத் தேடுகிறது. அத்தமிழை உருவாக்க எவ்வகை முயற்சியில் நாம் ஈடுபடுதல் வேண்டும் என்பதை அருமையாக இந்நூல் விளக்குகிறது.

## கொடுமுடியான அறிவியல் தமிழ்

சிறப்புத் தமிழைப் பாடமாகப் படித்த இவர், தான் பெற்ற தமிழறிவை வெறும் இலக்கியப் பணிக்குப் பயன் படுத்தாது தன் துறைக்கு முற்றிலும் மாறுபட்ட அறிவியல்

துறையைத் தேர்ந்தெடுத்து, அத்துறை தொடர்புடையதாக தமிழை ஆக்கி, ''அறிவியல் தமிழ்'' எனும் புதுவகைத் தமிழை உருவாக்கி, அத்தமிழை இன்றைக்குத் தமிழ் வளர்ச் சியின் கொடுமுடியாகக் காட்டியுள்ளார் என்றால் அப்பெரு மையின் பெரும் பகுதி இவரையே சாரும். கடந்த நாற்பது ஆண்டுகளாகக் கண்ணடை போட்ட குதிரை போன்று 'அறி வியல் தமிழ்' என்ற ராஜபாட்டையில் ஓடி ஆயிரக்கணக் கான அறிவியல் கலைச் சொற்களை உருவாக்கி, தமிழில் மட்டுமல்லாது இந்திய மொழிகளிலேயே முதலாவது அறி வியல் கலைச் சொல் களஞ்சிய அகராதிகள் என்ற தனித் துவப் பெருமையோடு நான்கு கலைச் சொல் அகராதிகளை வெளியிட்டுப் புதிய அத்தியாயம் தொடங்கிப் புது வரலாறு படைத்துள்ளார் மணவையார்.

தமிழில் அறிவியலைத் திட்ப, நுட்பமாகச் சொல்ல முடியுமா என்பார்க்கு வெறும் சொல் அளவில் அல்லாமல் செயல் வடிவில் 'முடியும்' என்பதை அழுத்தத்திருத்தமாக எண்பித்துள்ளார் மணவையார். இன்னும் சொல்லப் போனால் ஆங்கிலத்தைவிட நுணுக்கமாகவும் தெளிவா கவும் அறிவியல் சொற்களை விளக்கிக் கூற முடியும் என்ப தற்கு இவரது அறிவியல் தமிழ் கலைச் சொற்களும் கலைச் சொல் களஞ்சிய அகராதிகளும் இவரது அறிவியல் நூல்களும் கட்டியங் கூறிக் கொண்டுள்ளன.

தமிழ்ப் பட்டதாரிகளால் வெறும் இலக்கிய, இலக் கணப் பணியாற்றவே இயலும் என்ற கோட்பாட்டை சுக்கு நூறாக உடைத்தெறிந்து, கற்ற தமிழ் இலக்கிய, இலக்கண அறிவை அடிப்படையாகக் கொண்டு எத்துறைச் செய்தி யையும் திட்ப நுட்பமாக விளக்கும் ஆற்றல்மிகு சாதன மாகத் தமிழைப் பயன்படுத்துவதன் மூலம் தமிழை வெறும் இலக்கிய மொழியாக அல்லாது ஆற்றல்மிகு அறிவியல் மொழியாக மாற்றி, அறிவியல் தமிழ்ப் பணி ஆற்ற முடியும்

என்பதற்கு இன்றைக்கு இணையற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறார் வளர்தமிழ்ச் செல்வர் மணவை முஸ்தபா அவர்கள்.

## வினாவுக்கு விடையாக

அறிவியல் துறைகளில் பட்டம் பெற்றவர்களே அறிவியல் தமிழ்ப் பணியாற்ற முடியும் என்ற கோட்பாடு நெடுங்காலமாக இருந்து வருகிறது. அறிவியல் கற்றவர்கள் தமிழ்க் கவிஞர்களாக, தமிழ்ப் படைப்பிலக்கிய ஆசிரியர்களாகத் திகழ்கின்றபோது, தமிழ் கற்றவர்கள் அறிவியல் தமிழ்ப் பணியாளர்களாக ஏன் ஆக முடியாது என்ற வினாவுக்குத் தக்க விடையாக இன்று திகழ்பவர் மணவையார் அவர்கள்.

தமிழ் இலக்கிய, இலக்கணம் கற்றவர்கள் தமிழ்க் கிணற்றைத் தாண்ட இயலாத கிணற்றுத் தவளைகள் என்ற அவப் பெயரைப் போக்கி, அவர்களாலும் பிற துறைகளை, குறிப்பாக அறிவியல் துறையைக் கற்று, அதில் தேர்ந்த வல்லுனராகிச் சிறக்க முடியும் என்ற புது நிலையை உருவாக்கியவர் மணவையார்.

## கலைச் சொல் வள்ளல்

குறிப்பிட்ட பாடத்திட்ட அடிப்படையில் 'தேர்வுக்காக' மட்டும் ஓரிரு துறை அறிவியல் படித்து பட்டம் பெற்றவர்களைவிட 'அறிவு வளர்ச்சிக்காக' என்று எவ்விதப் பாடத்திட்ட வரையறையும் இல்லாது அறிவியலின் அனைத்துப் பிரிவுகளையும் கற்று, இன்று அறிவியல் துறையின் அனைத்துப் பிரிவுகட்குமான கலைச் சொற்களை உருவாக்கி ''அறிவியல் கலைச் சொல் வள்ளல்' என்று போற்றப்படும் மணவை முஸ்தபா அவர்கள் அறிவியல் கலைச் சொல்

மேதையாக திகழ்ந்து வருகிறார். தமிழறிஞர்களின் எதிர் காலத் தமிழ்ப் பணி எவ்வகையாய் அமைய வேண்டும் என்பதற்கும் அவரே இன்று ஏற்ற முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகிறார்.

'அறிவியல் தமிழ்' பற்றி இன்று பலரும் பேசுகி றார்கள்; எழுதுகிறவர்கள் பலர் உண்டு. ஆனால் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கான திட்டவட்டமான வழிமுறைகளை வகுத்துக் கூறி முன்மாதிரிப் பணியாற்றியவர்கள், ஆற்றி வருபவர்கள் விரல்விட்டு எண்ணத்தக்க அளவில்கூட இருப் பதாகத் தெரியவில்லை.

இவர் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்காக எழுதிய ''காலம் தேடும் தமிழ்' நூல் அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கான இலக்கிய, இலக்கண நூலாகவே அமைந்துள்ளதெனலாம். இவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் தமிழ்க் 'கூரியர்' இதழ் மூலம் அனைத்துத்துறை அறிவியல் செய்திக ளையும் அதன் அண்மைக்கால மற்றும் புதிய கண்டுபிடிப்பு களையும் தெள்ளத் தெளிந்த நடையில், சொற் சொட் டோடும் பொருட் செறிவோடும் இலக்கிய நயத்தோடு எடுத்துக் கூறி விளக்குவதன் மூலம் தமிழ் ஆற்றல் மிக்க அறிவியல் மொழி அறிவியலைச் சொல்லுவதற்கென்றே உருவாகியுள்ள மொழி என்பதைச் செயல் பூர்வமாக உணர்த்தி வருபவர் மணவையார் அவர்கள்.

## அறிவியல் தமிழ்த் தந்தை

கடந்த நாற்பதாண்டுகளாக அறிவியல் திறத்தை விளக்க வல்ல ஆற்றல்மிகு மொழி என்ற பெருமையை தமி ழுக்களித்து, தமிழின் தோற்றத்தை, மாற்றியமைத்து ,வரும் மணவையாரை ''அறிவியல் தமிழ்த் தந்தை'' என்றே எதிர் கால தமிழ் வரலாறு கூறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# மணவையாரின் இஸ்லாமிய இலக்கியப் பணி

டாக்டர். வா.சா. பானு நூர்மைதீன்.
(ரீடர், சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி, திருச்சி)

***காலம் தந்த கருவூலம்***

*ஏற்றமிகு இஸ்லாம் இந்திய மண்ணிலே வேர்விட்டு விழுது பரப்பி ஆயிரமாண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இன்று உலகில் நால்வரில் ஒருவர் இஸ்லாமியர் என்னும் விரிவுக்கும் பெருமைக்கும் சொந்தம் கொண்டாடி வருகின் றது. காந்தமென உலகோரைக் கவர்ந்துவிடும் சாந்தி மார்க் கத்தின் புகழொளியை - பேரறிவைப் பரப்புதற்கெனவே விரிந்த மனப்பரப்புடைய ஆன்றோரும் சான்றோரும் இன்று வரை முயல்கின்றனர். அந்த மன்னியவொரு வரிசையில் வந்த திருக்கூட்டத்தில் மணம் வீச வந்தவரே மணவையார்.*

*சில ஆடவர் சேலைகட்டிக் கொண்டு பெண்பெயரில் ஒளிந்து கொண்டு எழுதுகின்ற இக்கால கட்டத்தில், ஓர் அசலான ஆண் எழுத்தாளர் மண்ணின் மைந்தராக, தன் ஊர்ப்பெயரைத் தம் பெயரோடு இணைத்துக் கொண்டு இங்கே எழுதுகின்றார். சமகால எழுத்தாளர் வரிசையில் இவரொரு கோகினூர் வைரம்; இன்றைய யுகத்தின் எழுச் சிப் பிரச்சினைகளை இஸ்லாமிய இலக்கியக் கோலங்களின்*

ஊடாகத் நீர்வு|காணக் கலை வடிவம் தந்து, செம்மையாக செதுக்கித் தரும் கலைச் சிற்பி இவர்.

அமைதி இழந்தபோதும், அறியாமை படரும் போதும், அந்தகாரம் சூழும்போதும் பகலவன்போல் பெரி யார்கள் பாருலகில் பிறந்திடுவர். அதுபோல் மறைந்துள்ள இஸ்லாமிய இலக்கியங்களைக் கல்வித் துறையில் துலக்கிக் காட்ட, உலகுக்கு ஒரு கலங்கரை விளக்கென ஒளிர மிளிர்ந்த வரே மணவையார்.

## மணவை புகழ் மணக்க வைத்த மணித் தமிழர்

வெறும் கல்விச் சிந்தனை மட்டும் மனிதனை முழு மைப்படுத்தாது; ஆன்மீக அடிப்படையில் அறிவியலின் விந்தை கண்டு உரைத்தால் மட்டுமே கல்வியின் தேடல் முழுமை பெற்று முற்றுப் பெறுகிறது என உணர்ந்து, உரைத்து, அதனால் போற்றப்படுபவர். சிலருக்குத் தாம் பிறந்த ஊரால் பெருமை; இவரோ தன்னால் தமதூருக்குப் பெருமை தேடித்தந்த தகைமையாளர் · ''மானுடம் என் றொரு வாளும், அதை வரத்தில் அடைந்திட்ட உன்னிரு தோளும் வானம் வசப்பட வைக்கும்'' என்பதேபோல் வாழுகின்ற காலத்தே மானுடத்திற்கு, இஸ்லாமிய இலக் கியம் வழி பணியாற்றி அம்மானுடம் சிறக்க வழி செய்தவர்.

வள்ளலார் போல் சிந்தனை தோய்ந்த முகம்; ஞானச் சுடர் விழிப் பார்வை; அது தெறிக்கும் அறிவுத் தாகம்; மின்ன லிடும் அலை மோதும் கண்கள்; அக் கண்ணிலே நல்ல குணம்; கட்டுறுதி உள்ள நெடிய உடலில் நேர்ந்த உழைப் பின் துடிப்பு. இதுவே அன்னாரின் தோற்றம். சுருங்கக் கூறின் 'கலை நலப்பட்டார் கடவுளே போல்வர்' என்பார். அதுபோல் தெய்வீக வடுப்பட்ட தோற்றமு · யவர்.

## இளமை தொட்டே எழுச்சி

*பின்னாளில் அவர்தம் படைப்புகள் படைக்கப்படுவதற்கு அவர்தம் பால பருவமே, அதில் கொண்ட பாலபாடமே பலப் பாடமாக அமைந்து பண்படுத்தியதைக் ''காலம் தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு'' வழி, விரியக் காணலாம். ''இருக்கும் நிலை மாற்றுமொரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடன் ஆகும்'' என்பதே போல் எழுச்சி மிக்க பல படைப்புகளை இஸ்லாமிய இலக்கியத் துறையில் ஆற்றி, இருப்போரையும் தட்டி எழுப்பியவர். 'துடித்தெழு தோழா துயரினி நமக்கிலை' என்று, எப்படிப்பட்ட இலக்கியப் பாரம்பரியத்தின் உடைமைக்காரர் நாம் என்பதை நமக்கே நினைவூட்டி, பலப்படுத்தியவர். அவர்தம் பல படைப்புகளும் பல திறப்பட்டன. அவற்றுள் இஸ்லாமியப் பணியார்ந்த வெளியீடுகள் எனும் போது 10 வெளியீடுகளைக் காண முடிகின்றது.*

I. *மூல நூல்கள்* — *3*
   1. *தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள்*
   2. *அண்ணலாரும் அறிவியலும்*
   3. *இஸ்லாமும், சமய நல்லிணக்கமும்*

II. *கட்டுரை* — *1*
   4. *பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்*

III. *களஞ்சியம்* — *1*
   5. *இளையர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்*

IV. *தொகுப்பு நூல்கள்* — *4*
   6. *சிந்தைக்கினிய சீறா*
   7. *தமிழில் மெய்ஞ்ஞான இலக்கியங்கள்*
   8. *காசீம் புலவர் திருப்புகழ்*
   9. *சமண, பௌத்த, கிறிஸ்துவ இஸ்லாமிய இலக்கியங்கள்*

V. மொழி பெயர்ப்பு 1
10. (நூறு பேர்)

## I. மூல நூல்கள்

### 1. தமிழில் இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் (1986)

புலன் ஐந்து, பொறிஐந்து, பூதம் ஐந்து என்ற அடிப்படையேபோல் நம் வழிபாடும் ஐந்து. அதுமட்டும் அல்ல, நம் அகிலத்து ஆலமும் ஒன்று; ஆலயமும் ஒன்று; ஆரண வேதமும் ஒன்று, நம் ஆயுளும் ஒன்றெனக் கூறும் இஸ்லாத்தின் மேன்மை குறித்தும், அதில் வெளிப்படும் இலக்கிய முகங்களின் நன்கொடை குறித்தும் வெளிப்பட வேண்டி உருவாகிய ஆசிரியரின் நன் முயற்சியே இந்நூல்.

ஆசிரியர் பல துறையில் பங்கேற்பவர், பல சமயச் சான்றோருடன் மனந்திறந்து உரையாடுபவர்; எங்கு செல்லினும் எது செய்யினும் இஸ்லாத்திற்கும், இன்பத் தமிழுக்கும் எண்ணியும் எழுதியும், இயங்கியும், எடுத்துரைத்தும் வருபவர். மேதை எம்.ஆர்.எம். அப்துல்-ரஹீம் அவர்களுடன் உரையாடுங்கால் - 'நம் முன்னோர் எழுதிக் குவித்துச் சென்றுள்ள இஸ்லாமிய இலக்கியங்களை எடுத்துச் சொல்லவோ, ஆராயவோ அதிகம் பேர் இல்லை. உம் போன்ற ஆர்வலர்களாவது இப்பணியில் ஈடுபட்டு, காலத்தின் இன்றியமையாத் தேவையான ஒரு நற்செயலைச் செய்து முடிக்கலாமே'' என்று வேண்டியதன் விளைவாக இம்முயற்சி எடுத்ததாக, நூல் தோற்றத்தின் சீரிய காரணம் கூறுவார். இன்னும் பல காரணங்களும் இந்நூல் பிறக்க அடிப்படையாகின்றன.

அதேபோல் ஒய்.எம்.சி.ஏ. இலக்கியக் கூட்டமொன்றில் பேசி முடித்தபோது 'சாயபு நன்றாகத் தமிழ் பேசுகிறாரே' என்ற ஒருவரின் பாராட்டு ஆசிரியருக்குப்

பாராட்டாக இல்லாமல், இதயத்தில் விழுந்த குத்தாகவே இருந்ததெனக் குன்றிப் போனாராம். இவ்வுணர்வு எம் போன்றவருக்கும் அடிக்கடி வாய்ப்பதுண்டு. ஏதாவது உரை யாற்றி முடித்துவிட்டு அமர்ந்தாலே, 'தமிழை இவ்வளவு நன்றாக உணர்ந்து பேசமுடிகிறதே. அதுவும் ஒரு பெண் ணாக' என்ற பாராட்டு உண்மையில் பாராட்டே இல்லை. சரியாக இஸ்லாமிய இலக்கியத் தமிழைப் பட்டி தொட்டி யெங்கும் பரப்பாதுவிட்ட துரோகத்துக்கு விட்ட குத்தீட்டி யாகவே பாய்கிறது. தமிழிலக்கண, இலக்கிய வளர்ச்சிக்குத் தமிழ் முஸ்லிம்கள் எத்துணையோ அரும்பணி ஆற்றியி ருக்க, இப்படித் தமிழும் பேசுவாரோ என்று கேட்டதால் விளைந்த ஏக்கத்தின் வடிவே இந்நூல் எழுந்ததற்கு மற்றொரு காரணம் என்றும் கூறலாம். ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்ற ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்ததால், ஆண்டு தோறும் இஸ்லாமியப் புலவர் திருநாளைக் கொண்டாடிய போது ஏற்ட — குறையின் விளைவாகவும் இந்நூல் பின் னாளில் எழுந்ததெனலாம். வானொலியில் 'தமிழில் இஸ் லாமிய இலக்கிய வடிவங்கள்' என்ற தலைப்பில் பேருரை யாற்ற, பலரும் பாராட்ட, திரு.மா. சண்முக சுப்பிரமணியம் போன்றோர் - தமிழுலகுக்குத் தெரியாதிருக்கும் பல புதிய தகவல்கள் பேருரையில் இடம் பெற்றிருப்பதாகப் பாராட்ட, ஆக்கவழியில் இஸ்லாமியப் புலவர்கள் ஆற்றிய அருந்தமிழ்ப்பணியை ஆதார பூர்வமாக உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம் என்றுரைக்க, வானொலி உரையை விரித்து நூலாக்க வேண்டுமெனப் பலரும் வேண்ட அதன் விளைவாகவும் இந்நூலெழுந்தது என்பார்.

ஒரு நூல் பிறக்க எத்துணை சூழல், நெருடல், தாக்கம் என்றெல்லாம் உணர முடிகின்றது. இத்துணை அவஸ்தை களின் இடையில் எழுத்தாளன் தன் படைப்பை உருவாக்கு கின்றான் என்பதால், துன்பத்தின் முடிவில் இன்பம் என்று

இலக்கியம் பிறந்த உவகையும் சேர்கின்றது என்பதை மண ்வையாரின் எழுத்துக்கோலம் உருவாக்கி, நம்மையும் அப்பா தையில் ஈர்க்கின்றது.

ஆதார நூல்கள் ஏதுமில்லாது பலரும் இடர்ப்பட்டு, இஸ்லாமிய இலக்கியங்களைத் தேடித் திரிந்து இளைத் திருக்கும் இவ்வேளையில், இதுபோன்ற நூல் வடிவங்கள் வெளிவரும் தேவை ஏற்படும் காலமிது என்பதை உணர்த்து கின்றார். இந்நூலில் இஸ்லாமியப் புலவர்களால் தமிழில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய இலக்கிய வடிவங்களை இனங்காட்ட வந்த நூலாசிரியர் இருபெரும் பகுதிகளாகப் பிரித்து, இஸ்லாமியப் பெயர்களால் அழைக்கப்படும் இலக் கிய வடிவங்களை (முனாஜாத்து, மஸ்அலா, கிஸ்ஸா (அரபுப் பெயர்கள்), நாமா (பாரசீகப் பெயர்) ஒரு பகுதியா கவும், தமிழ்ப் பெயர்களால் சுட்டப்படும் இஸ்லாமிய இலக்கியங்களை (நொண்டி நாடகம், திருமண வாழ்த்து, படைப்போர்) இன்னொரு பகுதியாகவும் அறிமுகப்படுத்து கின்றார். எட்டாம் வகையாக அரபுத் தமிழ் என்ற புதுவகை யையும் எடுத்துணர்த்துகின்றார். இவற்றின் வடிவங்கள், அமைப்பு, நூலாசிரியர் திறம், இலக்கியச் சான்றுகள் முதலி யன நிறுவி ஆசிரியர் இலக்கியங்களை அறிமுகப்படுத்தும் பாங்கைப் படிக்கபடிக்கச் செஞ்சொற் கவிதை யின்பம் சிந்தையிலாயிரம் சிறந்தெழுந்து எத்துணை அரிய பெரிய பாரம்பரியத்தின்படியினர் நாமெனப் பீடும் பெருமிதமும் நெஞ்சிலே பொங்குகின்றது.

16ஆம் நூற்றாண்டில் தமிழுக்கும், தமிழ்ப் புலவ ருக்கும் இருந்த பரிதாப நிலையிலிருந்து இருண்ட-காலத் திலிருந்து விடுபட்டு, ஒழுக்கப் பாதையிலான இலக்கியம் மலர்ந்ததை ஆசிரியர் அழகுபடக் காட்டுகின்றார். 8 வகைப் பட்ட புதிய இலக்கிய வடிவங்களை ஆசிரியர் அறிமுகப்ப டுத்துகின்றார். முனா ஜாத்து என்பது இறைவனிடம்

இறைஞ்சும் பாடல் வகை; மஸ்அலா - நாமா - சரிதை - வர லாறு - இலக்கியம்; படைப்போர் போர்ச் செய்தி கூறும் இலக்கியம்; நொண்டி நாடகம் - தகாத முறையில் காலிழந்த நொண்டி மனந்திருந்தி அல்லாஹ்விடம் மன்றாடி மக்கமா நகர் சென்று மீண்டும் தன் கைகால் வரப் பாடுதல்; திருமண வாழ்த்து - மணமக்களை வாழ்த்திப் பாடும் நூல். அரபுத் தமிழ் - இதன் பின்னணியோ சமயமும், தமிழுக்கும் பூத்த உணர்வுச் சங்கம இலக்கியம் எனலாம். தொடக்கக்கால முஸ்லிம்கள் சமய சூழலுக்காகத் தமிழ் மொழியை அரபு எழுத்துகளில் எழுதி அத்தகு நூல்களைப் போற்றிப் பாது காத்தனர். அந்த அரபுத் தமிழ் மரபுத் தமிழில் புகுத்தப்பட்ட மையால் தமிழிலக்கியத்தில் அரபுச் சொற்கள் திசைச் சொற்களாக அமையும் பேற்றைப் பெற்றன; பல அரபுச் சொற்கள் தமிழில் கலந்தன. வேத மொழியாக இஸ்லாமி யர்க்கு அரபு மொழியிருப்பினும், இன்பத் தமிழ் தமது தாய் மொழியாக அந்த மொழிக்கு அழகு சேர்த்த அரபுத் தமிழ் என்ற புதுவகையை உலகோர்க்குத் தம் நூல் மூலமாக அறி முகப்படுத்திப் பெருமிதம் சேர்க்கிறார் மணவையார். இலக் கிய வடிவங்களின் கதைப் பகுதி விளக்கம், மேற்கோள் என விரவிய பாங்கும் அருமை.

நூலெங்கும் பல இலக்கியச் சான்றுகள். ஒன்று மட்டும் ஈண்டு காண்போம். நூறு மசலாவில் - வினா கேட்கிறாள் மெஹர்பான்; விடையிறுக்கின்றான் அப்பாஸ். வினாவாவது, மெஹர்பான் :

''தொல்புவியில் மரமொன்றுண்டு
அதைச் சூழ்ந்த கொப்பு பன்னீரதில்
நல்ல இலை முப்பதுண்டு அதில் நற்கறுப்பு
பாதி வெள்ளை
சொல்கின்ற பூ வைந்துண்டாம் இதைச்
சொல்லாவிட்டால் கொல்வேன் என்றாள்''

விடையிறுக்கின்றான் அப்பாஸ்.

''சொல்லுகின்ற வருஷமொன்றே அதைச்
சூழ்ந்த கொப்பு பன்னிருமாதம்
கொல்லுமிலை முப்பதுநாள் அதைச்
சூழ்ந்த கறுப்போடு வெள்ளை
நல்லிரவு பகலுமது நீதான்
நாடிச் சொன்ன பூவைந்து கேள்
வல்லவனை வணங்குவதற்கு வகுத்
தானவை ஐந்தாம் என மொழிந்தான்''

மரத்தின் பயனே பூவும், அதனின்று உருவாகும் காயும் கனியும் விதையுமாகும். அதுபோல் வண்ணமலர்களாகிய தொழுகைகள் மனிதனுக்கு மிகுபயன் விளைவிக்கின்றன என்பதை நூறுமசலா ஆசிரியர் உணர்த்துவதை எடுத்தாளும் மணவையார் இது போல் பரக்கப் பல சான்றுகளைத் தந்த வண்ணம் செல்கின்றார். நூல் இறுதியில் இந்த எட்டுவகைப் பட்ட இலக்கியங்களின் நூலாசிரியர் பெயரோடு இணைந்த நூற்பட்டியலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

சுருக்கமாக நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் கூறுவது போல், ''மதத்திடம் அழுத்தமான பற்றுடையோர்தான் அம்மதம் சார்ந்த இலக்கி யங்களை நுணுகி ஆராயத் தகுதி பெற முடியும்'' என்ற கூற்று வழி, தகுதியும் மிகுதியும் படைக்க மணவையாரின் இஸ்லாமியப் பணி ஈடு இணையற்றதாய் எழிலுடன் மிளிர் கின்றது.

## 2) அண்ணலாரும் அறிவியலும் (1992)

இந்நூல் பிறக்க ஆசிரியரின் மனப்போராட்டமும், உந்துதலும், பிறர்க்குத் தாக்கம் ஏற்படுத்தும் தாகமும் கார ணங்களாய் அமைகின்றன. இந்நூல் பிறக்கும் சூழல் அமெ

ரிக்க மண்ணிலே விளைகின்றது. The hundred என்ற இணை யற்ற நூலின் ஆசிரியர் டாக்டர் மைக்கேல் ஹார்ட்டிடம் நூலாசிரியர் உரையாடிக் கொண்டிருக்கும்போது ''பெரு மானார்(சல்)அவர்கள் மட்டுமே அகத்தையும், புறத்தையும் பற்றி ஒருசேர அதிகம் போதித்தவர். அதிகம் அவர்களின் சிந்தனையும் செயலும் அறிவியல் போக்கிலானது. பெரு மானார் முதற்கொண்டு 1200 ஆண்டு காலம் இஸ்லாமியர் முயன்று உழைத்து இன்றைய அறிவியலின் அனைத்துப் பிரி வுகளின் அடிப்படைகளையும் அழுத்தமாக அமைத்துச் சென்றுள்ளனர். இவ்வரலாற்றையும் நம் முன்னோரே இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு மூலகாரணம் என்பதை யும் உணராதிருப்பது விந்தை'' என்று கேட்ட அளவில், சிந்தனை வயப்பட்ட மணவையார், அண்ணலெம் பெரு மானார்(சல்)அவர்களின் அறிவியல் போக்கை ஆராய முற்பட்டு எழுந்ததே இந்நூல் ஆகும்.

35 ஆண்டுக்கால அறிவியல் தமிழ்ப்பணிப் பட்டறி வினால் ஆசிரியர், இஸ்லாமிய அறிவியலாரின் சாதனை களை விளக்கப் பெருநூல் எழுதத் தலைப்பட்டாராம். முகாந்திரமாக இச்சிறுநூலை ஆழமான அடிப்படையில் அறிமுகமாக எழுதுகின்றார். இவற்றுக்கெல்லாம் தலையாய பெருமை பூண்டவர்கள் நம் அண்ணலெம் பெருமானார் (சல்)அவர்களே. மனிதர்கள் எப்போதும் பிறக்கின்றார்கள். மகான்களோ எப்போதோ அவதரிக்கின்றார்கள்; மனிதர்கள் எப்போதும் சாகின்றார்கள்; மகான்களோ எப்போதும் சாவ தில்லை. அப்படிப் பிறவாமல் பிறந்து இறவாமல் வாழ்ப வரே நம் இன்ப அன்பு நபி(சல்) அவர்கள். தம் வாழ்க்கை வாயிலாக அவர்கள் புகட்டிய படிப்பினைகள், அறிவியல் பாடங்கள், முன்னோடித் தத்துவங்கள் அவை உலக மெங்கும் பின்னாளில் வெளிப்பட்டு மிளிர்ந்து வளர்ந்து

அரிய கண்டுபிடிப்புகளுக்கு ஆளான தன்மை, இவற்றை நூல் நெடுக ஆசிரியர் குறித்துச் செல்கின்றார்.

நூல் தரும் தகவல்கள் ஏராளம்

கல்வி இஸ்லாத்தில் மிகவும் வற்புறத்தப்பட்டது; கல்வி வளர்த்த நாயகம்(சல்)அவர்கள் அன்றையக் கலைத் தாயகமான சீனா செல்லப் பணித்ததும் விளக்குவர்; எகிப்தில் 1200 ஆம் ஆண்டிலேயே அல்அஸ்ஹர் பல்கழைக் கழகம் நிறுவிய பெருமை: கிரேக்கத் தலைநகர் ஏதென்ஸில் அமைந்த சாக்ரடீஸ் தர்கா; (ஒரு வேளை அறிவியல் ஞானி யான சாக்ரடீஸ், பிளேட்டோ கிரேக்க நாடுபெற்ற இறை தூதர்களாக இருக்கலாமோ எனக் கருதி தர்கா அமைத்தல்) நினைவுச் சின்னமாகப் போற்றப்படும் இத் தர்காக்கள்; உலக அறிவியல் மொழியான அரபி இருந்த பான்மை; அறி வியலின் தாயான கணிதத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்த இஸ்லாமியர்; கிரேக்க மொழியிலிருந்த அனைத்து மருத் துவ நூல்களையும் மொழி பெயர்த்த மருத்துவ ஆராய்ச்சி யாளர் ஹுனைன் இப்னு இஸ்ஹாக் அல் இயாதி, எண் குறி யீடுகளின் தாயகமாக இந்தியா இருந்த நிலை; x = எக்ஸ், சைபர், ஸீரோ போன்ற கணிதவியல் கலைச்சொற்கள் அரபிச் சொற்களே; அல்ஜீப்ரா, அல்கோரிதம், திரிகோண மிதி, வடிவகணிதம், யூக்ளிடின் கணிதவியல் கோட்பாடு, எந்திர நுட்பக் கருவிகள் உருவாக்கம்; ஒலி, ஒளிவேகம், சக்கரம் கண்டுபிடிப்பு, நீர்ச்சுழல் எந்திரக் கருவி, காற்று எந் திரக்கருவி, இருசு, நெம்புகோல், கப்பித்தான், ஊசல், பெண்டுலம், நீர்க்கடிகாரம், சந்திரனின் இயக்கம், முதல் வானவியல் ஆய்வுக்கூடம், முதல் பூகோளப்படம்; துல்லிய நாட்காட்டி; ஈர்ப்பு விசை; ஏவுகணை, அறுவை மருத்துவம், மயக்க மருந்து போன்ற எண்ணரிய அறிவியல் கண்டு பிடிப்புகளை உருவாக்கியவர் இஸ்லாமியரே என்பதை

ஆசிரியர் அடுக்கி அடுக்கி எழுதிக் கொண்டே செல்வது மலைப்பைத் தருகின்றது.

இதன்றி பின் தொடரும் பல செய்திகள் - முதன் முதலாக உலகம் உருண்டை எனக் கண்டறிந்தவர் முஸ்லிம் களே; கொலம்பஸுக்கு உதவியாக, வாஸ்கோடகாமா வுக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் முஸ்லிம்களே: கண்ணொ ளியின் தந்தையான இப்து அல் ஹைத்தாமும், இரசவாதக் கலையின் தந்தையான இப்து ஹையான் என்பாரும், மருத் துவ மலர்ச்சிக்குக் காரணமான இருபெரும் அறிஞர்கள் - அல்ராஸியும் அவிசென்னாவும் மருத்துவர்களின் மாபெரும் உந்து சக்தியானவர்களாகவும் பன்னூலாசிரியர் அல்பிரூனி யும் - இணையற்ற சாதனையாளர்கள் என எடுத்துக் காட்டு கின்றார்.

நூலின் ஒவ்வொரு பக்கமும் அறிவியல் துறையில் இஸ்லாமியர் இன்றுவரை எல்லாத் துறையிலும் கண்டு பிடித்த எண்ணிறந்த தகவல்களை ஆசிரியர் எடுத்துச் சொல்வதைப் படிக்கப்படிக்க இந்நூல் பலருக்கும் அறிமுக மாக வேண்டுமே என்ற நியாயமான பதற்றம் மனமெங்கும் தொற்றுகின்றது; தமிழில் இதுபோன்ற அறிவியல் அறிமுக நூல்கள் வெளியானாலொழிய எத்தகைய அறிவியல் பொற்காலத்தின் அதிபதிகளாக இஸ்லாமியர் இருந்தனர் என்பதனை அறியவே இயலாது. கோடிக்கணக்கான தமிழ் கூறு நல்லுலக மக்கள் அறிந்தேயாகவேண்டிய அரிய நூலிது.

இத்தகு அறிவியல் முன்னோடிகள் பின்னாளிலே தேக்கமும், வீழ்ச்சியும் அடைந்ததையும் காட்டி, இருந்ததை இழந்துநிற்க, இங்கிருந்து பெற்ற ஐரோப்பாவோ தொழிற் புரட்சியும் விரைந்து எழுந்து வளரத் தொடங்கியது; இஸ்லா மியமே அறிவியல் உலகிலிருந்து விலகி, ஆன்மிக வளர்ச் சிக்கு விரைந்து மார்க்கக் கல்வியில் ஆழ்ந்து, விஞ்ஞான

வெற்றி உகந்ததல்ல எனப் பிரச்சாரம் செய்து ஆன்மிகத்தில் ஆழ்ந்தனர்.

இன்னும் பொருளாதாரம், எண்ணெய் வளம் எனச் சிறந்திருந்தும் இஸ்லாமியர் அண்மைக் காலம் வரை அறிவியல் வளர்ச்சியில் நாட்டம் செலுத்தவில்லை. மிக அண்மையில் ஓர் அறிவியல் எழுச்சி அபுல் கலாம் போன்றோரால் அரிதின் மலர்ந்துள்ளது. அது மலர்ச்சிக்கு வித்திட்டுப் பண்டைப் பெருஞானத்தை மீட்டு, முந்தையர் ஆயிரம் எண்ணம் சிறந்து வாழ்ந்த காலத்தை மீண்டும் வரவழைக்கும் முயற்சியாக மலர வேண்டும். எனவே அண்ணலார் (சல்) அவர்களின் கல்விக் கொள்கையின் அறிவுத் தேடலின் மூலம் அறிவியல் உணர்வைப் பெறலாம் என்ற போக்கு நம்மிடையே உணர்ந்து செயல்பட்டால் மீண்டுமொரு மலர்ச்சி பிரமிக்கத்தக்க அளவில் உருவாகும் என்பதில் ஐயமில்லை என நம்பிக்கை ஒளியுடன் நூலைமுடிக்கும் ஆசிரியர் நம் மனதிலும் நம்பிக்கை ஒளி யேற்றுகின்றார்.

### 3. இஸ்லாமும் சமய நல்லிணக்கமும் (1996)

ஆசிரியரின் இஸ்லாமிய இலக்கியப்பணி இந் நூலளவில் தொடக்கம் பெறுதற்கும் ஒரு வலுவான காரணம் உண்டு. கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களால் தவறான கண்ணோட்டத்தில் இஸ்லாமிய நல்லிணக்க உணர்வுகள் சிலரால் மறைக்கப்பட்டன: மாற்றித் திரித்துக் கூறப்பட்டன; தவறாக விளக்கப்பட்டன; உண்மை நீண்ட நாள் உறங்க முடியாதன்றோ?

இஸ்லாத்தின் ஒருமைப்பாடு, நல்லிணக்க உணர்வு, பெருமானாரின் வாழ்வு, வாக்கு - இவை யாவும் உலகம் கண்டு உவக்கும் காலம் வரவே, அதனை வளப்படுத்தும் முகமாகவே இந்நூல் எழுதப்பட்டதாக ஆசிரியர் உரைக்கின்றார்.

மேலும் தினமணிக்கு ஆசிரியர் எழுதிய கட்டு ரையோ-அவர்கள் கொடுத்த ஊக்கமாகச் செயல்பட்டது. 'படைக்கப்பட்டவை அனைத்தும் அல்லாஹ்வின் குடும் பமே' என்ற பெருமானர் (சல்) வாக்கினைக் கொண்டு தொடங்கும் இந்நூல், முழுக்கச் சமய நல்லிணக்கச் செய்தி கள், வரலாற்றுச் சான்றுகளுடன் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன.

இஸ்லாத்தைப்பற்றி அறியாதாரே அறியாமல் 'இதனைப் பிற மதங்களின் எதிரி; மதம் மாற்றுவதே இவர்க்குக் கொள்கை; அதற்கு வன்முறைகளையே பயன் படுத்துவர்' என்ற கருத்துகளைப் பரப்பினராதலின், அவை இஸ்லாத்தின் உண்மைத் தத்துவத்தை உணராது சில காலங் களில், சில இடங்களில் நடந்த சில நிகழ்ச்சிகளைக் கொண்டு உருவாக்கியுள்ளனர் என்று ஆசிரியர் நூலெங்கும் அதற்குச் சான்றுகளை கூறிச் செல்லும் பாங்கு அற்புதம். இஸ்லாத்தில் கட்டாயத்திற்கே இடமில்லை என்ற அருமையை வற்புறுத்திச் செல்லும் பாங்கினை அணிந்துரை வழங்கிய அறிஞர் சி. சுப்பிரமணியமும் பாராட்டுகின்றார்.

முன்னுரை எழுதிய நீதிபதி வகாப் அவர்களும், இஸ்லாமியர், இஸ்லாத்தைப்பற்றி இஸ்லாமியர்க்கே எழுதிக் கொண்டும், பேசிக் கொண்டுமிருப்பதைப்போல் இராது, மணவையார் இஸ்லாமியரல்லாதாரும் படிக்க வேண்டும், கருத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தோடு இனிய எளிய தமிழில் அரபுச் சொற் களைக் குறைத்து எழுதியுள்ளார் எனக் குறிக்கின்றார். மேலும் இஸ்லாத்தையும், இஸ்லாமிய மன்னர்களையும் பற்றிய தவறான கருத்துகளைச் சுட்டிக் காட்டுகிறார் என்று பாராட்டுகின்றார். 'ஏதாயினும் மதக்கலவரம் என வந்தால், அது இரு தனிப்பட்ட மனிதர்களிடையே ஏற்பட்ட

தகராறாகத் தான் கருதிச் செயல்பட வேண்டுமேயன்றி இரு மதத்தாருக்கிடையே ஏற்பட்ட மதச் சண்டையாகக் கருதும் போக்கு ஒழியட்டும்'' என்று நீதிபதி அவர்கள் கூறும் கருத்து, விழப்புணர்வு ஊட்டவல்லது. அப்படியல்லாமல் வலிய வலிய இஸ்லாமியர் மீது குற்றச் சாட்டைத் திணிப்பது என்பது, மலரமலர விழித்தாலும் கோட்டானின் விழிப்பு இருட்டுக்குத்தான் சொந்தம் என்பதுபோல் புரட்டும் பொய்யும் பேசத்தான் என்பது தெளிவாகின்றது.

இது தொடர்பாக நூலில் பரவியுள்ள ஆசிரியரின் அருங்கருத்துக்களைக் காண்போம். இன்று, மதத்தை வழி நடத்துவதாகக் கூறிக் கொள்ளும் போலிச் சமயவாதிகள், சமயப் போர்வையில் சுயலாபம் தேடியலையும் கும்பலா கவே இருக்கின்றனர். இஸ்லாத்தைப் பற்றிய தவறான பிர சாரம் வேறு ஒருபுறம் நிகழ்கின்றது. அதில் ஒன்று - ''இஸ்லாம், வாளால் பரப்பப்பட்டது'' - என்பதே. பி.பி.சி. அறிவிப்பாளர் ரோஜர் ஹார்டி என்பார், ''உலகிலேயே மிகத் தவறாக விவரிக்கப்பட்ட, தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம்'' எனக் கூறும் கூற்று இதனை மெய்ப் பிக்கும். ஆனால் ''நாவாலும் கரங்களாலும் தீங்கு விளை விக்காதவனே முஸ்லிம்'' எனும் நபி(சல்) அவர்களின் மொழியை அறிந்திருந்தால், பேச்சாலும் எழுத்தாளும் பிறரைக் காயப்படுத்தாதவன் முஸ்லிம் என உணர்ந்தி ருப்பர்; இதற்கு ஆசிரியர் காட்டும் சான்று - காஷ்மீரத்தில், கேரளாவில் இஸ்லாமிய மன்னர் ஆட்சியே எக்காலத்தும் இல்லை; இந்துக்களே மன்னர்; ஆனால் அங்கு அதிக எண்ணிக்கையில் வாழ்பவர் இஸ்லாமியரே. எப்படி வாளால் பரப்பப்பட்டிருக்கும் இஸ்லாம்?

தொடக்கத்தில் முஸ்லிம்களே பெருந்தொல்லைக்கு ஆளாகியபோது, தம்மைத் தற்காத்துக் கொள்ள முயன்ற

முயற்சி கருதியே இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற கதை கட்டப்பட்டது. அந்தக் கொடிய பண்டைக் காலத்தில் அவர் பெற்ற காயங்களும் ஊமை; அவர்க்கு வழங்கப்பட்ட நியாயங்களும் ஊமை, அந்த நேரத் தாக்குதல்களில் பொறுமை மீறிப்போய் அவர்கள் போர்த்தடுப்பு, தற் காப்பில் ஈடுபடவே இப்பொய்ப்பிரசாரம் நிலையாக நிறுத் தப்பட்டது. இதனை ஆசிரியர் நிரலான சான்றுகள் வழி காட்டுவது தான் சிறப்பாக உள்ளது.

இஸ்லாம் இந்திய மண்ணில் பிறந்ததாயினும் இந்த தேசத்தை ஈர்க்க என்ன காரணம் என்பதைச் சுட்டவரும் ஆசிரியர் விளக்கமும் அருமை - 'ஒன்றே குலம் ஒருவனே தேவன் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்', 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஏகத்வக் கொள்கையும் சகோதர, சமத்துவமும் சங்ககாலம் தொட்டு முழங்கிவர, அவை மங்கிப்போன காலக்கட்டத்தில் இஸ்லாம் அக்கொள்கை களையே முழங்கிவர, இழந்த செல்வத்தை இருகை ஏந்தி ஏற்க வந்ததுபோல் தமிழகம் பெருவிருப்போடு இஸ் லாத்தை ஏற்று இன்தமிழ் இலக்கியங்கள் பிறக்கக் களம் வகுத்தது என ஆசிரியர் கணிப்பது, படிப்பவரின் கண்கள் பனிக்கின்ற அனுபவமாகிறது.

600 ஆண்டுக் காலம் இந்தியாவை இஸ்லாமிய மன்னர்கள் ஆண்டாலும், அவர் நாட்டாட்சி மட்டுமே கருதி னரே தவிர, இஸ்லாமிய நெறிபரப்பும் சிந்தை ஏதுமில்லை அவர்க்கு. அப்படியிருக்க வாளால் எப்படிப் பரவும் இஸ்லாம்? ஒருசிலர் மாலிக்காபூர், கஜினியின் படையெடுப் புகளைச் சான்றாகக் கூறுவர். அதுகூட வரலாற்றை ஆழ்ந்து கண்டால் நிலைமையே விபரீதமாக உள்ளது. மாலிக்காபூர் தீவிரப் படையெடுப்பு நிகழ்த்தி, தமிழகம் நோக்கி வந்த காலை, இங்குள்ள இஸ்லாமியரைத் தன்பால் இணைந்துக்

கொள்ளுமாறு கேட்டபோதும், தமிழக இஸ்லாமியர், அதனை ஏற்க மறுத்துத் தம் இனம், தம் நாட்டோடு இருந்த கதையை உண்மையான வரலாறு படித்தவர் அறிவார். கஜினியின் படையெடுப்பும் சமயத்தின் பேரால் நடை பெற்ற ஒரு ஏமாற்றைத் தடுக்க வேண்டி நடைபெற்றதே என்பதும் வரலாறு காட்டும் செய்தி. அவன் படைத்தளப தியே திலக் என்ற இந்து. உண்மைகள் இப்படி ஏடுகளில் உறங்கிக் கிடக்க பொய் வீதியுலாப் புறப்பட்டுவிட்டது தான் கொடுமை. அதில் இஸ்லாமியம் தவறாய் இனங்காட்டப் பட்டது. கொடுமையிலும் கொடுமை. இப்படிப்பட்ட சிந்தனை அலையைத் தூண்டும் எழுத்துக் கோலம் மணவை யார்க்கு இந்நூலில் வாய்ந்துள்ளது. இந்நாட்டை ஆண்ட இஸ்லாமிய மன்னர்க்கு இஸ்லாமிய நெறிபரப்பும் நோக்கும் இல்லை; அதற்குச் சான்றும் எதுவுமில்லை. பலர் ஐம்பெருங் கடமையைக்கூட நிறைவேற்றாதிருந்தனர். எல் லாம் நிறைவேற்றிய ஔரங்கசீப் கூட 'ஹஜ்' ஜைப் பிற மன்னர் போன்றே நிறைவேற்றவில்லை. எனவே வாளால் எப்படிப் பரவும் இஸ்லாம்? என்ற ஆசிரியரின் நியாயமான கேள்வி நெஞ்சை நெருடுகின்றது.

'இஸ்லாம் எந்தச் சமயத்திற்கும் எதிரானது அன்று' என்ற நபி(சல்)அவர்களின் நன்மொழியையும் காட்டி, உல கெலாம் நபிமார் வந்து அத்துணை மொழிகளிலும் பொதுச் சிந்தனை தந்தனர் என விளக்குகின்ற ஆசிரியர் மேலும் பல செய்திகளைத் தருகின்றார்.

உலகெலாம் நிறைந்த மனிதர் கூட்டத்திடையே வந்து சொல்லாற்றல் மிக்க நபிமார் பலர் வந்தாரெனினும், முதல் நபிக்குக் கூறப்பட்டதே இறுதி நபிக்கும்தான் என்ற ஒரு மைப்பாடு விளக்கப்படுகின்றது; 500 கோடிப்பேர் பரவிய உலகில் இஸ்லாமிய மக்கள் மட்டும் 100 கோடிப்பேர்கள்.

இந்த ஓரிறைக்கொள்கையைப் பூரிசங்கராச்சாரியார், பகவத்கீதை வாசகம், கௌதம மகரிஷி, சங்கராச்சாரியார் போன்றோர் வற்புறுத்தும் பாங்கைச் சான்றுகளுடன் நிறுவும் ஆசிரியரின் சாமர்த்தியம் நமக்கு வலிமையூட்டுகி றது. இந்து சமயத்தின் 6 காலப் பூசை-இஸ்லாத்திலும் தஹஜ் ஜத்தைச் சேர்த்து 6 தொழுகை வேளைகள். இந்து சமய விரதங்கள் இஸ்லாத்தில் நோன்புகள். ஜகாத், சதக்கா, ஃபித்ரா, போன்றவற்றுக்கிணையான இந்து தர்மங்கள்; உடல் திறமுள்ள முஸ்லிமின் வாழ்நாளின் உயிர்க்கடமை யான ஹஜ்ஜு, இந்துக்களின் புனித யாத்திரைகள்-எனப் பல வகைகளில் ஒருமைப்பாட்டினை விளக்குகின்றார் ஆசிரியர்.

மேலும் அல்லாஹ் யார்? இஸ்லாம் என்றால் என்ன? என்பனவற்றுக்கு அரிய விளக்கங்கள்; எல்லாம் வல்ல அல்லாஹ்வால் மட்டுமே உம்மி நபியின்(சல்) குருவாக இருந்து ஓதவைக்கும் அருமை தேரும்; உலகம் ஒன்று; பல கிளைகள், கோத்திரங்களாய் விரிந்த இவ்வுலகினர் அனை வரும், ஒரே மூலமான மூலத் - தாய் தந்தையரால் பிறந்தவர்; அனைவரும் எச்சமயத்தவராயினும் சகோதரரே; குலம்; கோத்திரம் வெறும் அடையாளமே; யாரிடமிருந்து மனித இனத்துக்கு நன்மை கிடைத்துக் கொண்டிருக்கிறதோ அவன்தான் மனிதர்களில் சிறந்தவன்' ''இஸ்லாத்தில் நிர்ப்பந்தமே இல்லை; உங்களுக்கு உங்கள் மார்க்கம்; அவர் களுக்கு அவர்கள் மார்க்கம்' என்ற அரிய திருமறை விளக்கங் களைச் சீரிய சான்றுகளுடன் விளக்குதல்; பள்ளிவாசலில் கிறித்தவர் பிரார்த்தனை, ஜெரூசலத்தில் உமர்(ரலி) அவர் களின் சமயப் பொறை, பிறசமய எதிரிகளை அன்பால் எதிர் கொண்ட பெருமானார்(சல்) அவர்கள்; மதினாவில் முதல் சர்வசமய மாநாடு; யார் என்பதைவிட, என்ன என்பதில் உள்ள சிறப்பு, அல்பரூனி, அன்னை இந்திரா ஆகியோரின் ஒருமையுணர்வு, வள்ளலாரின் ஆடை 'இஹ்ராம்' ஆடையை ஒத்திருத்தல்; பதினெண் சித்தர் பட்டியலில் மச்ச

ரேகைச் சித்தர், ஐதுருஸூம், குணங்குடியாருமான சுல்தான் அப்துல்காதர், தக்கலை ஞானி பீர்முகம்மது அப்பா மூவர் அடங்கியிருத்தல்; ஜிஸியா வரி, ஔரங்கசீப்பால் இந்துக் களின் நலனுக்கும், பாதுகாப்புக்குமாக வசூலிக்கப்படுதல்; அண்டை வீடு யாதெனில். ''ஒருவனது வீட்டின் அனைத்துத் திக்கிலும் அமைந்துள்ள நாற்பது வீடுகள் அண்டைவீடு களாகும் ''என்ற பெருமானார் வாக்கும், அண்டைவீட்டா ருக்கு அன்பு செலுத்தும் போக்கும் கற்பித்தல்; சமநீதி இஸ்லாம் வழங்குவதற்குச் சான்றுகள்; எம்மதமும் சம்மதம் என்பதைவிட அவரவர்க்கு அவரவர் சமயம் என்பதே சத்தியம், சாத்தியம் என வரையறை செய்தல்; மதச்சார்பற்ற அரசு என்றால் காயிதெ மில்லத் அவர்கள் கூறுவதுபோல் 'எந்த மதத்திற்கும் எதிராகாத, எந்த மதத்தையும் பின்பற்றாத எந்த மதச் செயல்களிலும் தலையிடாத, எதையும் ஆதரிக் காத, எதிர்க்காத நடுநிலைமை வகித்தல்'' என்ற அரிய விளக்கம் சுட்டல்; உலக ஒருமைப்பாட்டிற்கே கட்டியம் கூறும் பெருமானார்(சல்) அவர்களின் இறுதிப் பேருரை- உங்கள் இறைவன் ஒருவனே; ஈமானில் ஒழுக்கத்தில் உயர்ந் தாரே உயர்ந்தோர்; நாடோ நிறமோ அதனை நிர்ணயிக்காது; வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே நலம்-என்ற இவை போன்ற விலைமதிக்க இயலாக் கருத்துகளின் கருவூலமே இந்நூல். இதுபோன்ற நூல் எல்லாச் சமயத்தாரிடமும், கல்வி நிலையங்களிலும் அங்கம் பெற்றால் பலன் தங்கமாய் விளையும் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியரின் அரும் பாடு இதில் தெற்றெனத் தெளிவாகின்றது.

## II. கட்டுரைத் தொகுப்பு

### *4. பெருமானாரின் பிறசமயக் கண்ணோட்டம் (1993)*

மொத்தம் 22 கட்டுரைகள் இடம் பெற்ற இத் தனி வகைக் கட்டுரைத் தொகுப்பு ஆசிரியரின் மற்றுமொரு

முயற்சி. இந்நூல் பிறந்த காரணங்கள் கட்டுரைத் தலைப் பிலேயே தெரியவருகின்றது, ஒவ்வொரு இஸ்லாமியச் சிறப்புப் பெருநாட்களின்போது. அவற்றின் முக்கியத்துவம் குறித்து பத்திரிகைகளுக்கு - தினமணி - ஓம் சக்தி - போன்ற இதழ்களுக்கு எழுதிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந் நூல். பிற சமயத்தார் சரிவர இஸ்லாத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்; தவறாகப் புரிந்து கொண்டு இருப்பதே இன்று எழும் பல பிரச்சினைகளுக்குக் காரணம் என்று கூறவே எழுந்தது இந்நூல் என்கிறார் மணவையார்.

பெருமானார் (சல்) அவர்களைப் பற்றிய 6 கட்டு ரைகள், ரமலான் பற்றிய 5 கட்டுரைகள், ஹஜ் பெருநாள் பற்றிய 4 கட்டுரைகள், முஹர்ரம் பற்றிய 4 கட்டுரைகள் பொதுவான 3 இஸ்லாமியக் கட்டுரைகள் அடங்கப்பெற்ற நூல். நூலுக்கு அமைவான அணிந்துரையை, வாழ்த்து ரையை வழங்கிய பெருமகன்கள் தவத்திரு குன்றக்குடி அடி களார் அவர்களும், பேராயர். எஸ்றா. சற்குணம் அவர் களும், மல்லானா அப்துல் வஹ்ஹாப், தினமணி ஆசிரியர் திரு மாலனும் ஆவர்.

தினமணிக்கு ஒரு முறை ''பெருமானாரின் பிற சமயக் கண்ணோட்டம்' என்ற தலைப்பில் ஆசிரியர் அனுப்பிய கட்டுரை, ஐராவதம் மகாதேவன், பி. பெருமாள் போன் றோரால் பெரிதும் பாராட்டப்பட்டு, தொலைபேசி, கடி தங்கள் வழி வாழ்த்திய போது அவர்கள் எண்ணங்களை ஆசிரியர் நினைவு கூர்கின்றார். அன்னார், இஸ்லாமானது இதுகாறும் தங்கள் எண்ணப் போக்களவில், பிற மதங்களை அழிக்கவந்த சமயம் எனக் கருதியது தவறானது. இது அப்படிப்பட்ட மார்க்கம் இல்லை; பிறமதங்களை மதிப் பதே இஸ்லாத்தின் அடிப்படை என்றுணர்ந்து, இஸ்லாம் மதத்தின் மீதே மதிப்பு ஏற்பட்டு, சமூக நிலைமை சமநீதி

பெறவே இஸ்லாம் புறப்பட்டதென்பதை அறிந்தோம் என்ற கருத்து உருவாகும் அளவு மடலில் எழுதப்பட்டது.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் மனித இதயங்கள் இணக்கம் பெறாக் குறையைத் திருமறை தீர்க்கும் என்ற நம்பிக்கையோடு மணவையார் இந்நூலை எழுதியுள்ளார் என்கிறார். கட்டாயக் கலிமா, விடாப்பிடி தொழுகை, நிச்சய நோன்பு, சத்திய ஜகாத், சாசுவத ஹஜ் எனும் ஐந்து கடமைகளின் வழிப்பட்ட இஸ்லாமியரின் வாழ்வுக்கும், வழிபாட்டுக் காலம், விழாத் தொடர்பான காரணங் களுக்கும் அமைந்த சூழலைப் படிப்படியாய் உணர்த்து கின்றார் ஆசிரியர். தருமிகள் இருக்க வேண்டிய உலகிலே கருமிகளும் உள்ளனர். அவர் கருமிகள் அல்லர்; சமுதா யத்தின் நோய்க் கிருமிகள் என்ற உண்மையை விளக்கி, நிதி மிகுந்தவர் ஒன்றுமிலார்க்கு ஒதுக்கின் கொடுக்கவும், ஏற்றத் தாழ்விலாச் சமுதாயம் மலரவும் அமைந்த பெருநாட்களின் மகத்துவங்களை விரித்துரைக்கின்றார். வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை நீங்கிப் பொதுவுடைமை மனிதாபி மானத்தால் மலர்தல் வேண்டும் என்ற நோக்கும் கொடைக் கடனை - ஜக்காத்தைக் கறையாது கொடுத்து நிறைவாக வாழுங்கள் என்ற பாடமும் முழுமையான ஒவ்வொரு முஸ்லிமுக்கும் போதிக்கும் முயற்சியாகவே மலர்ந்தது இந்நூல்.

மேலும் புண்ணியம் எது? பாவம் எது? பக்தி எது? பரிசுத்தம் எது? அதைப் போதிக்க வந்த பெருமானாரின் சோதனையும், சாதனையும் எவ்வண்ணம் என்பதனை நூலா சிரியர் மணவையார் திருமறை வாக்கினை வைத்து விளக்கும் பகுதிகள் சிறப்பானவை.

காலத்தால் பழமை முதிர்ந்து செறிவு கனிந்து,ஊழுறு தீங்கனி போல் சுவையூறும் இஸ்லாத்தின் அருமை,

பெருமை தெரிந்து உலகோர் அனைவரும் தாமே அதை நோக்கித் தளர்நடையிட்டு ஆனால் உறுதியாய் முன்னேறி வரும் காலக்கட்டமிது. பண்டைய அருமையெல்லாம் இன்று உலகெங்கும் பரவலாகப் பலரால் போற்றப்படும் காலம். இங்கிலாந்தில், 'Back to Basics' என்ற எழுச்சியும் அமெரிக்காவில் 'Returning to the traditional homely life' என்ற மலர்ச்சியும் ஏற்படும் காலமிது. இத்தகைய நாளிலே, பண்டைவளம் செறிந்த பன்னயக் கலிமா நிறைந்த சொன்னத் தொகுப்பான திருக்குர்ஆனின் செவ்வியல் அடிப் படையை உணர்ந்தும் இறையோன் என்றால் ஈடு இணை அவனுக்கில்லை; தூதரே முகம்மது (சல்) என்ற அடிப்ப டையை உளங்கொண்டால், இவ்வுலகம் பொல்லாத உள்ளத்துயர் பூரணமாய்ப் போய்விடும், நில்லாது சலனங் கள் நெடுந்தூரம் ஓடிவிடும் என நிரூபிக்கின்றார். உலகி லேயே உயர்ந்த மானிடப் படைப்பினம் வெறும் நடைப் பிணம் ஆவதுண்டோ? அதற்கென ஆணும் பெண்ணும் போட்டியிடல் வேண்டுமோ? தன்னைத்தான் சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ளச் செம்மைப் பாதையைப் புரிந்து நடந்து வாருங்கள் என்பதை விளக்குவது போல் அமைந்த கட்டு ரைகள் இங்கே திரண்டுள்ளன.

அவர்தம் எழுத்துக் கோலத்தின் ஆளுமையையும் அதனை ஆண்டு சிறந்த அன்னாரின் பெருமையையும் காண் பதற்குப் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் வாழ்ந்து ரையே போதும். "ஆசிரியர் நாடு போற்றும் நல்ல எழுத் தாளர்; இஸ்லாமியச் சமுதாயத்தின் பெரும் சிந்தனையாளர்; தொய்வற்ற ஆய்வாளர்; இயற்பியல், பொறியியல், விஞ் ஞானம், இறையியல், இலக்கியம் ஆகிய எல்லாத் துறை யிலும் வித்தகர். அவர்தம் படைப்பு - கல்லாதார்க்கு ஒரு கலைக் களஞ்சியம், கற்றோர்களுக்குத் தெளிவுரை; மற்ற வர்க்கு அறிவுரை. பல நூறு புதுவார்த்தைகளைத் தமிழ் உல

குக்கு உற்பத்திசெய்து விநியோகம் செய்து வரும் ஓர் அறிவுத் தொழிற்பேட்டை'' என்றுரைத்திருப்பதே சிகரமான பாராட்டு.

## III. களஞ்சியம்

### 5. இளைஞர் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம் (1991)

மணவையாரின் களஞ்சியப்பணி குறித்துத் தனியே ஆய்வு செய்யப்பட்டாலும், இஸ்லாமிய இலக்கியப்பணி என்ற அளவில் இந்நூலும் பங்கேற்பதால் ஒரு சில கருத்துக் களைக் கூற கடமைப்பட்டுள்ளோம்.

மனிதன் தான் அறிந்த அறிவுகள் அனைத்தையும் ஒரே நூலில் பொதியவைத்து மக்களினம் பயன் அடைய வழங்க வேண்டும் என்ற நன்னோக்கத்தின் அடிப்படையில் விளைந்ததே கலைக்களஞ்சியம் என்பதைப் பன்னூலாசிரியர் அப்துற்-ரஹீம் போன்றவர் கூறுவர். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே உலகெங்கும் கலைக்களஞ்சியம் எழுதும் பணி தொடங்கிவிட்டது. எனினும் தமிழில் பதினாறாம் நூற்றாண்டு முதற் கொண்டுதான் இது தீவிரமடைந்தது. அதுவரை தமிழில் இருந்தவை நிகண்டுகள்தாம். 1594ம் ஆண்டில் இரேவணச்சித்தர் இயற்றிய அகராதி நிகண்டே தமிழின் முதல் அகர முதலி எனக் கூறுவர். பின்பு அகரமுதலாகச் சொற்களை வகுத்துக்கூறிப் பொருள் கூறும் அகராதிகளை முதன் முதலாக இயற்றிய பெருமை வீரமாமுனிவருக்கே உரியது. பின்னர். எழுந்ததே, அரிய ஆழ்ந்த பொருளை, செய்திகளைக் கடல் போலத் திரட்டித் தந்த கலைக்களஞ்சியங்கள்.

இதைப் பல்பொருள்விளக்க நூல் எனப் பாராட்டிப் பெருமை சேர்த்தனர். சீனர்களே இதற்கு முன்னோடிகள். சீனத்தில் 11,000 தொகுதிகள் படைத்து, அழிந்தது போக

இன்று எஞ்சிய தொகுதிகளை 5020 தொகுதிகளே உள்ளன. கவிதையிலும் களஞ்சியங்கள் உலக அரங்கில் தோன்றி னாலும். உரைநடையே உகந்த வடிவெனப் பெருகி வந்தன. இஸ்லாமிய இலக்கியக் களஞ்சியம் பத்துப்பன்னிரண்டு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே அரபிமொழி முதலாகப் பல மொழிகளில் பிறந்தாலும், தமிழில் இருபது ஆண்டுகட்கு முன்புதான் வெளியாகியது. ஆதம்(அலை) அவர்கள் காலம் முதலாக இன்றுவரை உலகில் பரவிய மார்க்கச் செய்திகள், இஸ்லாமிய நாடு, நகரங்கள் பற்றிய முக்கிய, விரிந்த செய்திகள் இடம் பெறுகின்றன. வித்திட்ட பெருமகனார் எம்.ஆர்.எம். அப்துற்-ரஹீம் அவர்கள், மூன்று தொகுதி களாக இதனை வெளியிட்டு அருந்தொண்டாற்றினார்கள். அன்னாருக்கே இக்களஞ்சிய நூலைக் காணிக்கையாக்கிக் கையடக்கக் களஞ்சியமாகச் சிறுவர்களுக்கென உருவாக்கிய தோடல்லாது, இஸ்லாமியரல்லாதவர்க்கும் இது ஓர் எளிய ஆனால் ஆழ்ந்த பொருள்தரும் தகவல்களஞ்சியமாயுள்ளது.

ஆசிரியரின் கருத்தே எல்லாத்தரப்பினரும் இஸ் லாத்தின் நேரிய அடிப்படையைச் சீரிய முறையில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதேதான். இந்தியாவிற்கு வருகை தந்த மேலைநாட்டார் - குறிப்பாக. வீரமாமுனிவர், வின்ஸ்லோ பாதிரியார் போன்ற கிறிஸ்துவர்கள் அகராதிக் கலைக்கு அரும்பணியாற்றியது போன்றே மணவையாரும் இன்று களஞ்சியத்துறையில் திருப்புமுனை படைத்து வரு கின்றார். இளையர் இஸ்லாமியக் கலைக்களஞ்சியம், மருத் துவ அறிவியல் தொழில் நுட்பக் கலைக்களஞ்சிய அகராதி. இளைஞர் அறிவியல் களஞ்சியம், அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் (இருபாகங்கள்) மருத்துவக் கலைச்சொல் களஞ் சியம், சிறுவர் கலைக்களஞ்சியம் என்ற எழு படைப்பு களைப் படைத்துப் பெரும்பணி ஆற்றியுள்ளார் இவரைக் 'களஞ்சியக் கருவூலம்' என்ற தகுதி மிகுதியுடன் விளித்து

விருது கொடுக்கும் அளவுக்குக் கண்டு, வியந்து நிற்கின்றோம்.

## IV. தொகுப்பு நூல்கள்

### 6. சிந்தைக்கினிய சீறா

மணவையாரின் இஸ்லாமிய இலக்கியத் தொடர்புடைய தொகுப்பு நூல்கள் நான்கு. உலக நோக்குப் பார்வையுடன் தரமானதைப் பரிந்து தரும் முயற்சிகளுடன், பொறுப்புணர்வும், விழிப்புணர்வும் உடைய தமிழுறவு பூத்த தொகுப்பே இக்கட்டுரைத் தொகுப்புகள்.

இஸ்லாமிய இலக்கியம் ஓர் இனிய பூங்கா. அங்கு வானளாவும் தருக்கள் உண்டு. வள நறுமலர்கள் உண்டு; குளிர்ந்த நீருற்று உண்டு; கொஞ்சும் தென்றல் தவழும்; மயில் ஆடும்; குயில் பாடும். அங்கு சுகந்த மணமலர் பறித்து, இனிய கனிகொய்து, நறுந்தென்றலில் மூழ்கி, காலார உலாப் போகி, கண்ணாரக் காட்சி படைத்து, களி துள்ளும் உள்ளம் கொண்டோராய் உலவப் பிறந்தவரே கலை மனப்பட்ட உலகோர். இவ்விலக்கியங்களின் வழி, இஸ்லாமின் இனிய இதழ் அடுக்குகளை ஒவ்வொன்றும் விரித்தும், உரைத்தும் காட்டி நலம் நாட்டியவரே மணவையார்.

காலம் போகிற போக்கில் தமிழை வாழவைத்து வளப்படுத்தினால் மட்டும் போதாது; அழிவினின்றும் அதை ஆக்க நோக்கிலே காப்பாற்ற வேண்டும் என்ற தார்மிகப் பொறுப்பேற்று புறப்பட்டப் பல சான்றோர் இஸ்லாமிய இலக்கியங்களைக் காவல் காத்தனர். அதிலும் ஒழுக்க இலக்கிய நியதி காத்தனர். ஒழுக்க அடிப்படையில் நற்காப்பியமொன்று உருவாகாதா என்று தத்தளித்த காலத்தில் 15 அருந்தமிழ்க் காப்பியங்கள் உருவாகின; ஒரே இஸ்லாமியப் புலவரே 4 காப்பியங்கள் படைத்தார். புதுமை

இலக்கிய வடிவங்கள் கிளைத்தன. இங்ஙனம் அளப்பரிய ஆற்றல் மிக்க எழுச்சி வடிவங்கள் இஸ்லாமிய இலக்கி யத்தில் பெருகின. அந்த வரிசையில் சிகர மகுடம் சீறாப்பு ராணம் என்பதில் யாவருக்கும் இரண்டாம் கருத்துக்கு இடமே இல்லை. அந்தச் சிந்தனைக்கு விருந்தாகும் சீறாப் புராணத் திறனாய்வே இத்தொகுப்பில் விளைந்த தேனடை.

இத்தொகுப்பில் 14 கட்டுரைகள். இதில் 6 கட்டு ரைகள் இஸ்லாமியரல்லாதாரால் எழுதப்பட்ட கட்டு ரைகள். இதுபோன்ற அமைப்புகளைப் பாராட்டு முகத் துடன் அபுல்கலாம் ஆஸாத் போன்ற சான்றோர், ''ஒரு சமயம் சார்ந்தோர் மறுசமயத்தார் இலக்கியத்தை விருப் போடு படித்து அதன் சிறப்புகளை மனந்திறந்து பாராட்டிப் போற்றும் மனப்பக்குவமே நல்ல ஒருமைப்பாட்டு உணர்வு'' என்பார்.

நெஞ்சையள்ளும் சிலம்பு எனக் கேட்டிருக்கின் றோம். சிந்தைக்கினிய சீறா என்பதும் இதைப் போன்ற இனிய தலைப்பு. நறுமணப் பொருள் வணிகரின் மகனார் உமறுவின் வாக்கிலும் சிதறிய நறுமணத் திரட்டே சீறாப்பு ராணம். இஸ்லாமியக் கருத்தரங்கைத் தானொரு தனிமனி தராய் நடத்தி, ஒன்றல்ல இதுபோல் பல எட்டுக்கு மேற் பட்ட கருத்தரங்குகளை நடத்திக்காட்டிய இந்நாயகரை, 'கருத்தரங்க இயக்குநர் திலகம்' எனலாம். ஓயாப்பணி செய்யும் இவரைப்பற்றி எண்ணுங்கால் , ''நெஞ்சில் தின வெடுத்தால் இமயத்தைப் புரட்டிடலாம்; தாக்க நினைத்தால் இமயம் சிறியது; நீ தூங்க நினைத்தால் உயிரே சுமையது'' என்று கவிஞன ஒருவன் கூறியதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று இஸ்லாமியரைப் பற்றி வேறுபாடான கணிப் புகள் விரைவாகப் பரவிக் கொண்டிருக்கும் கட்டத்தில்

மொழி, நாகரிக, பண்பாட்டடிப்படையில் சாதி, சமய வேறுபாடற்று வாழ்ந்த முற்காலச் சுவடுகளையெல்லாம் நினைவுபடுத்தும் நன் முயற்சிபோல் இவர் தம் செயல்பா டுகள் அமைந்துள்ளன. இஸ்லாமியர் என்போர் தமிழிலக் கிய வரலாற்றிலே படியவிருந்த இருளை இரிந்தோட வைத்து, தேக்க நிலையைப் போக்குமுகத்தான், இரண்டாம் இருண்ட காலம் ஒன்று தமிழகத்தில் தலை தூக்கா வண்ணம் தொண்டாற்றிச் . சிறந்ததைக் கட்டுரை ஆசிரியரின் தொகுப்புப் பணி நினைவூட்டுகிறது.

காதற் சுவை மலிந்த படைப்புகளாக அல்லாமல் ஒழுக்கக் காப்பு இலக்கியமாகப் படைத்து ஒரு மாற்றம் செய்தனர் என்பதைச் சீர்தூக்கி நிறுத்துகிறார். இலக்கியங்க ளிடையே வேற்றுமையில்லை என எல்லாத் தரத்து மக்க ளையும் ஒருமுகப்படுத்தி ஒற்றுமை காண வைத்துள்ளார். இஸ்லாம் என்பது வாளால் பரப்பப்பட்டது, அன்று; வார்த்தைகளால் பரப்பப்பட்டது என்பதற்கு ஆசிரியரின் ஐக்கியப் படுத்தலே சாட்சி. டாக்டர் சி.பா., இரா.முத்துக் குமாரசாமி, பேராசிரியர்கள் க.ப. அறவாணன், கிருஷ்ணா சஞ்சீவி, மயிலை சீனி வேங்கடசாமி, சிலம்பொலி செல்லப் பனார் போன்றோர் இவ்வரிசையில் இடம்பெற்று கண்ணி யப்படுத்தப்படுவர்.

இஸ்லாமியர்களே இவ்விலக்கியப் பெருமை பேசு வதைகூட மாற்றுச்சமயத்தார் அளிக்கும் பாராட்டுப் பார்வை பெரிதும் கண்ணியத்திற்கும், களிப்பிற்கும் உரியதாகின்றது. குறிப்பாக டாக்டர் அறவாணன், 'காவியத்தில் பரவிக்கி டக்கும் அரபு பாரசீகச் சொற்கள் கலைஞனின் பார்வையில் சுமைதான் எனினும், மேலே அழுத்தமான தோல் இருக் கிறது. என்பதற்காகப் பலாப்பழத்தைவிட்டு விடுகிறே மோ? - பல்லை உடைக்கும் கணுக்கள் இருக்கின்றனவே

என்பதற்காகக் கரும்பை விரும்பாதவர் உண்டா?'' எனக் கேட்ட பாணியே அருமை. டாக்டர் சி.பா.வோ சீறாப் புராணம்-சீரிய புராணம் என்பார். இந்நூலில் சிறந்த பகுதியே - சீறாவும் அதன் சார்பு நூல்களும், அவை அச்சு வாகனமேறிய வரலாறும் காட்டும் ஆழ்ந்த கட்டுரையான திரு. முத்துக் குமாரசாமி அவர்களின் கட்டுரை. அந்த வரலாற்றை முழுமைப்படுத்த அது தொடர்பான வாசகர் வட்டம் உதவும் எனத் தொகுப்பாசிரியர் எதிர்பார்க்கின்றார். மறைந்து கிடந்த இஸ்லாமிய இலக்கியப் பெருமையை மலர வைக்கும் நன்முயற்சியிது. ''மறைத்தாலா தாழை மணம் குறையும்? நீரில் கரைத்தாலா தங்கம் கரையும்? கரையில் இறைத்தாலா வற்றிவிடும் ஏழ்கடல்?'' என்பது போல், மறைந்திருந்தாலும் மங்கா மாண்புடைய இலக்கியங்களிவை; அவற்றின் பெருமை எத்துணை எடுத்து உரைத்தாலும் முற்றுப் பெறுமோ என்றெல்லாம் கட்டுரைத் தொகுப்பைக் காணும்போது எண்ணத் தோன்றுகிறது.

இந்நூலில் விரவியுள்ள பல அரிய செய்திகள் நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பற்றிய செவிவழிவந்த கர்ணபரம்பரையான சில கதைகள்; வரலாற்று ஏட்டில் பதிவுசெய்யப் படாத சில நிகழ்ச்சிகள்; சில செய்திகள் - எனச் சீறாப் புராணத்தில் இடம் பெற்றுள்ளன; சீறாவில் இஸ்லாமிய மரபுகள் பற்றி விளக்கும் போது, சலாமுரைத்தல், பிஸ்மி, அல்ஹம்துலில்லாஹ் கூறுதல், மஹர் வழங்கல் போன்றவற்றை விரித்துரைத்து ஹசன் அவர்கள் தம் கட்டுரையைப் படைத்துள்ளார். தமிழுக்குப் புத்தொளிக் கருவூலமான சீறாவைத் தந்த கவிஞரைக் காலம் தந்த கவிஞர் எனப் பாராட்டிய கலைமாமணி, கவி.கா.மு ஷெரீப் அவர்களின் கட்டுரை; இஸ்லாமியத் தமிழ்க் காப்பியத்தில் மேரு, ஆதி சேடன், இலக்குமி எடுத்தாளப் பாடும் உமறுவின் தனித் திறனைப் பாராட்டும் ஜே.எம். சாலி அவர்களின் கட்டுரை

அன்பே பொருளாய், அறிவே காவியப் பயனாய்ப் பாடிய உமறு எனப் பாராட்டிக் காப்பியப் பண்புகள் குறித்துச் காட்டிய மயிலை, சீனி வேங்கடசாமியின் கட்டுரை; சீறா வின் உருவக, உள்ளடக்கம், உணர்த்தும் முறை குறித்தும் செய்திகளை உணர்த்தி "இடையிடையே வரலாறு தலைக் காட்டினாலும் அது காப்பிய சாரத்துக்குக் கரை என்று கரு துக; கறை என்று கருதுதல் ஆகாது; குறை என்று குமுறுதல் கூடாது" என உரைக்கும். க.ப. அறவாணரின் கட்டுரை; சீறாவில் தமிழ்ப் பண்பாடுகள் மலிந்தமை பற்றிச் சிலம் பொலியாரின் கட்டுரை; பிற கவிஞருடன் ஒப்பு நோக்கி சீறாவின் இயற்கை வருணனை குறித்து விளக்கும் சி.பா. அவர்களின் கட்டுரை; சீறாவில் பெண்மை நலம் மேம்பாட் டுத் தன்மை குறித்து டாக்டர் கிருஷ்ணா சஞ்சீவி வழங்கிய நெடிய கட்டுரை சீறாவில் வரலாற்றுக் குறிப்புகள் பற்றியும் அரபு, பாரசீகச் சொற்கள் பற்றிய டாக்டர் உவைஸ் அவ களின் இரு ஆழமான கட்டுரைகள்; சீறாவும் சின்னச் சீறாவும் பற்றிய நாஞ்சில் நன்மொழியோன் அவர்களின் அரிய கட்டுரை; உவமை இன்பம் விரவிக்கிடந்த பெரு மையை விளக்கும் பேராசிரியர் நயினார் முகம்மது அவர் களின் தனித்த கட்டுரை; சீறாவில் இயற்கை இறந்த நிகழ்ச் சிகள் இடம்பெற்ற பாவிகப் பண்பைக் குறிக்கும் பஷீர் அவர்களின் கட்டுரை - எனப் பல அரிய தகவல்களைத் திரட்டித் தந்த செறிவான தொகுப்பு இது.

நூலுக்குச் சிறந்த முன்னுரைகளை வழங்கியப் பெருந் தகையாளர் மூவர்-சிராஜுல் மில்லத் அவர்கள், எஸ்.எம். சுலைமான் அவர்கள், மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப் அவர்கள் ஆவர். வரலாற்று வரம்பிலிருந்து வழுவாமலும் புனைவுகளை முற்றாகப் புறக்கணிக்காமலும் படைக்கப்பட் டது உமறுவின் காப்பியம்; தெ.பொ.மீ அவர்களின் பாராட்டு; எம்.எம் இஸ்மாயில் அவர்களின் புகழ்மொழி;

குடத்துள் விளக்காகவே இன்னுமிருக்கும் சீறாவை வெளிக் கொணரவேண்டிய பல முயற்சிகள்; உமறுவின், சீதக்கா தியின், அத்தருணத்தில் வாழ்ந்த சமகாலப் புலவர்களின் தகுதி குறித்தும், மனிதகுலத்தின் தகைமை குறித்தும் எழு திய அவர்கள் பான்மை குறித்தும், சீறாவின் சொன்னயம் குறித்தும் எழுதிய அன்னார்களின் முன்னுரைகள் பொன்னு ரைகளே. 'அழகுதமிழ் உமறு பழகுதமிழ்ச் சீறா ஆழப்பயில அகமினிக்கும் பொங்கு சுவை, 'சந்தமும் தமிழ்த் தேறுங் கல்வித் தலைவர் மகிழ் உமறு' என்றெல்லாம் பாராட்டப் பெறும் தகுதிமிகுதி மிக்கவொரு படைப்பினைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் சரியானதொரு முறையில்-வேளையில் அடையாளம் காட்டிய மணவையாரின் இஸ் லாமிய இலக்கியப் பணி பெரிதும் போற்றத்தக்கது. இஸ்லா மியத் தாக்கம், மக்களின் மனித, நல்லிணக்கம் கூடிய உணர் வுக்குச் சான்றாக இப்பணி அமைவதை எப்படிப் பாராட்டி னாலும் தகும்.

## 7. தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள் (1980)

வற்றாமல் நீரை வாரிவாரிக் கொடுப்பது ஊற்று. இது குடிக்கும் நீருக்கு மட்டுமல்ல; குறிக்கோளைத் தாங்கி நிற்கும் இலக்கியங்களுக்கும் பொருந்தும். ஊற்றுப் பெருக் காலே உலகூட்டும் நீரூற்றுப் போல் நல்லுணர்வுப் பெருக் காலே வளம் சிறக்கும் இலக்கிய ஊற்று, கோடை நீடிய போதும், வேனில் விளக்கும்போதும் அடையாது சுரந்திடும் ஜீவிய ஊற்றுப் போன்ற பெற்றி பெற்றதே ஒழுக்க அடிப்ப டையில் விளைந்த இஸ்லாமிய இலக்கியங்கள். அந்த வரி சையில் விளைந்ததே இந்நூல் .

இந்நூலின் சிறப்பான அங்கமே என்னவெனில், மதுரைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்

டாக்டர். தெ.பொ.மீ அவர்கள் அளித்த சீரிய அணிந்துரை. மேலும் அது, ஆசிரியரின் இன்றையச் சமுதாயத் தீர்க்கதரி சனம் கண்டளித்த உரையோ என வியப்பு மேலிடுகின்றது. அன்னார் தம் வாழ்வில் இறுதியாக வழங்கிய இலக்கியக் கருத்துரையாகவும், அவர்தம் இதய வெளியீடாகவும் அமைந்துள்ளது.

தெ.பொ.மீ. அவர்களின் கருத்தாவது: - 'இந்திய விடு தலையே இந்து வெறியரும் முஸ்லிம் வெறியரும் ஒருவரை யொருவர் வெட்டிச் சாய்த்த இரத்த வெள்ளத்துக்கு இடையே பிறந்தது; இலக்கிய அளவில் ஒன்றுபட்டிருந்த இஸ்லாமியரும் இந்துக்களும் அரசியல் காரணமாகத் தொடக்கக் காலத்தில் ஒத்துழைத்தும், இன்று வேறுபடவும் தொடங்கிய நிலை, இதன் விளைவுகளை நேரே அனுபவிக் கின்றோம்; காந்தியடிகள் தம் பிரார்த்தனைக் கூட்டங்களில் எல்லா மதப் பாடல்களையும் பாடச் சொல்வதோடு, சிறப் பாகத் திருக்குர்ஆன் பாடல்கள் இடம்பெறச் செய்வார். அதற்கு எதிர்ப்பும் இருக்கும்; அப்படிப்பட்ட ஒரு கூட்டத் தில்தான் அந்த மகான் ஓர் இந்துவாலே சுட்டு வீழ்த்திய கொடுமை நேர்ந்தது; சமரச உணர்வை இந்தியனே மறந்தது புதிரானது; மனித இனம் ஒற்றுமைப்பட வேண்டும் என்றால், அரசியல் காரணமாகக் கைகுலுக்கி அளவளா வினால் மட்டும் போதாது; ஒருவரது பண்பாட்டையும், கொள்கைகளையும், சமய உண்மைகளையும், இலக்கியத் தையும், மற்றவற்றையும் அறிய வேண்டும். அந்த அறிவா ராய்ச்சி அன்போடு கலந்து நிகழும்போது வெறும் உணர்ச்சி யினால் எழும் பகைமை நீங்கும் எனக் கூறி, அதற்குப் பல சான்றுகளை, சான்றோர்களைக் காட்டுகின்றார் தெ.பொ.மீ.

வினோபாஜியின் திருக்குர்ஆன் வசன மொழி பெயர்ப்பு, கடிகைமுத்துப் புலவரின் சீடர் உமறு என்பன

வற்றை எடுத்துரைத்துச் சிகரமாக, ''அறிந்து கொள்ள வேண்டிய நல்ல கூறுகளை ஓர் இனத்துக்கோ ஒரு மதத் துக்கோ உரியதுபோல் தோன்றுவதையெல்லாம் உலகுக்கே பொதுவானதாகக் காட்டுங்கள்'' எனக் கூறுகின்றார். பண்டை நாளில் ஞானவான்கள் இப்படி ஒருமுகப்பட்ட சிந்தையராகி வாழ்ந்தனர். அன்னை தெரஸா, ஜலாலுத்தீன் ரூமீ, நம்மாழ்வார், மணிவாசகர், பதினெண்சித்தர் போன் றோர் அதில் சிலர். மணவையாரும் அந்தப் பரம்பரையின் மற்றுமொரு கண் என இத்தொகுப்பு நூல் காட்டுவதாகக் குறிக்கின்றார்.

மணவையார் தம் வாழ்வையும், வருவாயையும் தமிழுக்கும் உலகுக்கும் பயன்பட ஒரு பெரும்பங்கை ஒதுக்கி வாழ்வதையும், அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராயிருந்த காலத்திலேயே 'நச்சினார்க்கினியர்' என்ற பெயரோடு உலவிய பொருத்தத்தையும் நினைவு கூர்ந்து இத்தொகுப்பு நூலின் அரிய செய்திகளை மனந்திறந்து பாராட்டுகின்றார்.

டாக்டர் எம்.எம். உவைஸ் அவர்களின் வாழ்த்து ரையும் பல செய்திகள் தாங்கிவரும். அவர்தம் வாழ்த்துரை யிலேயே அரிய மெய்ஞ்ஞான இலக்கியப் பட்டியலையும் வெளியிடும் அரிய கட்டுரையாகின்றது. மேலும் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள், நெல்லை மௌலவி அபுல்ஹஸன் ஷாதலி சாகிப், மௌலவி. அப்துல் பத்தாஹ் பாக்கவி போன்றோரின் மதிப்புரைகளுடன் மலர்ந்துள்ளது. இத்தொகுப்பு இஸ்லாமிய சமயத்தின் மெய்ஞ்ஞானப் பிழிவின் திரட்டாகவே உள்ளது. மொத்தம் 11 கட்டுரைகள் இத்தொகுப்பில் சேர்ந்துள்ளன. சூஃபித்துவ தோற்றம் பற்றி ஐ.ஏ.எஸ் அதிகாரி சுலைமான் பண்பும், பண்பாடும் என்ற கட்டுரை தருகின்றார். தக்கலை பஷீர் அவர்களின் 3 கட்டு

ரைகள், பட்டியல்கள், டாக்டர் மாணிக்கவாசகம் அவர் களின் சித்தர், சூஃபியர் பாடல்களின் ஒற்றுமை விளக்கும் கட்டுரை; பசுலு முகையதீன் அவர்களின் 'கோட்டாறு தந்த ஞானியர்' பற்றிய கட்டுரை; கவிஞர் அப்துல் ரகுமானின் சுலைமான் ஐ.ஏ.எஸ்., அவர்களின் கட்டுரைகள், பீர் முகம்மது அப்பாபற்றி கா.முகமது பாரூக்; விஞ்ஞான நோக்கில் மெய்ஞ்ஞானியர் பற்றிய ஹைதர் அலி; சூஃபி இலக்கியப் பதிப்புகள், உரைகள் பற்றி இரா.முத்துக் குமாரசாமி கட்டுரைகள் மதிப்பிடற்குரியவை.

இத்தகு சூஃபிப் பெருமக்களின் ஞானப்புதையல் களைத் தேடியெடுத்த பல திறப்பட்டச் சொல்லேருழவர் களைத் திரட்டித் தொகுப்பித்த இந்த ஏர்உழவனை - மண வையாரை எப்படிப் பாராட்டுவது? அத்திரட்டில் சிதறிய அறிவரிய சாலிச் செந்நெல் மணிக் கருத்துகள் பல காணல் நன்று.

தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்து 65-க்கும் மேற் பட்ட மெய்ஞ்ஞானிகளின் இருப்பு; இறைவனை நேசிப் பதுபோல் நடிப்பதைவிட அவனிடம் பயபக்திபூண்டு அவ னுடைய குழந்தைகளாகிய மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும்; இஸ்லாமியரின் ஏகதெய்வக் கொள்கையை வலி யுறுத்தித் தமிழகச் சித்தர்கள் பாடுபட்டுவந்தனர்; சூஃபி என்றால் போபாஸ், அறிவாளி, கம்பளி ஆடை அணிந்தவர் (அக்கால ஆடம்பரத்தை உணர்த்த டாக்கா மஸ்லின் போன்ற மெல்லிய ஆடைஇருந்ததால், ஆடம்பரம் பகட்டு தவிர்த்துக் கரடுமுரடான கம்பளி ஆடையை அணிந்தனர் சூஃபியாக்கள்) பீர்; மிஸ்டிக், நபி(சல்) அவர்களின் திண்ணைத் தோழர்கள்; சபா என்ற சொல் குறித்தத் தூய்மையாளர்கள், அல்லாஹ்வுடன் நெருக்கமுடையோர்; சுயக்கட்டுப்பாடுடையார்; ஆத்மார்ப்பணம்; தூய்மை

யாளர்கள்; என்ற பல பொருள் காட்டுவது; பெரும்பான்மை மக்களுக்குத் தெரியும் எளிய, இனிய சொல்லை ஆண்டு அற்புத ஞான இலக்கியம் படைத்தனர்.

திருக்குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும் ஒத்தக் கருத்துக் களைச் சித்தர்களான சூஃபிகள் வெளிப்படுத்துவர். இவ் விரண்டை மீறிச் செல்லும் ஞானம் இஸ்லாமிய ஞானமன்று என்ற கருத்து நாட்டம்; "நான் மறைந்த பொக்கிஷமாக இருந்தேன்; நான் அறியப்பட விரும்பினேன்; ஆகவே படைப்பினம் படைத்தேன்." எனும் ஹதீஸே சான்று. படைப்பின் தோற்றமே மெய்ஞ்ஞானத்தின் தோற்றமாகும்; தன்னை அறிவதன் மூலம் இறைவனை அடைவதே சூஃபித் துவம்; சூஃபித்துவக் கலைச் சொற்கள் தோன்றத் தொடங்கி யது ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரி (ரலி) அவர்களின் காலத்தி லிருந்துதான்; நிறைவு அடைந்தது கௌதுல் அஃலம் ஜீலானி (ரலி) அவர்களால் தாம்; ஷரீஅத்தின் வணக்கம் உடம்பைக் கொண்டும், தரீக்கத்தின் வணக்கம் அகத்தைக் கொண்டும், ஹகீக்கத்தின் வணக்கம் ஆத்மாவைக் கொண் டும், மஃரிபத்தின் வணக்கம் அல்லாஹ்வின் தரிசனம் கொண்டும் நிகழ்த்தப் பெறும்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படித்தரங்களுடன் மேற்கூறிய நான்கு நெறியும் ஒப்புநோக்க வல்லது என்ற கருத்துகள் நூல் நெடுக அணிவகுக்கின்றன.

மேலும்-உயர்ந்த படித்தரங்களைக் கடந்த எந்த சூஃபி யும் ஷரீயத்தின் மூலாதாரச் சட்டங்களைப் புறக்கணித்து விடக் கூடாது; சூஃபித்துவம் இந்தியாவிற்கு வெளியில் பிறந்திருந்தாலும், இந்தியாவில் மகத்தான வெற்றியைக் காணக் காரணம் மக்களின் சூஃபியாக்களின் மனோநிலை, நற்பண்பு, நல்லெண்ணம்; ஒரு புறம் இஸ்லாமிய ஞானப் பாதைகளை ஒற்றுமை உண்டாக்குதலும் அவர்களுக்கு ஒரு

கோட்பாடாக இருந்தது; இது கவர்ச்சிமிகு பரந்த நோக்காகி சாந்தி, சமாதானம் நிலவப் பெரியோர் மூலமாக வழிவந்து, இந்தியக் கலாச்சாரத்தில் வேற்றுமைக்கிடையே ஒற்றுமைப் பண்பு வளர்க்கும் மகத்தான கோட்பாட்டுக்குக் காரண மானது; இறைவன் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகக் கீழி றங்கி வெளிப்படுத்தினாலும் இறைவன் இறைவனே; அடி யவன் எவ்வளவுக் கெவ்வளவு உயர்ந்தாலும் அடியவன் அடியவனே; சூஃபித்துவம்தான் 19 ஆம் நூற்றாண்டிலேயே வேறுபட்ட மத இயக்கங்களுக்கு மத்தியில் இணக்கத்தை ஊக்கவித்தது.

இதற்கு வலுவான சான்றே இவர்கள் கையாண்ட பொதுவான பரிபாஷை-அனைவர்க்கும் புரியும் எளிய-இனிய பொதுச் சொல் கொண்டு இறைஞானம் ஊட்டுதல் அச்சொற்களில் சில-மனோன்மணி, வெட்டவெளி, சதா சிவன், வாலை, நந்தீஸ்வரன், அம்பலம், சிவம், சக்தி, சாம்பவி, கேசரி, விட்டுணு, உருத்திரன் போன்றவை பரிபாஷைச் சொற்களே; சூஃபிகள் தனியே திரிவர்; தனித் திருப்பதே வணக்கங்களுக்குச் சிரசாக இருக்கிறது; ''எழுந் திட்டா ரெல்லாரும் ஓடிப்போனார் என்ன செய்வேன்; தனித் திருந்தே ஏங்கினேனே' என்ற பாடல்கள் பிறந்த சூழல்,'' நான் சாமுன் நான் சாவ நாடினேன்,'' ''போவோம் குணங் குடிக் கெல்லோரும் - புறப்படுங்கள்'' என்ற ஞான அலை கள் மோதிய காலம்-இவை படைக்கப்பட்ட இடங்கள் நூல் முழுக்கக் காட்சியளிக்கின்றன.

மேலும் நூலில் இலங்கை இஸ்லாமியத் தமிழ் சூஃபி இலக்கியங்கள் பற்றிய அரிய கட்டுரை, கோட்டாறு தந்த ஞானியர் பற்றிய செய்திகள், . பட்டியல்கள்; எளிமை+ அடக்கமே = ஞானி என்பான் என்ற விளக்கம், அண்ட கோடிகளிலும் இரகசியமாய் அணுவினுக்கணுவாய்

அமைந்த காரணத்தை தேடியலைந்த மஸ்தான் போன்ற ஞானியர்க்கு விஞ்ஞான நோக்கில்லை என்று கூறலாகுமா என்ற கருத்துகள், சூஃபி, மஸ்தான், பக்கீறு என்பார் யார் போன்ற எண்ணரிய தகவல்கள் நூலெங்கும் காணப்படு கின்றன.

கட்டுரைகளில் ஏற்பட்டத் தவறுகளையும் அணிந் துரை வழங்கியோர் சுட்டிக்காட்டியது, அதைத் தவிர்க்காமல் ஆசிரியர் வெளியிட்டது, இஸ்லாமிய இலக்கியத் தற்காப்பு முயற்சிகள் என்றே அறிய வேண்டும். சான்றாக தரீக்கத் பற்றிக் கூறும்போது., ''மெய்ஞ்ஞான உரமுடையார்க்குப் புறச்சடங்குகள் (தொழுகை போன்ற) அகன்று விடும்'' என்ற கட்டுரைத் தொடருக்கு, இது இஸ்லாமிய மெய்ஞ் ஞானத்திற்கு உகந்ததல்ல என்றுரைத்து, இறுதிப் படித்தர மான மஃரிபத்தை ஞானியொருவர் அடைந்தாலும், புறச் சடங்கு அவரை விட்டு அகன்றுவிடாது என்று தெளி வாக்கும் இடம் பாராட்டுக்குரியது. மனத்துக்கும் ஆன்மா வுக்கும் நிம்மதியும், பேரின்பமும் அளிக்கின்ற மெய்ஞ் ஞானம் பற்றி எளிமையும், தெளிவுமாக சுமார் 8-க்கும் மேற் பட்ட நூல்களைப் படித்து முடித்த, பெயர்களைத் தெரிந்து கொண்ட ஓர் அடிப்படைப் புரிந்துணர்வோடு எழுதப் பட்டதே இத்தொகுப்பு நூல். இப்படி மறைவுக்குட்பட்ட பெரும் கருவூலத்தை ஞானியரைக்கொண்டு வேட்டையாடி நமக்கு ஞான விருந்தைப் படைக்கின்றார் மணவையார்.

### 8. காசிம் புலவரின் திருப்புகழ் (1983)

பணிந்தாருடைய பாவங்களைப் மாற்றவல்ல இறை வனை, நலந்தீங்கிலும் மறவாது நினைதல் வேண்டும் என்று அவன் புகழ்பாடி அமையும் நூலே திருப்புகழ். இந்த மூல நூலுடன், மணிக்கவி எம்.சையது மூஸா ஆலிம் புலவரின் தமிழ்ப்புலமையும், இஸ்லாமிய ஞானமும் செறிந்த

உரையையும் இணைத்து, இதனை ஆராய்ச்சி செய்து அரிய தொகுப்புக் கட்டுரைகளையும் சேர்த்து ஆசிரியர் 'தொகுத்துத் தந்த மற்றோர் இனிய நூல் காசிம்புலவர் ''திருப்புகழ்'' - ஆய்வு நூல்.

இறைவனை - அவனருள் பெற்றுச் சிறந்தாரைப் புகழ்ந்து பாடுவதே 'புகழ்' எனும் நூற்செய்தி. இறைத்தொடர்புடைமையால் 'திருப்புகழ்' எனப்பட்டது. இந்நூல், பெருமானார்(சல்) அவர்களின் புகழ்பாடும் நூலாகவும் உள்ளது. புகழ்நூல் என்பதால், பெருமானார்(சல்)அவர்களின் புகழ் மொழிகள் அடங்கிய நூல் எனவும் கூறலாம்.

காசிம் புலவரின் குரு திருவடிக் கவிராயர், ''இறைவனருள் புகலும் இவ்விதச் சந்தத் திருப்புகழ்-அருணகிரி திருப்புகழ் போல் வேறு எவராலும் பாட முடியாது'' எனக் கூற காசிம் புலவர் தாம் அவ்விதம் பாடுவதாகக் கூறி இந்நூலை யாத்தனர்.

ஆசிரியர் வழியாக, இந்த இஸ்லாமிய இலக்கியப் பணி மூலமாக, இஸ்லாமுக்கும் இறைக்கும் இருந்த அரிய தொடர்பினை வெளிக்காட்டும் நன்முயற்சி இதில் கனிந்துள்ளது. தொடக்கக்கால இஸ்லாம் தூய இசை செறிந்த காலம். அந்த மரபின்படிதான் இன்று இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் காணும் நூற்றுக்கணக்கான பாடல்கள் இசை அடிப்படையில் எழுதப்பட்டன. இசைக்கெனவே எழுதப்பட்ட இலக்கியங்களும் நிரம்ப உண்டு. தொகுப்பாசிரியர் மணவையார் ''இஸ்லாமியத் தமிழிசை'' என்பது பற்றிக் கருத்தரங்கு நிகழ்த்தவிருக்கும் அளவுக்கு இசையார்வமும், இஸ்லாத்தில் அதற்கிருந்த தகுதியான இடமும் பற்றிக் குறிப்பிடும் வண்ணம் காட்டுகின்றார்.

மணிக்கவி அவர்களின் அரிய உரை விளக்கத்துடன், மிகச்சிறந்த 5 ஆய்வுக்கட்டுரைகள் மிளிர்ந்த தொகுப்பாக

மலீர்ந்த இந்நூலில், டாக்டர் இராமனாதன், மௌலவி சிராஜ் பாக்கவி, டாக்டர் எம்.எம்.உவைஸ்,சிலம்பொலி செல்லப்பனார், ஹஸன் ஆகியோர் கட்டுரை ஆசிரியர்களாக வலம் வருகின்றனர். நூற்செய்திகளுடன், இவர்கள் அளித் துள்ள செறிவான பிற செய்திகள் இந்நூலின் செவ்விய கொடையை நமக்குத் தருகின்றது. அவை வருமாறு:

இசைமொழியாம் அரபிமொழியில் மறைபெற்ற இஸ்லாம் இசைக்கு விரோதமானதல்ல; இன்னும் கூறப் போனால் இயற்கையின் இயக்கமே ஓசை, ஒலி. அது பர வாத இடமேயில்லை. நீணிலத்தில் இறைநலம் மனிதனால் மறுக்க முடியா ஒன்று. தொடக்கக் காலத்தில் மனிதனுக்கு வழிகாட்ட மேம்பட்டது; பற்பல மறைகள் பற்பல இசைத் தூதர் வாயிலாக அருளியதில், தாவூத் நபியவர்களுக்கு யுனானி மொழியில் அருளப்பட்ட 'ஜபூர்' என்ற வேதமே, இசையாக இசைத்து மக்களுக்குப் போதிக்கும் வண்ணம் ஏற்பட்டது; வேதம் முழுக்க உரைநடையில் இல்லாமல் முழுதும் இசை வடிவக் கீர்த்தனைகளாய் வழங்கியதில் இருந்தே, இசைக்கு மக்கள் மதிப்புக் கொடுத்த காலத்தில், மக்கள் விருப்பம்போல் மறையை இறைவன் இசை வடி வாக வழங்கி இசையை அங்கீகரித்த தன்மை அறிய நேரிடு கின்றது. தாவூத்நபி இசைக்க, மக்களும், விலங்குகளும், பற வைகளும் மெய்ம்மறந்து கேட்டிருந்த தன்மையைக் கேட்ட போதே, இஸ்லாம் இசையை எதிர்ப்பதாகச் சொல்வது முற்றிலும் முரணானது என அறிய நேரிடுகின்றது; ஆய்வ றிவு இல்லாது போனதையே சுட்டுகின்றது. நற்கவிஞர்கள் பலர் அரபு மொழியில் பாக்கள் வழங்கியும், பலர் கூடும் இடங்களில், காபாவில் எழுதித் தொங்கவிட்டுமிருந்தனர் என்ற செய்திகள் இடம் பெறுகின்றன.

மேலும், குர்ஆனை மனங்கலந்து ஓதும்போதே இனிய நாதம் மேலெழும்ப அதைக்கேட்ட ஒட்டகம்

போன்ற கால் நடைகளும் மயங்கி நின்ற வரலாறு அறிய முடிகின்றது. குர்ஆன் ஓதுதற்குரிய இசைமுறையே 'தஜ்வீத்' என அழைக்கப்பட்டது; கவிதை என்பதே இசை வடிவம்: இசையிலாக் கவிதை, இறக்கையிலாப் பறவை; எனவே குர்ஆனில் இசைத்து ஓதவதற்கேற்ப செப்பலோசைச் சிறப்பு அமைந்துள்ளது; ''கவிஞர்கள் வரம்பு மீறுகிறவர்கள்'' என்பது கூட, அவர்களின் சுதந்திரச் சிந்தனையைக் காட்டத் தான் சொல்லப்பட்டதாய்ப் பொருள் கூறுவர்; கவிஞர் களைக் கண்ணியப் படுத்தவே' 'அஷ்ஷுஅரா' என்ற தனி அத்தியாயம் (26வது) குர்ஆனில் உள்ளது; இன்றும் புர்தா ஷரீப், வித்ரீய்யா, சுப்ஹான மவ்லித் போன்ற ஏராளமான பாமாலைகள், வரலாற்று இசை நிகழ்வுகள் எல்லாம் இஸ்லாமிய உலகில் பின்னிப் பிணைந்த அதிசய வரலாறு உடையது; கவிதைக்கும், இசைக்கும், இசைவாணர்க்கும் இஸ்லாமே அளித்த பங்கு பெரிது போன்ற கருத்துகள் படிக்கப் படிக்க நமக்கு வியப்பையும் பெருமிதத்தையும் ஊட்டுகிறதெனலாம்.

எப்படிப்பட்ட இசை வெறுக்கப்பட்டது என்பதற்கும் நூல் பல செய்திகளைத் தருகின்றது. உடன்பாடில்லாத இசை யையே இஸ்லாம் வெறுத்தது. குறிப்பாக இசைக் கருவி களை மறுக்கிறது; நெறி இசை - வெறி இசை என்று இருவ கையுண்டு; நெறி இசையை ஏற்று, வெறி இசையையே இஸ் லாம் கண்டிக்கின்றது, சிற்றின்ப வேட்கையைத் தூண்டும் அவ்விசையே ஒவ்வாது; கூச்சல், கூட்டொலி, கூட்டிசை, வெறியாடல் இவை விலங்கு நிலைக்கு மக்களை ஆக்கவல் லன என நூல் விளக்குகின்றது.

இக்கருத்துக்களால் இஸ்லாம் மார்க்கத்தில் இன நலம் மிக்க புனிதமான இசைப் பிரபந்தங்கள் தமிழில் உண்டாகி யுள்ளதை உணரும் முயற்சியாக இந்நூல் அமைகின்றது. குணங்குடியாரின் ஞானப் । பாடல் போன்று, காசிம் புல

வரின் திருப்புகழ்ப் பாடல்களும் கற்கண்டு சொற்கொண்டு பாடிப் பரவிவரும் இசைவெள்ளம் காதில் பாய்ந்தால், இஸ்லாம் இசைக்கு எதிரியும் அல்ல; கவிஞர்களை, இசை வாணர்களைப் புறக்கணிக்கும் மார்க்கமும் அல்ல என உணரலாம்.

மேலும் இந்நூலில் அமைந்த மணிக்கவியாரின் உரை, எல்லோரும் உணர்ந்தறிய வேண்டிய பொன்னுரை. ஒரு நூலுக்கு இலக்கியத்துக்கு. உரை எழுதுவது என்பது எளிய காரியமன்று. உரை உருவாவதற்கு எத்தனை முயற்சிகள், தே டல்கள் தேவை என்பதை உணர முடிகின்றது. அரும் பாட்டுக்குப் பின் கிடைத்த பிரதிகள், அதில் விளைந்த அச்சுப்பிழை, பாற்சிதைவு, பாடல் பேதங்கள், சந்தக் குறிப்பின்மை எல்லாம் முட்டுக் கட்டைகளாகி வந்த சோதனையை விளக்குகின்றார் உரையாசிரியர்.

கே.பி. செய்குத்தம்பி அவர்களால் செப்பனிட்ட பிரதியை வைத்தும், ஹஸன் அவர்களால் சில திருத்தங் களை அரிதின் முயன்று தேடிக் கண்டுபிடித்துப் பெற்றதும் விளக்கியுரைத்த பான்மையைப் படிக்கும்போது, ஒரு மூல நூலும், நல்லுரையும் எப்படி அரிதின் அச்சுவாகனமேறி உதயம் செய்கின்றன என்பதனைத் தெளிவாக உணர்ந்து வியக்கின்றோம்.

திருப்புகழ் போன்ற இசை நூலுக்கு மிக அதிகமான கவனம் தேவைப்படும் தன்மையையும் உணர்த்துகின்றார். நூலாராய்ச்சிக்கும் இது ஓர் அரிய முன்னோடியாக உள்ளது. நூலில் பல அரிய செய்திகள் மேலும் பரந்துள்ளன. பெரு மானார் (சல்) அவர்களின் பெருமைகள், புகழ், பண்பு நலன்கள், போர்த் திறன், செயற்கரிய செயல்கள், நபித்துவம் அருளப் பெற்றமை, நபிக்குரிய இலாஞ்சனை பதிக்கப் பெற்றமை, சொர்க்க உலா, விண்ணேற்றம் என வாழ்க்கை

வரலாறே திருப்புகழ் நெடுக நிறைந்துள்ளது. மார்க்கச் செய்திகளும், மஹ்மூது யானை, துல்துல் குதிரை, பூமியைத் தாங்கும் காளை, சிராத்துல் முஸ்தகீம் பாலம் வெளகுல் மகுபூல் பலகை, ஜிபுராயீலின் எழில், சுவனமாதரழகு, சொர்க்க - நரக வர்ணனை.

ஐவகைக் கடமைகள், திருக்குர்ஆன் எளிமை, நபிமார் களின் பட்டியல், யுகமுடிவு நாள், கலிமா விளக்கம், குறுஷு அமைப்பு போன்ற சீரிய செய்திகள் கவிநயத்துடன் மிளிர்கின்றன. நல்ல உவமை, உருவகம், சந்தம் எனச் சொந்தம் கொண்டாடியது காசிம் திருப்புகழ், சந்தவினி மையைத் திருக்குர் ஆனைப் பாராட்டுமுகமாக,

''பார்படர் ஞானக் கொழுந்தோ வல
தார முதாகப் பிறந்ததோ வடி
பாகுறு தேனிற் கனிந்ததோ நவரசமேயோர்
பாரச மூறிச் சமைந்ததோ நல
சீனியின் வாரிப் பிணைந்ததோ'

என்ற அடிகள் மூலமாகவும், ஆழ்ந்த உவமை நலம் காட்டு முகத்தான்,

'இளமையும் உடைமையும் மஞ்சள் வெயில்
போல் நிலையில்லாதன;
தோற்றத்தின் பெருமை பிறைச் சந்திரனைப்
போன்று மாறிவருவது;
இயல்பாய குணங்கள் தீயில் விழுந்து சாகும்
விட்டிலைப் போன்றது;
அழகு வானவில்லைப் போலத் தோன்றித் துலங்கி
உயிரின் நிலைமையோ முட்டையிட்டபறவை
பறந்துசெல்வதைப் போன்றது;
இனிமையான மனம் வெண்மையான கண்ணாடி
போன்றது;

வளரும் உடல் நீர்மேற் குமிழி போன்றது;
செல்வம் பெருவெள்ளத்தில் அடித்து வந்ததைப்
போன்றது''

என்ற அழகிய சொல்லோவியங்களையும் படைத்துள்ள திருப்புகழின் மேன்மைகளை வெளிக்காட்டும் முயற்சியே இந்நூல். உரையில் அவர்களின் கட்டுரை, திருப்புகழ் நூலில் பரவிய திசைச்சொற்கள் பற்றியது. ஏனைய இஸ்லாமியத் திருப்புகழ் நூல்களை ஹசன் தொகுத்தளிக்கின்றார்; காசிப் புலவரின் திருப்புகழுரையைப் பாராட்டவந்த டாக்டர் இராமனாதனோ, இந்நூலில் உள்ள 141 இசைப்பாடல்களில் 2 பாடல்களுக்கு மட்டும் ஒரே வண்ணம், ஏனைய 139 பாடலுக்கும் தனித்தனிப் பண் அமைத்துப் பாடிய பெருமை புலவருக்குண்டு என்றார். அருணகிரியாரின் திருப்புகளில் கூட, 1300 பாட்டுக்கு 1008 சந்தம் தான்; காசிம் திருப்புகழில் 141 பாடலுக்கு 138 சந்தங்கள் எனச் சிலம்பொலியாரும் பாராட்டுவர். இத்தகு அணியானதொரு நூலை அச்சுவாகனம் ஏறச் செய்து, நல்லுரை காண வைத்து, உச்சிமீது வைத்து மெச்சத் தகுந்த உரையாசிரியர்கள் வழி திறனாய்வும் காண வைத்துள்ளார் மணவையார். அனைத்தையும் இஸ்லாமிய இலக்கியத் திருப்பணி பேரால் தமிழ்கூறு நல்லுலகம் பெற வைத்து அப்பேற்றினை நமக்களித்த மணவையாரின் அறிவறிந்த தமிழ்ப் பேறு அறியாதார், அறியாதாரே, என எண்ணத் தோன்றிப் பெருமையில் இமயமென நம் நெஞ்சை உயர்த்துகிறது.

### 9. சமண, பௌத்த, கிருஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்கள் (1987)

இத்தொகுப்பு நூலின் தலைப்பே தொகுப்பாசிரியரின் பரந்த நோக்கைக் காட்டுகின்றது. ஒவ்வொரு சமயஞ்சார்ந்த

எழுத்தாளரைக் கொண்டும் பிறசமயம் பற்றி எழுதிய முறையும் பாராட்டத் தக்கது. டாக்டர். ச.வே.சுப்பிரம ணியம் அவர்களின் தலைமையுரையும், கவிஞர் மேத்தா அவர்கள் சமணம் பற்றியும், பௌத்த இலக்கியம்பற்றி பேராசிரியர் வள்ளுவன் கிளாரன்ஸும், கிறிஸ்தவ இலக் கியம் பற்றி டாக்டர், அறவாணனும், இஸ்லாமிய இலக் கியம் பற்றி சிலம்பொலி செல்லப்பனாரும் கட்டுரை படைத்துள்ளனர். நூலுக்கு வாழ்த்துரைகளை ஸ்ரீபால், டாக்டர் ந.சஞ்சீவி, டாக்டர். தயானந்தன் பிரான்சிஸ் ஆகியோர் சிறப்புரைளாகவே வழங்கியுள்ளனர்.

ஒரு சமயம் சார்ந்தவர் மற்ற சமய இலக்கியங்களை விரும்பிப்படித்து, உணர்ந்து அதன் சிறப்புக் கூறுகளை மனம் திறந்து பாராட்டுமுகத்தான் நேரிய ஒருமைப்பாட்டை உருவாக்கும் சீரிய வெற்றிவழியாகக் காட்டுகின்றார் தொகுப்பாசிரியர் மணவையார். இவர்களின் தமிழ்ப்பணி, ஆர்வம், பிற இலக்கியம் அறியும் வேட்கை இவற்றைக் காட்டும் போது ஆசிரியரின் உள்ளத்தில் அடிநாதமாக ஊறிக் கொண்டும், ஓடிக்கொண்டுமிருப்பது சமய நல்லிணக்கமே.

300,400 ஆண்டுக்காலமாக இஸ்லாமிய இலக்கியங் கள், 4ஆம் நூற்றாண்டுக்கு மேல் பெருகிவர, அவை யனைத்தும் வெளிப்பட்டால், நாட்டில் நிலவுவது நல்லி ணக்கமே என்பதை ஆசிரியரின் முயற்சியும்,' பிறநூல்களும் சான்றுரைக்கின்றன. இந்நூல் அதற்கும் கட்டியம் கூறுகின் றது.

இலக்கியங்களுக்கிடையே சமய எண்ணங்கள் உண் மையுடன், செம்மையுடன் நடுநிலைமையுடன் வெளிப் பட்டால்தான் வாழ்வைச் சீர் செய்யலாம் என்ற உண்மை யையும் உணர்த்துகின்றார். மொழிவழி, அதன் இலக்கி யங்கள் வழி, சமய ஒருமைப்பாடு, நாட்டு நல்லிணக்கம்,

தேசிய ஒருமைப்பாடு என்பதே சாத்தியம் என்று சத்தியக் கணையோடு நிரூபிக்கின்றார். இன்று உலகம் வளர்ச்சி நோக்கி விரைந்து கொண்டிருக்கும் அறிவும் ஆராய்ச்சியும் மிகுந்த காலக்கட்டத்தில் நம் அரிய படைப்புக்களை உலகப் பெருமொழிகளுக்கு அடையாளம், அறிமுகம் காட்ட வேண்டிய நிலையில் இருப்பதால் இதுபோன்ற தொகுப்புப் பணிகள் காலக்கட்டாயமாகக் கனிந்து நிற்க வேண்டுவன வாகத் தோன்றுகின்றன.

இந்நூலில் கவிஞர் மேத்தா, சிலம்பொலி செல்லப் பனார் போன்றோர் குறிப்பிடும்போது, இலக்கிய நோக்கின் படி தமிழ் இலக்கியம் என்ற ஒரே வகைதான் இருக்க முடியும் - எச்சமயத்தாரால் படைக்கப்பெற்றாலும் தமிழில் உருவாகும் இலக்கியம் தமிழ் இலக்கியமே என்று வானளவு விரிந்த பொதுமை நோக்கோடு குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால், கேட்பதற்கு இனிதாக இருக்கும் இக் கொள்கை, நடைமுறையில் பொறுமையாகப் பிறரால் கடைப்பிடிக்க இயலவில்லையே என்ற வேதனை உருவா தலே நிச்சய உண்மை. ஏனெனில் அனைத்தும் தமிழிலக் கியம் என்றால், பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களில் கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்கள், நூல்கள் என வெளியிடும்போது, இரட்சணிய யாத்திரிகம், தேம்பாவணி, தற்போது சில நூல்களில் இயேசு காவியம்· சீறாப்புராணம், குணங்குடி மஸ்தான் பாடல்கள் மட்டுமே இடம் பெறுகின்றன. பிற எண்ணற்ற அந்தாதிகள், பிள்ளைத் தமிழ், கலம்பகங்கள், மாது குறம், இராஜ நாயகம் போன்ற 11 காப்பியங்கள், கீர்த்தனைகள், திருப் புகழ்கள், கிஸ்ஸா, மாலை, மசலா, முனாஜாத்து, படைப் போர் போன்ற புதுப்படைப்புகள், புதுக்கவிதைகள் மலர்ந்த தொகுதிகள், நாவல்கள், சிறுகதைகள், திறனாய்வுப் படைப்

புகள், ஈழ, மலேசிய, பிறநாட்டு வெளியீடுகள் ஏன் புகுத்தப் பெறவில்லை? பெயரளவில் கூட அறியப்படாத அளவில் இஸ்லாமிய இலக்கியப் பகுதி செய்த பாவம்தான் என்ன? மணம் பெறுவதற்குரிய மங்கையர் மாண்புகள் ததும்பப் பெற்றிருந்தும் ஓர் எழில் மிகுந்த நங்கைக்கு மணம் நேர்ந்திடாக் கொடுமைபோல், இஸ்லாமிய இலக்கியம் தமிழ் கூறு நல்லுலகத்தின் இரசனைக்கு ஆளாகாத சோகம் தான் என்ன?

அவ்விலக்கியங்களை எல்லாம், இன்னும் நாம் அரிதின் முயன்று தேடிப் பார்த்தும், திருத்தியும், வெளி யிட்டும், அறிமுகப்படுத்தியும், நிற்கு வேண்டிய கட்டத்தில் தான் இருக்கின்றோம். மணவையார் போன்ற அரிய பிற விகள், தமிழ்த் தாத்தாவைப் போல் 'இலக்கிய தாதாக்கள்' கிடைக்கவில்லையென்றால் இன்னுமல்லவா கொடுமை நேர்ந்திருக்கும்? எல்லோர்க்கும் உணர்த்தி. எல்லோரும் அறிந்த பின்னர், எல்லோரும் ஓர் நிறை எய்திய பின்னர் வேண்டுமானால், எல்லா இலக்கியங்களுடன் சேர்த்துத் 'தமிழ் இலக்கியம்' என்று ஓர் விலையிட்டுக் கொள்ளும் நிலை அமைத்துக் கொள்ளலாம். இன்னும் இஸ்லாமிய இலக்கியங்கள் அறிமுக நிலையில் மட்டுமே இருப்பதான், பல்கலைக்கழகங்களை ஆளும் நிலைக்கு வரட்டும், அப் போது மேத்தா, சிலம்பொலியார் கனவுகளுக்கு நாமும் கட்டியம் கூறுவோம்.

அதற்கான கன்னி முயற்சியைத்தான் மணவையார் போன்ற சான்றோர் தொடங்கி அரிய இஸ்லாமிய இலக் கியப் பணியாற்றி வருகின்றனர். அந்தச் சேவையைப் பாராட்டுவோம். 'தமிழ் இலக்கியம் மலர்தல் வேண்டும்' என்ற இக்கருத்தும், இவர் மூண்டெழுந்து திரட்டிய நூற்ப ணியால் அல்லவோ இக்கட்டத்தில் கனிவுடன் பரிந்துரைக்

கப்பட்டது. இத்தகு பொதுமை எண்ணம் மலரும் பூங்காவாக, இவர்தம் கருத்தரங்கு மாநாடுகளும், இலக்கியத் தொகுப்பு முயற்சிகளும் சீருடன் நடக்கிறது என்பதே மகிழ்ச்சிக்குரிய செய்தி.

மேலும், இத்தொகுப்பில், தமிழிலக்கியக் கடலிலே நீந்திக் களிக்கும், தேவார திருவாசக திவ்வியப் பிரபந்தங்களில் திளைத்து நிற்கும் சிலம்பொலியாரை இஸ்லாமிய இலக்கியங்கள் குறித்தும் எழுதத் தூண்டியுள்ளார் மணவையார். இஸ்லாமியப் பெருங்கவிஞர்கள் முதல் புதுக்கவிதை பாடுவோர்வரை தன் பார்வையைச் செம்மையாகச் செலுத்தியுள்ளார் சிலம்பொலியார் என இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய ஸ்ரீபால் அவர்களே வியந்து போகின்றார். இவர் தரும் பேரிலக்கிய சிற்றிலக்கியத் தகவல்கள், மேற்கொண்ட முழுமையான பார்வை, முதல் முறையாக இஸ்லாமிய நூல்களைக் கற்போருக்கு முழுமையான நிறைவைத் தரும் என்பதில் ஐயமேயில்லை.

இஸ்லாமியரான கவிஞர் மேத்தா சமண இலக்கியம் குறித்துப் பேசும்போது- வரலாற்றில் சமணர் பட்ட துன்பப் பாட்டைக் கண்ணீர் மல்க அறிய சொற்சித்திரங்களோடு காட்டுவது நெகிழ்ச்சிக்கு உரியது. சமயத் தத்துவம் தர வந்த சமணம் தமிழுக்கு அடிமையானதை, கடிதம் கொடுக்கும் தபால்காரரே காதல் கடிதம் எழுதத் தொடங்கினார், 'ஓட்டுக் கேட்க வந்தவரே ஓட்டுப்போடுவார் ஆயினார்! 'அகம்புறம் பாடியத் தமிழ் நிலத்தே இகம்பரம் பேச வைத்தார்' என்றெல்லாம் எழிலுற எழுதி, சிந்தாமணிச் செல்வப் பேரழகை உள்ளூற நிறுத்தி, உரைவழங்குவதைப் பார்க்கும் போது, சமய உணர்வு கடந்து ஒருமையே நிலவி, கவிஞனைக் கவிஞன் பாராட்டும் கண்கொள்ளாக் காட்சியே கவினுறு தரிசனமாகின்றது. இந்த உணர்வை விதைக்கவே

விழைந்தார் மணவையார். மனிதமனம் காலம், தேசம், சமயம், கடந்து மனித உணர்வோடு சங்கமமாகிச் சிறக் கட்டும். சிறுத்துவிடக்கூடாது என்ற பேருணர்வை விதைக் கவும், புதைக்கவும் புறப்பட்டாரோ மணவையார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. இவ்வழி இவருக்கு வெற்றி யையும் ஈட்டித்தந்தது என்றே நிச்சயமாகக் கூறலாம்.

தமிழாலயத்திற்கு முன்பு, தமிழ்த் தாய்க்கு முன்பு, தமிழ்க் குலத்திற்கு முன்பு எந்த வேற்றுமையும் இல்லை; ஒன்றுபட்டதே தமிழர் வாழ்வு; இறைவன் குலம் பார்ப்பதில்லை; தமிழோ மதம் பார்ப்பதில்லை என்ற சத்தி யத்தை நிரூபிக்கும் இது போன்ற நூல்கள் பள்ளி கல்லூரி பாடத்திட்டத்தில் வைக்கப் பெற்றால் மாணவர்க்கு ஒட்டு மொத்தமான பொது இலக்கிய அறிமுகம் நிகழ்த்துவதற்கு வழிகோலும். பொதுவான மாணவர்க்கு இதுபோன்ற நூல் களை அறியவைக்கும்போது, மாற்றுச் சமயத்தாரைச் சம நோக்கில் காணவைக்கும் இம்முயற்சிகளை இலக்கிய வளர்ச்சி, இனவொருமை, வேற்றுமையில் ஒற்றுமை போன்றன இயல்பாய் மலரும். இதுவே இன்றைய சமுதா யத்தின் தேவையும் ஆகின்றது.

ஏதோவொரு முத்திரை குத்தப்பட்டு இனந்தெரியாக் கோலத்தில் தத்தளிக்கும் இஸ்லாமியர்க்கு ஒரு விடுதலைப் பெருமூச்சைத்தான் விடுதற்கு ஆசிரியர் இப்பணி ஆற்றியுள் ளாரோ எனப் பாராட்டிக் கண்மணி சிந்தத் தோன்றுகின்றது. என் ஆசிரியர் ந.சஞ்சீவி அவர்கள் கூறுவது, ‘இஸ்லாத்தின் அருவ வழிபாடு, கிறிஸ்துவத்தின் கடையனையும் கடைத் தேற்றம் செய்யும் தொண்டு, இந்து சமயத்தின் சகிப்புத் தன்மை போற்றத் தக்கது ஆகும்’ என்ற வாக்கு இங்கு எண்ணத்தக்கது. ஒருமை உணர்ச்சியைக் கருத்தரங்கு, தொகுப்புநூல் என்பனவற்றின் வழி ஏற்பாடு செய்து வரும்

மணவையாரின் தொண்டு காலத்தால் நினைவு கூறும் நல் முயற்சி என்று அன்னார் கூறியது பொன்னுரை. சிலம் பொலியாரும் உமறுப்புலவரின் ஒரே பாடல் இஸ்லாமிய நெறியைக் கண்ணெனக் காட்டும் என்பதற்கு,

''ஒருத்தன் நாயகன் அவற்குரிய தூதெனும்
அருத்தமே உரைகலிமா அந்நிண்ணயப்
பொருத்தம் ஈமான் நடைபுனைதலாம் அமல்
திருத்தமே இவை - இஸ்லாமிற் சேர்தலே''

என்ற பாடலைக் காட்டி நிற்கின்றார். மேலும் சேகனா, ஆலிப்புலவர், வண்ணக் களஞ்சியம், குலாம் காதிறு, கனகக் கவிராயர், ஐதுறூசு, வண்ணப் பரிமளம், காசீம், குணங்குடியார், ரசூல் பீவி, கச்சிப்பிள்ளை அம்மாள், ஆசியா உம்மா போன்றோரையும் காட்டி, காயல் நூஹ் லெப்பை ஆலிமின்,

''நல்லஷரீஅத்து வித்தாச்சு; தவமாம்
தரீக்கத்து மரமாச்சு
எல்லை ஹகீகத்து பூவாச்சுது
இலங்கும் கனியாச்சு மஃரிபத்து''

பாடலையும் எடுத்துக்காட்டி அறிமுகம் செய்கின்றார். மேலும் புதுக்கவிதை வரிசையில் அப்துல் ரகுமான், மேத்தா, இன்குலாப், நாஞ்சில் ஆரிது போன்றோரையும் அறிமுகப்படுத்துகின்றார். எப்படியும் மணவையாரின் நோக்கும் போக்கும் வெளிப்படும் விந்தையை இத்தொகுப்பிலும் காண்கின்றோம்.

## V. மொழி பெயர்ப்பு

### 10. நூறு பேர்

மொழிபெயர்ப்பு நூலான 'நூறுபேர்' இணையற்றப் படைப்பு; இஸ்லாமியரை நிமிர வைக்கும், சமுதாய வீதி

களில் தலை நிமிர்ந்து நடக்க வைக்கும் படைப்பு. அமெரிக்க நாட்டு மைக்கேல் ஹெச். ஹொர்ட் என்பவர், உலகச் சாதனையாளர்கள், சட்ட மேதைகள், சீர்திருத்தவாதிகள், சட்ட நிர்மாணிப்பாளர்கள், மறுமலர்ச்சியாளர்கள், அறிவியலாளர்கள் எவரெனத் திரட்ட முற்பட்டார். 2000 பேர்; அதன்பின் அத்தொகையைச் சுருக்கி 1000 பேர், 500 பேர், 200 பேர் என்ற அளவில் திரட்டி இறுதியில் நிறைவாக 100 பேரை உருக்காட்டியபோது அவ்வரிசையில் முதலாமவராக இடம் பெற்ற பெருந்தகையாளரே பெருமானார் (சல்) அவர்கள் என்பதை விளக்கி, பிற செய்திகளையும் மணியெனத் திரட்டப்பட்டத் தெள்ளிய நூல். இந்த அரிய ஆராய்ச்சி ஆங்கிலத்தில் வெளியீடாய் மலர, அதனைத் தமிழில் மொழி பெயர்த்து, நல்ல பலகணியாக பல செய்திகளைப் பலருக்கும் காட்சியாய்க் கொடுத்தவர் மணவையார். சமுதாயத்திற்கே நன்மாராயம் மொழிந்த நேரிய நபி (சல்) அவர்களின் நற்செய்தியைப் பிறர்க்குக்குணர்த்த தாமும் நன்மை எய்தியவர். மற்றவர்க்கு மருதாணி பூசும் கை தானே சிவப்பேறுதல் போல், மற்றவர்க்கு நன்மை செய்வாராய், தாமும் நன்மை தேடிக் கொண்ட தகைமையாளர். இதுபற்றி மொழிபெயர்ப்புப் படைப்புக்கள் பற்றிய தலைப்பில் விரிவாகக் காட்டப் பெறும்.

## நிறைவான வாழ்த்துரை

''கருதுவார்க்கில்லை கலக்கம், தமிழ்ப்பால் பருகுவார்க்கில்லை பழுது'' என்று புதிய மாணிக்கக் குறள் படைத்த வ.சுப.மா. அவர்களின் நல்லுரைபோல், செய்யும் தமிழ்த் தொண்டால் சீரிளமைத் திறம் பொலியத் தோன்ற வரும் தோற்றமுடைய மணவையார் உள்ளமும் பழுதிலாத் தூய உள்ளமாகி, ஓசையெழும்பாமலே தன்னடக்கத்துடன் ஆரவாரமிலாது தளராத் தமிழ்ப் பணிதோய்ந்து செயலாற்ற

வல்லது. வெறிதான ஓலை என்றும் சலசலக்கும்; மைச் சோலைக்கில்லை ஒலி' என்பது போல் விளம்பர ஆர்ப் பாட்டம் ஏதுமிலாது வளர்ந்த அன்னார், பேசவும் எழுதவும் தொடங்கிய நாள் முதலாக, இஸ்லாமிய இலக்கியம் பற்றியே சிந்தித்துப்பணி ஆற்றியவர். இயற்றப்பட்ட காலம் முதல் உரை இல்லாமல் இருந்த காசிம்புலவர் திருப்புகழ் போன்ற நூல்களுக்கு உரைகாணல், திருத்தப்பிரதி உரு வாக்கல், அருங்காப்பியங்களுக்குக் கருத்தரங்குகள் நடத் துதல், மாநாடுகள் திரட்டல், அவ்விஸ்லாமிய இலக்கிய வடிவங்களை நூலுருப்பெறச் செய்தல், வானொலி உரை வழி எழுத்தோவியம் உருவாக்கல், அகராதி திரட்டல், களஞ்சியம் புதுக்குதல், கூரியர் பணி வேறு எனப் பல் துறைப் பணி ஏற்றுத் திரிந்து பறந்து வரும் இவ்விலக்கியத் தும்பியை என்ன சொல்லிப் பாராட்டுவது?

தீனில் நெருங்கியவர்க்கும், நெருங்க மறந்தவர்க்கும் கருணையோடு உதவுவது திருமறை, அதைத் தந்தவன் யார்? கடற்கரையை நெருங்கியவர்க்கு முத்தையும், மூழ்கியவ ருக்குப் பவளத்தையும், அகன்றவர்க்கு மழைமேகத்தையும், அணைந்தவர்க்கெல்லாம் வற்றாக்கடலென வாரித்தரும் அற்புதன், புரிந்தார்க்கும் புரியாதவர்க்கும், நல்லார்க்கும், பொல்லார்க்கும், கற்றார்க்கும் கல்லாதார்க்கும் களிப்ப ருளும் களிப்பான அல்லாவன்றோ? அவன்புகழையும், அவ னது அன்புத் தூதர் நபி (சல்) அவர்களின் பெருமையும் நாளெல்லாம் பேசினால் போதாது என்று பொழுதெல்லாம் ஏடுகளில் எழுதிவரும் இஸ்லாமிய இலக்கியப் பணி யாளராய் எம்மிடையே மலர்ந்த மணவையார் நிச்சயம் ஒரு மகரந்த மலர்!

இலக்கியங்களிலும் நல்ல இலக்கியங்கள் - ஒழுக்க இலக்கியங்கள் கற்றால்தானே, வெள்ளத்தனைய மலர்நீட்

டம்போல் கற்ற கல்விக்கேற்ப மனம் உயரும்? மாறாக இன்று பண்பு அடிப்படையிலான செவ்வியல் இலக்கியங் களின் பரிச்சயம் அற்றுப் போனதால்தானே, சிந்திக்கும் செம்மை மறந்து, பாரினில் மேன்மை அடைதற்கு மாறாக எங்கும் கவலை, குழப்பம், மிடிமை, மிரட்டல், வெடி குண்டு, துப்பாக்கிக் கலாச்சாரங்கள், மதங்களின் பெயரால் மதங்கொண்டு மார்க்கத்தை அனுசரிக்காத தன்மை, அத னால் அன்றாடம் பலியாகிச் சரிகின்ற சாவுகள், அதற்காக ஊரைக் காலிசெய்து கொண்டு ஓடும் கண்ணீர் ஓடங்கள், அதன் விளைவால் நாட்டில் உண்டாகும் தொழில் முடக் கம், அரசாங்க ஆட்டம், ஆலையடைப்பு, பொருளாதாரத் தேக்கம், பட்டினிச்சாவு, இதனால் சொந்த நாட்டிலேயே அகதி முத்திரை குத்திய முகம்-இவையெல்லாம் விளையக் காரணமே நாட்டில் நேரிய இலக்கியமில்லாததும், நேசம் மறந்த நெஞ்சங்களும் அல்லவா என்ற சிந்தனை அலை களை ஒன்றன்பின் ஒன்றாய் எண்ணத்தூண்டுவது மணவை யாரின் எழுத்துக் கோலம். எல்லோரும் கவனிக்கின்றோம், ஆனால் எல்லாவற்றையும் கவனிப்பதில்லை. இந்த எழுத் தாளன் எல்லாவற்றையும் காரியப் பார்வையுடன் நோக்கும் காவல்காரர் ஆகிறார்.

ஆசிரியர் அவர்களின் இஸ்லாமிய இலக்கியப் பணி, இஸ்லாத்துக்கு ஆற்றும் சிறந்த தொண்டன்றோ? தூய இஸ் லாமியன் எப்படி இருக்க வேண்டும் என்பதற்குக் கவிஞர் நசுருல் இசுலாம், 'வையக மீதினில் வாழ்விலும் தாழ் விலும் இன்பமே வரினும்', துன்பமே நேரினும் ஒன்றாய்ப் பங்கு உவந்து பற்றும் சோதரர் நீ எனச் சாற்றுவது இஸ்லாம்' என்ற மனிதநேய மாண்பினை விளக்குவார். அதற்கேற்ப மானுட நேயம் கொண்டவராய் இறைவேதம், நபிவேதம் ஆகியவற்றால் அரும்பெருமையை மனித குலத்தார்க்கி

டையே இலக்கியம் வழி பரப்பும் நோக்கம் கொண்ட வராகின்றார். எப்படியாவது வாழாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற நியதியுடையவர்; ஒரு மாதிரியாக வாழ்ந்தி டாமல் ஒரே மாதிரியான உறுதியுடன் வாழவேண்டும் எனப் போதிப்பவர். ஏனெனில் சோர்வுற்றுச் சுருங்கிய ஒரு வீர இனம், இஸ்லாமிய இனம். காலவோட்டத்தில் தலை குனிந்து நிற்கின்ற தன் கண்ணான சமுதாயத்தைப் பார்த்து, 'நீ சாய்ந்துதான் இருக்கின்றாய்; சரிந்து விடவில்லை. உன் தலையை நிமிர்த்தித் துறைதோறும் துறைதோறும் ஆக்கப் பணி செய்யத் துடித்தெழு'' என்று துவளாமல் தோள் கொடுத்த தூண்களே மணவையாரின் தாள் தோய் தடக்கை கள்; அக் கைகள் படைத்த எழுத்துகள், மறந்தும் பிறன் கேடு சூழாத இஸ்லாமியரை தன் நெஞ்சறியப் பொய்யுரையாப் புனிதர்களை-மானுட சூழலின் மாயசக்தியால் விளைந்து மதிகெட்ட செயல் மாய்க்க வரும்போது, அவர்தம் முகம் காட்டவும், நல் அகம் காட்டவும் அமைந்தது போன்ற காலத்தால் அமைந்த மணவையாரின் இப்பணியைப் பாராட்டக் காலமே காலங்காலமாய் நின்று பாராட்ட வேண்டும். அதற்குக் காலமும் கடந்த அந்த ஆலமே போது மானவன்.

இதனால் தான் காலம் கட்டிக் கொடுத்த பல தங்கக் கட்டி விருதுகள் அன்னாரைத் தேடி வந்தன. தமிழ்த் தூதுவன்', 'வளர்தமிழ்ச் செல்வர்', 'அறிவியல் தமிழ்ச் சிற்பி', தமிழக அரசு தந்த 'கலைமாமணி' விருது 'திரு.வி.க. விருது' போன்றவை அவற்றுள் சில. கவிஞன் இக்பால் கூறுவான், ''சமுதாயம் எனும் சங்கிலித் தொடரிலே ஒளி வீசும் ஒரு மணியாக இணைந்து கொள்'' என்று. அதுபோல் இத்திருமாமணியும் அவர்தம் பணியும் நம்மிடையே நின் றொளிர்கிறது.

இஸ்லாமிய இலக்கியங்கள் மணிச் சுரங்கம்; தேன் குடம்; கனித் தோப்பு; கதிர்வயல். அந்த மாணிக்கப் புதையல் இனி மண்மூடிக் கிடக்க வேண்டாம்; அதன் ஒளியை, தேன் குடம் சுவையை எல்லோர்க்கும் விருந்தாக் குங்கள்; பழத்தோட்டத்தின் பயன் நுகர்ந்து, கதிர் வயலின் செந்நெல் உணவுண்டு, புது சத்துப் பாய்ச்சிய இலக்கிய நாளங்கள், நாடிகள், நரம்புகள் தெறிக்கும் வள உடலை, உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்-என வாழ்த்தி நம்மை வளரத் தூண்டும் மணவையாரின் இலக்கியப் பணி, ஏழ்கடல் சூழினும் தன்மணங் கொண்டு இசை பெற வாழிய என வாழ்த்தத் தோன்றுகின்றது.

★

# சிறுவர் இலக்கியத்தில் மணவையார் பங்கு

டாக்டர். பூவண்ணன்

### *எண்ணம் மாற்றிய எழுத்து வேந்தர்*

*''பெரியவர்களுக்காக நாவல் எழுதுகிறவர்கள், சிறு வர்களுக்கும் சில நாவல்கள் எழுதலாமே என்று எழுதுவ தில்லை. பெரியவர்களுக்காக நாடகம் எழுதுபவர்கள் சிறு வர்களுக்கும் சில நாடகங்கள் எழுதலாமே என்று எழுதுவ தில்லை. பெரியவர்களுக்காகக் கட்டுரைகள் எழுதுபவர்கள், சிறுவர்களுக்காகக் கட்டுரைகள் எழுதலாமே என்று எழுதுவதில்லை. ஆனால், பெரியவர்களுக்காகக் கவிதை எழுதுபவர்கள், சிறுவர்களுக்காக சில கவிதைகள் எழுதுகி றார்கள். பிள்ளைகளிடம் இரங்கும் கருணை உள்ளம் கவி ஞர்களிடமே உள்ளது. பிள்ளைகளே நாளைய பிரபஞ்சத்தை வாழ்விக்கப் போகிறவர்கள் என்னும் உண்மையை உணர்ந்த வர்கள். அதனால்தான் பாரதியார், பாரதிதாசன், கவிமணி, வாணிதாசன், தமிழ் ஒளி முதலிய கவிஞர் பெருமக்கள் பெரி யோர்களுக்காகக் கவிதை புனைந்ததுடன் சிறியோர்களுக்கா கவும் கவிதைகள் புனைந்தனர்''*

மேலே கண்டது பாவேந்தர் நூற்றாண்டு விழாவை ஒட்டி குமரி அனந்தன் ஓராண்டு நடத்திய பாவேந்தர் தொடர்ச் சொற்பொழிவுகளில் ஒரு வாரம் நான் பங்கு

கொண்டபோது கூறிய கருத்து. இக்கருத்தைப் பொய்யாக்கு வதற்காகவே ஒருவர் பிறந்திருக்கிறார் என்பதை அப்போது நான் உணரவில்லை. அவர் மண்ணகம் முழுதும் அறிந்து போற்றும் 'அறிவியல் தமிழ் வித்தகர்' மணவை முஸ்தபா அவர்கள்.

மணவையார் 1965இல் தென் மொழிகள் புத்தக டிரஸ்டில் பணியாற்றிய காலம் முதலே எனக்கு அறிமுகமா னவர். அறிவும், ஆற்றலும் அறிவியல் தமிழார்வமும் பொங்கிப் பெருகும் கங்கையைப் போன்ற மணவையார், நான் மேலே சொன்ன கருத்தை உடைத்து, விதிக்கு ஒரு விலக்கு உண்டாக்கி விட்டார். மணவையார் கவிஞரல்லர்; ஆனால் சிறுவர்களிடம் பேரன்பும், அக்கறையும் கவிஞர் களுக்கே உண்டு என்று நான் கூறினேனே, அதைக் காட்டிலும் அதிக அன்பும், அக்கறையும் கொண்டவர். இனி இந்த நாட்டை ஆளப் பிறந்த அரும்புகளுக்கு அவர் ஆற்றிய தொண்டு பெரிது. குழந்தை எழுத்தாளர் என்னும் பட்டம் சூட்டிக் கொண்ட ஒருவர் சராசரியாக ஆற்றும் சிறுவர் இலக் கியத் தொண்டைவிட அதிகம்! மிக அதிகம்!

## அறிவியல் வித்தகர் மணவையார்

மணவையார் முதலில் ஓர் அறிவியல்வாதி! அனைத்து அறிவியல் மூலங்களையும் கூறுகளையும் அன்னைத் தமிழில் அளிக்க முடியும் என்று சொல்லி, சொல்லியதை செயல்படுத்தி, அச்செயலில் மிகப் பெரிய வெற்றி பெற்ற வர். மொழிப்பெயர்ப்புக் கலையின் முடிசூடா மன்னர். அப்படிப்பட்டவர், தனது விசுரூப உருவைக் குறைத்துக் கொண்டு - மறைத்துக் கொண்டு, ஆயர்களின் மத்தியில் ஆநிறை மேய்த்த மாயக் கண்ணன் போல் எளிய வடிவம் எடுத்துக் கொண்டார். ஆம், குழந்தை எழுத்தாளரானார்.

அவர் எழுதியவற்றைப் படித்துப் பார்த்தால், குழந்தை இலக்கிய கோமான் ஆனார் என்று சொல்வதே பொருந்தும். தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்டுக்காக நாற்பத்தி மூன்று சிறுவர் நூல்களை மணவையார் பதிப்பித்தார். குழந்தை இலக்கிய விற்பன்னர்களில் எத்தனை பேருக்கு இந்த அரிய வாய்ப்புக் கிடைத்திருக்கும்? அவர்களின் எண்ணிக்கை இருகை விரல் எண்ணிக்கை அளவு இருக்கலாம். . மண வையார் பதிப்பாசியார் மட்டுமா? படைப்பாசிரியரும்கூட! சிறுவர்களுக்காகச் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், உரைச் சித்திரங்கள் முதலியன எழுதியுள்ளார். கால் நூற்றாண்டுக் காலத்துக்கு மேலாக வானொலியில் சிறுவர் நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார். இவற்றை நூல்களாகவும் வெளியிட்டுள்ளார். இவற்றைப் பார்க்கும்போது, படிக்கும் போது மணவை முஸ்தபா குழந்தை இலக்கியக் கோமான் என்பது உண்மையாகிறது! உறுதியாகிறது!

## சிறுவர் இலக்கியச் செம்மல்

மணவையாரின் சிறுவர் இலக்கியச் சேவையின் ஒரு பகுதியான புனை கதையை இங்கே ஆய்ந்து பார்க்க விரும்பு கிறேன். எனக்கு கிடைத்தவை நான்கு நாவல் நூல்கள் அவை :

1. தெளிவு பிறந்தது
2. திருப்புமுனை
3. விழா தந்த விழிப்பு
4. சிறுவர்க்குச் சுதந்திரம்

இந்த நான்கு நூல்களும் 1989ஆம் ஆண்டிலேயே வெளி வந்தவை. எழுதப்பட்ட காலம் வேறு வேறாக இருக்கக் கூடும்.

நான்கு நூல்களுக்கும் ஆசிரியர், சிறிய முன்னுரை எழுதி இணைத்துள்ளார்.

'விழா தந்த விழிப்பு' என்னும் நூலின் முன்னுரையில் ஒரு பகுதியைப் பார்ப்போம்.

''சிறுவர்க்கான சிறந்த நூல்கள் தமிழில் பெருமளவில் வெளிவராதது பெருங்குறையாகவே உள்ளது. மேனாடு களில் சிறுவர் நூல்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது. அதனால் அங்கெல்லாம் வளர்ச்சி விகிதமும் அதி கமாகவே இருக்கிறது.

''இன்றைய சிறுவர்களே நாளைய பெரியவர்கள். நாட்டின் நாளைய வளர்ச்சியும் வலிமையும் அவர்களைப் பொருத்தே அமைய முடியும். எனவே, இன்றையச் சிறுவர் களின் சிந்தனைக்கு உரமூட்டும் சிறந்த நூல்கள் பெரும ளவில் வெளிவர வேண்டும். அந்நூல்கள் அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், மன, பண்பாட்டு வளர்ச்சிக்கும் அடித்தள மாக அமைய வேண்டுவது அவசியம்''

இந்த முன்னுரை சிறுவர் நூல்களின் சிறப்பையும், தேவையையும் தெரிவிக்கிறது. 'சிறுவர் நூல் தேவை' என்று உபதேசம் செய்து நிறுத்தி விடவில்லை மணவையார். தேவையை உணர்ந்து சிறுவர் நூல் எழுதிச் சேவை செய்தி ருக்கிறார். அத்துடன் நின்றுவிடாமல், தம் நூல்களை வெளி யிடப் பிற பதிப்பகத்தார் முன்வரும் வரை காத்திராமல் தாமே பொருள் செலவு செய்து தாமே அவற்றை வெளியிட் டிருக்கும் துணிவையும் பெற்றிருக்கிறார். இரண்டுமே போற்றத்தக்க செயல்கள்.

### ''விழா தந்த விழிப்பு' நாவலின் கதையைச் சுருக்கமாக அறிவோம்

சிங்காரம் என்னும் மாணவன், ஒரு மாணவனுக்குத் தேவையான நல்ல குணங்கள் எதுவுமே இல்லாதவன். அவ

னுக்குப் பணம் கிடைக்கும். அதனால் எப்போதுமே சிற்றுண்டி வாங்கித் தின்றுக் கொண்டே இருப்பான்.

அறிவானந்தம் என்று மற்றொரு மாணவன். இவன் உள்ளம் நல்ல பண்புகளின் இல்லம். ஆனால், ஏழை. தாயார் பலகாரம் சுட்டு விற்பவர். அவருக்கு உதவியாக, பல காரங்களைக் கடைகளுக்கு எடுத்துச் சென்று, அங்கே கொடுத்து முடித்த பின்னரே பள்ளிக்குப் போக முடியும். அதனால் தினமும் பள்ளி தொடங்கிய பின்னரே காலதாமத மாக வகுப்புக்கு வருவான். அதற்காக ஆசிரியர் தரும் தண்ட னையைப் பெறுவான். ஆனாலும் எல்லாப் பாடங்களிலும் முதலிடம் பெறும் புத்திசாலி, கெட்டிக்காரன். பாடம் தவிர சேமிப்பு, பேச்சு, கட்டுரைப் போட்டி முதலியவற்றிலும் கெட்டிக்காரன். அதனால் அவனை முருகு முதலிய மாண வர்கள் விரும்புகிறார்கள். புகழ்கிறார்கள்.

அறிவானந்தம் பெறும் புகழைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிங்காரம் எப்படியாவது, எதிலாவது அவனை வென்று புகழ் பெற விரும்புகிறான்.

சிங்காரம் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வருகிறது. அறிவா னந்தம் தனக்குக் கிடைக்கும் சிறுதொகையையும் சேமிப் பில் போட்டுச் சேர்த்து வந்தான். சேமிப்பில், அவனுக்கே முதலிடம்.

திடீரென்று அவன் தாயாருக்கு உடல் நலம் குறைந்து போயிற்று. மருத்துவமனையில் இருந்தார். அப்போது அறி வானந்தம் சேமித்த பணம் உதவியது. அதைக் கொண்டே மருந்து வாங்கினான். டாக்டர் நாதன் அவனது சேமிக்கும் பண்பைப் பாராட்டுகிறார். பள்ளியில் நடக்கும் சேமிப்பு விழாவில் ஒரு பேச்சுப் போட்டி நடக்க இருந்தது. அதற்கு ரிய பேச்சை அவன் எழுதி வைத்திருந்தான். டாக்டர் நாதன்

அதை வாங்கிப் படித்துப் பார்த்துப் பாராட்டுகிறார். ஆனால், ''அறிவானந்தம்! எப்போதும் தாயாருக்கு அருகே இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும். வேறெங்கும் செல்லக் கூடாது'' என்கிறார். அதனால் பேச்சுப் போட்டிக்கு பெயர் கொடுத்திருந்தும் அதற்குரிய பேச்சைத் தயார் செய்திருந்தும், அறிவானந்தம் பள்ளிவிழாவில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

அறிவானந்தம் போட்டியில் கலந்து கொள்ள மாட்டான் என்பதை அறிந்து சிங்காரம் மகிழ்கிறான். அறி வானந்தம் இம்முறை பரிசு பெற மாட்டான் என்பதே மகிழ்ச்சிக்குக் காரணம். சிங்காரம் இதோடு நிற்காமல் அந்தப் பரிசை தான் பெற விரும்புகிறான். மருத்துவம னைக்குச் சென்று அறிவானந்தத்தைச் சந்திக்கும் சாக்கில், அவன் தயார் செய்த சேமிப்புப் பேச்சினைத் திருடிக் கொண்டு வந்து விடுகிறான்.

சிறுசேமிப்பு விழா நடக்கிறது. விழாவின் தலைவர் டாக்டர் நாதன். சிங்காரம், அறிவானந்தம் தயாரித்த பேச்சை தன் பேச்சாகப் பேசி கைத்தட்டல் பெறுகிறான்.

இறுதியாக டாக்டர் நாதன் பேசுகிறார். சிங்காரத்தின் பேச்சு, அறிவானந்தம் தயாரித்தது என்பதை உணர்ந்தவர் அவர். அதைத்தான் அவர் மருத்துவமனையிலேயே படித்தி ருக்கிறாரே. அதனால், 'சிங்காரத்தின் பேச்சு, அறிவானந்தம் எழுதியது' என்பதைச் சொல்லுகிறார். அறிவானந்தம் தயா ரித்த பேச்சே போட்டியில் முதல் பரிசு பெறுகிறது என்றும் அறிவிக்கிறார்.

அப்போதுதான் சிங்காரம் தன் தவறுகளை உணர் கிறான். அறிவானந்தம் எழுதிய பேச்சுக்காகத் தனக்குப் பரிச ளிக்கப்பட்ட புத்தகங்களை, அறிவானந்தத்திடம் சேர்த்து,

மன்னிப்புக் கேட்கிறான். தீயவழியில் சென்ற சிங்காரம் சிறு சேமிப்பு விழாவில் விழிப்படைந்து திருந்தி தூயவனாகி விடுகிறான்.

இதுவே கதை.

இக்கதையில் சேமிக்கும் பழக்கத்தின் சிறப்பும், சிக்கன உணர்வின் தேவையும் உயிர்நாடியாக விளங்குகின்றன. இளம் வயதிலேயே சிறுவர்கள் இந்தப் பண்புகளைப் பெற வேண்டியதன் அவசியத்தை இந்த நாவல் சொல்கிறது.

சேமிப்பின் சிறப்பு என்ன ?

''மனிதனைவிட குறைந்த அறிவு படைத்த உயிரினங்களெல்லாம் தவறாமல் சேமித்து வைத்துப் பயனடைகின்றன. மழைக் காலத்துக்கு வேண்டும் என்று வெயில் காலத்தில் இரையைத் தேடி சேமிக்கின்றது எறும்பு. அதே போல் தேனீ, தேனைச் சேர்த்து வைத்துப் பயனடைகின்றது. ஆனால், ஆறறிவு படைத்த மனிதன் மட்டும் சம்பாதிக்கும் காலத்தில், வருங்காலத்திற்கு வேண்டுமே எனச் சேமிப்பதில்லை. வருமானம் இல்லாத வயதான காலத்தில், தடி ஊன்றித் தள்ளாடும் பருவத்தில் அமைதியோடும் மகிழ்ச்சியோடும் வாழ வசதி இன்றி வருந்தி நிற்கிறான். எதிர்கால வாழ்க்கையை எண்ணிப் பார்ப்பதில்லை. இளமையில் சேமிப்பு உணர்வு இருப்பதில்லை. ஆடம்பரமாக வாழ்ந்து விட்டு முதிய வயதில் கையேந்தி பிச்சை கேட்கும் கேவல நிலைக்கு ஆளாகிறான். அந்த நிலை ஏற்படாமல் இருக்க நாமெல்லாம் இளம் வயதிலிருந்தே - இன்று முதலே சிறுகச் சிறுக சேமிக்க வேண்டும்'' (பக்கம் : 60 -61)

இது சிறுவன் அறிவானந்தம் தயாரித்து, சிங்காரம் பேசிய பேச்சின் ஒரு பகுதி.

'விழா தந்த விழிப்பு' கதை நூலைப் படிப்பவர் மனத்தில் ஒரு புள்ளி விவரம் ஆழமாகப் பதியும். மேற் கோள் பதியலாம்! மேலான நிகழ்ச்சி பதியலாம்! நகைச் சுவைத் துணுக்குப் பதியலாம்! ஒரு புள்ளி விவரம் பதியுமா?

பதியும்!

இந்தப் புள்ளி விவரத்தைப் படிக்கும் எவரும் ஒப்புக் கொள்வர்.

சிறுசேமிப்பு விழாவின் தலைவரான டாக்டர் நாதன் தனது பேச்சில் இவ்வாறு கூறுகிறார்:

''இன்றையப் பேச்சுப் போட்டியில் இங்கு பேசிய எல்லா மாணவர்களுமே சிறுசேமிப்புப் பற்றி வெகு அழ காகப் பேசினார்கள். சிறுதுளி பெரு வெள்ளமாவது போல், சின்னஞ்சிறு சேமிப்புக்கூட நாளடைவில் பெருந்தொகை யாக உருவெடுக்க முடியும்.''

''பாரதப் பிரதமராக இருந்த அமரர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், 'வீட்டு நலனுக்காகவும், நாட்டு நலனுக் காகவும் ஒவ்வொரு இந்தியனும் 3 பைசா நாள்தோறும் சேமிக்க வேண்டும்' என்றார். அப்படிச் சேமித்தால் என்ன ஆகும்?

''ஒவ்வொரு இந்தியனும் ஒரு நாளைக்கு 3 பைசா வீதம் சேமித்தால் 65 கோடி இந்தியரின் சேமிப்பு 195 கோடி காசுகள் ஆகும். 30 நாட்களுக்குச் சேமித்தால் 5830 கோடி காசுகள் ஆகும். 12 மாதங்களின், அதாவது ஒரு ஆண்டின் 69960 கோடி காசுகள் ஆகும். அதாவது நாளைக்கு 3 காசு வீதம் சேமித்தால் ஆண்டில் சுமார் 700 கோடி ரூபாய்கள் சேமிக்கலாம்.'' பக்கம் : 63-64

இந்தப் புள்ளி விவரம் பனித்துளி போலத் தொட ங்கும் சேமிப்பு, பனிமலை இமயமாக எழுந்து உயர்ந்து உறு

தியாய் நிற்கும் உண்மையை எவ்வளவு அழுத்தமாகக் கூறுகிறது! எல்லா எண்களும் நம் கவனத்தில் நிலைக்கா விட்டாலும் 65 கோடி இந்தியர்களில் ஒவ்வொருவரும் நாளுக்கு 3 காசு வீதம் சேர்த்தால், ஓராண்டில் அது 700 கோடி ரூபாயாக பெருகி நிற்கும்'' என்பது நம் மனதை விட்டு மறையாது.

மணவையார் இந்த நாவலை முதலில் நாடகமாக எழுதினார். இந்த நாடகம், சென்னை வானொலியின் சிறுவர் நாடக விழாவில் சிறப்பு நாடகமாக ஒலிபரப் பானது. நாடகத்தைப் பார்த்தாலும் சரி, கேட்டாலும் சரி, அதன் பயன், நாவலைப் படிக்கும் பலனைவிட பன்மடங்கு அதிகமாகும்.

மணவையார் இந்த 'விழா தந்த விழிப்பு' நூல் மூலம் சிறுசேமிப்பு உணர்வை, சிக்கனத்தின் உயர்வை சிறுவர் மனத்தில் ஆலம் விதையாக விதைத்துவிட்டார். நாடகத்தைக் கேட்ட - நாவலைப் படித்த சிறுவர்கள் இன்று பெரியவர்களாகி இருப்பார்கள். இந்த விதைகள் இன்று அவர்கள் மனதில் விரிந்த நிழல் தரும் விருட்சமாக வளர்ந்து நிலைத்து நின்று அவர்கள் வாழ்வைச் செம்மையாக்கி, செழிப்பாக்கி இருக்கும் என்று உறுதியாய் நம்பலாம்.

## திருப்பு முனை

மணவையாரின் 'திருப்பு முனை' என்னும் நாவலும் முதலில் வானொலியில் நாடகமாக ஒலிப்பரப்பப்பட்டது. நாடகத்துக்கு மணவையார் வழங்கிய பெயர் 'எது அறிவு?' இதிலும் இனியன் என்னும் தூயவனையும் கண்ணாயிரம் என்னும் தீயவனையும் பார்க்கிறோம். இருவரும் பள்ளி மாணவர்கள். இனியன் எல்லாப் பரிசுகளையும் பெறு வதைக் கண்டு பொறாமை கொள்கிறான் கண்ணாயிரம்.

பள்ளியில் 'உழைப்பும் உயர்வும்' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை போட்டி நடக்கிறது. அதற்கு இனியன் ஒரு கட்டுரை எழுதுகிறான். அதை செம்மையாய் படி எடுக்கிறான். அந்தச் செம்மைப் படியைக் கண்ணாயிரம் திருடி, தன் பெயரில் போட்டியில் சேர்த்து விடுகிறான். செம்மைப் படி காணமல் போகவே, கட்டுரையின் 'ரஃப் காப்பி'யைப் போட்டிக்கு தருகிறான் இனியன். போட்டியில் இனியன் பரிசு பெருகிறான். இனியன் கட்டுரையைத் திருடி தன் கட்டுரையாகத் தந்த கண்ணாயிரம் தண்டனை பெறுகிறான்.

இக்கதை, 'விழா தந்த விழிப்பு' க் கதை போலவே அமைந்திருந்தாலும், இதில் ஆசிரியர் நகைச்சுவை மிளிர மாணவர்களைப் பேச வைத்திருப்பது படிக்கும் சிறுவர்களை கவரும்.

## தெளிவு பிறந்தது

மூன்றாவது நாவல் 'தெளிவு பிறந்தது' முன்னிரு நாவல்களைவிட அளவில் சிறியது. (மொத்தம் 32 பக்கம்) ஆனால் சுவையில் சிறந்தது.

இக் கதைக்கும் பொறாமையே மையக் கருத்தாக அமைகிறது. சேகர், முரளி இருவரும் இருவேறு பள்ளியில் படிக்கும் மாணவர்கள். கால்பந்து விளையாட்டில் வீரர்கள். இருவரும் தத்தம் பள்ளியின் கால் பந்தாட்டக் குழுவின் கேப்டன்கள். முரளி குறுக்கு வழியிலும் வெற்றி பெற விரும்புபவன். சேகர் முற்றிலும் நேர்மையானவன்.

ஒரு கால் பந்தாட்டத்தின்போது சேகரின் வெற்றியைத் தடுக்க, அவன் காலில் உதைக்க முயன்ற முரளி, தன் முயற்சியில் தவறி, நிலை குலைந்து கீழே விழ, அதே சமயம் அவன் மீது வேறு இரு விளையாட்டு வீரர்கள் விழ, அடியில் சிக்கிய முரளியின் கால் எலும்பு முறிந்து போகி

றது. சேகர் மருத்துவ மனைக்குச் சென்று, வெகு நேரம் காத்திருந்து முரளியைப் பார்க்கிறான். ''சேகருக்கு எந்த விபத்தை உண்டாக்க நினைத்தேனோ, அதே விபத்து எனக்கு உண்டாகி விட்டதே'' என்று வருந்திய முரளி, தன் தவற்றுக்காக சேகரிடம் மன்னிப்புக் கோருகிறான்.

நினைக்கும் கெடுதி தனக்கே' என்னும் நீதியை இக்கதை மிகச் சுவையாகச் சொல்கிறது. கதையில் வரும் முரளியின் மாமா இதே கருத்து விளக்கும் இருவேறு கதைகளை கூறுகிறார். மூலக் கதை ஒன்றும், முரளியின் மாமா சொல்லும் கதைகள் இரண்டும் சேர்ந்து இந்த நாவலில் 'திரி இன் ஒன்'னாகத் திகழ்கிறது.

### சிறுவர்க்குச் சுதந்திரம்

நான்காவது நாவல் 'சிறுவர்க்குச் சுதந்திரம்' இந்நூலை நான் நாவல் என்று வகைப்படுத்தினாலும், ஆசிரியர் மணவையார் இதை 'சிறுவர்க்கான சிந்தனை நூல்' என்று குறிப்பிடுகிறார்.

பள்ளியில் சுதந்திரநாள் விழா. அதில் முக்கிய நிகழ்ச்சி கொடியேற்றம். இந்த விழாவுக்குச் செல்ல கோமதியும், அவள் தம்பி ரகுவும் தயாராகின்றனர். ஆனால், மற்றொரு தம்பியாகிய மணி குளிக்காமல் கொள்ளாமல் விளையாடிக் கொண்டிருக்கிறான். 'சுதந்திர நாளில் பள்ளிக்குச் செல்லாமல் தன் விருப்பம் போல இருக்க விட வேண்டும். அதுதான் சுதந்திரம்'' என்கிறான் மணி. அப்போது அங்கே அவர்கள் மாமா வருகிறார். அவர் சுதந்திரம் என்பது என்ன, அந்த நாளில் தேசிய கொடியை ஏற்றி வணக்கம் செய்வதன் பொருள் என்ன என்பதைச் சுவையான உரையாடல் மூலம் விளக்குகிறார். தன் சுதந்திரத்ததைக் காக்க பிறர் சுதந்தி

ரத்தைப் பறிக்கக் கூடாது என்பதை, மானை விரட்ட, மனி தனைத் தன் முதுகில் சுமந்து அடிமையான குதிரைக் கதையைச் சொல்கிறார், முடிவில் மணியும் சுதந்திர நாளின் சிறப்பை உணர, கோமதி, ரகு, மணி மூவரும் பள்ளியின் சுதந்திர நாளில் கலந்து கொள்ள புறப்படுகின்றனர்.

இது கதை போலச் சொல்லப்பட்டுள்ள கருத்துக் குவியல்.

சுதந்திரத்தின் உண்மைப் பொருளை இளம் வயதி லேயே உணர்த்த வேண்டியது அவசியமாகும். அப்போது தான் தாங்கள், சுதந்திரத்தை முழுமையாக அனுபவிப்ப தோடு மற்றவர்களின் சுதந்திரத்தையும் மதித்து நடப்பார்கள். இதனால் நாட்டு நலன் மட்டுமல்லாது சர்வதேச நலனே பாதுகாக்கப்படும். இந்த உண்மையை இளம் உள்ளங்கள் ஏற்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்நூல்'' என்று ஆசி ரியர் கூறுகிறார். அதனால்தான் இதை, 'சிறுவர்க்கான சிந்தனை நூல்' என்கிறார் ஆசிரியர்.

சிந்தனை நூல் என்பது உண்மை.

இது சிறந்த கதை நூல் என்று சொல்வதும் உண்மை.

சீரிய கருத்துகளை சிறந்த நாவல் வடிவில் தந்தவர் இர்விங் வாலஸ் என்னும் சிறந்த எழுத்தாளர். அதனால் திறானாய்வாளர்கள் அவற்றை "FICTION" (புனை கதை) என்று மட்டுமே சொல்ல விரும்பவில்லை. மிகச் சிறந்த உண்மைகளை (FACTS), கதை வடிவில் (FICTION) கூறிய வாலஸ் நாவல்களை, "Faction" என்னும் புதுப் பெயரால் சிறப்பித்தார்கள். கதையும் (Fiction) கருத்துகளும் (facts) இணைந்த நாவல் என்ற பொருளில் "Faction" என்று வழங்கி யது பொருத்தந்தானே!

மணவையாரின் 'விழா தந்த விழிப்பு', திருப்பு முனை, தெளிவு பிறந்தது' ஆகியவை புனைக் கதைகள் என்றால் 'சிறுவர்க்குச் சுதந்திரம்' ஒரு Faction கருத்துகள் பொதிந்த கதையாகும் என்பது என் முடிவு.

மேலே கண்ட நான்கு நூல்களுக்கும் சில ஒற்றுமைகள் உள்ளன.

1. இவை முதலில் நாடகமாக எழுதப்பட்டு நாவல் ஆனவை.

2. இவை முதலில் வானொலியில் இடம் பெற்று, பின்னர் நூல்களானது.

3. இவை நான்கும் பள்ளி மாணவர்களை தலைமை மாந்தராகப் பெற்றவை.

முதல் மூன்றில் மாணவர்களை மட்டுமே இணைத்துக் கதைப் படைத்த மணவையார், நான்காவது நூலில் கோமதி என்னும் மாணவியை இணைத்து, சிறுமியர்க்கும் இடமளித்து சிறப்புப் பெறுகிறார். இந்த நூல்கள் மணவையார் குழந்தை எழுத்தாளர் என்னும் கூற்றை நிலை நாட்டப் போதுமானவை.

மணவையார் இத்துடன் சிறுவர் இலக்கிய பணியை நிறுத்திக் கொள்ளவில்லை.

சிறுவர் கலைக் களஞ்சியம்

இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்

இளையர் அறிவியல் கலைக் களஞ்சியம்

என்னும் இணையற்ற மூன்று கலைக் களஞ்சியங்களை சிறுவர் இலக்கியத்துக்கு வழங்கி சிறப்பித்துள்ளார். இவற்றின் இயல்புகளையும் சிறப்புகளையும் வேறொரு தனிக் கட்டுரை மூலமே ஆய்தல் வேண்டும்.

## குழந்தை இலக்கியக் கோமான்

ஓர் எழுத்தாளன் இதழ்களில் தொடர்ந்து எழுதி வந்தாலும் ஒரு நூலை வெளியிடும்போதே நூலாசிரியர் என்னும் சிறப்புப் பெறுகிறான். நூல்களை எழுதுகின்ற ஓர் அகராதியைத் தயாரித்து வெளியிடுவது என்பது பத்துத் தரமான நூல்களை இயற்றியதற்குச் சமம். ஓர் எழுத்தாளன் ஒரு கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிடுவது, அவன் நூறு நூல்களை எழுதி வெளியிடுவதற்குச் சமம். மணவை முஸ்தபா சிறுவர் இலக்கியத்துக்கு மட்டுமே மூன்று கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிட்டிருக்கிறார் என்றால் அவரது சிறப்பை எண்ணிப் பாருங்கள்.

பதிப்பாசிரியர்

வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்

நூலாசிரியர்

கலைக் களஞ்சியம் உருவாக்கியவர்

இத்தனையும் குழந்தை இலக்கியத்துக்கு அவர் கொடுத்த கொடைகள். அவர் ஆற்றிய அரும்பணிகள். இந்தச் சாதனையாளரை 'குழந்தை இலக்கிய கோமான்' என்று வழங்குவது முற்றிலும் பொருத்தமாகும்.

குழந்தை இலக்கிய கோமான் நீடுழி வாழ்க! அவரது தொண்டு தொடர்வதாக.

★

# மணவையாரின் சமய நல்லிணக்கப் பணிகள்

அமுதன் அடிகள்

*சமய மோதலா? சமயத்தவர் மோதலா?*

சைவமும் சமணமும் பௌத்தமும் வைணவமும் இந்நாட்டில் தோன்றிய சமயங்கள், இஸ்லாமும் கிறிஸ்தவமும் இந்நாட்டில் வந்து குடியேறிய சமயங்கள். இத்தனைச் சமயங்களுக்கிடையில் உடன்வாழ்வும் உடனிருத்தலும் இன்றியமையாதவை என்பதை இந்நாட்டு வரலாறு உணர்த்துகின்றது.

சங்க காலத்தில் சைவமும் சமணமும் ஒன்றுடனொன்று ஒத்து வாழ்ந்த நிலைமாறி, பக்தி இயக்கக் காலத்தில் இரண்டும் ஒன்றுடனொன்று மோதி வன்முறையில் ஈடுபட்டதாக வரலாறு கூறுகின்றது. சமயங்கள் ஒன்றுடனொன்று மோதியதாகக் கூறுவது சரியல்ல. சமயங்களைச் சார்ந்த சிலர் தங்களுக்குள் மோதிக் கொண்டனர் என்பதே உண்மை. ஏனெனில் எல்லாச் சமயங்களுமே அன்பையும் ஒற்றுமையையும் போதிப்பனவாக இருக்கும்போது அவை ஒன்றுடனொன்று மோதிக் கொள்வது சாத்தியமே அல்ல. சமயங்களைச் சார்ந்த சிலர், சமயம் சாராத சில காரணங்களுக்காக ஒருவரோடொருவர் மோதிக் கொண்டவர் என்பதுதான் உண்மை.

இந்தியாவும் பாகிஸ்தானும் இரு நாடுகளாகப் பிரிந்த போதும் நடந்தது இதுதான். இந்துக்களும் இஸ்லாமியரும் மோதிக் கொண்டனர். வன்முறையும் அதன் விளைவாக இரத்த ஆறும் பெருக்கெடுத்தோடிய நாட்கள் அவை. அப் போதுகூட இந்து சமயமும் இஸ்லாமிய மார்க்கமும் மோதிக் கொள்ளவில்லை. அச்சமயங்களைச் சார்ந்து சிலரே மோதலுக்கும் வன்முறைக்கும் உயிர்க்கொலைக்கும் காரண மாக அமைந்தனர்.

அதன்பின் அமைதியாக வாழ்ந்துவந்த இந்தியரி டையே தற்காலத்தில் சமயங்களின் பெயரால் வன்முறை அவ்வப்போது இடம் பெறுவது நன்மனம் கொண்ட நாட்டு மக்களுக்குப் பெரிதும் வருத்தம் தருவதாகும்.

இந்தியப் பிரிவினையின்போது கூட அமைதிப் பூங்கா வாகத் திகழ்ந்த தமிழகத்திலும் இன்று சமயத்தின் பெயரால் ஆங்காங்கே வன்முறை இடம் பெற்று வருகிறது என்பதை அனைவரும் அறிவர். எல்லாச் சமயத் தலைவர்களும் ஒற்று மைக்காகக் குரல்கொடுத்தாலும் சமயத்தின் பெயரால் சில தன்னலவாதிகள் வன்முறையில் ஈடுபட்டுவருதல் கண்கூடு. இன்று சாதிகள் பெயராலும் வன்முறை இடம் பெறத் தொடங்கிவிட்டது. ஒரே சமயத்தைச் சார்ந்தவர்களிடையில் கூடச் சாதியின் பெயரால் வன்முறை இடம்பெறுவதும், ஒரே சாதியைச் சார்ந்தவர்களிடையில் கூடப் பல்வேறு கார ணங்களில் வன்முறைஇடம் பெறுவதும் இன்று நடைமுறை யாகிவிட்டன. தன்னலமே இத்தகைய குழப்பங்களுக்கும் வன்முறைக்கும் காரணமென்று தெளிவாகிறது.

இத்தகைய வன்முறைகளுக்கு முற்றுப் புள்ளிவைத் தாக வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு அதற்கெனத் 'திருவருட் பேரவை' என்னும் அமைப்பினை உருவாக்கி அயராமல் உழைத்து வந்தவர் அமரர் தவப்பெருந்திரு

குன்றக்குடி அடிகளார். இதே நோக்கத்துடன் வேறு சில அமைப்புகளும் தோன்றிப் பணியாற்றி வருகின்றன.

இத்தகைய அமைப்புகளைச் சாராமல் தமது எழுத்தாலும் பேச்சாலும் சமய நல்லிணக்கத்துக்காகப் பணிபுரிந்து வருவோருள் அறிஞர் மணவை முஸ்தபா குறிப்பிடத் தகுந்தவர். அவரது சமய நல்லிணக்கப் பணிகளைத் தொகுத்துக் கூறுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## இளமை முதல் சமய நல்லிணக்கப் பணி

கல்விப் பருவத்திலேயே மணவையாரின் சமய நல்லிணக்கப் பணி தொடங்கிவிட்டதெனலாம். பள்ளியிறுதி வகுப்பு மாணவராக இருந்தபோதே, சமய சமரச மேதையாகிய தமிழ்த்தென்றல் திரு.வி.க.வைப்பற்றி மணப்பாறை சன்மார்க்க சங்க சபையில் சொற்பொழிவாற்றிப் பலரின் பாராட்டையும் பெற்ற சிறப்பு அவர்க்கு உண்டு. பின் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவராக இருந்தபோது நபிகள் நாயகம் பிறந்த நாள் விழாவைப் பல்கலைக்கழக மன்றத்தின் சார்பில் அனைத்துச் சமயங்களையும் சார்ந்த மாணவர்களும் இணைந்து மாபெரும் விழாவாகக் கொண்டாட ஏற்பாடு செய்த பெருமை அவருக்கு உண்டு. நபிகள் நாயகம் முஸ்லிம்களுக்காக மட்டும் வந்த இறைத்தூதர் அல்லர்; அவர் மனித குலம் முழுமைக்கும் வழிகாட்ட வந்த இறுதி இறைத்தூதர் என்பதை உறுதியாக நம்பும் மணவையார், நாயகத்தின் பிறந்தநாள் விழாவைக் கொண்டாட எல்லாச் சமயத்தார்க்கும் உரிமை உண்டு என்பதைச் செயல்படுத்திக்காட்டிய நிகழ்ச்சி அது. அவ்விழாவில் உரையாற்றியவர்களுள் ஓரிருவரைத் தவிர பிற பேச்சாளர்களெல்லாம் மற்றச் சமயங்களைச் சார்ந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

## அபுல்கலாம் ஆசாதின் சொல்லுக்குச் செயல் வடிவம் தந்த செம்மல்

இஸ்லாமியக் காப்பியமாகிய சீறாப்புராணம் பற்றிப் பிற சமயம் சார்ந்த அறிஞர்கள் பேசவும் எழுதவும் அவ்வப் போது மணவையார் ஏற்பாடு செய்துள்ளார். 'ஒரு சம யத்தைச் சார்ந்தோர் மற்றச் சமயத்தவரின் இலக்கியங்களை விருப்போடு படித்து அதன் சிறப்புகளை உளம்திறந்து பாராட்டிப் போற்றும் மனப்பக்குவம் என்று உருவாகிறதோ அன்றுதான் உண்மையான ஒருமைப்பாட்டுணர்வு மக்களி டையே காலூன்ற முடியும்' என மறைந்த மாமேதையும் சுதந்திர இந்தியாவின் முதல் கல்வியமைச்சருமாகிய அபுல் கலாம் ஆசாத் தெரிவித்த கருத்தை, இன்று செயல்படுத்தி வருகிறார் மணவையார்.

மணவையாரின் இம்முயற்சி 1976ஆம் ஆண்டு தொடங்கியது எனலாம். சென்னைப் புதுக்கல்லூரியில் முஸ்தபா ஏற்பாடு செய்த 'சீறாப் புராணம் கருத்தரங்கம்' நடந்தபோது, அதில் இஸ்லாமிய அறிஞர்களாகிய எம். அப்துல் வஹ்ஹாப், எம். சையத் முஹம்மத் ஹசன், கவி கா.மு.ஷெரீப், ஜே.எம்.சாலி, எம்.எம்.உவைஸ், எம்.எஸ். பஷீர், சி. நயினார் முகம்மது ஆகியோருடன் மயிலை சீனி, வேங்கடசாமி, க.ப.அறவாணன், சிலம்பொலி சு.செல்லப் பன், சி, பாலசுப்பிரமணியன், கிருட்டிணா சஞ்சீவி, இரா. முத்துக்குமாரசாமி போன்ற பிற சமய அறிஞர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர். இஸ்லாமிய மக்களிடையே முட ங்கிக் கிடந்த சீறாப் புரணத்தின் பெருமையைத் தமிழ்கூறு நல்லுலசம் உணர்ந்து போற்ற இக்கருத்தரங்கம் பேருதவி யாக அமைந்தது. பின்னர் மணவையார் அவர்களே இவ்வு ரைகளைத் தொகுத்து 'சிந்தைக்கினிய சீறா' என்னும் நூலாகத் தமது மீரா பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டார்.

சீறாப் புராணத்தைப் பலரும் கற்று மகிழ இத்தொகுப்பு நூல் உற்ற கருவியாக அமைந்தது.

இக்கருத்தரங்கில் பேராசிரியர் சிலம்பொலி சு.செல்லப்பனார் 'உமறுதரும் சீறாவில் தமிழ்ப் பண்பாடுகள்' பற்றி வழங்கிய ஆய்வுரை மணவையாரின் மனம் கவர்ந்தது. ஆகவே அடுத்துச் சீறாப்புராணத் தொடர் சொற்பொழிவினைச் சிலம்பொலியார் வழங்கிட மணவையார் ஏற்பாடு செய்தார். இஸ்லாமியப் பொருள் என்பதால் தொடக்கத்தில் தயங்கிய சிலம்பொலியார், மணவையாரின் வற்புறுத்தலுக்கிணங்கி ஒப்புதலளித்தார்.

இத்தொடர்ச் சொற்பொழிவு நிகழ்வதற்கு மணவையார் தேர்ந்தெடுத்த இடமும் சிறப்புக்குரியதாகும். தமிழகத்தில் சமய சமரச ஞானியாகப் போற்றப்பெறும் வடலூர் இராமலிங்க வள்ளலார் தம் பிள்ளைப் பருவத்தில் பெரிய புராணச் சொற்பொழிவாற்றிய இல்லம் இன்று மறைமலையடிகள் நூலகமாக அமைந்துள்ளது. அந்நூலகத்தின் மணிமண்டபத்திலேயே சிலம்பொலியாரின் சீறாப்புராணம் தொடர் சொற்பொழிவு நிகழ மணவையார் ஏற்பாடு செய்தார்.

இருபத்தைந்து சொற்பொழிவுகளைக் கொண்ட தொடராகச் சிலம்பொலியார் ஆற்றிய உரைகளைத் தொகுத்து 1985-ஆம் ஆண்டில் 'நெஞ்சையள்ளும் சீறா' என்னும் நூலாகத் தமது மீரா பதிப்பகத்தின் சார்பில் மணவையார் வெளியிட்டார். இஸ்லாமிய மார்க்கத்தைச் சார்ந்திராத சிலம்பொலியார் சீறாப்புராணத்தை ஆழ்ந்து கற்று, கவி.கா.மு.ஷெரீப், 'முஸ்லிம் முரசு' இதழின் முன்னாள் ஆசிரியர் திரு. ஹஸன் ஆகியோரிடம் ஐயங்களைக் களைந்து தெளிவுபெற்று ஆற்றிய இச்சொற்பொழிவுகள் சீறாவின் சிறப்பினை அற்புதமாக உணர்த்துகின்றது. 1136 பக்கங்களைக் கொண்ட இந்நூல் சீறாவின் பெருமையை முழுமையாக உணர்த்தும் நூல் என்பதில் ஐயமில்லை.

## ஆக்கமாக அமைந்த புதுமைக் கருத்தரங்கு

இஸ்லாமிய இலக்கியமாகிய சீறாவின் சிறப்பினைப் பிற சமய அறிஞர்களின் துணைகொண்டு விளக்கிய மணவையார், அடுத்து வேறொரு முயற்சியில் ஈடுபட்டார். சிறுபான்மையினராகிய சமணரும் பௌத்தரும் கிறிஸ்தவரும் இஸ்லாமியரும் இயற்றிய இலக்கியங்களைத் தமிழகத்துக்கு அறிமுகம் செய்யும் வகையில் ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்தார். அவர் சமண இலக்கியம் பற்றி இஸ்லாமியராகிய கவிஞர். மு. மேத்தாவும், பௌத்த இலக்கியம் பற்றி கிறிஸ்தவராகிய பேரா.வள்ளுவன் கிளாரன்சும், கிறிஸ்துவ இலக்கியம் பற்றி இந்து சமயத்தவராகிய முனைவர் க.ப.அறவாணனும், இஸ்லாமிய இலக்கியம்பற்றி இந்து சமயத்தவராகிய முனைவர் சிலம்பொலி க. செல்லப்பனாரும் அக்கருத்தரங்கில் உரையாற்றினர்.

பின்னர் இவ்வுரைகள் நூல்வடிவம் பெற்றபோது கிறிஸ்தவராகிய முனைவர் தயானந்தன் பிரான்சசின் அணிந்துரையும் சமணராகிய ஸ்ரீபால் அவர்களின் வாழ்த்துரையும் அதில் இடம்பெற்றுச் சிறப்புச் சேர்த்தன.

இவ்வாறு கருத்தரங்கங்கள் மூலமும் நூல்கள் மூலமும் மணவையார் ஆற்றிவரும் சமய நல்லிணக்கப் பணி குறிப்பிடத் தக்கது என்பது மட்டுமல்ல, இன்றையத் தமிழகச் சூழ்நிலைக்கு இன்றியமையாததும் ஆகும்.

## உண்மை உணர்த்தும் உன்னதப் பணி

மணவையாரின் மற்றொரு பணியையும் இங்குக் குறித்துக் காட்டுதல் தேவையாகிறது. பிற சமயத்திதவரிடையே இஸ்லாத்தையும் இஸ்லாமியரையும்பற்றி ஏற்பட்டிருக்கும் தவறான கருத்துகளை அகற்ற அவர் ஆற்றிவரும் பணியே அது. 'இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்', 'பெரு

மானாரின் பிற சமயக் கண்ணோட்டம்' போன்ற நூல்கள் வழியாக அப்பணியை மணவையார் திறம்பட ஆற்றி யுள்ளார்.

நபிகள் நாயகம் வழியாக இறைவன் தங்களுக்கு வழங்கிய மார்க்கமே சிறந்த மார்க்கம் என ஏற்றொழுகும் இஸ்லாமியர் பிற சமயங்களைப் பழித்தொதுக்குவதில்லை என்பதைத் தக்க சான்றுகளுடன் மணவையார் விளக்கி யுள்ளார். 'உங்களுக்கு உங்கள் மார்க்கம், அவர்களுக்கு அவர்கள் சமயம்' என்னும் திருக்குர்ஆன் திருமறை வாசகத்தை விளக்கும் மணவையார், 'எந்தவொரு சமயத்தைச் சார்ந்தவர்களும் அவரவர் சமயங்களைப் பேணி ஒழுக வேண்டுமே தவிர, ஒரு சமயத்தைச் சார்ந்தவர் சமய வழியில் குறுக்கிடுவதை இஸ்லாம் அறவே வெறுக்கிறது. அவரவர் நம்பிக்கைக்கேற்ப அவரவர் சமய நெறிப்படி வாழ, சடங்கு சம்பிரதாயங்களைப் பேணி ஒழுகப் பணிக்கிறது எனத் தெளிவாக்குகிறார். ''(நம்பிக்கையாளர்களே:) அல்லாஹ் அல்லாத எவற்றை அவர்கள் (ஆண்டவன் என) அழைக்கி றார்களோ அவற்றை நீங்கள் பழிக்காதீர்கள்'' எனத் திருக்குர் ஆன் (6:108) கூறுவதை அவர் கட்டிக்காட்டுகின்றார். அவ்வாறே இஸ்லாத்தில் இணையுமாறு பிறரை வற்புறுத் தவோ கட்டாயப்படுத்தவோ இஸ்லாத்தில் அறவே இட மில்லை என்பதோடு, இத்தகைய செயலை இஸ்லாம் கடு மையாக எதிர்க்கிறது என்பதையும் திருமறையின் துணை கொண்டே அவர் நிறுவுகின்றார்.

பள்ளிவாசலில் கிறிஸ்தவப் பிரார்த்தனை நடைபெறு வதற்கு நபிகள் நாயகமே ஏற்பாடு செய்த ஒரு நிகழ்ச்சியை மணவையார் பெருமிதத்தோடு கூறுகிறார்.

மதீனாவில் நபிகள் நாயகத்தை நேரில் கண்டு பலவற் றைப்பற்றி விவாதிக்கப் பல்வேறு சமயத் தூதுக் குழக்கள்

வந்தன. அவற்றுள் நஜ்ரான் என்னுமிடத்திலிருந்து வந்திருந்த 70 கிறிஸ்தவத் துறவியர் அடங்கிய குழுவும் ஒன்றாகும். நாயகம் இருந்த பள்ளி வாசலில் அவருடன் நீண்ட நேரம் உரையாடிய கிறிஸ்துவத் துறவியர் வெளியே சென்று பிரார்த்தனை செய்து விட்டு திரும்பிவர விரும்பினர். இதையறிந்த நாயகம் 'இரண்டு கடவுள்கள் இல்லை, இறைவன் ஒருவனே, அவனை எங்கிருந்தும் வணங்கலாம். நீங்கள் விரும்பினால் இப்பள்ளி வாசல் வளாகத்தின் ஒரு பகுதியிலேயே உங்கள் கிறிஸ்துவ சமய சடங்குமுறைகளோடு பிரார்த்தனை புரிந்து இறைவணக்கம் புரியலாம்' என்று கூறினார். கிறிஸ்தவத் துறவியரும் பள்ளிவாசல் வளாகத்தின் ஒரு பகுதியில் குழுமி, தங்கள் கிறிஸ்தவ சமயச் சம்பிரதாயச் சடங்கு முறைகளோடு தங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றி மகிழ்ந்தனர்.

இந்நிகழ்ச்சியைச் சுட்டுவதன் மூலம் இஸ்லாத்தின் பிற சமயக் கண்ணோட்டம் எத்தகையது என்பதை மணவையார் எடுத்தோதுகின்றார்.

மக்காவிலிருந்து நபிகள் நாயகம் மதீனா வந்தபோது அங்குப் பல இன, சமய மக்களும் வாழ்ந்து வந்தனர். அவர்களிடையே நிலவிய ஒற்றுமையின்மையைப் போக்குதற்காக எல்லாச் சமயக் குரவர்களையும் இனத் தலைவர்களையும் நபிகள் நாயகம் ஒன்று கூட்டி அவர்களிடையே ஒற்றுமையை உருவாக்க உதவினார். மதீனாவில் நகர அரசு ஒன்றினை உருவாக்கி, அதற்குரிய சட்டத் தொகுப்பினையும் அவர் வகுத்துத் தந்தார், 'முஸ்லிம்களும் யூதர்களும் கிறிஸ்தவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களைப் போன்று ஒருங்கிணைந்து வாழ வேண்டுமென வலியுறுத்தும் அச்சட்டத் தொகுப்பு அனைவருக்கும் அவரவர் சமயத்தைச் சார்ந்தொழுக முழு உரிமை உண்டாதலால் ஒரு

வரின் சமய விவகாரங்களில் மற்றவர்கள் அறவே தலை யிடக் கூடாது; தாக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டுமே தவிர ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவக்கூடாது; போரா யினும் அமைதிக் காப்பாயினும் எல்லா முக்கிய செயல்பாடு களின் போதும் பல்வேறு குழுவினரும் ஒருவரை யொருவர் கலந்தாலோசித்த பின்னரே முடிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; குற்றம் புரிந்தவர்களுக்கு அவரவர் சமய நெறிப் படியே தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்பது போன்ற கோட்பாடுகளை எடுத்துரைப்பதை விளக்கும் மண வையார், நபிகள் நாயகத்தின் காலத்தில் அவரது தலை மையில் பல்வேறு சமயங்களையும், இனங்களையும் சார்ந்த வர்கள் ஒற்றுமையாக வாழ்ந்ததையும், மதீனா நகர அரசு எந்த ஒரு குறிப்பிட்ட சமயச் சார்பும் இல்லாமல் எல்லாச் சமயங்களையும் போற்றுவதாக அமைந்திருந்ததையும் விவரித்துக்கூறி, அவ்வரசு இன்றும் நமக்கு முன்மாதிரியாக விளங்குவதைக் குறிக்கின்றார்.

நபிகள் நாயகத்தின் மறைவுக்குப் பிறகு பதினைந்து ஆண்டுகளுக்குள் இஸ்லாமிய ஆட்சி ஆசியா, ஐரோப்பா, ஆஃப்ரிக்கா ஆகிய மூன்று கண்டங்களிலும் பரவி நிலை பெற்றது. பிற சமயங்களைப் சார்ந்த குடிமக்களும் இஸ்லா மிய ஆட்சியை வரவேற்றனர் என லாமென்ஸ், தெ கோயெஜி போன்ற வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின் றனர். உண்மையான ஒரு சமயச் சார்பின்மை அந்நாடுகளில் இடம் பெற்றிருந்ததை மணவையார் பெருமிதத்துடன் விளக்குவர்.

அவ்வாறே இந்திய முஸ்லிம்கள் தங்கள் நாட்டுக்கும் அரசுக்கும் உண்மையுள்ள குடிமக்களாக வாழ்ந்ததனை வர லாற்றுச் சான்றுகளுடன் அவர் விரித்துக் கூறுகிறார்.

### சமய சமரச முயற்சியில் மணவையார் பங்கும் பணியும்

சாதி சமய சம்பிரதாயங்களைக் கடந்த நிலையில் அனைவரையும் ஒருசேர அன்பு செய்த சித்தர்களைப் போல வே முஸ்லிம் சூஃபிகளும் சமரசவாதிகளாக விளங்கியதை மணவையார் கட்டிக்காட்டத் தவறவில்லை. தாயுமான வரும் குணங்குடி மஸ்தானும் வெவ்வேறு சமயச் சார்புடை யவர்களாயினும் அவர்களின் சிந்தனையும் கருத்துகளும் வேறுபாடு காணவியலாத வண்ணம் ஒன்றுபோலவே அமைந்துள்ளன என்பதை மணவையார் மனநிறைவுடன் விளக்குகிறார். அவர்கள் தங்கள் பாடல்களில் கையாண் டுள்ள சொல்லாட்சியும் கூட ஒரே மாதிரி அமைந்து உணர்வு ஒற்றுமைக்குக் கட்டியங் கூறுவது சிறப்பானதாகும்.

'பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரண ஆனந்தமே'

என்று தாயுமானவரும்,

'பார்க்குமிடம் எல்லாம் பரிபூரணமாக
ஏற்கையுடன் நின்ற இயல்யே நிராமயமே'

என்று குணங்குடியாரும் ஒரே கருத்தினை ஒத்த சொல்லாட் சியுடன் அமைத்துப் பாடுவதைத் தக்க சான்றாக மண வையார் காட்டி மகிழ்கிறார்.

உருவ வழிபாட்டை விடுத்து ஒளி வடிவாக இறை வனை வணங்கிய வடலூர் வள்ளலாரின் இறையுணர் வுக்கும்,

அல்லாஹ் மண் விண் இவ்விரண்டில்
ஒளியாய் இருக்கின்றான்'

எனத் திருக்குர்ஆன் திருமறை கூறுவதற்குமுள்ள ஒற்று மையை மணவையார் எடுத்துக்காட்டுகிறார்.

அவ்வாறே குணங்குடி மஸ்தான் போன்ற இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகள் தங்கள் சமய சமரச உணர்வுகளை வெளிப்படுத்த அரபுச் சொற்களை எந்த அளவுக்குப் பயன் படுத்தினார்களோ, அதே அளவுக்கு இந்து சமயத் தத்துவச் சொற்களான நந்தீசுவரன், விட்டுணு, உருத்திரன், சிவன், அம்பலம், சக்தி, தட்சிணாமூர்த்தி போன்ற சொற்களைத் தங்கள் ஞானப் பாடல்களில் கையாண்டுள்ள சமய நல்லிணக்க உணர்வினை மணவையார் விதந்து போற்றுகின்றார்.

அவ்வாறே இந்திய சூஃபி ஞானியாகிய காஜா நஸ்ருத்தீன் என்பவர் காய சுத்தி (தஸ்கிய நப்ஸ்), இதய சுத்தி (திஸ்பியா கல்பு), ஆத்ம சுத்தி (தஜ்லியா ரூஹ்) ஆகிய மூன்று கோட்பாடுகளும் சூஃபியிசத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் எனச் சுட்டுவதை மணவையார் குறித்துக் காட்டுகின்றார்.

குணங்குடி மஸ்தான், தக்கலை பீர் முகம்மது அப்பா, தென்காசி ரசூல் பீவி, இளையான்குடி கச்சிப்பிள்ளயம்மாள் போன்ற இஸ்லாமிய மெய்ஞ்ஞானிகள், பிற சமயங்களைச் சார்ந்த பலரைத் தங்கள் சீடர்களாகக் கொண்டிருந்த பெற்றியைக் கொண்டாடும் மணவையார்,

''தீதுமத பேதங்கள் அற்றுமே எங்குமிது
செல்வதும் எக்காலமோ''

என மதபேதமற்ற சமரச உணர்வு முழுமையாக மக்களிடம் முகிழ்த்தெழ வேண்டுமெனக் குணங்குடியார் மனமுருகிப் பாடுவதை நமக்கு நினைவூட்டுகிறார்.

### தவறான பிரச்சாரம் தகர்த்த மணவையார்

இந்திய வரலாற்றில் பல்வேறு சமயங்களைச் சார்ந்த மன்னர்கள் கொடுங்கோலர்களாக விளங்கினர் என்பதை வர லாறு வகுத்துக்காட்டுகின்றது. இக்கொடுங்கோன்மை அவ்

வம் மன்னர்களின் கொடுங்கோன்மையே அன்றி, அவர்கள் சார்ந்திருந்த சமயங்களின் கொடுங்கோன்மை அன்று என்பதை மணவையார் தெளிவுறத்துவார்.

> 'இஸ்லாத்தின் பெயரைக் கூறி மன்னர்கள் போர்களை நடத்தியுள்ளனர். அதே போல மற்ற மதங்களைச் சார்ந்த மன்னர்களும் தத்தம் மதங்களின் பெயரால் போர்களை நிகழ்த்தியுள்ளனர். இத்தகைய போர்களுக்கும் மதங்களுக்கும் சம்பந்தமில்லை. மன்னவர்கள் தங்களில் ஆதிக்கப் போக்கிற்கு மதங்களைப் பகடையாகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதே உண்மை.'

என 'டைம்ஸ் ஆஃப் இண்டியா' இதழில் பி.என்.பாண்டே என்பார் எழுதியதைத் தம் கருத்துக்கு அரணாகக் காட்டுகிறார் மணவையார்.

ஜிஹாது பற்றிய ஒரு தவறான கருத்து சமுதாயத்தில் நிலவுவதை மணவையார் எடுத்துக்காட்டி திருத்துகின்றார்.

> 'எங்காவது முஸ்லிம் மன்னர்கள் ஒரு நாட்டை ஆக்கிரமிக்கவோ அல்லது ஆளும் பகுதியை விஸ்தரிக்கவோ படையெடுப்பு நிகழ்த்தினால் அதை 'இஸ்லாமிய ஜிஹாது' எனக் குறிப்பிடுவது மிக மோசமான மோசடியாகும். முஸ்லிம் அல்லாதவர்கள் மத்தியில் இஸ்லாம் பற்றிய பல தவறான கருத்துகள் பரப்பப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று 'ஜிஹாது' என்பதாகும். முஸ்லிம் அல்லாதவர்களிடையே மட்டுமல்ல முஸ்லிம்களிடையிலும் இஸ்லாமிய நெறியின் அடிப்படை உண்மைகளை உணர்ந்து தெளியாநிலை இருந்து வருவதை மறுப்பதற்கில்லை. சுருங்கச் சொன்னால் இஸ்லாத்தைப்பற்றிய மிகத் தவறான

பிரச்சாரத்துக்கு 'ஜிஹாது' என்ற சொல் பயன்படுத்தப் பட்டு வருகிறது. எங்காவது முஸ்லிம்களிடையே தீவிரத் தன்மை தலைதூக்கினால் அதை 'ஜிஹாது' என்ற சொல்லால் குறிப்பிடுவது இன்று வழக்கமாகி விட்டது. தீவிர வாதத்துக்கும் சாந்தி சமாதான மார்க்க மாகிய இஸ்லாத்துக்கும் தொடர்பே இல்லை என்பது மிகத் தெளிவான உண்மை.'

ஒரு முஸ்லிம் மேற்கொள்ளும் ஜிஹதுவினுடைய நோக்கம் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதை 'வ ஜாஹிதூ ஃபீஸபீலிஹி' என்ற சொற்றொடர் மிகத் தெளி வாகக் கூறுகிறது. இதற்கு 'அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்யுங்கள்' என்பது பொருளாகும்..

திருக்குர்ஆன் அடிப்படையில் ஜிஹாது இருவகைப் பட்டதாக அமைந்துள்ளது. ஒன்று 'ஜிஹாதுல் அஸ்கர்' மற்றொன்று 'ஜிஹாதுல் அக்பர்'.

ஒரு முஸ்லிம் தனக்கோ அல்லது தன்னைச் சார்ந்தவர் களுக்கோ ஆபத்து வருவதைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து என்று வரும் போது அதை உடனடியாக எதிர்த்துப் போராடுவது அவன் செய்யும் 'ஜிஹாதுல் அஸ்கர்.' தன்னைப் பாதுகாத்துக் கொள்வது வன்முறையும் அல்ல, தீவிரவாதமும் அல்ல; சுருக்கமாக இதை வெளிப்பகையை அல்லது பகைவர்களை எதிர்த்துப் போராடுதல் எனக் கூறலாம்.

மற்றொன்று 'ஜிஹாதுல் அக்பர்' ஆகும். இதற்கு 'மாபெரும் போராட்டம்' என்பது பொருளாகும்.

'ஒவ்வொரு மனிதனிடத்திலும் கண், காது, மூக்கு, வாய், மெய்(உடம்பு) என்னும் ஐம்பொறிகள் உண்டு. இவற் றோடு தொடர்புடையவை ஐம்புலன்கள் ஆகும். இதை ஹிந்துமதத் தத்துவத்தில் 'ஐந்திரியங்கள்' எனக் கூறுவர்.

இத்தகைய ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் ஆற்றலைப் பெறுவதற்குப் பெருமுயற்சி செய்து போராடி ஆன்றவிந்தடங்கிய சான்றோர் ஆவதற்கு முயற்சி செய்வதே மாபெரும் 'ஜிஹாது' ஆகும் என மிக மிகத் தெளிவாக மணவையார் எடுத்துக்கூறி, இஸ்லாமியரும் இஸ்லாமியர் அல்லாதாரும் ஜிஹாது பற்றிக் கொண்டிருக்கும் தவறான கருத்தினைத் தகர்த்தெறிகின்றார்.

தற்காப்புக்காக மட்டுமே போர் தொடுக்க வேண்டுமெனத் திருக்குர்ஆன் (2:180) வரையறுத்துக் கூறுவதைக் கீழ்க்கண்ட மேற்கோள் மூலமாக மணவையார் எடுத்துரைக்கின்றார்:

> 'உன்னை எதிர்த்துப் போரிடுவோரை எதிர்த்து அல்லாஹ்வுக்காகப் போரிடு; ஆனால் அவர்களை முதலில் நீ தாக்கிவிடாதே. ஆக்கிரமிப்பாளர்களை அல்லாஹ் விரும்புவதில்லை'.

ஒரு தனிமனிதனோ அல்லது ஒரு குழுவினரோ அல்லாஹ்வுக்காக அல்லாமல் தன் சொந்தப் பயன்பாட்டடிற்காகப் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டால் அது 'ஜிஹாது' ஆகவே முடியாது என்பது தெளிவு என மணவையார் உறுதியாகக் கூறுகின்றார்.

எனவே 'ஜிஹாது' என்னும் சொல்லுக்கு 'முஸ்லிமல்லாதவர்கள்மீது நடத்தும் புனிதப் போர்' எனத் தவறான விளக்கம் தந்து இஸ்லாமிய மார்க்கத்தின்மீது மாசு கற்பிக்க முயல்வது முற்றிலும் தவறான போக்காகும்.

'ஜிஹாது' போன்றே இஸ்லாமியரல்லாதாரால் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு வரும் மற்றொரு சொல் 'ஜிஸ்யா' என்னும் இஸ்லாமியச் சட்டச் சொல்லாகும். இஸ்லாமியரிடம் எவ்வித வரியும் வாங்காமல், பிற சமயங்

களைச் சார்ந்தவர்களிடம் 'முஸ்லிம் அல்லாதவர்' என்னும் ஒரே காரணத்துக்காக 'ஜிஸ்யா' வரி வசூலிக்கப்பட்டதாக நாம் வரலாற்று நூல்களில் படிக்கின்றோம். இக்கருத்து பாட நூல்களிலும் இடம் பெற்றிருப்பதை நாம் அறிவோம்.

இதுவும் தவறான கருத்து என மணவையார் விளக்கு கின்றார்.

'ஜிஸ்யா' என்பது முஸ்லிமல்லாதவர்களிடமிருந்து கட்டாயமாக வசூலிக்கும் தண்டத்தீர்வையோ அல்லது அப ராதத் தொகையோ அன்று, பின் என் இந்தத் தனி வரி?

இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம் அல்லாதவர்களால் கொடுக்கப்பட்டு வந்த சிறு வரியே இது. இஸ்லாமிய ஆட்சியில் முஸ்லிம் அல்லாத பிற சமயக் குடிமக்கள் போர்ப்படைகளில் சேருவதினின்றும் விலக்குப் பெறும் பொருட்டும், சமுதாய வாழ்வில் தம் உயிர் உடைமை களுக்கு முழுப் பாதுகாப்பும் பெறும் பொருட்டும் அரசுக்கு இச் சிறு வரியைச் செலுத்தி வந்தனர்.... சுருங்கச் சொன் னால் முஸ்லிம் அல்லாதவர்களின் ஒட்டுமொத்தச் சமுதாய நலனுக்கும் பாதுகாப்புக்குமென வசூலிக்கப்பட்ட தொகையே, 'ஜிஸ்யா'.

ஒவ்வொரு முஸ்லிமுக்கும் உரிய ஐம்பெரும் கடமை களுள் 'ஜக்காத்' என்னும் ஏழை வரியைச் செலுத்த வேண்டு வதும் ஒன்றாகும். பிற சமயத்தவர்களாகிய குடிமக்களிடமி ருந்து 'ஜக்காத்' வசூலிக்க முடியாதாகையால், அதற்குப் பக ரமாக ஜக்காத் அளவுக்கு இரண்டரை விழுக்காடு இல்லாவி டினும், ஒரு சிறு தொகையைத் தான வரியாக முஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து அரசு வசூலித்தது. ஜக்காத் தொகையை விட ஜிஸ்யா தொகை மிகச் சிறியதாகும். ஜக்காத், ஜிஸ்யா ஆகிய இருதொகைக்கும் சமுதாய நலப்

பணிகளுக்காக மட்டுமே செலவிடப்பட்டன என மண வையார் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

அதுமட்டுமன்று; பெண்கள், வயது முதிர்ந்தோர், சிறு வர்கள், துறவிகள், பார்ப்பனர்கள், பாதிரிகள், தம் சமயப் பணியில் ஈடுபட்டிருப்போர், பார்வையிழந்தோர், உடல் ஊனமுற்றோர், தீராப் பிணிகளால் பீடிக்கப்பட்டோர் ஆகி யோரிடமிருந்து 'ஜிஸ்யா' வரி வசூலிக்கக் கூடாது என்பது விதியாகும் என்பதையும் அவர் விளக்குகின்றார்.

## 'யார்' எனப் பாராமல் 'என்ன' என்பதில் கருத்தூன்றும் மணவையார் மாண்பு

பொதுவாழ்வில் எழுத்து மூலமாகவும் பேச்சுமூலமா கவும் பதிப்புப்பணி மூலமாகவும் சமய நல்லிணக்கப் பணியில் ஈடுபட்டுள்ள மணவையாரின் தனி வாழ்விலும் சமயக் காழ்ப்பினைக் காண இயலாது. இஸ்லாமிய நூல்களைப் போலவே பிற சமய இலக்கியங்களையும் அவர் கற்றுத் தேர்ந்தவர். எச்சமயம் சார்ந்த இலக்கியம் என்பதைப் பொருட்படுத்தாமல் சிறந்த இலக்கியங்களைத் தேடிப் பிடித்துக் கற்பது அவரது பண்பாடு. அவ்வாறே சிறந்த இலக் கியச் சொற்பொழிகளுக்குத் தவறாமல் செல்வதும் அவரது இயல்பு, அவரது சிறந்த இலக்கிய அறிவே பல்லாயிரக் கணக்கான கலைச்சொற்களைக் காண அவருக்கு உதவி வரு கிறது என்பதில் ஐயமில்லை.

## தடுத்தாட்கொண்ட மூவர்

தமது வாழ்க்கையில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்திய வர்களென அவர் மூவரைக் கருதிப் போற்றுகின்றார். அரசி யலில் நுழையாமல் மணவையாரைத் தடுத்தாட்கொண்டு தமிழ் வளர்ச்சிப் பணியில் ஈடுபடுத்திய பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் அம்மூவருள் தலையா

யவர், தம் வாழ்நாள் முழுமையும் அரிதின் தேர்ந்து கற்றுத் தெளிந்த கருத்துகளை மணவையாருடன் பகிர்ந்துகொண்டு அவரது அறிவுப் பசிக்கு விருந்து படைத்து அறிவியல் கண்ணோட்டத்துடன் தமிழ்ப்பணியாற்ற மணவையாருக்கு வழிகாட்டிய பெருமை தெ.பொ.மீ. அவர்களையே சாரும்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தை நிறுவி உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற வழிவகுத்தவரும் உலக அரங்கில் தமிழுக்குச் சிறப்பிடம் பெற்றுத் தந்தவருமாகிய தவத்திரு. சேவியர் தனிநாயக அடிகளார் மணவையாரின் உணர்வுகளும் சிந்தனைகளும் குறுகிய வட்டத்துக்குள் அடங்கிவிடாமல் உலகளாகிய முறையில் சிறகடித்துப் பறக்கத் தூண்டி வழிகாட்டினார். அண்ணாமலைப் பல்க லைக்கழக மாணவப் பருவத்தில் அடிகளாருடன் பழகும் வாய்ப்பினைப் பெற்ற மணவையார் 'அடிகளாருடன் கலந்து றவாடும் ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு புதுச் சிந்த னையை - புதுக் கருத்தை - எதிர்காலத் தமிழ் வளர்ச்சிக்கான வழிமுறைகளை ஆக்கபூர்வமாகவும் நடைமுறைச் சிந்தனைக்கேற்பவும் அவர் வெளிப்படுத்தி வந்தார். அவ ரோடு உரையாடுவதே புத்துணர்வூட்டும் புது அதுபவமாக இருந்தது' என நினைவு கூர்கின்றார்., 'காலப் போக்கில் வழக்குக் குறைவால் பொருள்மாற்றம் கண்டுவிட்ட சங்கச் சொற்களை மீண்டும் புதுப்பித்துப் பயன்படுத்த வேண்டும். இதனால் இறப்பை நாடிச் சென்றுவிட்ட பல தமிழ்ச் சொற் களுக்கு உயிர் கொடுக்க முடியும். இன்றைய தேவைக் கேற்பச் சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ளவும் முடியும். பழைய சொற்களில் வேரின் உதவி கொண்டு எவ்வளவு புதிய சொற்கள் வேண்டுமானாலும் எளிதாக உருவாக்கிக் கொள்ள முடியும்'.என்று தனிநாயகம் அடிகளார் தெரிவித்த கருத்து மணவையாரின் மனதில் ஆழப் பதிந்தது. இதுவே

இன்று மணவையாரின் கலைச் சொல்லாக்கப் பணியில் உறு துணையாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணருடன் மணவை யார்க்கு ஏற்பட்ட தொடர்பு, தனிநாயக அடிகளார் சொல்லாக்கம் குறித்துத் தெரிவித்த கருத்தினை அரண்செய் வதாக அமைந்தது. மொழித் தூய்மையைவிட மொழியில் கருத்துணர்த்தும் திறனுக்கே முதன்மை தரவேண்டும் என்று கருதிய பேராசிரியர். தெ.பொ.மீ.யின் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டவர் பாவாணர். மொழித் தூய்மைக்கு முதலிடம் தருவதன் மூலம் மொழியைச் செம்மைப்படுத்த இயலும், சிதைவின்றிக் காக்க முடியும் என்பது பாவாணரின் கருத்து, இவ்விருபெரியோர்களின் கருத்துகளை அறிந்து திறனாய்ந்து தெளிந்த மணவையார் தமக்கென ஒரு கொள்கையை உரு வாக்கிக் கொண்டார். 'மொழித் தூய்மையோடு கருத்து ணர்த்தும் ஆற்றல்மிகு கருவியாகத் தமிழைக் கையாள வேண்டும். அதுவே காலத்துக்கேற்ற போக்காகவும் மொழி நலம் காக்கும் முறையாகவும் அமைய முடியும்' என்பதே மணவையார் கண்ட முடிவு ஆகும்.

தெ.பொ.மீ, தனிநாயக அடிகள், பாவாணர் ஆகிய மூவருமே பிற சமயங்களைப் சார்ந்தவர்கள் என்பது நினை வில் கொள்ளத்தக்கது. மணவையாரின் சமய நல்லிணக்க உணர்வுக்கு இது தக்க சான்றாகும்.

## சமய நல்லிணக்கத்துக்கோர் முன் மாதிரி

இந்தியாவில் பல சமயங்கள் உண்டெனினும் ஒரு சம யத்தைக் சார்ந்தவர் பிற சமயங்களின் கோட்பாடுகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும் அறிந்திருப்பதில்லை. இத் தகைய அறியாமை சமயச் சழக்குகளுக்குக் காரணமாகி விடுவதுண்டு.

இரு சமயங்களைச் சார்ந்தவர்களிடையே தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் காரணமாக எழும் சிக்கலைச் சிலர் சமயச் சிக்கலாக மாற்றி, வன்முறைக்கு வழிவகுத்து விடுவதுமுண்டு.

எண்ணிக்கை மிகுதியாக இருந்தலே சமயத்துக்கு உறு துணை எனச் சிலர் தவறாக எண்ணுவதுண்டு. இத்தகை யோர் எவ்வாறேனும் தங்கள் சமயத்தைப் பின்பற்று வோரின் எண்ணிக்கையைப் பெருக்க முயலலாம். இத னாலும் சமயச் சிக்கல்கள் நிகழ்வதுண்டு.

தாமாக மனமுவந்து தம் சமயத்தை விட்டுப் பிறி தொரு சமயத்தைத் தழுவுவோரும் நம்மிடையே உள்ளனர். இது ஒரு தனி மனிதரின் முடிவு என்பதில் ஐயமில்லை. ஆனால் எண்ணிக்கையைப் பெரிதாகக் கருதுவோர் இதனை வரவேற்பதும் அல்லது கண்டனம் செய்வதும் சமயச் சழக்கு களுக்குக் காரணமாகிவிடலாம்.

தமது சமயமே உயர்ந்தது, உன்னதமானது எனக் கருதி அதனைக் கடைப்பிடிக்க ஒருவருக்குள்ள உரிமையை யாரும் மறுக்கவியலாது. ஆனால் பிற சமயங்களை இழித் தும் பழித்தும் பேச யாருக்கும் உரிமை இல்லை என்பதை யும் யாரும் மறுக்கவியாலது. இதனை மறந்து ஒழுகுவதும் சமயத்தின் பெயரால் குழப்பங்கள் விளையக் காரணமாகி விடலாம்.

இவ்வாறு பல்வேறு காரணங்களால் நம் நாட்டில் சமயக் காழ்ப்புகள் தோன்றி வன்முறைக்கு வழிவகுத்துவிடு கின்றன. இத்தகைய வன்முறையும் இன்று மிகுதியாகி விடு வதால் நாட்டு நலனுக்கு ஊறு விளைவுக்கப்படுகின்றது. என்பதில் ஐயமில்லை.

ஆகவே நாட்டு நலனைப் பெரிதாக மதித்துப் போற்றுவோர் மணவையாரைப் போல பல்வேறு வகை

யிலும் சமய நல்லிணக்கப் பணிகளில் ஈடுபட்டு உழைத்தல் இன்று இன்றியமையாததாகிவிட்டது.

நாம் சார்ந்துள்ள சமயங்களின் நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் பிறருக்கு எடுத்து விளக்குதலும், பிற சமயங்களின் நம்பிக்கை களையும் கோட்பாடுகளையும் சம்பிரதாயங்களையும் நாம் அறிந்து தெளிவு பெறுதலும் அறிஞர்கள் இன்று ஆற்ற வேண்டிய கடமையாகும்.

அவ்வாறே தாம் சார்ந்த அல்லது பிறர் சார்ந்த சமயங்க ளைப்பற்றி நாட்டில் பரவியுள்ள தவறான கருத்துகளைத் தக்க ஆதாரங்களுடன் மாற்றிச் சரியான கருத்துகளைப் பரப் புவதும் ஆன்றோர்கள் ஆற்ற வேண்டிய கடமையாகும்.

இத்தகைய அறிவார்ந்த சமய நல்லிணக்கப் பணி களில் தொடர்ந்து முனைப்புடன் ஈடுபட்டு உழைத்துவரும் மணவையார் நாம் அனைவரும் பின்பற்றவேண்டிய ஒப்பற்ற சான்றோர் என்பதில் ஐயமில்லை.

★

# கலைச் சொல்லாக்கத்தில் மணவையாரின் பங்கும் பணியும்

டாக்டர். இராதா செல்லப்பன்
பேராசிரியர், தமிழியல் துறை, பாரதிதாசன் பல்கலைக் கழகம்

## *தமிழால் முடியும் - சவால்*

*அறிவியலைத் தமிழிலே தர முடியுமா? என்ற கேள்வியை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு வெற்றிவாகை சூடிய பெருந்தகையர் மணவை முஸ்தபா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேரா. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் தமிழ்த்துறைப் பேராசிரியராக இருந்த பொழுது, 'பயிற்சி மொழி ஆங்கிலமா? தமிழா?' என்ற கருத்தரங்கினை நடத்தினார். இக் கருத்தரங்கில் கலந்து கொண்டார் மணவையார். அவர் கல்லூரி ஆசிரியர் நியமன உத்தரவைப் பெற்றிருந்த காலகட்டம் அது. கருத்தரங்கில் பேசிய பலரும் ''தமிழில் அறிவியல் கலைச் சொற்களின் பஞ்சம் கடுமையாக உள்ள நிலையில் அறிவியல் பாடங் களைப் புகட்டுவது எளிதான காரியமல்ல; சொல்லப் போனால் இயலாத காரியமும் ஆகும்'', என்று பேசினர். தமிழ் மொழியின் ஆற்றலைக் குறைத்து மதிப்பிடும் இக் கருத்துகளைக் கேட்ட மணவையாரின் தமிழுள்ளம் கொதித் தது. அப்போது அவர் தெரிவித்த கருத்துகள் வருமாறு: ''தமிழில் எந்தத் துறைச் செய்தியையும் சொற்செட்டோடும்*

பொருட் செறிவோடும் கூற முடியும். எத்தகைய அறிவியல் நுட்பக் கருத்துகளையும் தெளிவாகவும் திடமாகவும் சொல்ல முடியும். ஏனெனில், தமிழ் கடந்த கால மொழி மட்டுமல்ல; நிகழ்கால மொழியுமாகும், ஆற்றல் மிக்க எதிர் கால மொழியுமாகும். பல நூற்றாண்டுகளாக அவ்வப்போது ஏற்பட்ட சமுதாய மாற்றங்களுக்கேற்ப உருவான காலத் தேவைகளையெல்லாம் நிறைவு செய்து காலத்தை வென்று வாழும் தமிழ், இன்றைய அறிவியல் தேவையையும் நிறைவு செய்து ஆற்றலோடு இயங்கவல்ல மொழியாக உரு மாறும். நாமெல்லாம் அதற்கு முனைப்போடு உழைக்க வேண்டும். தமிழ் கடந்த காலத்தில் இலக்கிய மொழியாக, இடைக்காலத்தில் சமய, தத்துவ மொழியாக விளங்கியது போன்று எதிர்காலத்தில் ஆற்றல்மிக்க அறிவியல் மொழி யாக, தொழில் நுட்ப மொழியாக, மருத்துவத் தமிழாக இன்னும் எத்தனை புதுத் துறைகள் உருவாகுமோ அத்தனை துறைகளைச் சார்ந்த மொழியாகத் தமிழை வளர்க்க, வளப் படுத்த இன்று முதல் என் வாழ்வை ஒப்படைத்துக் கொள்ள உங்கள் அனைவர் முன்னிலையிலும் உறுதி எடுத்துக் கொள்கிறேன். இன்று முதல் தமிழில் எதையும் கூற முடியும் என்பதை வெறும் சொல்லால் அல்ல; செயலால் நிரூபிப் பதே என் வாழ்வின் ஒரே இலட்சியம்; குறிக்கோள். இப் பணிக்கு, இப்போது எனக்குக் கிடைத்துள்ள கல்லூரி ஆசிரியர் பணியை இப்போதே விட்டு விடுகிறேன். அறி வியல் தமிழ் வளர்ச்சிப் பணியையே இனி என் வாழ்வுப் பணியாக இன்று முதல் ஏற்கிறேன்'' என்று தமது கல்லூரி ஆசிரியர் வேலையைப் புறக்கணித்துவிட்டு, அறிவியல் தமிழ் வளர்ச்சியிலே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் மணவையார்.

முஸ்தபா அவர்கள் வெறும் வாய்ச்சொல் வீரரல்ல, செயல்வீரர் என்பதை அவரது 'யுனெஸ்கோ கூரியர்'

பணியும், அவர் வெளியிட்டுள்ள கலை சொற்களஞ்சியங் களும் நமக்கு எடுத்துரைக்கின்றன.

## தமிழுணர்வு

தமிழ்த் தொண்டு, தமிழ்ச் சமுதாயத் தொண்டு என்ற சிந்தனை மணவையாரின் பரம்பரையிலேயே ஊறிப்போன பண்பாடு என்பது அவரது வரலாற்றினைப் புரட்டுவோர்க்கு எளிதில் புலப்படும். 'காலம் தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு' என்ற நூலில் இடம் பெற்றுள்ள செய்தி வரு மாறு: மணவையாரின் தந்தையார் தம் இறுதிக் காலத்தில் அவரையழைத்து ஒரு வாக்குறுதியைப் பெற்றுக் கொண் டார். "நீ பெற்ற கல்வித் திறமையால் பெறும் பயன்களை நீ மட்டும் அனுபவிப்பதை நான் விரும்பவில்லை. நீ எதிர்கா லத்தில் உனக்காகவும் மற்றவர்களுக்காகவும் என வாழ்வ தையே நான் பெரிதும் விரும்புகிறேன். நீ சம்பாதிக்கும் வரு மானத்தில் பாதி உனக்கு; மீதமுள்ள பாதி மற்றவர்கட்கு; உனக்குள்ள சக்தியில் பாதி உனக்கு; மீதி மற்றவர்கட்கு. இப்படி உனக்குப் பாதி, சமுதாயத்துக்குப் பாதி என நீ ஒருத் தனாவது நம் குடும்பத்தில் வாழ வேண்டும் என்பதுதான் என் ஒரே ஆசை. தணியாத தாகம். என் அறிவுரைப்படி இனி நீ வாழ்ந்தால் உன் சந்ததியும் அப்படியே வாழும். ஒரு நல்ல சந்ததியினை உருவாக்கிய பெருமையும் என்னைச் சாரும்" எனக் கண்ணீர் மல்க தன் மகனைச் சான்றோனாக்கிய பெரு மைக்குரிய அத் தந்தை கேட்டுக் கொண்டது வீண் போக வில்லை. மணவையாருக்கு இயற்கையாகவே இருந்த தமிழ்ச் சமுதாயத் தொண்டு மனப்பான்மைக்கு இந்நிகழ்ச்சி மேலும் ஒரு தூண்டுகோலாக அமைந்தது. தன் தந்தையார் தன்னிடம் உறுதிமொழி பெற்றது போன்று, வேறு ஒரு சூழ்நிலையில் தன் மகனிடம் உறுதிமொழி வாங்கினார் மணவையார். தம் செல்ல மகன் டாக்டர் செம்மல் சையத்

மீராசா மருத்துவக் கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் தரு வாயில், அவரிடம் ''மருத்துவக் கருத்துகளைத் தமிழிலே தர வேண்டும்; மருத்துவச் செய்திகளை இலக்கிய நயத்தோடு கற்பனைத் திறனோடும் புனைகதை வடிவில் கூற முற்பட வேண்டும்'' என்பதே அது. அதன் பலன் அவருக்குக் கைமேல் கிடைத்தது. அவர் வெளியிட்டுள்ள மருத்துவக் கலைச் சொல் களஞ்சியத்தில் டாக்டர் செம்மல் சையத் மீராசாவின் பங்களிப்பு குறித்து முன்னுரை விளக்கம் தருகிறது.

## 'கூரியர்' ஆசிரியர்

கல்லூரி ஆசிரியர் பதவியைப் புறக்கணித்த மண வையார் தென்மொழிகள் புத்தக நிறுவனத்தில் பதிப்பாசி ரியர் பணியிலமர்ந்தார். அதனுடன் 1967இல் யுனெஸ்கோ கூரியரின் தமிழ் பதிப்புப் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். 32 ஆண்டுகளுக்கு மேலாக அதன் பொறுப்பா சிரியராக தம் கடமையைச் செவ்வனே செய்து கொண்டிருக் கிறார் என்பதைத் தமிழுலகம் நன்றியோடு நினைக்கக் கட மைப்பட்டுள்ளது. தமிழில் கூரியர் வெளியீட்டிற்கு ஏற் பட்ட தடைகளை மிகச் சாதுரியமாகத் தவிர்த்து, அதனைத் தொடர்ந்து வெளிவரச் செய்த பெருமை மணவையாரையே சாரும். கூரியர் தமிழ்ப் பதிப்பின் ஆசிரியராக இருந்து அறி வியல், தொழில் நுட்ப, மருத்துவக் கருத்துகளைத் தமிழிலே சொல்ல முடியும் என்று நிரூபித்ததன் மூலம் அறிவியல் தமிழ் வரலாற்றிலே தம் முத்திரையை அழுத்தமாகப் பதிய வைத்துள்ளார் 'அறிவியல் தமிழ்ச் சிற்பி' மணவையார்.

உலகில் தமிழ் உட்பட 30 மொழிகளில் வெளிவரும் யுனெஸ்கே கூரியரின் பதிப்புகளில் தமிழ் மொழிப் பதிப்பு நான்காவது இடத்தைப் பெறுகிறது என்பது மணவையாரின்

பேருழைப்பிற்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டு. ஏனைய மூன்று மொழிகள் யுனெஸ்கோ தலைமையமான பாரிஸ் நகரத்திலிருந்தே வெளிவரும் ஆங்கில, ஸ்பானிய மற்றும் ஃபிரெஞ்சு மொழி இதழ்கள் ஆகும்.

கூரியர் மாத இதழில் பல்வேறு நாட்டினரின் அறிவியல் கண்டுபிடிப்புகள் இடம்பெறுகின்றன. அவற்றைக் கால தாமதமின்றி உடனுக்குடன் வெளியிடுவதென்பது ஓர் இமாலயச் சாதனை. அறிவியல் நூல் ஒன்றினைத் தமிழியே எழுதுவதென்றால் அதற்கு நிரம்பக் கால அவகாசம் கிடைக்கும். ஆனால் பத்திகைகளுக்கு என்றால், அந்த அளவு கால அவகாசம் கிடைப்பதில்லை. குறிப்பிட்ட காலத்தில் பத்திரிகை வெளி வரவேண்டும். எனவே புதிய கண்டுபிடிப்புகளை அறிவியல் சிந்தனைகளைக் குறிப்பிட்ட காலத்தில் உடனுக்குடன் மொழி பெயர்த்து வெளியிட்டுள்ள பெருமைக்குரியவர் முஸ்தபா. இம்முயற்சியில் அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம் முதலான துறைகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான கலைச் சொற்கள் அவர்தம் உழைப்பின் பயனாகத் தமிழ்க் கலைச் சொற்கோவையில் இடம் பெற்றன.

### கலைச் சொல் தொகுதிகள், அகராதிகள், களஞ்சியங்கள்

தமிழ்க் கலைச் சொல் களஞ்சியங்களின் வரலாற்றினைப் புரட்டிப் பார்த்தால் பெரும்பாலானவை வெறும் கலைச் சொற் பட்டியல்களாகவே இருப்பதைக் காணலாம். இக்கலைச் சொல் தொகுதிகளில் ஆங்கிலம் அதற்குரிய தமிழ்ச் சொல் என்ற வகையில் சொற்கள் அமையும் வரைவிலக்கணத்துடன் கூடிய கலைச் சொற்களை, அகராதிகளாக வெளியிடும் முயற்சிகள் அண்மைக் காலத்தில்தான் தோன்றி

யுள்ளன. ஓரிரு அகராதிகள், ஆங்கிலம் - தமிழ் கலைச் சொற்கள் விளக்கத்துடன் வெளிவந்துள்ளன. களஞ்சியங்கள் என்று பார்த்தால். திரு. பெரியசாமித்தூரன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற கலைக் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட அறிவியல் கலைக் களஞ்சியம், வாழ்வியல் கலைக் களஞ்சியம் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும். எனவே களஞ்சியங்கள் என்ற அளவிலும், தமிழிலே விரல்விட்டு எண்ணக் கூடிய நிலையில்தான் பதிப்புக்கள் நடைபெற்றுள்ளன. இச்சூழலில் காலத்தின் இன்றியமையாத தேவையைக் கருத்தில் கொண்டு, ப்ல கலைச் சொல் களஞ்சியங்களைக் கடந்த ஏழு ஆண்டுகளுக்குள் ஐந்து கலைச் சொல் களஞ்சியங்களை நமக்கு மணவையார் தந்திருக்கிறார். 'அறிவியல் கலைக் களஞ்சியம்' என்ற பெயரில் இரு தொகுதிகள் மணவையாரால் பதிப்புப் பெற்றுள்ளன. முதல் தொகுதி 1990லும் இரண்டாம் தொகுதி 1993லும் வெளிவந்தன. இத்தொகுதிகளில் மொத்தத்தில் 52 அறிவியல் பிரிவுகளுக்கான கலைச் சொற்கள் வரைவிலக்கணத்துடன் தரப்பட்டுள்ளன. இவ்விரண்டு தொகுதிகளிலுமாக ஏறத்தாழ 10,000 கலைச் சொற்கள் விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளன. இக்கலைச் சொற் களஞ்சியங்களின் முன்னுரையில் இக்கருவி நூல்களின் தனித் தன்மையை விளக்குகிறார் ஆசிரியர். ''சாதாரண கலைச் சொல் அகராதி'களினின்றும் இஃது சற்று வேறுபட்டது. ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்க் கலைச் சொற்களைக் கொடுப்பதைவிட அச்சொல்லின் செயற்பாட்டு வினை சற்று விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சொற்பொருள் பெற இயல்கின்றது. இதனால், இதனினும் சுருங்கிய வடிவிலான சொற் செட்டும் பொருட் செறிவுமுடைய நயமிக்க கலைச் சொற்களை ஆர்வமுடையவர்கள் நாளை உருவாக்க வழியேற்படலாம். ஒவ்வொரு கலைச் சொல்லின் வாயிலாக

அறிவியல் தகவல்களைத் துணுக்குச் செய்திகளாக வாசகர் களுக்கு வழங்க வேண்டுமென்பது எனது நோக்கமாகும்''

மூன்றாவதாக ஒரு தொகுதியினை, மணவையார் 1995இல் ''மருத்துவ, அறிவியல், தொழில் நுட்பக் கலைச் சொற் களஞ்சிய அகராதி' என்ற பெயரில் வெளியிட்டார். இந்நூலில் 68 அறிவியல் தொழில் நுட்ப மருத்துவப் பிரிவு களுக்கான கலைச் சொற்களும் விளக்கங்களும் இடம் பெற்றன. முதல் இரண்டு தொகுதிகளுக்கும் இல்லாத சிறப்பு என்னவென்றால் அவர் இதனைப் படங்களுடன் வெளியிட்டதுதான். அறிவியல் செய்திகளைப் படத்துடன் தரும்போதே, வாசகர்கள் அச்செய்திகளை மிகத் தெளிவா கவும் விரைந்தும் படித்துணர முடியும் என்ற நோக்கத்தின் வெளிப்பாடே இப்பதிப்பு. இதில் ஏறத்தாழ 10,000 ஆங் கிலக் கலைச் சொற்கள், தமிழ்க் கலைச் சொற்களும் விளக் கங்களும் படங்களுடன் இடம்பெறுகின்றன.

### மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்

ஆங்கில மருத்துவத்தைத் தமிழில் கூறும் முயற்சி 1852இல் டாக்டர் ஃபிஷ் கிரீன் என்னும் அமெரிக்கப் பேராசி ரியரால் துவங்கப் பெற்றது. அவர் காலத்தில் பல மருத்துவ நூல்கள் மூல நூல்களாகவும் மொழிபெயர்ப்பு நூல்களா கவும் வெளிவந்தன. அவர்தம் நூல்களின் கடைசிப் பக்கங் களில் அந்தந்த நூல்களில் பயன்படுத்தப் பெற்ற கலைச் சொல் பட்டியல்களும் இடம் பெற்றன. இக்கலைச் சொல் பட்டியல்களில் வடசொற்களே அதிகமாக இருந்தன. அவர் காலத்தில் வழக்கில் இருந்த அதிகமான வடமொழிச் சொற் கலப்பே இதற்குக் காரணம்.

'மருத்துவம், வேதியியல், தாவரவியல் தொடர்பு டைய அறிவியல்' என்னும் பெயருடன் கலைச் சொற்

களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கம் தரும் அக ராதி ஒன்றினை டி.வி சாம்பசிவம் பிள்ளையவர்கள் பதிப் பித்தார். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடுகளில் உயிரியல் கலைச் சொற்கள் பல பயன்படுத்தப் பெற்றன. தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட அறிவியல் களஞ்சி யத்தில் பல மருத்துவக் கலைச் சொற்களும் அவற்றிற்கான விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பல்வேறு கலைச் சொல் தொகுதிகள், அக ராதிகள், களஞ்சியங்கள் இவற்றிற்கெல்லாம் மருத்துவக் கலைச் சொற்கள், விளக்கங்கள் ஆகியவை இடம் பெற்றிருந் தாலும் மருத்துவத் துறைக்கென்றே தனியாக ஒரு 'மருத் துவக் கலைச் சொல் களஞ்சிய'த்தை முதன்முதலில் உரு வாக்கிய பெருமை மணவை முஸ்தபாவிற்கே உரியது.

தமது கலைச் சொல் களஞ்சியக் கோட்பாட்டினை முஸ்தபா அவர்கள் மிக அழகாக நம்முன் வைக்கிறார். ''நூல் எழுதுவோருக்கும் கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் படிப்பவர் கட்கும் மட்டும் பயன்படுவதோடமையாது, சாதாரண வாச கர்களுக்கும் பயன்பட வேண்டும். ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு நிகரான தமிழ்க் கலைச் சொல்லும் அக்கலைச் சொல்லுக்கு விளக்கமாக ஓர் அறிவியல் செய்தியும் படிப் போர்க்குக் கிடைக்க வேண்டுமென விழைந்தேன். அதை யும் பட விளக்கத்தோடு தந்துதவ வேண்டுமென விரும் பினேன்'' என்று களஞ்சிய வகைக் கருவி நூலின் கட்ட மைப்பினை மணவையாரே விளக்குகின்றார். இக் களஞ் சியத்தில் மருத்துவத் துறையின் 15 பிரிவுகளுக்கான ஆங்கிலக் கலைச் சொற்களுக்கும் நேர்த் தமிழ்ச் சொற்களும் விளக்கங்களுடன் வரைபடங்களும் இடம் பெறுகின்றன. ஏறத்தாழ 6,000 கலைச் சொற்கள் பதிவுச் சொற்களாக உள்ளன.

## கலைச் சொல்லாக்க நெறிமுறைகள்

அவருடைய கலைச் சொல்லாக்க நெறிமுறையைக் கண்டறிய மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம் பயன்படுத்தப்பட்டது. அவர் இக்களஞ்சியம் படைத்ததன் நோக்கங்களுள் ஒன்று, 'சாதாரண வாசகர்க்கும் பயன்படவேண்டும்' என்பதாகும். அந்நோக்கம் இந்நூலில் இனிதே நிறைவேறியிருப்பதைக் காண முடிகிறது. சான்றாக Patch test என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'திட்டுச் சோதனை', 'பசைப் பட்டைச் சோதனை' என்று கலைச் சொற்களைத் தந்து, அதற்கான விளக்கமாக 'தோலில் ஒட்டப்படும் பசைப் பட்டையினால் எதிர்வினை ஏதேனும் ஏற்படுகிறதா என்பதைக் கண்டறிவதற்காக நடத்தப்படும் தோல் சோதனை. சிவப்பு நிறமும் வீக்கமும் ஏற்படுமானால் ஒவ்வாமை உள்ளது என அறியலாம்' என்று விளக்குகிறார். மருத்துவம் பயிலா சாதாரண மனிதனுக்கும் புரியும் வகையில் விளக்கங்கள் அமைந்துள்ள நிலை இக் களஞ்சியத்தின் சிறப்பு.

ஒரு ஆங்கிலச் சொல்லிற்கு நேராக ஒன்றுக்கு மேற்பட்ட கலைச் சொற்களைத் தந்துள்ளார்.

| | |
|---|---|
| Pathogen | பிணியூக்கி;<br>நோயுண்டாக்கும் நுண்ணுயிர்;<br>நோயணு. |

Pathogen என்பதற்கு ஈடாக, மூன்று தமிழ்க் கலைச் சொற்கள் தரப்பட்டுள்ளன. ஆசிரியர் இம்மூன்று சொற் களையும் ஒத்துக் கொள்கிறாரா? அல்லது அவற்றுள் ஒன்றினைத் தரப்படுத்திப் பயன்படுத்தும் பணியை வாசகர்களுக்கு விட்டுவிடுவதற்காக இவ்வுத்தியைக் கையாளுகிறாரா' என்ற ஐயமும் எழுகிறது. அதனையடுத்து மற்றொரு கேள்வியும் வாசகனுள் பிறக்கிறது. அவர் கலைச் சொற்களின் வைப்பு முறையை, ஏற்பு முறையின் அடிப்படையில் தந்திருக்கி

றாரா? என்பதே அது. இருப்பினும், ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு நேராக, ஒன்றுக்கு மேற்பட்ட தமிழ்க் கலைச் சொற்களைத் தந்திருப்பதற்கு முக்கியமான ஒரு காரணம் இருப்பது தெளிவாகிறது. புதியதாக மருத்துவ நூலைப் படைக்க விழைவோர் இச்சொற்களுள் தமக்குப் பொருத்தம் எனத் தோன்றியதை எடுத்துப் பயன்படுத்த நல்ல ஒரு வாய்ப்பினை அளித்திருப்பதாகவே எண்ணத் தோன்று கிறது.

பதிவுச் சொற்களாக, ஆங்கிலச் சொல் மட்டுமன்றி, தமிழ்ச் சொற்களும் இடம்பெறுகின்றன. abdomen என்ப தற்கு, வயிறு, அடிவயிறு, அகடு, உதரம் என்ற சொற்களைத் தரும்போது, abdomen என்பது பதிவுச் சொல். அடுத்த பதிவு அடிவயிறு தொடர்பான கருத்துகள். முனைப்பான அடிவ யிறு, தொங்கலான அடிவயிறு, படகுவடிவ அடிவயிறு, அடிவயிற்றுவலி என அடிவயிறு தொடர்பான கருத்துகளை ஒரே இடத்தில் தந்திருப்பதனால், இது அகராதி வடிவில் அமைந்த கருத்தடிப்படைக் களஞ்சியமாக மிளிர்கிறது. ‘மருத்துவ, அறிவியல், தொழில் நுட்பக் கலைச் சொல் களஞ்சிய அகராதி’ நூலில் இந்த அமைப்பு இல்லை. அத னால்தான் போலும், அந்த நூலின் தலைப்பில் அகராதி என்ற பெயர் இடம் பெற்றிருக்க ‘மருத்துவக் கலைச் சொற் களஞ்சியம்’ நூலில் அகராதி நீக்கப்பட்டுள்ளது எனலாம்.

பெயர்ச் சொற்கள் மட்டுமன்றி, பெயரடைக்கும் வினைச் சொற்களும் பதிவுச் சொற்களாக அமைந்துள்ளன. *(எ.கா)* abacterial, abiogenic, abduct, abort.

பல புதிய தமிழ்ச் சொற்கள் இவரது களஞ்சியத்தில் இடம் பெறுகின்றன. சவ்வுப்பை என்பதற்குச் சுருக்கமான ஒரு சொல்லாக ‘வபை’ என்பதை அடைப்புக் குறிக்குள் தரு

கிறார். 'சுரிப்பு' என்பது மற்றொரு சொல். abduction என்பதற்குத் 'தசை மையச் சுரிப்பு' என்ற சொல் தரப்பட்டுள்ளது.

இம்மருத்துவக் கலைச் சொல் களஞ்சியத்தில் மருந்து வகைகள் ஒலிபெயர்ப்புச் சொற்களாகவே உள்ளன. ஒலி பெயர்ப்புச் சொற்களில் இயன்ற வரையில் தமிழ் எழுத்துக் களை மட்டுமே பயன்படுத்தியுள்ளார்.

| | |
|---|---|
| Acetate | அசிட்டேட் |
| addison's disease | அடிசன் நோய் |

அதே சமயம், உச்சரிப்பு மாறுபாடு ஏற்படாமல் இருக்க, சில இடங்களில் நெகிழ்ச்சியளித்து வட எழுத்துக் களைப் பயன்படுத்தும் நிலையும் காணப்படுகிறது.

| | |
|---|---|
| acetohexamide | அசிட்டோஹெக்சாமைடு |
| adenosine diphosphate | அடினோசின் டைஃபாஸ்ஃபேட் |

சில ஆங்கிலச் சொற்களைத் தமிழ்ப்படுத்தும்போது, கலப்பு மொழி பெயர்ப்பு உத்தி பயன்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையில், ஆங்கிலக் கலைச் சொல்லின் ஒலிபெயர்ப்புப் பகுதியைத் தமிழிலும் ஒலி பெயர்த்து மொழி பெயர்க்கத் தக்க பகுதியை மொழி பெயர்த்தும் பயன்படுத்தியுள்ளது பாராட்டத் தக்கதாகும்.

| | |
|---|---|
| acetonaemia | அசிட்டோனிரத்தம் |
| acetonuria | அசிட்டோன் நீரிழிவு |

Diagnosis என்ற சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லைக் கண்டறிய முனைந்த மணவையாருக்குக் குறள் ஒன்று நினைவுக்கு வருகிறது. 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்'. விளைவு 'நோய் நாடல் சோதனை' என்ற தமிழாக்கம்.

ஆங்கிலச் சொல்லுக்கு இணையாக, தமிழில் வழக்குச் சொல் இருக்கும் போது அதனையும் சேர்த்துத் தருகிறார்.

| | |
|---|---|
| adenoid | மூக்கடித் தசை வளர்ச்சி |
| | மூக்கடியான் |
| ague | முறைக் காய்ச்சல் |

Phobia என்பதற்கு நேராக அச்சம், வெறுப்பு என்ற சொற்களைப் பலரும் கையாளும் நிலையில் மருள். என்ற அழகான இன்னும் பொருத்தமான சொல் இந்நூலில் ஆளப் பட்டுள்ளது.

agrophobia - திடல் மருட்சி

அச்சம் என்பதைவிட, மருள், மருட்சி என்பதே Phobia என்பதற்கு மிகவும் பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

புதிய தமிழ்ச் சொற்களை அறிமுகப்படுத்தும்போது, பழக்கமான ஆங்கிலச் சொல்லையும் பிறையடைப்பிற்குள் தரும் உத்தி கையாளப்படுகிறது. Hormone உட்சுரப்பு இயக்கு நீர் (ஹார்மோன்).

புதிய சொல்லாக்கங்களும் இவர்தம் களஞ்சியத்திற்கு மெருகூட்டுகின்றன. காட்டாக, காசடுக்கு என்ற சொல்லை கூறலாம்.

Rouleaux - காசடுக்குச் சிவப்பணுக்கள். 'நாணய அடுக்குப் போன்று இரத்தத்திலுள்ள இரத்தச் சிவப்பணுக் களின் வரிசை' என்று விளக்கம் தரப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தில் வழக்குச் சொற்களாக இருக்கும் சில. கலைச் சொற்கள் பொருளேற்றப்பட்டு, கலைச் சொற்களாக உள்ளன. காட்டாக, Fixation என்ற சொல்லைக் காட்டலாம். இச்சொல் மருத்துவத் துறையின் இரு பிரிவுகளில் இடம் பெறுகிறது. ஒன்று கண் தொடர்பான மருத்துவத் துறை

(optholmology) மற்றொன்று மனநல மருத்துவத் துறை (Psychiatry). இந்த இரண்டு துறைக்குமான விளக்கங்கள் (1), (2) என எண்ணிடப்பட்டுத் தரப்பட்டுள்ளன. ஆனால், இவ் விளக்கங்களில் துறைப் பிரிவுகளின் சுருக்கங்களைத் தந்தி ருந்தால் இன்னும் மெருகேறியிருக்கும்.

''பாண்டு போன்ற இந்திய மருத்துவக்கலைச் சொற் களும் இக்களஞ்சியத்தில், பயன்படுத்தப்பட்டுள்ளது. இது இக்களஞ்சியத்தின் மற்றொரு சிறப்பாகும்.

இந்த மருத்துவக் கலைச் சொல் களஞ்சியத்தை ஆய்வுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது, கீழ்க் காணும் முடிவுகள் பெறப்படுகின்றன.

1. 'மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்' என்ற தனி யொரு தொகுதியாக வெளியிடப்படும் வகையில் முதன் முதலாக வெளியிடப்பட்ட பெருமையுடையது.

2. ஆங்கிலச் கலைச் சொற்களுக்கு இணையாகப் பல தமிழ்க் கலைச் சொற்களைத் தந்திருப்பது, வாசகர்கள் அல்லது பயனீட்டாளர்களுக்குச் சொல்லைத் தேர்வு செய்யும் வாய்ப்பைத் தருகிறது.

3. விளக்கங்கள் என்ற நிலையில் சொற் கருத்துடன் சில இடங்களில் முக்கியமான குறிப்புகளும் இடம் பெறு கின்றன.

மருத்துவக் கருத்துகளைத் தமிழிலே சொல்ல முடி யுமா? கலைச் சொற்களைத் தமிழிலே உருவாக்க முடியுமா? என்ற கேள்விக்குரிய விடையாக இக்கலைச் சொல் களஞ் சியம் அமைந்துள்ளது. பல ஆண்டுகளாக, பல்லாயிரக்கணக் கான கலைச் சொற்களைத் தேர்வு செய்தும் உருவாக்கியும் பல கலைக் களஞ்சியங்களை வெளியிட்டுள்ள மணவை முஸ்தபா அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்

பட்டுள்ளது. முன்னர்க் குறிப்பிட்ட அறிவியல், தொழில் நுட்ப, மருத்துவக் களஞ்சியங்களில் ஏறத்தாழ 25,000 கலைச் சொற்களை விளக்கங்களுடன் அறிவியல் தமிழ்த் துறைக்கு நல்கியுள்ளார் மணவையார். நுண்களஞ்சியங்களாக (micro-paedia) அமைந்துள்ள இவை வருநாளில் பெருங்களஞ்சி யங்களாக (macropaedia) உருவாவதற்கான அடிப்படை களாக உள்ளன. அடிப்படை என்ற ஒன்று இருந்தால்தான், அதில் மாற்றங்கள், சீராக்கங்கள் செய்து மேன்மேலும் சிறப் பான, பொருத்தமான கலைச் சொற்களையும் விளக்கங் களையும் பெற முடியும். அகராதிப் பணியும் களஞ்சியப் பணியும் என்றுமே முழுமையான பணியல்ல. அவை மாற்றத்திற்கு உட்படவேண்டும்; மேம்பாட்டிற்கு இடந்தர வேண்டும்.

எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்களை ஆய்வாளராகவும், திரு. இரா. நடராசன், டாக்டர் மு. செம் மல் சையத் மீராவைத் தொகுப்புத் துணைவர்களாகவும் கொண்டு சிறப்பாக இம் மருத்துவக் கலைச் சொல் களஞ்சியத்தை உருவாக்கியுள்ள வளர்தமிழ்ச் செல்வர் திரு. மணவை முஸ்தபா அவர்களிடம் அறிவியல் தமிழுலகம் இன்னும் பல்லாயிரக்கணக்கான கலைச் சொற்களை, விளக் கங்களுடன் கூடிய களஞ்சியங்களை ஆவலுடன் எதிர்பார்க் கிறது. அவர்தம் அறிவியல் தமிழ் ஆர்வம் வாழ்க! தொண்டு வளர்க! பணி சிறக்க! என இறைவனை வேண்டி அமை கிறேன்.

★

# தமிழில் அறிவியல் இலக்கியமும் மணவையார் சிந்தனையும்

ராம்குமார்

## *அர்ப்பணிப்பு உணர்வு*

*தமிழில் அறிவியல் முன்னேற்றங்களைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவும், தமிழை ஒரு அறிவியல் மொழியாகச் செழுமையடைய வைக்க வேண்டும் என்பதற் காகவும் தன் வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டவர் மணவை முஸ்தபா. கடந்த நாற்பது ஆண்டுகளாக ஒரே நோக்கத்தோடு, ஒரே திசை நோக்கி பயணம் செய்து கொண்டிருப்பவர் அவர்.*

*தமிழில் அறிவியல் இலக்கியம் குறித்து மணவை யாரின் சிந்தனைகளை இக்கட்டுரையில் ஆராயப் புகும் போது அவரது பணியை இரண்டு வகைகளாகப் பிரித்துக் காண்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அவை :*

*(1) தமிழில் அறிவியல்*

*(2) அறிவியல் இலக்கியம்*

## *தமிழில் அறிவியல்*

*முதலாவதாக தமிழில் அறிவியல் என்ற நோக்கில் பார்ப்போம். அறிவியல் என்பது உலக முழுமைக்கும்*

பொதுவானது. அறிவியல் முன்னேற்றம் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. அதை அவரவர் தங்க ளுக்குத் தெரிந்த மொழிகளில் எழுதுகிறார்கள். ஆனால், உலக அளவில் அறிவியல் வளர்ச்சி நிலைகளை ஆங்கில மொழியிலேயே மிக அதிகமாக எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் அறிவியல் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்தவர்களில் அதிகம் பேர் ஆங்கில மொழி அறிந்த வர்கள் என்பதுதான். இந்த அறிவியல் முன்னேற்றங்களைப் பிற மொழியினர் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அந்தந்த மொழியும், ஆங்கில மொழியும் அறிந்த வர்கள் அவர்களது தாய் மொழிகளில் மொழி பெயர்த்து எழுதி வருகிறார்கள்.

## தமிழ் அறிவியலாரின் ஆர்வக்குறைவு

இந்த வகையில் ஃபிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பானிய, சீன மொழிகளில் உலக அறிவியல் முன்னேற்றங்கள் அவ்வப்போது அறிவியல் அறிஞர்களால் எழுதப்பட்டு உட னுக்குடன் அந்த மொழிகளில் பேசுபவர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிடுகின்றன. தமிழ் மொழி இந்த வகையில் காலத் தோடு ஈடுகொடுக்க முடியாத நிலையில் உள்ளது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அறிவியல் அறிஞராகப் பரிணமித்தவுடன் ஆங்கில மொழியில் எழுதுவதிலேயே அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறார்களேயொழிய தாய் மொழியில் அறிவியலை எழுதவேண்டும் என்ற ஆர்வம் குறைந்தவர்களாகவே உள்ளார்கள். நோபல் பரிசு பெற்ற தமிழரான சர்.சி.வி இராமன் முதலாக இப்போது உலக றிந்த, நாடறிந்த அறிவியல் அறிஞர்களாக உள்ள, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், உலக அறிவியல் முன் னேற்றங்களை, தங்களது அறிவியல் கண்டுபிடிப்புகளை எந்த அளவுக்குத் தமிழ் மொழியில் எழுதி வைத்திருக்கி

றார்கள் என்பதை சற்று ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

## அறிவியல் உணர்வுள்ள தமிழறிஞர்

ஆகவே, அறிவியல் அறிஞர்களாக உள்ள தமிழர் களை மட்டுமே நம்பியிராமல் அறிவியல் உணர்வு (Scientific temper) உள்ள தமிழறிஞர்கள் அறிவியல் முன்னேற்றங் களைத் தமிழில் எழுதுவதன் மூலம்தான் தமிழில் அறிவியல் வளர முடியும். அறிவியல் கருத்துகள், சிந்தனைகள் தமிழில் மேம்பட்டு பல்கிப் பெருக முடியும்.

அந்த வகையில் தமிழில் அறிவியல் செய்திகளை எழுத வேண்டும்; அதற்கு உதவிடும் வகையில் அறிவியல் சொல்லாக்கங்களைச் செய்ய வேண்டும் என்ற முனைப் புடன் செயல்பட்டு வரும் தமிழறிஞர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். அவர்களில் தலையாயவராக விளங்கு பவர் மணவை முஸ்தபா அவர்கள். தமிழில் அறிவியல் முன்னேற்றங்களைக் கொண்டு வருவதிலும், புதிய அறி வியல் சொல்லாக்கங்களைத் தமிழில் செய்வதிலும் அவர் தீவிரமாகக் கடந்த நாற்பது ஆண்டுகளாகப் பாடுபட்டு வரு கிறார்.

தமிழில் அறிவியல் குறித்த அவரது செயல்பாடுகள் வரலாற்றுச் சாட்சியங்களாக நம் கண்முன்னே எழுந்து நிற்கின்றன என்றாலும் இது தொடர்பான அவரது சிந்தனை. களை 'காலம் தேடும் தமிழ்' என்ற தலைப்பில் அவர் எழுதிய நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்.

## சங்கத் தமிழ் காட்டும் அறிவியல்

இந்நூலில் சங்ககாலத் தமிழரிடையே இருந்த அறி வியல் அறிவையும், உணர்வையும், வானவியல் குறித்த

சங்கத் தமிழர் கொண்டிருந்த சிந்தனைகளையும் சில எடுத்துக்காட்டுகளின் மூலம் விளக்குகிறார்.

புறநானூற்றின் இரண்டாவது பாடலான

''மண்டி ணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை'' என்ற

பாடல் வரிகளில் இந்நிலவுலகானது மண், ஆகாயம், காற்று, தீ, நீர் ஆகிய ஐம்பூதங்களால் ஆனது என்பதை சங்கத் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்கிறார்.

ஒரு படி பாலையோ, நீரையோ முக்கால்படியாக சுருக்கவியலாது; நீர்ப் பொருளுக்கு சுருங்கும் தன்மை இல்லை (Non-Compressibility of Liquids) என்று அறிவியல் அறிஞர் பாஸ்கல் ஆராய்ந்து கூறியதை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஔவையார்,

''ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது...''

என்று பாடியுள்ளதை மணவையார் எடுத்துக் காட்டியுள்ளார்.

## தமிழ் அறிஞர்கள் கருத்து

அறிவியல் பார்வை, அணுகுமுறை குறித்து பாரதியார், பாரதிதாசன், மயிலை சீனி, வேங்கடாசாமி, வா.செ. குழந்தைசாமி, போன்ற தமிழறிஞர்கள் விளக்கியுள்ளதை எடுத்துக் காட்டியுள்ளார்.

## அறிவியல் தமிழ் நூல்கள்

அறிவியல் தமிழ் நூல்கள் என்ற கட்டுரையில் தாய்மொழி மூலம் அறிவியலைப் படிக்கும் வாய்ப்பு ஏற்ப டுவதன் மூலமே அறிவியல் அறிவு பெருக முடியும் என்று துவங்கி, தமிழ்மொழி 1830ஆம் ஆண்டுவாக்கில்தான் தமிழ் பயிற்சி மொழித்திட்டம் ஆட்சியாளர்களால் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது என்கிறார். 1832இல் இரேனியஸ் பாதிரியர் எழுதிய 'பூமி சாஸ்திரம்' என்ற நூலே ஆங்கில அறிவியலை ஒட்டி எழுந்த முதல் தமிழ் நூலொன்றும், 1849இல் வெளிவந்த 'பால கணிதம்' என்ற நூலே தமிழின் முதல் கணித நூலென்றும், 1852இல் ஃபிஷ் கிரீன் மொழி பெயர்ப்பில் வெளிவந்த 'அங்கா தீபாத சுகரணவாத உற்பா வன நூல்' என்ற டாக்டர் கட்டர் எழுதிய Anatomy Physiology and Huygiene என்ற ஆங்கில நூலின் தமிழாக்கமே தமிழில் வெளிவந்த முதல் ஆங்கில மருத்துவ நூலென்றும் அறிந்து கொள்கிறோம்.

## இதழியலின் பங்கு

அறிவியல் வளர்ச்சியின் தமிழ் இதழியலின் பங்கை விளக்குகையில் 1831இல் வெளிவந்த முதல் தமிழ் இதழான 'தமிழ் மேகசீன்' முதல் அகத்திய வர்த்தமானி (1870), சுகசீ வனி (1887), சுகாதார போதினி (1891), ஞான போதினி (1897), ஆரோக்கிய வழி (1908), ஆயுர்வேத பாஸ்கரன், தொழிற்கல்வி (1914), வைத்தியக் கலாநிதி (1914), தமிழர் நேசன் (1911), தன்வந்திரி, ஆயுர்வேதம் போன்ற தோன்றி மறைந்துபோன இதழ்களையும், இன்றுவரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் 'நல்வழி' (1900) கலைக்கதிர் (1949), யுனெஸ்கோ கூரியர் (1967) ஆகிய தமிழ் இதழ்களின் அறிவியல் பணிகளையும் மணவையார் விரித்துரைக்கிறார். தமிழகப் பல்கலைக் கழகங்கள், பலதரப்பட்ட அரசு, பொது

அமைப்புகள் தமிழில் அறிவியல் வளர்ச்சிக்கு ஆற்றும் பணிகளையும் விளக்கியுள்ளார்.

## மொழிபெயர்ப்பின் 12 வகைகள்

அறிவியலில் மூல நூல்களும், அடிப்படை அறிவியல் நூல்களும் தமிழில் அதிகம் இல்லாத சூழ்நிலையில் மொழி பெயர்ப்பு மூலம் மட்டுமே தமிழில் அறிவியலை வளர்க்க முடியும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியராகவும், ஒரு சிறந்த மொழி பெயர்ப்பு வல்லுநராகவும் விளங்கிவரும் மணவை முஸ்தபா அவர்கள் மொழி பெயர்ப்பு என்னும் ஈடு, இணையில்லா மொழி இணைப்புப் பாலத்தின் நுட்பங்களை ஆழமாகவும், அகலமாகவும் அறிந்து கரைசேர்ந்தவர்.

தமிழ் மொழியின் மூல இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் மொழி பெயர்ப்பைப் பற்றிக் குறிப்பிடும் போது

''தொகுத்தல் விரித்தல்
தொகைவிரி மொழி பெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு
அவை மரபினவே''

என்று மரபியலில் கூறியுள்ளதை அடியொற்றி மொழி பெயர்ப்புக் கலையின் இலக்கணத்தை மணவை முஸ்தபா வகுத்துள்ளார். அவரது வரையறையின்படி மொழி பெயர்ப்பைப் பின்வரும் பன்னிரண்டு பெரும் பிரிவுகளாக வகைப் படுத்துகிறார்.

### 1. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு (Literal Translation)

சொல்லுக்கு சொல் மொழி பெயர்ப்பது சில சமயங்களில் மூல ஆசிரியன் சொல்ல வந்த கருத்துக்கு மாறான

கருத்தை வெளிக்காட்டுகிறது என்று சுட்டுகின்ற ஆசிரியர் நாளிதழில் வெளிவந்த செய்தி ஒன்றைச் சுட்டிக் காட்டு கிறார். Hundred Rail Sleepers Were Washed என்ற ஆங்கிலச் செய்தித் தலைப்பு "இரயில் தண்டவாளத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த நூறு பேர் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டனர்" என்று முற்றிலும் தவறாக மொழி பெயர்க்கப்பட்டதற்குக் காரணம் Rail Sleepars என்பதற்கு "தண்டவாள குறுக்குக் கட்டைகள் என்பதற்குப் பதிலாக இரயிலில் உறங்கிக் கொண்டிருந்தவர்கள் என்று சொல் லுக்குச் சொல் மொழி பெயர்த்ததால் வந்த பிழையே. இதை பெயர்கள், குறியீடுகள் போன்ற ஒரு சில இடங்களில் மட்டுமே கடைப்பிடிக்க வேண்டுமென்றும், மற்ற இடங் களில் மரபினை ஒட்டியே மொழி பெயர்க்க வேண்டு மென்றும் கூறுகிறார்.

### *(2) வரையறையற்ற மொழிபெயர்ப்பு* (Free Translation)

கதை, இலக்கியங்களை மொழி பெயர்க்க இதுவே சிறந்த உத்தியாகும். மூலக் கரு சிதையாமல் எந்த மொழியில் பெயர்க்கப்படுகிறதோ அந்த மொழியில் மரபுக் கேற்ப பழமொழிகள், மரபுத் தொடர்கள், உத்தி, மொழி நடை ஆகியவற்றைச் சேர்த்து மூல நூலைப் படிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துவதே வரையறையற்ற மொழி பெயர்ப்பு என தெளிவுபடுத்துகிறார் மணவையார்.

### *(3) பொது மக்களார்வ மொழிபெயர்ப்பு* (Popular Translation)

செய்திப் பரிமாற்றத் துறையில் அதிகம் பயன்பட்டு வரும் இந்த மொழி பெயர்ப்பு சாதாரண படிப்பறிவுள்ளவர் களைக் கருத்தில் கொண்டு செய்யப்படும் மொழி பெயர்ப் பாகும். செய்திகளை மொழி பெயர்க்கும்போது மொழி

பெயர்ப்புணர்வு ஏற்படாத வகையில், மூலமாகவே தாய் மொழியில் எழுதப்பட்டதைபோன்று அவர்களுக்கு ஆர்வ மூட்டும் வகையில் நடை, உத்தி அனைத்தையும் கையாண்டு எழுதப்படுவதே பொதுமக்களார்வ மொழி பெயர்ப்பாகும் என்கிறார் மணவையார்.

## *(4)* துல்லியமான மொழிபெயர்ப்பு (Accurate Translation)

மிகச்சிறந்த மொழி பெயர்ப்பு முறையான இதில் மூலமொழி உணர்த்தும் கருத்தையோ, உணர்வையோ சிறிது கூடச் சிதைக்காமல் கருத்து, நடை, உத்தி ஆகிய அனைத் தும் மூல நூலாசிரியனை ஒட்டியே அமைய வேண்டும். அறி வியல், சட்டத் துறைகளுக்கு இவ்வகையான மொழி பெயர்ப்பே ஏற்றது. பொருளறிவு, மொழியறிவு, எழுத் தாற்றல் ஆகியவைகள் கைவரப்பெற்ற தகுதிமிக்க மொழி பெயர்ப்பாளர்களே இதைச் செய்யமுடியும்.

## *(5)* மொழியாக்கம் (Transcreation)

இலக்கிய மொழி பெயர்ப்புக்கு - குறிப்பாக கவிதை மொழிபெயர்ப்புக்கு ஏற்ற முறையாக உள்ளதே மொழி யாக்கம் என்னும் உத்தி. மூல நூல் ஆசிரியன் கையாண்ட கருவை அடியொற்றி பெயர்ப்பு மொழியின் மரபு, இலக் கண விதிமுறைகளுக்கு ஏற்ப செய்யப்படுவது. சில சமயங் களில் மொழி பெயர்ப்பு என்ற நிலையிலிருந்து மேலேறி 'தழுவல்' என்று கூறப்படுவதும் உண்டு என்கிறார்.

## *(6)* விரிவான மொழிபெயர்ப்பு (Magnified Translation)

மூல நூலின் கருத்துகளை ஒட்டி அதிகச் செய்திகளைச் சேர்த்து, விளக்கமாக எழுதி பொருள் விளங்க மொழி பெயர்ப்பதே விரிவான மொழிபெயர்ப்பு.

### (7) சுருக்க மொழிபெயர்ப்பு (Abridged Translation)

மூல நூலின் கருவை மாற்றாமல் உருவில் மட்டும் மாற்றம் செய்து. சுருங்கிய வடிவில் மூலத்தைத் தருதலே சுருக்க மொழிபெயர்ப்பாகும். மூல ஆசிரியன் எழுதிய சில பகுதிகளை நீக்கிவிடுவது அல்லது சுருக்கி விடுவது இம்மு றையில் இயல்பானதாகும். பாலுள் கலந்திருக்கும் நீரை நீக்கி பாலை மட்டும் பருகும் அன்னப்பறவையின் தன்மையைக் கொண்டதே சுருக்க மொழிபெயர்ப்புகள்.

### (8) தழுவல் மொழிபெயர்ப்பு (Adopted Translation)

மொழிபெயர்ப்பு என்ற பெயரால் அழைக்கப்படா மலே இவ்வகை மொழிபெயர்ப்புகள் உலக மொழிகளில் ஏராளமாக வலம்வந்து கொண்டிருக்கின்றன. ஷேக்ஸ்பி யரின் ஆங்கில நாடகங்கள், கம்பராமாயணம் போன்ற உலகப் புகழ்பெற்ற இலக்கியங்களில் பெரும்பாலானவை தழுவல் வகையைச் சேர்ந்தவையே,

தழுவல் மொழிபெயர்ப்பில் மூலத்தை அப்படியே எடுத்துக்கொள்ளாமல் ஆங்காங்கே சுருக்கியும், விரித்தும் பெயர்க்கப்படும் மொழியின் மரபு, பண்பாடு, சிறப்புத் தன்மைக்கேற்ப சொல்லுகின்ற முறை அமையும். சான்றாக, வால்மீகி இராமாயணத்தில் இராவணன் சீதையைத் தன் தொடை மீது தூக்கி வைத்துக்கொண்டு சென்றான் எனக் கூறப்பட்டுள்ளது. தமிழில் இதைத் தழுவிய கம்பர் இரா வணன் சீதையைப் பர்ண சாலையோடு பெயர்த்துத் தூக்கிச் சென்றான் எனக் கூறுகின்றார்.

### (9) திரைப்பட சாரப் பெயர்ப்பு (Subtitle Translation)

திரையரங்குகளில் வேற்று மொழித் திரைப்படம் ஓடும்போது அதன் கதை, உரையாடல்களின் சாரத்தை

தேவையான மொழியில் இரண்டொரு வரிகளில் படம் ஓடிக் கொண்டிருக்கும்போதே திரையின் அடிப்பகுதியில் தோன்றுமாறு அமைப்பர்.

### *(10)* திரைப்பட மொழிமாற்ற பெயர்ப்பு **(Dubbing Translation)**

திரைப்படங்கள் தொலைக்காட்சிப் படங்களில் வரும் கதாபாத்திரங்கள் பேசும் உரையாடல்கள் வேற்று மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பேசப்படும்போது பாத்திரத்தின் உதட்டசைவுகளுக்கு ஏற்ப உரிய சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும். மூல மொழியில் பேசுவதற்கு எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளப்படுகிறதோ அதே அளவு நேரத்திற்குள் மொழி மாற்றம் அமையவேண்டும்.

### *(11)* கருவி மொழி பெயர்ப்பு **(Machine Translation)**

கணினியின் துணைகொண்டு செய்யப்படும் இந்த வகையான மொழி பெயர்ப்புக்குத் தொடர்ந்து முயற்சிகள் நடைபெற்று வந்த போதிலும் நம்பிக்கையூட்டும் வெற்றி இன்னும் கிடைக்கவில்லை. ஜப்பானிய மொழி மற்றும் பிற ஐரோப்பிய மொழிகளில் ஓரளவு வெற்றியடைந்துள்ள இம்முறை இன்னும் தமிழ் - ஆங்கிலம், தமிழ் - பிறமொழி களில் மிகவும் பின்னடைந்தே காணப்படுகிறது.

### *(12)* சிறுவருக்கான மொழிபெயர்ப்பு **(Translation for Children)**

சிறுவருக்குப் புரியும் வகையில் மொழிபெயர்ப்பு செய்வது பற்றி ஆழமாக இதுவரை சிந்திக்கப்படவில்லை. வளரும் தலைமுறையினரின் அறிவுத் தாகத்தைத் தணிக்க மொழிபெயர்ப்பும் ஒரு சிறந்த கருவியாக அமையும், சொல்லும் முறை, நடை, சொற்களில் எளிமை ஆகியவை

களில் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் மொழி பெயர்த்துத் தருவதே சிறுவருக்கான மொழிபெயர்ப்பாகும்.

இவ்வாறு பன்னிரண்டு வகையினவாக வகுத்து, மொழிபெயர்ப்புத் துறையின் வளமான வளர்ச்சிக்கு வழிகாட்டியுள்ளார் மணவையார்.

**கலைச் சொல்லாக்கம்**

தமிழில் அறிவியல் வளர்ச்சி செம்மையாகச் சொல்லப்பட வேண்டுமானால் அதற்குத் தடையாக இருப் பது போதிய கலைச் சொற்கள் பல்வேறு துறைகளில் தமிழ் மொழியில் உருவாக்கப்படாமல் இருப்பதே என்பதை மண வையார் உணர்ந்துள்ளார். ஆகவே, கலைச் சொல்லாக்கத் தினைத் தன் அறிவியல் பணியில் முக்கிய இலக்காகக் கொண்டுள்ளார். வேறு மொழிச் சொற்கள் தமிழில் வந்து கலக்கும்போது தொல்காப்பியர் கூறியுள்ளபடி 'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே; என்ற அடிப்படையில் தமிழ் எழுத்துக்களின் ஒலிப் பிலக்கணத்துக்கேற்ப மாறுதல் பெறவேண்டும் என்று கருது கிறார் மணவையார்

**கலைச் சொல்லாக்க முயற்சிகள்**

இலக்கியக் கலைச்சொற்களில் மொழித் தூய்மை பேணுவதைப் போல அல்லாமல், அறிவியல் கலைச் சொற் களைப் பொறுத்தவரை மொழித்தூய்மை ஓரளவே கடைப் பிடிக்கப்படவேண்டும் என்றும் அறிவியல் சொல்லாக் கத்தில் உணர்ச்சியைவிட அறிவுக்கே முதலிடம் என்றும் கூறுகிறார். அறிவியல் கலைச் சொல்லாக முயற்சிகளாக 1923இல் அமைக்கப்பட்ட கலைச் சொல்லாக்கக் குழு, 1934இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் உருவாக்கிய கலைச்சொல் தயாரிப்புக்குழு உருவாக்கிய 10,000 கலைச்

சொற்கள், 1955இல் செய்யப்பட்ட இலங்கையரசின் கலைச் சொல்லாக்க முயற்சி, 1959இல் அமைக்கப்பட்ட கலைச் சொல்லாக்க வல்லுநர் குழு, 1971இல் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிட்ட புதிய கலைச் சொல்லாக்கத் தொகுதி, தனிப்பட்டவர்களின் சொல்லாக்க முயற்சிகள், கலைச்சொல்லாக்கத்தில் 'யுனெஸ்கோ கூரியர்' போன்ற இதழ்களின் பங்கு, பதிப்பகங்கள், பல்கலைக் கழகங்களின் பங்கு ஆகியவைகளை மிக விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

### சொல்லாக்க முறைகள்

பன்னாட்டு கலைச்சொற்களான என்சைம், ஐசடோப், ஓசோன் போன்றவைகளையும், ஆம்பியர், ஓம் போன்ற நினைவுப் பெயர்களையும், ரேடார், லேசர் போன்ற குறும் பெயர்களையும், வாய்பாடுகளையும், சூத்திரங்களையும், ஒலிபெயர்ப்பாக அப்படியே பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது இவரது கருத்தாகும்.

### ஒலிபெயர்ப்பு - புத்திலக்கணம்

ஒலிபெயர்ப்பு மேலும் விரிவாக ஆராயப்படவேண்டு மென்றும் அறிவியலுக்கு தனி ஒலிப்பிலக்கணம் வேண்டு மென்றும் கருதும் மணவையார் தமிழில் அறிவியல் வளர தமிழ் எழுத்துச் சீர்மை செய்யப்படவேண்டுமென்றும், தமி ழுக்குக் காலத்திற்கேற்ற புத்திலக்கணம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் காரண காரியங்களுடன் எடுத்துரைக் கின்றார்.

### அறிவியல் இலக்கியம்

அறிவியல், இலக்கியம் என்ற இரண்டு சொற்களும் ஏறக்குறைய எதிர்மறைச் சொற்களாகவே மொழியிய லாளரால் கருதப்படுவதுண்டு. அறிவியல் என்பது பகுத்த

றிவைக் கொண்டமைந்து எதுவாக இருந்தாலும் என்ன, ஏன், எப்படி என்ற கேள்வி உலைக் களத்தில் இடப்பட்டு அச்சோதனையில் புடம்போட்டு வெளிவருவதே அறிவியலாகும். திரும்பச் செய்யப்படுதல் (Repeatability) என்பது அறிவியலின் இன்றியமையாத தன்மை. ஆனால், இலக்கியம் என்பது அறிவை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல் உணர்வை அடிப்படையாகக் கொண்டது. மகிழ்வூட்டும் இன்பத்திற்கே இதில் முதலிடம் தரப்படுகிறது. கற்பனைத் தேரிலேறி சிந்தனைச் சாட்டையை வீசி, நினைத்தவாறெல்லாம் பயணம் செய்வதே இலக்கியப் பயணம்'

இந்த இரண்டும் இணைய முடியுமா என்றால் முடியும், அறிவியல் கண்ணோட்டத்தில் இலக்கியங்களைப் படைப்பது, அறிவியலைப் பின்னணியாகக் கொண்டு படைப்பிலக்கியங்களை உருவாக்குவது. அறிவியல் கற்பனையில் இலக்கிய உருவாக்கம், அறிவியல் புனைகதை (Science Fiction) இவ்வகை. தமிழில் இத்தகைய அறிவியல் இலக்கியம் எவ்வாறு அமைந்தள்ளது என்பதை 'காலம் தேடும் தமிழ்' நூலில் அறிவியல் இலக்கியம் என்ற கட்டுரையில் எடுத்துரைப்பதுடன் 'தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம்' என்ற இத்துறையில் அமைந்த முதல் நூலொன்றையும் மணவையார் எழுதியுள்ளார். அவற்றில் அவரது சிந்தனை ஓட்டங்கள் என்னும் பூங்காவில் நாம் சற்று காலாற உலா வருவோம்.

## பண்டைத் தமிழில் அறிவியல் இலக்கியம்

புறநானூறு, பதிற்றுப் பத்து மற்றும் பல சங்க இலக்கியங்களும், தொன்மை இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் தமிழரின் போரியல் (Military Science) பற்றி விரிவாகவே பேசுகின்றன என்றாலும் அக்கலையை விளக்கும் தனி நூல்கள் தமிழில் இருந்திருக்க வேண்டும் என்றும் அவைகளைக் கால வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது போலும்

என்பது இவரது கருத்தாக உள்ளது. சித்தர்கள் பாடல்களில் மருத்துவ அறிவியல் சார்ந்த செய்திகள் ஏராளமாக விரவிக்கிடக்கின்றன என்றும் புறநானூற்றில் (பாடல் 39) 'தூங்கெயில் எறிந்த தொடுதோட் செம்பியன்' என்ற தொடரால் ஆகாயக் கோட்டை (Aircastle) பற்றிய அறிவு சங்கப் புலவருக்கு இருந்திருக்க வேண்டும் என்றும் அது இன்றைய விண்வெளி நிலையம் (Space Station) போன்றது என்றும் கருதுகின்றார்.

## முதல் அறிவியல் தமிழ்க் கவிதை நூல்

தமிழில் அறிவியல் செய்திகளைக் கவிதையில் கூறும் முதல் நூல் 1949இல் வித்துவான் ப. இராமலிங்கம் எழுதிய 'அறிவு' நூல் வழிகாட்டி'யாகும். 'இயற்கைச் சாத்திரம்', 'இரசாயனச் சாத்திரம்', 'பௌதிகச் சாத்திரம்', என்ற முப்பெரும் பிரிவுகளைக் கொண்ட இந்நூலின் இறுதியில் 'பொருளகராதி' சேர்க்கப்பட்டிருப்பது ஒரு குறிபிடத்தக்கது. இந்த வரிசையில் கவிஞர் வைரமுத்துவின் 'தண்ணீர் தேசம்' நூலை சிறந்த படைப்பென்கிறார் மணவையார்.

''ஒரு டன் கடல் தண்ணீர்
0,000004 கிராம் தங்கம் வைத்திருக்கிறது
ஆனால் 72 சதவிகிதம் மட்டுமே தண்ணீர்
கொண்ட உடலில் நீ 50 கிலோ கிராம்
தங்கமல்லவா வைத்திருக்கிறாய்
நான் உன்னைக் காதலிப்பேனா?
கடலைக் காதலிப்பேனா?''

என்று ஒரு காதலன் காதலியைப் பார்த்துப் பாடுவதில் அறிவியல் கலக்கிறது.

## சிறுவர் அறிவியல் இலக்கியங்கள்

தமிழில் பெரியவர்களுக்காக எழுதப்பட்ட அறிவியல் படைப்பிலக்கியங்களைவிட சிறுவர்களுக்காக எழுதப்பட்

டவைகளே அதிக வெற்றி பெற்றுள்ளன என்று ஆராய்ந்து கூறியுள்ளார் மணவையார். சிறுவர்களுக்காக இதுவரை வெளிவந்த 3,000 நூல்களில் 70-க்கும் மேற்பட்டவை அறி வியல் செய்திகளை உள்ளடக்கியவைகளே என்றும் இந்நூல் களில் விண்வெளியியல், நிலவியல், உயிரியல், உடலியல், விலங்கியல், தாவரவியல் போன்ற துறைகளிலேயே அதிக மான சிறுவர் நூல்கள் வெளிவந்துள்ளன என்றும் இவரது ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

என்.கே. வேலன், தி.ஜ.ரா, 'கல்வி' கோபாலகிருஷ் ணன்; ரேவதி, மலையமான், அழ.வள்ளியப்பா, பூவண் ணன் போன்றோரின் சிறுவர் படைப்புகளில் உள்ள அறி வியல் இலக்கியங்களை ஆழமாக அலசி ஆராய்கிறார்.

பெரியவர்களுக்காக அறிவியல் இலக்கியப் படைப்ப வர்களில் முதலிடம் பெறத்தக்கவராக சுஜாதாவைக் குறிப் பிட்டு மாலன், சுப்ர-பாலன், ஸ்ரீதரன், செம்மல் போன் றோரைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

## அறிவியல் இலக்கிய வழிகாட்டி

அறிவியல் இலக்கியம் குறிப்பாக அறிவியல் புனை கதை எவ்வாறு அமையவேண்டும் என்பதை இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், ஈடுபட விரும்புகின்றவர்களுக் கும் மணவையார் வழிகாட்டுகிறார்.

முதலாவதாக, அறிவியல் புனைகதைகளை எழுத விரும்பும் எவரும் எவரையும் முன்மாதிரியாகக் கொண்டு எழுதாது அவரவர் போக்கில், பாணியில், உத்தியில் படைப் பது சிறந்தது என்கிறார்.

அடுத்ததாக, எந்த அறிவியல் செய்தியை அடியொற்றி புனைகதை இலக்கியம் படைக்க விரும்புகிறோமே அந்த அறிவியல் செய்தியைத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

எந்த மொழியில் எழுத முற்படுகிறோமோ அந்த மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றவராகவும், எழுத்தாற்றல் மிக்கவராகவும், கற்பனைத் திறனும், கதை சொல்லும் ஆற்றலும் கைவரப் பெற்றவராகவும் இருக்க வேண்டும். தமிழறிவோடு அறிவியல் நுட்பப் புலமையுடையவர்களே சிறந்த அறிவியல் இலக்கியங்களைப் படைக்க முடியும் என்பது மணவையார் கருத்தாகும்.

இதற்கு வழிகாட்டும் முறையில் தனது ''தமிழில் அறிவியல் படைப்பிலக்கியம்'' என்ற நூலில் எச்.ஜி. வெல்ஸ், பால் ஆண்டர்சன், பிராட்பரி, ராபர்ட் ஹைறன் லைன், ஜுல்ஸ் வெர்ன், ஐசக் அசிமோவ், ஹோரஸ், ஹெர்வே பாசின், அலெக்சாண்டர் பியலியே, யூரிரிடால்கு சின், ஹியூகோ ஜென்ஸ் பேக், இரானோ டிபெர்ஜெராக், தியூக்ரோக் ஆர்தர்சி, கிளார்க், ராபர்ட் சில்வர் பெர்க், வங்கி ராப்ட்; ஜான்விண்ட்ஹாம், கான் சென்ட்சேவ், ஜான் கேம்பல் போன்ற மேனாட்டு அறிவியல் புனை கதைப் படைப்பாளர்களை விளக்குகிறார்.

### பின்னடைவுக்குக் காரணம்

தமிழில் அறிவியல் இலக்கியம் என்பது அதிகம் சிந்திக்கப்படாத ஒரு துறையாகவே இன்றுவரை உள்ளது என்பதை கவலையுடன் கூறும் மணவையார், தமிழ் எழுத் தாளர்கள் 'பொழுது போக்கு' இலக்கியத்திற்கு அளித்து வரும் முக்கியத்துவத்தில் ஒரு சிறு பகுதியைக் கூட, பொழு தைப் பயனுள்ள முறையில் ஆக்கும்' அறிவியல் இலக்கியப் படைப்புகளின்பால் திருப்பவில்லை என்பதுதான் உண்மை நிலை என்று தமிழ் எழுத்தாளர்களைச் சாடுகிறார்.

அறிவியல் புனைகதைகள் அதிகம் வெளிப்படா மைக்கு தமிழ் இதழ்கள் ஒருவகையில் காரணமாகும் என்று

கூறுவதுடன் வணிக நோக்கை அடிப்படையாகக் கொண்ட தமிழ் இதழ்கள் பாலுணர்வு விஞ்சி நிற்கும் கதைகளை வெளியிடுவதில் காட்டும் ஆர்வத்தில் பத்து விழுக்காடு கூட அறிவியல் அடிப்படையில் சிந்திக்கத் தூண்டும் அறிவியல் புனைகதைகளுக்கு இடமளிப்பதில்லை என்று தன் ஆதங் கத்தை வெளியிடுகிறார். இந்த வகையில் சிற்றிதழ்களின் பணி சற்று ஆறுதல் அளிப்பதாகக் கூறுகிறார்.

ஆயினும், பெண் வாசகிகளிடையே அறிவு பூர்வமான அறிவியல் இலக்கியங்களைப் படிப்பதிலும், அவைகள் அசைபோடுவதிலும் ஏற்பட்டு வரும் அதிகமான ஆர்வமும், ஆங்கில அறிவும், அறிவியல் கல்வியும் பெற்ற புதிய தலை முறையினர் பெருகிவருவதும் அறிவியல் இலக்கியத்திற்கு வரவேற்பு கூடிக்கொண்டே வருகிறது என்று நம்பிக்கை கொள்கிறார்.

## ஒளிமயமான எதிர்காலம்

தமிழில் அறிவியல் படைப்புகள் வளரவேண்டும் என்ற முனைப்புடன், அறிவியல் இலக்கிய வளர்ச்சியை ஆராய்வதுடன் அத்துறையில் வழிகாட்டியாகவும் விளங் கும் மணவை முஸ்தபா அவர்கள் அறிவியல் தமிழுக்கு ஒரு விடிவெள்ளியாகக் கருதப்படவேண்டியவர். அவர் காட்டும் ஒளிமயமான அறிவியல் இலக்கியம் தமிழ் மொழியில் செழித் தோங்கும் என்பது திண்ணம்.

★

# 'தமிழ்க் களஞ்சியம்' மணவையார்

## மு. அறிவானந்தம்

வளர்தமிழ்ச் செல்வர் மணவை முஸ்தபாவின் பல தரப்பட்ட நூல்களில் தனிச் சிறப்புடைய நூல்களாக விளங்குபவை கலைக் களஞ்சிய நூல்களும் அறிவியல் களஞ்சிய அகராதிகளுமாகும். இவை அமைப்பிலும் பொருள் உள்ளடக்கத்திலும் தனிச் சிறப்பும் தனித்துவ முடையனவாகும்.

இவரது களஞ்சிய நூல்களுள் மூன்று குறும் (மினி) கலைக் களஞ்சியங்களாகும். அவையாவன :

1. சிறுவர் கலைக் களஞ்சியம்
2. இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்
3. இளையர் அறிவியல் களஞ்சியம்

இவர் ஐந்து கலைச் சொல் களஞ்சிய அகராதிகளை யும் உருவாக்கியுள்ளார். அவையாவன :-

1. அறிவியல் கலைச் சொல் களஞ்சியம் (முதற்பகுதி)

2. அறிவியல் கலைச் சொல் களஞ்சியம் (இரண்டாம் பகுதி).

3. மருத்துவ, அறிவியல், தொழில் நுட்பக் கலைச் சொல் களஞ்சிய அகராதி

4. மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம் (முதற் பகுதி)

5. கணினி கலைச் சொல் களஞ்சியம்

இந்திய மொழிகளிலேயே முதன் முதலாக கலைக் களஞ்சியங்கள் தமிழிலேதான் வெளியிடப்பட்டன. பெரிய வர்கட்கு பத்துத் தொகுதிகளும் குழந்தைக் கலைக் களஞ்சி யங்கள் பத்துத் தொகுதிகளும் வெளியிடப்பட்டன. இக் கலைக் களஞ்சியங்கள் அனைத்தும் தமிழறிஞர் ம.ப. பெரி யசாமித் தூரன் அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு பதிப்பிக்கப்பட்டு, தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் வெளியிடப்பட்டவைகளாகும். பெரியவர்கட்கான தொகுதி களின் அடிப்படையிலேயே குழந்தை கலைக் களஞ்சி யங்கள் உருவாக்கப்பட்டன.

அகர வரிசையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழந்தைக் கலைக் களஞ்சியத் தொகுதிகளைப் பயன்படுத்தும் சிறு வர்கள் எழுத்துக்கொரு தொகுதியாகப் பத்துத் தொகுதி களையும் புரட்டி செய்தியறிய வேண்டிய இடர்ப்பாடு. மேல்நாடுகளில் இச் சங்கடத்தை நீக்கும் வகையில் அகர வரிசையில் குறும் (மினி) கலைக் களஞ்சியங்கள் இருப்ப துபோல் தமிழில் இல்லையே என்ற ஏக்கம் பலருக்கும் இருந்து வந்தது. அதிலும் மணவை முஸ்தபாவுக்கு அம் மனக்குறை நீண்ட காலமாக சற்று அதிகமாகவே இருந்து வந்தது. இவ்வுணர்வையும் கருத்தையும் பலமுறை கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியர் திரு. ம.ப. பெரிய சாமித் தூரன் அவர்களிடம் எடுத்துக் கூறி ஆலோசித்து வந்தார். அவரும் இவரது ஆவலுக்கு உடன்பட்டவராக இருந்தபோதிலும் திரு. பெரியசாமித் தூரன் உடல் நிலை அத்தகைய மினி சிறுவர் கலைக் களஞ்சியத்தை உருவாக்க இடந்தரவில்லை. விரைவில் அவர் காலமாகிவிட்டார்.

அதன்பின் குறும் கலைக் களஞ்சியம் ஒன்றைத் தானே தயாரித்தால் என்ன என்ற எண்ணம் அவ்வப்போது மணவையார் உள்ளத்தில் உருவாகி அழுத்தமடைந்து வந்தது. அதற்கேற்ற இனிய சூழ்நிலை விரைவிலேயே ஏற்பட்டது. அதைப்பற்றி மணவையார் அவர்களே கூறுகிறார்:

'குழந்தைக் கலைக் களஞ்சியத்தை 'அ' முதல் 'ன' வரை படித்தறிய ஒரு சிறுவர் விரும்பினால் அச்சிறுவர் பத்துத் தொகுதிகளையும் புரட்டிப் பார்க்க வேண்டியதாகிறது. சுருங்கிய வடிவில் கையடக்கமாக ஒரே தொகுதியாக இருப்பின், அஃது படிக்கும் இளம் மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் மிகு பயன் விளைவிக்கும் என்ற கருத்தை என்னிடம் ஒரு சமயம் தமிழ் நாடு அரசின் கல்வியமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வெளிப்படுத்தினார்கள். எனக்கும் அத்தகைய எண்ணம் முன்னரே மனதுக்குள் அழுத்தம் கொண்டிருந்ததால் அவர் கூறியதை நிறைவேற்ற உடன் செயல்படத் தொடங்கினேன். பள்ளி மாணவர்கட்கும், இடையிலே கல்வியைத் தொடராது நிறுத்திவிட்ட இளைஞர்கட்கும் பயன்படும் வகையிலும் படிக்க எளிதாக இருக்கும் முறையிலும் எளிய, இனிய எழுத்து நடையில், ஆழிய கருத்துநுட்பப் பொருள்களை எளிய சொற்றொடர் மூலம் விளக்கும் வகையிலும் படங்களோடு உருவாக்கினேன். இதன் மூலம் தமிழில் 'குறும் கலைக் களஞ்சியம்' இல்லையே என்ற மனக்குறை முற்றாக நீக்கப் பட்டுவிட்டது.

முந்தைய ''குழந்தைக் கலைக் களஞ்சியம்' பத்து தொகுதிகளிலும் 25 ஆண்டுகட்கு முன் தயாரிக்கப்பட்டவை. அவைகளில் இடம் பெறாத அண்மைக் கால அறிவியல், சமூகச் செய்திகள் பலவும் இக் குறும சிறுவர் கலைக் களஞ்சியத்துள் இடம் பெற்றுள்ளன என்பது இங்கு கவனிக்கத்

தக்கதாகும். இந்நூல் அமைப்பிலும் வடிவிலும் வண்ணத்திலும் இளம் சிறார்களைப் படிக்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. டபுள் கிரவுன் அளவில் 244 பக்கங்களைக் கொண்ட இக் குறும 'சிறுவர் கலைக் களஞ்சியம்' வண்ணப் படங்களுடன் மீரா பப்ளிகேஷன் வெளியீடாக 1990இல் வெளிவந்துள்ளது. தமிழில் முழுமையாக வெளிவந்த முதல் குறும சிறுவர் 'கலைக் களஞ்சியம்' இதுவேயாகும் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

## இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்

சிறுவர் கலைக் களஞ்சியத்தை வெளியிட்ட அடுத்த ஆண்டே 'இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம்' என்ற பெயரில் இஸ்லாமியக் கலைக் களஞ்சியமொன்றைத் தமிழில் வெளியிட்டார்.

தமிழில் பெரியவர்கட்குப் பயன்படும் வகையில் மூன்று இஸ்லாமியக் கலைக் களஞ்சியப் பெருந் தொகுதிகளைப் பன்னூலாசிரியர் அல்ஹாஜ் எம்.ஆர்.எம். அப்துற்ரஹீம் அவர்கள் சிறப்பாக எழுதி வெளியிட்டார். ஆனால், இஸ்லாமியச் சிறுவர்கட்குப் பயன்படும் வகையில் 'மினி' இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் இல்லையே என்ற ஏக்கத்தைப் போக்கும் வகையில் 'இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சிய'த்தை உருவாக்கி வெளியிட்டுள்ளார் மணவையார். இதைப்பற்றி மணவை முஸ்தபா குறிப்பிடுகிறார்:

''இஸ்லாமிய இளைய தலைமுறையினர் இஸ்லாம் தொடர்பான பல்வேறு செய்திகளை அறியவும் தெளிவு பெறவும் உறுதுணையாய் அமையவல்ல கையடக்க இஸ்லாமியக் கலைக் களஞ்சியமொன்றை உருவாக்க வேண்டும் என்ற பேராவல் பல ஆண்டுகளாக உள்நெஞ்சத்தில் கனன்று கொண்டிருந்தது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று, இஸ்லாமியச் சிறுவர்கள் பல்வேறு காரணங்களால் இளைமையில்இஸ்லாம் குறித்து போதிய அறிவுத் தெளிவு பெற வாயப்பில்லாத நவீன வாழ்க்கைச் சூழலில் வளர்ந்து வர நேர்ந்துள்ளது. இவ்வாறு சின்னஞ் சிறு வயதில் தவிர்க்க முடியாத நிலையில் இஸ்லாமிய அறிவைப் பெற இயலா மற்போன அவர்கள் இஸ்லாமியத் தகவல்களைப் படித்தறிய வேண்டும் என்ற வேட்கையால் உந்தப்பட்டவர்களாக இருப்பதையும் நான் அறிவேன். அவர்கட்கேற்ற எளிய சொல்லாட்சியோடு இனிய நடையில் கையடக்க நூலாகத் தந்தால் அவர்கட்குப் பெரிதும் பயன்படும் என்ற என் உள்ளுணர்வின் விளைவே இந்நூல். அத்துடன் முஸ்லிமல் லாதவர்கட்கும் இஸ்லாமியத் தகவல்களை வேற்று மொழித் தடையின்றித் தமிழில் படித்தறிய எளிதாக இருக்கும் என்பது என் கருத்தாக இருந்தது.''

இளைஞர் இஸ்லாமியக் கலைக் களஞ்சியம் நூலை அல்ஹாஜ் எம்.ஆர். எம். அப்துற்-ரஹீம் அவர்களின் இஸ் லாமியக் கலைக் களஞ்சியத் தொகுதிகளை வழி நூலாகக் கொண்டே உருவாக்கியுள்ளார் மணவையார். இந் நூலின் பயன்பாடு எத்தகையதாயிருக்கும் என்பதை இந்நூலுக்கு வழங்கியுள்ள அணிந்துரையில் பன்னூலாசிரியர் எம்.ஆர். எம். அப்துற்-ரஹீம் அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்:

''குழந்தைகளுக்கான இஸ்லாமியக் கலைக் களஞ் சியம் தமிழ் மொழியில் இல்லாதது ஒரு குறையாகவே இருந்து வந்தது. அதனை நிறைவு செய்யும் வகையில் கலை மாமணி மணவை முஸ்தபா அவர்கள் குழந்தைகள் படித்துப் புரிந்து பயனடைய ஒரு கலைக் களஞ்சியத்தை எளிய, இனிய தமிழில் தயாரித்துள்ளார்கள். இதன் பக்கங்களைத் தேவைப்படும் பொழுது மட்டும் திருப்பிப் பார்க்காமல் ஒரு நாளைக்கு சில பக்கங்கள் வீதம் தொடக்கம் முதல் இறுதி

வரை குழந்தைகள் படித்து முடிப்பார்களாயின் வெகு விரைவில் இஸ்லாத்தைப் பற்றியும் முஸ்லிம் நாடுகள், நக ரங்கள், பெரியார்கள் பற்றியும் கணிசமான அறிவைப் பெறு வார்கள் என்பதில் ஐயமில்லை'' எனத் தெளிவாகவும் திட்ப மாகவும் விளக்கிக் கூறியுள்ளார் பன்னூலாசிரியர்.

இந்நூலுக்கு ஆய்வுரை வழங்கிய பன்மொழிப் புலவர் மௌலவி எம்.அப்துல் வஹ்ஹாப் சாஹிப் அவர்கள், ''முஸ்லிம் சிறார்களுக்கு இலகுவான நடையில் ஒரே தொகுதியாக கலைக் களஞ்சியம் ஒன்று வெளிவந்தால் அது எத்துணைச் சிறப்புடையதாக இருக்கும் என்று பல நேரம் நான் எண்ணிப் பார்த்தது உண்டு. என் எண்ணத்துக்கு ஓர் ஆக்கபூர்வமான வடிவம் கொடுத்தமை போன்று கலை மாமணி மணவை முஸ்தபா அவர்கள், ஓர் ஆழகிய தொகுப்பை வெளியிட்டுள்ளார்கள்'' எனக் குறிப்பிடுவது எல்லா வகையிலும் பொருத்தமுடையதாகும்.

இந்த 'இளைஞர் இஸ்லாமிய கலைக் களஞ்சிய'த்தின் சிறப்புத் தன்மைகளுள் ஒன்று பாரசீக, அரபு, உருதுச் சொற்கள் அதிகம் கலவாமல் நல்ல தமிழில் பொருள் விளக்கம் அமைந்திருப்பதாகும்.

பன்னூலாசிரியரின் இஸ்லாமியக் கலைக் களஞ்சியத் தொகுதிகள் இஸ்லாமியச் செய்தியைச் சொல்ல பாரசீக அரபு, உருது மொழிச் சொற்களை வெகுவாகக் கையாண் டுள்ளதால் அவற்றை முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லா மியச் செய்திகளை அறிய பெரும் இடர்பாட்டுக்காளாயினர். இது தவிர்க்க முடியாததும் கூட. இம்மொழித் தொல்லைகள் ஏதும் இல்லா வண்ணம் வளர் தமிழ்ச் செல்வர் இந்த இஸ்லாமியக் கலைக களஞ்சியத்தை எழுதியுள்ளார். பாரசீக அரபு, உருதுச் சொற்கள் அதிகம் இடம் பெறாவிட்டாலும்

அச்சொற்கள் உணர்த்தும் பொருளை ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிடத் தவறவில்லை.

'செய்வன திருந்தச் செய்' எனும் கொள்கையை உயிர் மூச்சாகக் கொண்ட மணவையார் இஸ்லாமியச் செய்தியாக இருப்பதாலும், இளையோர்க்குரியதாக அமைவதாலும் எந்தத் தவறும் இடம் பெற்றுவிடக் கூடாது என்பதற்காக பன்னூலாசிரியர் எம்.ஆர்.எம். அப்துற்-ரஹீம், மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப் சாஹிப், 'ஜமாத்துல் உலமா' ஆசி ரியர் மௌலவி அபுல் ஹஸன் ஷாதலி முதலிய மார்க்க ஞானச் செல்வர்களால் சரிபார்க்கப்பட்டு, சீர்மை செய்த பின்னரே நூலாக்கியுள்ளார் என்பது இந்நூல் எல்லா வகை யிலும் செப்பமாக அமைய வேண்டும் என்பதில் இவர்க் குள்ள அக்கறையையும் ஆர்வத்தையும் காட்டுகிறது.

இந்நூலுள் கணிசமான எண்ணிக்கையில் தமிழ்நாடு தொடர்பான வலிமார்கள், சூஃபிகள், புலவர்கள் பலரும் இடம் பெற்றுள்ளதோடு, அவர்களின் சாதனைகளும் அவர் தம் வாழ்க்கை வரலாறு வழியே விளக்கிக் கூறியிருப்பது சிறப்பானதாகவுள்ளது.

## இளையர் அறிவியல் களஞ்சியம்

முன்னதாக மணவையார் எழுதி வெளியிட்ட இரு கலைக் களஞ்சியங்கள் வெவ்வேறு பொருள் வகையைச் சேர்ந்ததாகும். இவர் எழுதி வெளியிட்ட மூன்றாவது கலைக் களஞ்சியமான ''இளையர் அறிவியல் களஞ்சியம்'' பல் வேறு வகைகளில் தனித்தன்மை மிக்கதாக விளங்குகிறது. இக்களஞ்சிய உருவாக்கத்திற்கான காரணத்தை விளக்கும் மணவையார்,

''தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் களஞ்சியங்கள் இதுவரை ஒருசில தொகுதிகள் வெளிவந்திருந்தாலும்

அவை பெரியவர்களை மனதிற்கொண்டு உருவாக்கப்பட்ட வைகளாகவே உள்ளன. எனவே, சிறுவர்கட்குப் பெரிதும் பயன்படக்கூடிய அறிவியல் களஞ்சியம் உருவாக்கி வெளி யிடுவதன் மூலம் தமிழில் குறும் ''சிறுவர் அறிவியல் களஞ் சியம்'' இல்லையே என்ற குறையை நீக்க வேண்டும் என்ற மனவுணர்வு எனக்குப் பல்லாண்டுகளாகவே இருந்து வந்தது. சிறுவர்கட்கு மட்டுமல்லாது ஆரம்பப் பள்ளியோடு அல்லது நடுநிலைப் பள்ளிப் படிப்போடு படிப்பை விட்டு விட்டவர்களும், அறிவியல் செய்திகளை மேன்மேலும் அறிந்து கொள்ளவேண்டும் எனும் வேட்கை கொண்ட இளையர், பெரியவர்கட்கும் பயன்படத்தக்க ஒரு குறும் (Mini) அறிவியல் களஞ்சியத்தை உருவாக்கி அறிவியல் வேட்கை கொண்டவர்களின் அறிவுப் பசியைப் போக்க வேண்டுமென விழைந்தேன். அவ்விழைவின் பயனாக உரு வானதுதான் ''இளையர் அறிவியல் களஞ்சியம்'' எனும் இந்நூல்'' எனக்கூறி தெளிவுபடுத்துகிறார். மேலும், நூலின் சிறப்புத் தன்மையை விவரிக்கும்போது,

''முன்பு 'சிறுவர் கலைக் களஞ்சியம்' எனும் பெயரில் ஒரு குறும் (Mini) கலைக் களஞ்சியத்தைச் சிறுவர்க்கென உரு வாக்கி வெளியிட்டேன். அப்போது எனக்குக் கிடைத்த பட்டறிவை அடித்தளமாகக் கொண்டு இந்த அறிவியல் களஞ்சியத்தை உருவாக்கியுள்ளேன். சிறுவர்கள், படிப் பைப் பாதியில் தொடர இயலாமல் விட்ட இளைஞர்கள் ஆகியோரை மனதிக் கொண்டு, அவர்கட்குள்ள சொல் லாட்சித் திறனையும் அறிவியலைப் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் கருத்திற்கொண்டு இந்நூல் உருவாக்கப்பட் டுள்ளது. எளிய சொற்களைக் கொண்டு, சிறுசிறு சொற்றொ டர்கள் மூலம் ஏராளமான படங்களோடு அறிவியல் செய்தி கள் விவரிக்கப்பட்டுள்ளன. இவை படிப்போருக்கு மிக எளி தாக விளங்கவும், அவை படிப்போர் மனதுள் சென்று

தங்கவும் பேருதவியாக அமையும் என்பது திண்ணம்'' எனக் கூறி விளக்குவதோடு ''முந்தைய களஞ்சியங்கள் பலவற்றை முன்மாதிரியாகக் கொண்டு இக்களஞ்சியம் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதில் உள்ள அறிவியல் கட்டுரைகள் என் முப்பதாண்டு அறிவியல் பட்டறிவின் அடிப்படையில் எழு தியிருப்பினும் அந்தந்தத் துறை வல்லுனர்கள் கட்டுரை களைப் பார்வையிட்டு, மாற்ற திருத்தங்கள் செய்த பின்னரே அச்சு வாகனமேறின'' எனக் கூறுவதன் மூலம் எவ்விதப் பொருட் பிழையுமின்றி மிகச் சரியான முறையில் தவறின்றி இருக்கவேண்டுமென்பதில் பெருங் கவனம் செலுத்தியுள் ளது தெளிவாகிறது.

மேற்கூறிய மூன்று குறும் (Mini) கலைக் களஞ்சியங் களும் மூன்று வெவ்வேறு துறைகளைச் சேர்ந்தனவாகும். இவைகளை இவர் பேருழைப்பை நல்கி உருவாக்கியபோ திலும் இம் மூன்று நூல்களுமே அந்தந்தத் துறை சார்ந்த வல்லுனர்களால் தக்கமுறையில் மேற்பார்வையிடப்பட்ட பிறகே வெளிவந்துள்ளன என்பது இவற்றை முழுமையு டைய நூல்களாக வெளிக் கொண்டுவர வேண்டும் என்பதில் இவருக்குள்ள அக்கறையைக் காட்டுகிறது.

1990 முதல் 1994 முடிய நான்கு ஆண்டுகளில் மூன்று கலைக் களஞ்சியங்களைக் கொண்டு வந்து புதுச் சாதனை படைத்த பெருமையும் இவருக்குண்டு. அதிலும் தனியொரு மனிதனின் தனிப்பெரும் முயற்சியாக முகிழ்த்துள்ளது என்பது எண்ணி வியக்கத்தக்கதாக உள்ளது. இஃது இவருக் குள்ள பரந்த நூலறிவுக்கும் தளரா முயற்சிக்கும் அயரா உழைப்புக்கும் கட்டியங் கூறுவன என்பதில் ஐயமில்லை.

இனி, தனித்துவமிக்க இவரது அறிவியல் கலைச் சொல் களஞ்சிய அகராதிகளைப் பற்றிச் சிறிது ஆராய் வோம்.

பள்ளியில் பயிலும்போதே சொல்லாய்வு என்பது இவருக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்காக அமைந்திருந்தது. சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள- பழைய தமிழ்ச் சொற்களை - வழக்கற்றுப்போன பழஞ் சொற்களை - ஓரளவு உருமாற்றி புதிய சொல் போன்று பயன்படுத்துவது இவரது பழக்கமாகும். இப்பழக்கமே நாளடைவில் பழைய வேர்ச் சொற்களைக் கொண்டு பொருத்தமான பகுதி, விகுதி இடை நிலையோடு கூடிய புதுப்புதுச் சொற்களைப் படைப்பது இவருக்குக் கைவந்த கலையாக அமைந்துவிட்டது. அதிலும் அறிவியல் துறையில் பயன் படுத்தப்பட்டு வரும் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கேற்ற புதிய தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்குவது இவருக்கு மிகவும் பிடித்தமான பணியாகும். மிகக் கடினமான பணியை தன் வாழ்வின் தலையாய பணியாகக் கடைப் பிடித்து வருகிறார். இதன்மூலம் தமிழின் தனிப்பெரும் ஆற்றலை வெளிப்படுத்த இயல்வதோடு, இடையிடையே தமிழ் மொழி ஆற்றல் மிகு அறிவியல் மொழியாக அமைந் திருப்பதை முழுமையாக வெளிப்படுத்தி உணர்த்த முடியும் என்பது இவர் கருத்தாகும்.

இவரது கலைச் சொல் உருவாக்கத்துக்கு மாபெரும் உந்து சக்தியாக அமைந்திருப்பது இவரை நிர்வாக ஆசிரியராகக் கொண்டு கடந்த முப்பத்திரண்டு ஆண்டுகளாக வெளி வந்து கொண்டிருக்கும் 'யுனெஸ்கோ கூரியர்' சர்வதேச இதழாகும். இதில் அரசியல் தவிர்த்துள்ள அனைத்துத் துறை செய்திகளும் வெளியிடப்படுகின்றன. அவற்றுள்ளும் அறிவியல் தொடர்பான செய்திகளும் கட்டுரைகளும் முதலிடம் பெறுகின்றன. மேல்நாடுகளில் அண்மையில் கண்டுபிடிக் கப்படும் புதிய புதிய அறிவியல் ஆராய்ச்சிகளை 'யுனெஸ்கோ கூரியர்' இதழ் உடனுக்குடன் உலகுக்கு வழங்குகிறது. முப்பது உலக மொழிகளில் வெளிவரும்

இவ்விதழ் அச்செய்திகள் தமிழிலும் உடனுக்குடன் சொல்ல வேண்டிய கட்டாயச் சூழல். இதனால் ஒவ்வொரு இதழிலும் வெளிவரும் கட்டுரைகளைத் தமிழில் தரும்போது அதில் வரும் கலைச் சொற்களுக்கான தமிழ் நேர்ச் சொற்களை உடனுக்குடன் உருவாக்கிச் சொல்லவேண்டிய தவிர்க்க முடியா நிலை. எனவே அறிவியல் முதலாக உள்ள அத்தகைய தமிழ்க் கலைச் சொற்களை உருவாக்கம் செய்வதில் வல்லவராக - தனித்திறன் பெற்ற சொல்லாக்க வல்லுநராகப் பரிணமித்துள்ளார்.

தென் மொழிகள் புத்தக டிரஸ்ட், அறிவியல் நூல்களையும் தொழில் நுட்ப நூல்களையும் அதிக அளவில் வெளியிட்டபோது அவற்றைத் தயாரித்துப் பதிப்பிக்கும் பொறுப்பேற்றிருந்த மணவையார் அந்நூல்களுக்காக பல நூறு அறிவியல், தொழில் நுட்பக் கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்கிப் பயன்படுத்திய பட்டறிவு அறிவியல் கலைக் சொல் களஞ்சிய அகராதிகளை உருவாக்க பேருதவியாய் அமைந்ததெனலாம்.

இவரது கலைச் சொல் களஞ்சியங்கள் ஒரு புதுவகையான நூல்களாகும். எதிலும் தனக்கென ஒரு தனித்துவப் போக்கைக் கையாண்டு புதியன புனையும் போக்குடைய மணவையார் இதிலும் தனித்துவமுடைய புதுமையைப் புதுக்கியுள்ளார் என்றே கூற வேண்டும்.

இவரால் உருவாக்கப்பட்ட கலைச் சொல் களஞ்சியங்கள் அனைத்தும் அகராதிப் போக்கையும் கலைக் களஞ்சியங்களுக்குரிய அடிப்படையையும் ஒருங்கே கொண்டவைகளாக அமைந்துள்ளன.

அகர வரிசையில் அமைந்துள்ள ஆங்கில அறிவியல் கலைச் சொல்லுக்கு நேர்த் தமிழ்க் கலைச் சொல்லைச்

சொல்லும் போது அகராதித் தன்மையைப் பெறுகிறது. அதோடு இவர் அமையாது, தொடர்ந்து சொல் விளக்கத்தையும் பொருள் விளக்கத்தையும் விரிவாகக் கூறி விளக்கி, அதற்குக் கலைக் களஞ்சியத் தன்மையைத் தருகிறார். இவ்வாறு இருவகைத் தன்மைகளையும் ஒருருவாய்க் கொண்டு அமைந்து, தமிழுக்கு ஒரு புதுவகையான நூற்களை அறிமுகம் செய்து புதுமை படைக்கிறார் மணவையார்.

இவரது கலைச் சொல் களஞ்சிய அகராதிகளில் காணும் மற்றொரு சிறப்புத்தன்மை, அவை ஏராளமான படங்களோடு அமைந்துள்ளதாகும். போதிய அளவு படிப்பறிவோ அறிவியல் அறிவோ அழுத்தம் பெறா நிலையில் உள்ளவர்கட்கு படங்கள், பட விளக்கங்களோடு அறிவியல் செய்திகளைக் கூறுவதன் மூலம்தான் அவர்கட்கு உரிய முறையில் அறிவியல் அறிவைப் புகட்ட முடியும் என்பதில் அழுத்தமான கொள்கையுடையவர் மணவையார். அக் கொள்கைக்கேற்பவே இவரது அறிவியல் கலைச் சொல் களஞ்சிய அகராதிகள் அமைந்துள்ளன.

இவ்வகையில் இவர் இதுவரை ஐந்து கலைச் சொல் களஞ்சிய அகராதிகளை வெளியிட்டுள்ளார். அவை யாவன:-

1. அறிவியல் கலைச் சொல் களஞ்சியம் (முதல் பாகம்)

2. அறிவியல் கலைச் சொல் களஞ்சியம் (இரண்டாம் பாகம்).

3. மருத்துவ, அறிவியல், தொழில் நுட்ப கலைச் சொல் களஞ்சிய அகராதி.

*4. மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம் (முதல் பாகம்).*

*5. கணினி கலைச் சொல் களஞ்சியம்.*

*ஆகிய ஐந்து நூல்களாகும்.*

*தொடக்கமாக வெளியிட்ட முதல் இரண்டு நூல்கள் சுமார் ஐம்பத்தி நான்கு அறிவியல், தொழில் நுட்பப் பிரிவு கட்கான கலைச் சொற்களையும் பொருட் விளக்கத்தையும் கொண்டு அமைந்துள்ளன. ஆனால் இவைகளில் படங்கள் ஏதும் இடம் பெறாதது இவருக்குப் பெரும் குறையாக இருந்திருக்க வேண்டும். எனவேதான் அவர் அடுத்து வெளி யிட்ட கலைச் சொல் களஞ்சிய அகராதியில் முந்தைய இரு நூல்களின் சொற்கள், சொல் விளக்கங்கள், பொருள் விளக் கங்களைக் குறைத்தும் கூட்டியும் மாற்றியும் திருத்தியும் அமைத்தார். மேலும், நூலை விரிவுபடுத்தியதோடு ஏராள மான எண்ணிக்கையில் படங்களையும் இணைத்து பெரு நூலாக வெளியிட்டார். நூலை விரிவுபடுத்தியது போலவே அதன் தலைப்பையும் விரிவுபடுத்தி, 'மருத்துவ அறிவியல் தொழில் நுட்பக் கலைச் சொல் களஞ்சிய அகராதி' என அமைத்தார்.*

*தன் முதல் கலைச் சொல் களஞ்சிய நூலின் முன்னு ரையிலேயே தான் எந்த நோக்கத்தில் எதிர்பார்ப்புடன் இந்நூல் எழுதி வெளியிடப்பட்டுள்ளது என்பதை விளக்கும் போது,*

*''சாதாரண கலைச் சொல் அகராதிகளினின்று இஃது சற்று வேறுபட்டது. ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்க் கலைச் சொற்களைக் கொடுப்பதைவிட அச்சொல்லின் செயற்பாட்டு வினை சற்று விரிவாக விளக்கப்பட்டுள்ள*

ளது. இதன் மூலம் சொற் பொருள் விளக்கம் பெற இயல்கின்றது. இதனால் இதனினும் சுருங்கிய வடிவிலான சொற்செட்டும் பொருட் செறிவுமுடைய நயமிக்கக் கலைச் சொற்களை ஆர்வமுடையவர்கள் நாளை உருவாக்க முற்படலாம்'' எனக்கூறி புதிய சொல்லாக்க முயற்சிகளுக்குத் துணைபோக, தான் துடிப்பதை வெளிப்படுத்துகிறார்.

வேறொரு முக்கிய நோக்கத்தையும் உட்கொண்டதாகத் தன் முயற்சி அமைந்திருப்பதை தன் முன்னுரையில் தொடர்ந்து,

''ஒவ்வொரு கலைச் சொல்லின் வாயிலாக அறிவியல் தகவல்களைத் துணுக்குச் செய்திகளாக வாசகர்களுக்கு வழங்க வேண்டும் என்பது எனது நோக்கமாகும். ஏனெனில், இன்றைய சூழ்நிலையில் விரிவான அறிவியல், தொழில் நுட்பச் செய்திகளைக் கட்டுரை வாயிலாகப் படித்தறியும் பொறுமையும் நேரமும் மிகக் குறைவாகவே உள்ளது. அவற்றை ஒருசில வரிகளில் செய்தித் துணுக்குகளாகத் தரும்போது ஒருசில வினாடிகளில் படித்தறிய மனம் விரும்புவது இயல்பு. அவ்வகையில் அறிவியல் செய்திகளை வாசகர்களுக்கு வழங்கவே இந்நூல் கலைக் களஞ்சிய வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது'' என்று மணவையார் கூறியுள்ளது நூலின் அமைப்புச் சிறப்பை மட்டுமல்ல; நூலின் நோக்கத்தையும் தெளிவாகவே உணர்த்துவதாகவுள்ளது. இம்முறையில் தமிழில் வெளிவந்த முதல் கலைச் சொல் களஞ்சிய அகராதிகள் என்ற தனிச் சிறப்பையும் இந்நூல்கள் பெறத் தவறவில்லை.

இவரது ''மருத்துவ, அறிவியல், தொழில் நுட்ப கலைச் சொல் களஞ்சிய அகராதி'' மூன்றாவது கலைச் சொல் களஞ்சியமாக அமைந்திருப்பதோடு ஓரளவு முழு

மையானதாகவும் சோதனைக்கள உரைகல்லாகவும் அமைந் துள்ளதெனலாம்.

'மருத்துவக் கலைச் சொல் களஞ்சியம்' உருவாக்க வேண்டும் என்பது இவரது நீண்டநாள் கனவு. அதில் எந்த அளவுக்கு வெற்றி பெற முடியும் என்பதை செயல்பூர்வமாக உணர்ந்து தெளிய தன் மூன்றாவது கலைச் சொல் களஞ்சிய அகராதியில் ஐந்து விழுக்காடு மருத்துவக் கலைச் சொற்களை உருவாக்கி வெளியிட்டார். மருத்துவக் கலைச் சொல்லாக்கமும் சொல், பொருள் விளக்கமும் தன்னால் உரிய முறையில் தர முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு வலுவாக ஏற்பட்டதன் விளைவாக இரண்டே ஆண்டுகளில் ''மருத்துவக் கலைச் சொல் களஞ்சிய'' நூலை வெளியிட்டார். மருத்துவத்துறையின் பதினைந்து பிரிவுகட்கான கலைச் சொற்களையும் பொருள் விளக்கங்களையும் படங்களோடு விளக்கும் பெரு நூலாக வெளிவந்து இவருக்கு புகழ் சேர்த்தது. சிறந்த அறிவியல் நூலுக்கான தமிழ்நாடு அரசின் பரிசையும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க, குன்றக்குடி அடிகளாரின் நினைவுப் பரிசையும் ஒரு சேரப் பெற்றுள்ளது. இந்நூல் தமிழில் மட்டுமல்ல இந்திய மொழி களிலேயே முதலாவது நூல் என்பதை,

''ஆங்கிலத்தில் இவ்வகையான அகராதி, களஞ்சிய நூல்கள் பல இருப்பினும் இந்திய மொழிகளுள் இதுவே முதலாவதான முயற்சியாய் இருக்கக் கூடும் என்று நம்பு கிறேன்'' என இந்நூலை ஆய்வு செய்த எம்.ஜி.ஆர். மருத் துவப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர். லலிதா காமேஸ்வரன் கூறியிருப்பது முற்றிலும் சரியான கணிப்பாகும்.

அது மட்டுமல்ல, இம் மருத்துவக் கலைச் சொல் களஞ்சியத் தயாரிப்பு தனி மனிதனின் இமாலயச் சாதனை

என்பதை டாக்டர் லலிதா காமேஸ்வரன், அவர்கள் கூறி யுள்ளார்கள்.

''மருத்துவப் பல்கலைக் கழகங்களும் வல்லுனர் குழுவும் செயல்பட்டு உருவாக்கப்பட வேண்டிய ஒரு 'கலைச் சொல் தொகுப்பு' நூலைத் தனியொருவராக முயன்று, பாராட்டத்தக்க முறையில் நிறைவேற்றியிருப்பது தமிழரனைவர்க்கும் மகிழ்ச்சி தரக்கூடியது. துறை வல்லுனர் கள்கூட அவரவர் துறைகளில் தான் சிந்தனையாளராகத் திகழ முடியும். ஆனால், பல மருத்துவப் பிரிவுகளுக்கு உரிய கலைச் சொல்லாக்கங்களைக் கண்டிருப்பதன் மூலம் இம் முயற்சியில் திரு. மணவை முஸ்தபா அவர்கள் தமிழறி வுடன் மருத்துவ அறிவையும் எவ்வளவு ஆழ்ந்து நுணுகிக் கற்றுத் தேர்வு பெற்றுள்ளார் என்பது அனைவரையும் வியக்க வைக்கிறது'' என்று கூறி மணவையாரின் அறிவாற்ற லையும் சொல்லாக்கத் திறனையும் மனம் திறந்து பேசுவ தோடு மருத்துவக் கலைச் சொல் களஞ்சியத்தில் மொழிப் பயன்பாடு எத்தகையாதயமைந்துள்ளது என்பதை,

''மருத்துவச் சொற்களை திட்ப நுட்பத்துடன் தமிழில் சொல்ல முடியும் எனக் காட்டியிருப்பதுடன், சொற்சொட் டுடன் பொருட் செறிவும் ஒருசேர, அவற்றுடன் இலக்கிய மெருகும் ஏற்றி சுவைபட அறிவியல் செய்திகளைத் தமிழில் சொல்லலாம் என்பதற்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டு. மொழிக்கு மட்டும் முதன்மை தராமல் மருத்துவப் பொருள றிவை விளக்கவல்ல துணைக் கருவியாக மொழியைக் கையாளும் பாங்கால், மருத்துவச் செய்திகளை ஆற்றலுடன் ஆசிரியரால் விளக்க முடிகிறது. இதற்காகத் தவிர்க்க முடி யாத இடங்களில் ஆசிரியர் தனித்தமிழ்ப் போக்கினைக்கூட நழுவவிட வேண்டிய நிலை உருவாகிறது'' எனக் கூறி அறி வியலைப் பொருத்தவரை பொருளுக்கு உரிய இடம் என்ன

என்பதையும் அப்பொருளை விளக்கப் பயன்படும் துணைக் கருவியான மொழிக்குரிய இடம் எது என்பதையும் மிகத் தெளிவாகச் சிந்தித்து, வரைமுறையான கொள்கை - கோட்பாடுகளை வகுத்துச் செயல்படும் அறிவியல் தமிழ் ஆக்கச் சிந்தனையாளராகச் செயல்பட்டு புது வரலாறு படைத்து வருகிறார்.

அரசும் பல்கலைக் கழகங்களும் செய்யத் தவறிய செய்ய முடியாதிருக்கும் பணியை தனியொரு மனிதராக, நண்பர்களின் உறுதுணையோடு நிறைவேற்றி சாதனை படைத்து வருகிறார்.

வளர் தமிழ்ச் செல்வர் மணவை முஸ்தபாவைப் பொருத்தவரை தனக்கென தனி வழி வகுத்துச் செயல்படு பவர். 'காலத்தின் போக்குக்கும் தேவைக்கும் ஏற்ப தமிழ்ப் பணி அமைய வேண்டும். தமிழில் எவை எவையெல்லாம் இல்லையோ அவைகளையெல்லாம் உருவாக்கித் தமி ழுக்குத் தரவேண்டும்; எவையெல்லாம் தமிழில் சொல்ல இயலாது எனக் கூறப்படுகிறதோ அவையெல்லாம் தமி ழால் சொல்ல முடியும் என எண்பிக்க வேண்டும்' என்பதில் அழுத்தமான மனப்போக்குடையவர்.

இதனை நிறைவேற்ற இவரொத்த அறிவாற்றலும் செயல்திறனுமிக்க நண்பர்களின் உறுதுணையைத் தேடிப் பெற இவர் தவறுவதே இல்லை. அவ்வகையில் இவருக்குப் பல்லாண்டுகளாக உறுதுணையாக அமைந்து வருபவர் தமிழ் வளர்ச்சித் துறையின் துணை இயக்குநராக இருந்த திரு. இரா. நடராசன் அவர்கள். மணவையாரின் கல்லூரிக் கல்வியின்போது வகுப்புத் தோழராக இருந்த திரு. இரா. நடராசன் இவருக்கு ஒருநாள் பிந்திப் பிறந்தவர். இவர் முயற்சிகளுக்கு உறுதுணையாயிருப்பதில் பெருமகிழ்வடை பவர். மணவையாரின் வாழ்க்கை வரலாற்றை ''காலம்

தேடிய தமிழனின் அறிவியல் தமிழ் வரலாறு'' என்ற பெயரில் நூல் எழுதியதன் வாயிலாக மிகுபுகழ் பெற்றவர். மற்றும் ராஜாராம் மோகன்ராய் நூலகத்திட்ட அலுவலர் திரு.இரா. இராமசாமி மணவையாருக்கு உறுதுணையாக இருந்து வரும் மற்றொரு நண்பர். மற்றும் தான் உருவாக்கும் பல்வேறு துறை சார்ந்த அறிவியல் நூல்களுக்கேற்ப அறி வியல் வல்லுநர்கள் பலரையும் அவ்வப்போது பயன்ப டுத்திக் கொள்ள தயங்கியதே இல்லை.

எத்துறைத் தொடர்பான நூலாயினும் அந்நூல் தவ றின்றிச் செம்மையாக அமைய வேண்டும் என்பதில் என்றுமே கண்ணுங் கருத்துமாக இருந்து வருபவர் திரு. மணவை முஸ்தபா என்பதற்கு இவையெல்லாம் சான்று களாக அமைந்துள்ளன.

★

# மொழி பெயர்ப்புப் பணியில் மணவையார்

அமுதன்

மணவையாருக்கு இயல்பாக ஏற்பட்டிருந்த தமிழார் வமும் தமிழ்ப் பற்றும் தமிழுக்கு ஆக்கம் தேடும் உணர்வாக முகிழ்த்தெழுந்ததில் வியப்பொன்றுமில்லை. தமிழ்ப் பணிக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள முனைந்த போதே, அதற்குரிய ஆரம்ப வழியாக மணவையார் மனதிற் பட்டது மொழிபெயர்ப்புத் துறையே யாகும்.

பிறமொழிகளிலிருந்து அறிவுச் செல்வங்களை யெல்லாம் தமிழ் மொழியில் பெயர்க்கப் பணித்த ''பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த் தல் வேண்டும்'' என்ற முண்டாசுக் கவிஞனின் பாடல் வரிகள் மணவையாரின் உள்ளத்தில் ஒலித்துக் கொண்டே இருந்திருக்க வேண்டும்.

கல்லூரியில் படிக்கும்போதே மலையாள மொழி யையும் கற்றுத் தேர்ந்தார். பின்னர், மலையாள மொழிக் கதைகளையும் கட்டுரைகளையும் தமிழில் பெயர்த்து இதழ் களுக்கு அனுப்பி வெளியிடச் செய்தார். இதன் மூலம் மொழிபெயர்ப்புப் பிரச்சினைகளை நேரடியாகச் சந்திக் கவும் அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டறியவுமான வாய்ப்பு இவருக்கு நேரடியாகக் கிடைத்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற போது அறிவியல் மூலமாக பிற துறை சார்ந்த தகவல்களைத் தமிழில் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனை அவருக்கு எப்போதும் இருந்து வந்துள்ளது. அதிலும், வேகமாக வளர்ச்சி பெற்றுவரும், அறிவியலைத் தமிழில் தருவதற் கான முயற்சிகளில் ஈடுபட்டு வந்தாரென்றே சொல்லவேண் டும். ஆங்கில நூல்களைப் படிக்கும்போது, அவற்றைத் தமிழில் பெயர்த்துச் சொல்லிப் பார்ப்பது அவர் வழக்கம். சில சமயம் தமிழில் எழுதிப் பார்ப்பதுமுண்டு. இவற்றால் மொழிபெயர்ப்புத் திறமை இவர் அறியாமலேயே இவருள் கனிந்து கொண்டிருந்தது.

மலையாள மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்ப் பதற்கும் ஆங்கில மொழியிலிருந்து தமிழில் பெயர்ப்ப தற்கும் நிறைய வேறுபாடுகள் இருப்பதை நன்கு உணர்ந்து தெளிந்திருந்தார். இதற்கு மொழியமைப்பு வேறுபாடுகள் மட்டுமல்லாது பொருள் வாரியாக வேறுபாடுகள் இருப்ப தையும் நன்கு அறிந்தே யிருந்தார். இந்தப் பட்டறிவுதான் அவர் பணியில் சேர பேருதவியாயமைந்தது எனலாம்.

இவர் தென்மொழிகள் புத்தக நிறுவனம் பதிப்பாசி ரியர் பணியில் சேர நேர் காணலுக்குச் சென்றார். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஏ. இலட்சுமணசாமி முத லியார், வேங்கடேசுவர பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. கோவிந்தராஜுலு, டிரஸ்ட் பொது மேலாளர் திரு. சுந்தாராஜ் நாயுடு, செயலாளர் திரு. சேஷாத்திரி, குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா ஆகியோர் அமர்ந்திருக்க நேர்காணல் நடைபெற்றது.

நேர் காணலின்போது டிரஸ்ட் பொது மேலாளர் திரு. சுந்தரராஜு நாயுடு "Bread for early days" என்ற ஆங்கிலத் தலைப்புக்கேற்ற தமிழ்த் தலைப்பை தருமாறு வேண்டி

னார். ''இளமையில் வறுமை'' அல்லது ''இளமைப் போராட்டம்'' என்று தலைப்பு அமையலாம் என மணவை முஸ்தபா உடன் பதில் கூறினார். இரண்டு தலைப்புகளுமே அவர்கட்கு உடன்பாடாயினும் இரண்டாவது கூறிய தலைப்பே அவர்கட்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. அந்த நூலுக்குத் தலைப்பு வைப்பதில் அதுவரை அவர் கட்குள் தடுமாற்றம் இருந்து வந்தது என்பதும், மணவை முஸ்தபா தந்த ''இளமைப் போராட்டம்'' என்ற தலைப்பே அந்த நூலுக்குத் தரப்பட்டது என்பதும் பின்னர் மணவையா ருக்குக் கிடைத்த தகவலாகும். இவ்வாறு அவரது மொழி பெயர்ப்புத் திறனே இவரை உரிய முறையில் இனங்காட் டவும் பணியில் சேரவும் உதவியது என்பது குறிப்பிடத் தக்கது.

இவர் பணியில் சேர்ந்த பிறகுதான் தென் மொழிகள் புத்தக டிரஸ்ட் அமைப்பின் முழுப்பணியும் மொழிபெயர்ப் பையே மையமாகத் கொண்டது என்பது மணவையாருக்குப் புலனாகியது. அவரைப் பொருத்தவரை அஃது சர்க்கரை பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போன்ற நிகழ்வாகும்.

இவர் தென் மொழிகள் புத்தக நிறுவனப் பதிப்பாசி ரியர் பணியில் சேர்ந்தவுடனேயே இவரிடம் நான்கு மொழி பெயர்ப்பு நூல்கள் மூன்று மாதங்களுக்குள் அச்சிட்டாக வேண்டும் என்ற கண்டிப்புடன் கொடுக்கப்பட்டிருந்தது. அவை முன்னரே மற்றவர்களால் மொழி பெயர்க்கப்பட்டி ருப்பினும் அவைகளை உரிய முறையில் ஆங்கில மூலத் தோடு ஒப்பிட்டாய்ந்து செப்பனிட்டு அச்சிட வேண்டிய கடப்பாடு இவருக்கு இருந்தது. அந்நான்கு நூல்களில் ஒரு நூல் ''கோயிற் கலையும் சிற்பங்களும் (Temple Art and Architecture) என்பதாகும். பி.ஆர். சீனிவாசன் என்பவர் எழுதி யது. ஒரு முஸ்லிம் இந்து சமயச் சார்புடைய நூலைச் செப்ப

னிட்டு அச்சிடுவதில் நூலாசிரியர்க்கு உடன்பாடில்லை. அவர் டிரஸ்ட் தலைவரிடம் இதைப் புலப்படுத்த, டிரஸ்ட் தலைவர் மணவை முஸ்தபா திறமையுடையவர் என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் திரு. பி.ஆர். சீனிவாசனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இறுதியில் முஸ்தபாவை சந்தித்துப் பேசும்படி கேட்டுக் கொள்ளவே, அவர் முஸ்தபாவைச் சந்தித்து அதுவரை செப்பனிட்ட மொழி பெயர்ப்புப் பகுதிகளை ஆராய்ந்து பார்த்தபோது, அஃது மிகச் சிறப்பாகச் செய்யப்பட்டிருப்பதை அறிந்து மகிழ்ந்து போனார். டிரஸ்ட் தலைவரிடம் தன் திருப்தியைத் தெரிவித்துவிட்டுச் சென்றார். முழு நூல் அச்சிட்டு வெளிவந்தவுடன் தனது நூல் சமயச் சார்பான நூலாக இருந்தபோதிலும் எப்படியெல்லாம் மொழிபெயர்ப்பு செப்பனிடப்பட்டு, தன் நூலுக்குப் புதுமெருகூட்டப்பட்டிருக்கிறது என்பதையும் மொழி பெயர்ப்பு என்ற உணர்வே இல்லாமல் தமிழில் மூலமாக எழுதப்பட்ட நூலாகத் திறம்பட சீரமைத்துச் செப்பமாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் விவரித்து நீண்ட கடிதம் டிரஸ்ட் தலைவருக்கு அனுப்பியிருந்தார். அந்தக் கடிதம் மணவையாரின் மொழிபெயர்ப்புத் திறனையும் செப்பனிட்டு அச்சிடும் ஆற்றலையும் முழுமையாக உணர்த்தியது. இதன் மூலம் மொழி பெயர்ப்புத் திறனாளர் என்ற முத்திரை இவர் மீது விழுந்தது.

டிரஸ்ட் அதிகாரிகளுக்குத் தன் மீது ஏற்பட்டுள்ள நல்லெண்ணத்தை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள விழைந்தார். மொழி பெயர்ப்புப் பணியையே உயிர் மூச்சாகக் கொண்டு இயங்கும் டிரஸ்ட், மொழி பெயர்ப்புத் திறனை வளர்க்கும் பொருட்டு தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளில் மூன்று மாத மொழி பெயர்ப்புக் கருத்தரங்கு பயிற்சிப் பட்டறை நடத்த வேண்டும் என புது

திட்டத்தை மணவையார் தந்தார். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்த டிரஸ்ட், இத்திட்டத்தை ஏற்றுச் செயல்படுத்தியது. மூன்றுமாத மொழி பெயர்ப்பு பயிற்சி வகுப்புத் திட்டத் தலைவராக திரு.பெ.ந. அப்புசாமி நியமிக்கப்பட்டார். தமிழுக்குப் பொறுப்பாளராகப் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாரும் அவருக்குத் துணைவராக மணவையாரும் நியமிக்கப்பட்டனர். ஒரு மணி நேரக் கருத்தரங்கும் ஒரு மணி நேரம் பயிற்சி வகுப்புமாக மூன்று மாத காலம் நாள்தோறும் மாலை நேரத்தில் நடைபெற்றது. அதில் பங்கேற்றவர்களில் நானும் ஒருவன். மொழி பெயர்ப்புச் சிக்கல்களைத் திறம் பட விவரித்து, அவற்றிற்கான தீர்வுகளைச் சொல்லி சிறந்த மொழி பெயர்ப்பு எவ்வாறு அமையலாம் என்பதை மணவையார் விவரிப்பதே சுவையாக இருக்கும். பன்மொழிப் புலவர் கா அப்பாதுரையார் பங்களிப்பும் மறக்க முடியாததாகும்.

மொழிக்கும் முந்தையது மொழிபெயர்ப்பு எனக் கூறும் மணவையார் குழந்தைப் பருவம் முதலே மொழி பெயர்ப்புத் தொடங்குகிறது என்கிறார்.

''நுணுக்கமாக நோக்கும்போது மொழி பெயர்ப்பானது உணர்வு பெயர்ப்பு, கருத்துப் பெயர்ப்பு என்ற வகையில் மழலைப் பருவம் முதற்கொண்டே தொடங்கிவிடுகிறதெனலாம்'' என்பது அவர் கருத்து.

அது மட்டுமல்ல, மொழி பெயர்ப்பு என்பது பிற மொழிகளிலிருந்து தமிழில் பெயர்ப்பது மட்டுமல்ல; வழக்கொழிந்த சங்ககாலத் தமிழை இக்கால மொழிக்கு மாற்றுவதும் ஒருவகை மொழி மாற்றப் பெயர்ப்புத்தான் என்கிறார். சங்க காலத் தமிழையும் இக்காலத் தமிழாக்கும் இம்மொழிமாற்றப் பணிபற்றி,

''பண்டைக் காலத்தையும் இக்காலத்தையும் இணைப் பதற்கும் மொழி பெயர்ப்பே பெருந்துணையாக அமைகிறதெனலாம். சான்றாக, சங்க காலத் தமிழ் வேறு, இக்கால வழக்கிலுள்ள தமிழ் வேறு. பொருள் புரியாத பல சங்க கால இலக்கியச் சொற்களை இக் கால வழக்குச் சொற்களுக்கு மாற்றினாலொழிய அவற்றின் திரட்சியான பொருளை முழுமையாக விளங்கிக் கொள்ள முடிவதில்லை. எனவே, முற் காலச் சிந்தனைகளை இக்காலச் சிந்தனைகளோடு இணைப்பதற்கும் மொழி பெயர்ப்புத் தேவைப்படு கிறது''

எனத் தெளிவுபடுத்துகிறார்.

'ஒரு மொழியில் இருப்பவற்றை மாற்றொரு மொழி யில் தருவது மொழி பெயர்ப்பு' என்ற கண்ணோட்டமே பல தரப்பட்டோரிடம் இருந்து வருகிறது. இது முழுமையான தொரு கருத்தோட்டமாக இருக்க இயலாது என்பது இவர் எண்ணம்.

''எல்லாத் துறை, பொருள்பற்றிய செய்திகளை ஒரே மாதிரியான போக்கில் மொழி பெயர்க்க முடியாது; கூடாது. அவ்வாறு செய்ய முற்பட்டால் அது பெருந்தவறாக முடியும் என்பது இவர் கருத்து. இதை மேலும் விவரிக்கும் போது ''நாம் தரையில் நடப்பதற்கும் சரிவான மலைப் பாதையில் நடப்பதற்கும், நீரில் நடப்பதற்கும் வேகமாக ஓடும் ஆற்று நீரில் நடப்பதற்கும், மணலில் நடப்பதற்கும் பாறையில் நடப்பதற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உண்டு. அதைப் போன்றே உரைநடை இலக்கியங்களை மொழிபெயர்ப்ப தற்கும் கவிதை இலக்கிய நூல்களை மொழிபெயர்ப் பதற்கும் அறிவியல், தொழில்நுட்ப நூல்களை மொழிபெ யர்ப்பதற்கும் நுணுக்கமான வேறுபாடுகள் நிரம்ப உண்டு.

அத்தகைய நுட்ப முறைகளைப் பின்பற்றி மொழி பெயர்ப்புப் பணியைச் செய்வதன் மூலமே சிறந்த மொழி பெயர்ப்பைப் பெற முடியும்.''

எனக் கூறுவதோடு அமையாது, தான் வகுத்துள்ள மொழி பெயர்ப்புக் கலையின் நுட்ப முறைகளின் அடிப்படையில் மொழிபெயர்ப்பைப் பன்னிரண்டு வகையாக வகுத்தளித்து வழிகாட்டியுள்ளார் மணவையார் அவையாவன :-

1. சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு
   (Literal Translation)
2. வரையறையற்ற மொழிபெயர்ப்பு
   (Free Translation)
3. பொது மக்களார்வ மொழிபெயர்ப்பு
   (Popular Translation)
4. துல்லியமான மொழிபெயர்ப்பு
   (Accurate Translation)
5. மொழியாக்கம்
   (Transcreation)
6. விரிவான மொழிபெயர்ப்பு
   (Magnified Translation)
7. சுருக்க மொழிபெயர்ப்பு
   (Abridged Translation)
8. தழுவல் மொழிபெயர்ப்பு
   (Adopted Translation)
9. திரைப்பட மொழி மாற்றப் பெயர்ப்பு
   (Dubbing Translation)

10. திரைப்படச் சாரப் பெயர்ப்பு
(Sub-title Translation)

11. கருவி மொழி பெயர்ப்பு
(Machine Translation)

12. சிறுவர்க்கான மொழிபெயர்ப்பு

எனப் பன்னிரண்டு வகைகளாகப் பிரித்துக் கொண்டு, அவ்வத்துறை அல்லது பொருள்பற்றிய மொழி பெயர்ப்பை எம்முறையில் செய்வது என்பதையெல்லாம் 'மொழி பெயர்ப்பும் ஒலி பெயர்ப்பும்' என்ற நூலிலும் 'காலம் தேடும் தமிழ்' என்ற நூலிலும் பல்வேறு எடுத்துக் காட்டு களுடன் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இவ்விரு நூல்களும் மொழிபெயர்ப்புத் துறையினர்க்கு வேதப் புத்த கங்களைப் போல் விளங்கி வழிகாட்டி வருகின்றன.

இஃதன்னியில் ஒரு மொழிபெயர்ப்பாளனுக்கு இன்றி யமையாது தேவைப்படும் தகுதிப்பாடுகள் என்னென்ன என்பதையும் இவரளவுக்குத் தெளிவாகக் கூறி விளக்கிய வர்கள் யாரும் இல்லை எனத் துணிந்து கூறலாம்.

முழுக்க முழுக்க மொழிபெயர்ப்பு இதழாக வெளி வந்து கொண்டிருக்கும் ''யுனெஸ்கோ கூரியர்'' சர்வதேசத் தமிழ்த் திங்களிதழ், இவரது மொழிபெயர்ப்பு முறைகளை அடியொற்றியே பெயர்க்கப்படுவதால் மூலச் செய்தி சிதை வேதும் இன்றி, மூலமாகத் தமிழில் எழுதப்பட்டவை போன்ற தோற்றத்தை வாசகர்களிடையே வழங்கி வருகிறது. 'யுனெஸ்கோ கூரியர்' 30 உலக மொழி இதழ்களில் நான்கா வது இடத்தைப் பெற்றதற்கான அடிப்படைக் காரணங்களில் இம்மொழிபெயர்ப்பு உத்தியும் ஒரு காரணமாகும்.

ஒரு சிறந்த மொழிபெயர்ப்பாளனின் மொழிபெ யர்ப்புச் செயற்பாடுகள் எப்படி இருக்க வேண்டும்

என்பதைப் பற்றி மணவையார் குறிப்பிடுவதைப் பார்ப் போம்.

''மொழி பெயர்ப்பில் மூல ஆசிரியனின் கருத்துக்கும் உணர்ச்சிக்கும் இடமிருக்க வேண்டுமே தவிர நமக்கேற் படும் விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் எழும் கருத் துகளுக்கோ உணர்ச்சிகளுக்கோ சிறிதும் இடமிருத்தல் கூடாது. சுருங்கச் சொன்னால் கூடுவிட்டுக் கூடு பாய்வது போல் மூல நூலாசிரியன் வாசகர்களோடு உறவாட வேண்டுமே தவிர, நாம் மூல ஆசிரியன் வாயிலாக வெளிப் பட எக்காரணம் கொண்டும் முயல்தல் கூடாது.

தொடர்ந்து விவரிக்கும்போது,

''இன்னும் நுட்பமாகக் கூறுமிடத்து மொழி பெயர்ப் பில் மூல நூலாசிரியன் கொண்டிருக்கும் மனப்பான்மை, மொழித் திறம், நடைச் சிறப்பு, கருத்து வளம், சொல்லும் உத்தி ஆகியவற்றைச் சிறிதும் பிறழாமல் அப்படியே உள்ளது உள்ளவாறே பிரதிபலிக்க முயலவேண்டுமே தவிர, மாறுபட்ட முறையில் தனது மொழிப் புலமை, நடைத் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்த விழையும் முறையில் முக்கியத்துவம் பெற முயல்வது விரும்பத்தக்கதல்ல''.

இவர் இதுவரை ஆங்கிலத்திலிருந்தும் மலையாள மொழியிலிருந்தும் பத்துக்கு மேற்பட்ட நூல்களை மொழி பெயர்ப்பு செய்துள்ளார். நூறுக்கு மேற்பட்ட பல்பொருள் மொழிபெயர்ப்பு நூல்களை செப்பம் செய்து அச்சிட் டுள்ளார். சர்வதேச மொழி பெயர்ப்பு மாத ஏடான 'யுனெஸ்கோ கூரியர்' இதழை கடந்த 32 ஆண்டுகளாக நிர்வாக ஆசிரியர் பொறுப்பேற்று செயல்பட்டு வருவதன் மூலம் நூற்றுக்கணக்கான கட்டுரைகளை மொழிபெயர்த்தும் ஆயிரக்கணக்கான கட்டுரைகளைச் செப்பம் செய்தும்

மொழிபெயர்ப்பு அனுபவ நிறைகுடமாக விளங்கி வருகிறார்.

தான் பெற்ற அனுபவங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும் மொழிபெயர்ப்புத்துறையைக் கட்டுக் கோப்பான கொள்கை, கோட்பாடு, விதி முறைகளோடு வளர்க்கவும் தனித்த முறையில் தன்சொந்தச் செலவில் மறைந்த தமிழ்நாடு அரசு கல்வித்துறைச் செயலாளர் திரு.கா. திரவியம் தலைமையில் முழுநாள் மொழி பெயர்ப்புக் கருத்தரங்கை சென்னையில் நடத்தினார். காலை முதல் மாலை வரை நடைபெற்ற இக்கருத்தரங்கில் மொழி பெயர்ப்புப் பட்டறிவுமிக்க பன்னிரண்டு வல்லுநர்கள் கலந்து கொண்டு கருத்துகளை வழங்கி பிரச்சினைகளை அலசி ஆராய்ந்தனர். மொழிபெயர்ப்புச் சிக்கல்களைத் தக்கவர்களைக் கொண்டு ஆய்ந்த முதல் தொழில் நுட்பக் கருத்தரங்கு என்ற சிறப்பும் இதற்கு உண்டு. இதற்கு முழுக்காரணமாக அமைந்தவர் மணவையாரே ஆவார்.

இவர் ஆங்கிலத்திலிருந்தும் மலையாளத்திலிருந்தும் மொழிபெயர்த்த நூல்களில் குழந்தை இலக்கிய நூல்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளன. அவற்றை அவர், குழந்தைக்குரிய சொல்லாட்சித் திறன் எவ்வளது என்பதை நுணுகி உணர்ந்து தெளிந்து, அவர்களின் புரிநதுணர்வுக் கேட்ப, நான்கைந்து சொற்களைக் கொண்ட இனிய, எளிய நடையில், பெயர்த்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதே போன்று 'புதிய கண்டுபிடிப்புகளின் வரலாறு' போன்ற அறிவியல் நூல்களையும் இவர் வகுத்துள்ள மொழி பெயர்ப்பு முறைகளைப் பின்பற்றி கருத்துச் சிதைவு சிறிதுமின்றி சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார். அவற்றைப் படிக்கும்போது மொழிபெயர்ப்பு என்ற உணர்ச்சியே எழாது, மூலமாக தமிழில் எழுதப்பட்டவை போன்ற உணர்வே

அழுத்தமாக ஏற்படுகிறது. அந்த அளவுக்கு இவரது மொழி பெயர்ப்பு ஆற்றல் மிக்கதாக அமைந்துள்ளது.

இவர் மலையாள மொழியில் பெயர்த்த சாகித்திய அகடாமிப் பரிசு பெற்ற எம்.டி வாசுதேவ நாயரின் 'காலம்' என்ற புதினத்தின் மொழிபெயர்ப்பை 'மொழியாக்கம்' (Transcreation) என்ற மொழி பெயர்ப்பு உத்தியைக் கையாண்டு பெயர்த்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவ்வகை மொழிபெயர்ப்பு முறை மூலத்தின் தன்மையைச் சிறிதும் பாதிக்காது, மூல மொழி படைப் பிற்கு மேலும் மெருகூட்டும் முறையில், எந்த மொழியில் பெயர்க்கப்படுகிறதோ அந்த மொழியின் இயல்பிற்கேற்ப சுவையோடு பெயர்க்கப்படுவதாகும். இத்தகைய படைப்பி லக்கிய மொழி பெயர்ப்பைப் படிப்போர் மொழிபெயர்ப்பு என்ற உணர்வையே பெறமாட்டார்கள். எனவே, 'காலம்' புதின மொழிபெயர்ப்பை 'இந்து' ஆங்கில நாளிழதழில் விமர்சனம் செய்த விமர்சகர் ஆர்.ஏ. பத்மநாபன் அவர்கள் ''மலையாள மொழியினின்றும் தமிழில் பெயர்க்கப்பட்ட 'காலம்' என்ற புதினம், தமிழில் எழுதப்பட்ட மூல நூல்போலவே அமைந்துள்ளது. மொழிபெயர்ப்பு என்ற உணர்வே படிப்போர்க்கு உண்டாகதவாறு மணவை முஸ்தபா திறம்பட மொழியாக்கம் செய்துள்ளார். ஒரு படைப்பிலக்கியம் எவ்வகையில் வெற்றிகரமாக மொழிபெ யர்ப்பது என்பதற்கு இந்த மொழிபெயர்ப்பு நூலே தக்க சான்றாகும்'' எனக் குறிப்பிட்டு மதிப்புரைத்துள்ளது. மண வையாரின் மொழிபெயர்ப்பு உத்திக்குக் கிடைத்த மா பெரும் வெற்றியாகும்.

மணவை முஸ்தபா இதுவரை மொழிபெயர்ப்புத் துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு உத்திகளை வகுத்துக் காட்டியிருப்பதோடு, அவைகளை தானே செயல்படுத்தி

வெற்றி கண்டு வழிகாட்டிக் கொண்டு வருகிறார். மொழி பெயர்ப்பை ஒரு ஆற்றல் மிக்க அருங்கலையாக, இக்கால மொழித் துறைகளில் தவிர்க்கவியலா தனித் துறையாக வளர்த்து வரும் பான்மையைப் பாராட்டி ஊக்குவிக்கும் முறையில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை 1994ஆம் ஆண்டில் சிறந்த மொழிபெயர்ப்பாளர்க்கான விருதளித்துப் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு அறிவியல் தமிழின் பெருங் கூறாக அமைந்துள்ள மொழிபெயர்ப்புக் கலையை, ஆற்றல் மிக்கத் தனித் துறையாக வளர்த்தெடுப்பதில் கடந்த நாற்பதாண்டுகளாக பெரு முயற்சி மேற்கொண்டு உழைத்து வரும் மணவையாரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

★

# தமிழ் வளர்ச்சியில் "கூரியர்" பங்கு

**இரா. நடராசன்**, எம்.ஏ., பி.ஏ.எல், இதழியல் பட்டயம்,
தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் (ஓய்வு)

*ஐக்கிய நாடுகள் அமைவனத்தின் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனமாகிய யுனெஸ்கோ 30 உலக மொழிகளில் ஒரே சமயத்தில் வெளியிட்டு வரும் திங்களிதழ் "யுனெஸ்கோ கூரியர்". இந்தியாவில் தமிழிலும் இந்தி மொழியிலும் மட்டுமே இவ்விதழ் வெளிவந்துகொண்டிருக்கிறது. தமிழக அளவில் மட்டுமின்றி, பன்னாட்டளவிலும் அனைத்து அறிவியல் துறைகளையும் தெளிவாகவும், துல்லியமாகவும் தமிழில் தரமுடியும் என்பதை "யுனெஸ்கோ கூரியர்" தமிழ்ப் பதிப்பு ஆழமாகவும், அழுத்தமாகவும் உலகுக்கு உணர்த்தி நிலைநாட்டியிருக்கிறது.*

## செய்தியாளர்

யுனெஸ்கோ நிறுவனம் 1945இல் நிறுவப்பெற்ற பிறகு தனக்கென ஒரு திங்களிதழைத் தொடங்க முடிவு செய்தது. இந்த இதழுக்கு "Courier" எனப் பெயரிடப்பட்டது. ஃபிரெஞ்சு மொழியில் "Courier" என்றால், "செய்தியாளர்" (Messenger) என்று பொருள். இந்த இதழ் 1946 முதல் வெளிவரத் தொடங்கியது. அது முதல் இவ்விதழ் "உலகின் பலகணி"யாக (Window to the world) விளங்குகிறது.

தமிழில் "கூரியர்" இதழ் வெளிவந்தது ஒரு சுவையான நிகழ்ச்சி. பலதுறை சார்ந்த நூல்களையும், உலக இதழ்களையும் படிப்பதில் பேரார்வம் கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆங்கிலக் "கூரியர்" இதழினை வழக்கமாக விரும்பிப் படிப்பவர். பல்வேறு நாடுகளையும், அவற்றின் சமூக, பண்பாட்டுச் சிக்கல்களையும், அன்றாட அறிவியல் முன்னேற்றங்களையும் உலக மக்களுக்கு வழங்கி வரும் "கூரியர்" இதழ் தமிழ்ப்பதிப்பாகவும் வெளிவந்தால் அவற்றை விரிவான கண்ணோட்டத்தில் தமிழக மக்கள் நன்கு புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று அவர் எண்ணினார். அவர் தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்ற பின்னர், அப்போது யுனெஸ்கோவின் துணைத் தலைமை இயக்குநராகப் பணியாற்றிவந்த நம் தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் மால்கம் எஸ்.ஆதிசேஷையா அவர்கள் முதல்வர் அண்ணாவைச் சந்தித்தபோது "கூரியர்" இதழை தமிழில் வெளியிடவேண்டும் என்ற தமது விருப்பத்தை வலியுறுத்தினார். டாக்டர் ஆதிசேஷையாவும் ஆவன செய்வதாக உறுதியளித்தார். இது குறித்து தமிழக அரசுடன் நேரடியாக யுனெஸ்கோ பேச்சு நடந்த முடியாத நிலையிலும், இந்திய அரசுடன் அவர் பேச்சு நடத்த வேண்டியிருந்தது. அரசின் ஆட்சிமொழியான இந்திக்குக் கிடைக்காத வாய்ப்புத் தமிழுக்குக் கிடைப்பதா என்று மைய அரசு எண்ணியது. "கூரியர்" இதழை இந்திமொழியிலும் வெளியிடுவதாக இருந்தால் தமிழ்ப்பதிப்புக்கு அனுமதி அளிப்பதாக இந்திய அரசு நிபந்தனை விதித்தது. எனவே தமிழ், இந்தி ஆகிய இருமொழிப்பதிப்புகளுக்காகவும் யுனெஸ்கோவுடன் அவர் வாதாட வேண்டியதாயிற்று. இறுதியில், இரு மொழிகளிலும் "கூரியர்" இதழைக் கொண்டுவர யுனெஸ்கோவின் அனுமதியைப் பெற்றார். இவ்வாறு யுனெஸ்கோவின் நிதியுதவி, இந்திய அரசின் நிதியுதவி, ஓரளவு தமிழக அரசின்

மானியம் இவற்றுடன் ''கூரியர்'' தமிழ்ப்பதிப்பு 1967 ஜூலை முதல் வெளிவரலாயிற்று. இந்தி மொழிப்பதிப்பு 1968 இல்தான் வெளிவரத்தொடங்கியது. தமிழ்க் ''கூரியர்'' இதழின் ஆசிரியராக திரு. மணவை முஸ்தபா தொடக்கம் முதல் இன்று வரைப் பணியாற்றி வருகிறார். தமிழ்ப்பதிப் பினை அமைப்பு, அச்சு, உள்ளடக்கநேர்த்தி எல்லாவற்று டனும் குறித்த காலக்கெடுவுக்குள் கொண்டு வந்து, தமிழ்ப் பதிப்புக்கு உலக அரங்கில் நான்காவது இடத்தைப் பெற்றுத் தந்த பெருமையும் மணவையாரையே சாரும்.

இந்திய அரசின் இந்தி மொழி இயக்ககத்தின் பெரும ளவு நிதியுதவியுடனும், பணியாளர்கள் பலத்துடனும் வெளி வந்த இந்திமொழிப்பதிப்பு இன்றளவும் சிறப்பான முறை யில் வெளிவரவில்லை. அதன் ஆசிரியர்கள் எத்தனையோ பேர் மாறிவிட்டார்கள். காலக்கெடுவுக்குள் வராமலும், இடையிடையே நின்று போயும் வெளிவந்து கொண்டிருந்த இந்திமொழிப் பதிப்பு கடந்த ஈராண்டுகளாக வெளிவருவ தாகத் தெரியவில்லை.

ஆனால், அதே சமயத்தில் கடந்த 32 ஆண்டுகளாக, தனியொருவராக இச் சர்வதேசத் திங்களிதழைத் திறம்பட நடத்தி வருகிறார் மணவையார். இது இவருடைய ஆளுமை யைக் காட்டுகின்றது.

இந்தி மொழிப்பதிப்பு சரிவர வெளிவராத நிலையில், தமிழ்ப்பதிப்பு உயர்தரத்துடன் தொய்வின்றி வெளிவரு வதைக் கண்டு மனம்பொறாதவர்கள். தமிழ்ப் பதிப்பினை நிறுத்தி விடும் முயற்சியை தில்லியில் மேற்கொண்ட போது, இதன் நிர்வாக ஆசிரியர் மணவை முஸ்தபாவின் சாதுரியமான நடவடிக்கையின் விளைவாக, அவரின் வேண்டுக்கோளுக்கிணங்க அப்போதைய நாடாளுமன்ற (மக்களவை) உறுப்பினர் டாக்டர். கலாநிதி அவர்கள்

தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தியை நேரில் சந்தித்தும். மாநிலங்களவையில் திரு. வலம்புரி ஜான் உணர்ச்சி பொங்க உரையாற்றியும் ''கூரியர்'' தமிழ்ப் பதிப்பு எக்காரணத்தைக் கொண்டும் நிறுத்தப்படமாட்டாது என்ற உறுதிமொழி யினைப் பெற்றுத் தந்தார்கள்.

இவ்வாறு எத்தனையோ இன்னல்களையும், இடர்ப் பாடுகளையும், சோதனைகளையும் சமாளித்து வீறுநடைப் போட்டு வரும் இதழ் ''கூரியர்'' தமிழ்ப்பதிப்பாகும்.

இது கல்வி, அறிவியல், பண்பாட்டு இதழாக அமைந் திருந்தபோதிலும், இதில் மிக அதிக அளவில் இடம்பெறு வது அறிவியல் கட்டுரைகளேயாகும். இதில் இடம் பெறும் அறிவியல் கட்டுரைகள் தற்கால அறிவியல் துறைகள் பல வற்றிலும் ஏற்பட்டுவரும் முன்னேற்றங்களையும், புதிய கண்டுபிடிப்புகளையும் அந்தத் துறையைச் சார்ந்த உலகப் புகழ்பெற்ற வல்லுநர்களைக் கொண்டு எழுதப்படுகின்றன. அவை தமிழில் உடனுக்குடன் மொழிபெயர்க்கப்பட்டு மேனாட்டு இதழ்களுக்கு இணையாக ஆங்கில இதழ் வெளி யாகும் அதே சமயத்திலேயே தமிழிலும் வெளியிடப்படு கின்றன. இத்தகைய அரிய வாய்ப்பினைப் பெற்றுள்ள ஒரே தமிழ் இதழ் இதுவேயாகும். பாவேந்தர் பாரதிதாசன்,

வெளியுலகில் சிந்தனையில் புதிது புதிதாக
பிணைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்
எல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும்
வேண்டும்''

என்று கண்ட கனவினை ''கூரியர்'' தமிழ் இதழ் மூலம் மணவையார் நனவாக்கி வருகிறார்.

## மொழி பெயர்ப்பு உத்திகள்

இவ்விதழில் வெளிவரும் கட்டுரைகள் முழுவதும் மொழிபெயர்ப்புகளாகவே வெளியிடப்படுகின்றன. ஆங்கிலக் கட்டுரையின் அளவிலேயே மொழிபெயர்ப்புக்கட்டுரையும் அமையவேண்டிய கட்டாயம் காரணமாக, மொழி பெயர்ப்பு சொற்செட்டோடும், பொருட்செறிவோடும், எளிமையாகவும், இனிமையாகவும் இருக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. மொழிப்பெயர்ப்பு என்ற உணர்வே வாசகர்களுக்கு ஏற்படாத வண்ணம், தமிழிலேயே மூலமாக எழுதப்பட்டது போன்று தரவேண்டியுள்ளது. இதற்காக மணவையார் வகுத்தளித்துள்ள புதிய உத்திகளைக் கையாண்டு கட்டுரைகளை மொழிப்பெயர்ப்பாளர்கள் தமிழாக்கம் செய்கிறார்கள். இவ்வாறு புதிய புதிய மொழிபெயர்ப்பு உத்திகளைக் கண்டறிந்து செயற்படுத்த ஏற்ற களமாக ''கூரியர்'' தமிழ் இதழ் விளங்குகிறது. 15 ஆம் நூற்றாண்டுக் கவிஞன் காளிதாசனின் ஒரு வருணனை கவிதை நயம் சொட்டச்சொட்ட இவ்வாறு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

''காமக்கேளிக்கையினை விழையும் கரிய யானைகளைப்போல், சூல்கொண்ட கருமேகங்கள் திரண்டு எழுகின்றன. கொந்தளிக்கும் படைக்கடலிடையே வீறுகொண்ட அரசர்கள்போல் அவை பீடுநடை போடுகின்றன. மின்னல் தான் அவர்களின் கொடிகள்; இடி முழக்கமே போர் முரசொலி'' (1989 ஏப்ரல் இதழ்)

## இதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு

''என் அண்ணன் பிறந்த கிராமத்தில் உழவர் பெருமக்கள் மழைவேண்டிப் பாட்டுப் பாடிக்கொண்டு புழுதி கிளம்பும் வீதிகளில் பெரிய கூடையினைத் தாங்கியவாறு

ஊர்வலம் செல்வார்கள். அந்தக்கூடையில் வேப்பிலைகளுக்கு மத்தியில் பெரிய ஆண் தவளைகளைக் கட்டி வைத்திருப்பார்கள். "மழையே வருக! "என்று அவர்கள் எழுப்பும் முழக்கம் அமைதி தவழும் வெப்பக்காற்றில் கலந்து வானைப் பிளந்திடும். தகிக்கும் வெயிலில் காயும் குடிசைகளிலிருந்து குழந்தைகள் ஓடிவந்து தவளையின் மீது அரிய நீரைத் துளித்துளியாக ஊற்றுவார்கள். மாலையில் வானில் கருமேகங்கள் சூழும்; இடி முழங்கும்; மழை பொழியும்! (1982 ஏப்ரல் இதழ்)

இயல்பான நடையில் ஆற்றொழுக்கெனச் செல்லும் இந்த வாசகத்தை மொழிபெயர்ப்பு என்று கூறமுடியுமா? கவிதைகள்கூட மூலமொழிக் கருத்தினையும், உணர்வினையும் எந்த வகையிலும் சீர்குலைக்காமல் கவிதையழகு, யாப்பமைதி, சந்தநயம் அனைத்தும் மிளிர தமிழில் இறக்கப் படுகிறது.

நாடு திரும்பி நீ
வந்ததும் தோழனே!
பீடுயர் சுதந்திரக்
கொடியினை ஏற்றிடு!
விடுதலை கீதம்
வீறுடன் பாடிடு!
தாய்க்குல உரிமைக்குத்
தளராது போரிடு!
பெரியநம் சமூகச்
சோதனைக்கூடத்தில்
சரிநிகர் சமான
நிலையினை நாட்டிடு! (1989 ஆகஸ்ட் இதழ்)

பின்னாளில் பொதுவுடைமைச் சீனாவின் தலைமை அமைச்சராக விளங்கிய சூ-என்-லாய், தம் 22வது வயதில்

*(1920),* ஃபிரான்சுக்குப் படிக்கச் சென்ற வகுப்புத் தோழனுக்கு எழுதிய கவிதைக் கடிதமே இது. இத்தகைய மொழி பெயர்ப்புகள் மூலம் தமிழ்மொழிக்கு ஆக்கம் சேர்க்கிறது ''கூரியர்'' இதழ்.

## அறிவியல் உண்மைகள்

தமிழ்மொழியில் எல்லாக் கருத்துகளையும், எடுத்துச் சொல்ல முடியும் என்பதைக் ''கூரியர்'' இதழ் எடுத்துக் காட்டி வருகிறது. பல்வேறு அறிவியல் உண்மைகளையும், பண்பாட்டுக் கருத்துகளையும் தமிழ் மக்கள் பெறுவதற்கு தமிழ்க் ''கூரியர்'' இதழ் வாய்ப்பளித்து வருகிறது. இன்று சுற்றுப்புறச் சூழல் தூய்மைக்கேடு குறித்து உலகெங்கும் நிறையப் பேசுகின்றோம். இதுபற்றி இத்துணையளவு பேசுவது தேவைதானா என்று சிலர் கேட்கின்றனர். அவர்களுக்கு அறிவியல் நோக்கில் இவ்வாறு பதிலளிக்கிறது ''கூரியர்'':

''அடுத்த 50 ஆண்டுகளில் உலக வெப்பநிலை உயர்வதால் பல தொடர் விளைவுகள் ஏற்படும். பசுமை இல்ல விளைவினால் மழைபொழியும் பாங்கில் திடீர் மாற்றம் உண்டாகும். சில இடர்களில் வறட்சி நிலவும். இதனால் தாவர வாழ்க்கை பாதிக்கப்படும். இதன் விளைவாகத் தீவனத்திற்குத் தாவரங்களை நம்பி வாழும் விலங்குகளும் பாதிப்புக்குள்ளாகும். தாவர வாழ்வில் ஏற்படும் மாற்றத்தினால் தட்வெப்பத்திலும் மாறுதல் ஏற்படும். உலகளாவிய வெப்ப அதிகரிப்பினால் சில பகுதிகளில் உணவுப்பயிர்கள் அழிந்துபடும்; மண் அரிமானம் அதிகமாகும். புதிய சூழலில் நச்சுப்பூச்சிகளின் படையெடுப்பு மிகுதியாகும்''

*(1989 டிசம்பர் இதழ்)*

''எண்சான் உடம்புக்குச் சிரசே பிரதானம்'' என்பர். ஏனெனில், சிரசில்தான் மனிதனின் மூளை இருக்கிறது.

*மூளை என்றால் என்ன?*

*''மூளை - மனிதனின் சிந்தனைக்கும் செயலுக்கும், உணர்ச்சிக்கும் ஊற்றுக்கண். மண்டையோட்டுக் கவசத் திற்குள், பல சவ்வுப் படலங்களின் உறையினுள், அதிர்ச்சி தாங்கும் திரவ மெல்லணையின் பாதுகாப்பில் பொதிந்தி ருக்கும் மூளை, பல அடுக்கு மடிப்புகளைக் கொண்டது. சிறு முலாம்பழத்தின் அளவே அமைந்த இதன் எடை 1360 கிராம். குறுகிய இடத்தினுள் ஒடுங்கிக் கிடக்கும் மூளையில் 1000 கோடி நியூரான்கள் அடங்கியுள்ளன. மூளை இயக்க அலகுகள், நுண்ணிய நரம்பு உயிரணுக்களாலானவை. இந்த மூளை கோடிக்கணக்கான தனிச்சுற்றோட்டங்களைக்கொண் டது. இச் சுற்றோட்டம் ஒவ்வொன்றும் அதனதன் தனி அலு வலைச் செய்கிறது.'' (1982 ஏப்ரல் இதழ்)*

*அறிவியலை அழகிய, இனிய, எளிய, இலக்கியத் தமிழில் கூற இயலும் என்பதைக் 'கூரியர்' இவ்வாறு மெய்ப் பித்துவருகிறது. ''வால் நட்சத்திரம்'' என்றால் என்ன? இது எவ்வாறு தோன்றுகிறது? இதற்கு ஓர் எளிய விளக்கம்:*

*''சுற்றிவரும் ஒரு விண்மீன் அவ்வப்போது ''ஊர்ட்'' மேகத்தின் வழியே ஈர்ப்பாற்றலுடைய அதிர்வு அலையை அனுப்புகிறது. இந்த அதிர்வலையின் காரணமாக. இந்த மாசுற்ற பனித்திரள்கள் சிதறுண்டு, விண்வெளியில் சில குறுகிய கால வால்விண்மீன்களாக உருமாறுகின்றன. இவை சூரிய மண்டலத்தை நோக்கி நீள் வடிவம் பெறுகின் றன. இத்தகைய குறுகிய கால விண்மீன்களில் ஒன்றுதான் ஹேலி விண்மீன்'' (1986 மே இதழ்)*

## புதிய சொற்கள்

*தமிழில் புதிய சொற்களை எளிதாகப் . புனைய முடியும் என்பதையும் ''கூரியர்'' தமிழ் இதழ் உணர்த்திவரு*

கிறது. பல்லாயிரக்கணக்கான புதிய சொற்களை காலத்திற் கேற்ற சொற்களை - அறிவு உலகத்திற்கேற்ற சொற்களைக் ''கூரியர்'' இதழ் தமிழுக்கு வழங்கிவருகிறது. ''Computer'' என்னும் ஆங்கிலச் சொல் இன்று உலகமெங்கும் வெகு வாகப் பயன்படுத்தப்பட்டுவரும் சொல். ''Computer'' துறையில் தமிழகம் உலக முன்னணி பெற்றுவரும் இந் நாளில் இந்த ஆங்கிலச் சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் தேவைப்பட்டது. சிலர் ''கணிப்பொறி'' என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள். ''கணிதி'' என்ற சொல்லும் பயன் படுத்தப்பட்டது. ''கூரியர்'' தமிழ்ப்பதிப்பில் ''கணினி'' என்ற சொல் பதினைந்து ஆண்டுகட்கு முன்பே உருவாக்கிப் பயன்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இன்று ''கணினி''என்ற சொல்லே ஆட்சித்துறையிலும், கல்வித் துறையிலும், தொழில் நுட்பத்துறையிலும் பயன்படுத்தப்ப டுகிறது. கணினியுடன் தொடர்புடைய 'மென்பொருள்' (Software), இணையம் (Internet), 'வன்பொருள்' (Hardware) என்ற சொற்களும் 'கூரியர்' புனைந்த புதிய சொற்களே யாகும். அதேபோன்று "AIDS" (Acquired Immuno Deficiency Syndrome) என்ற சொல்லுக்கு ''ஏமக்குறைவு நோய்'' என்ற சொல்லை உருவாக்கி வழக்குக்குக் கொண்டுவந்தது, ''ஏமக் குறைவு நோய்: உலகளாவிய நெருக்கடி'' என்ற மையப்பொ ருளுடன் ஒரு சிறப்பிதழும் (1995 ஆகஸ்ட்) வெளிவந்தது. ஆங்கிலத்தில் Institution, Organisation, Net work போன்ற சொற்கள் வேறுபட்ட பொருட்சாயல்களைக் கொண்டவை. இச்சொற்களுக்கு இணையாக நிறுவனம் (Institution) அமை வனம் (Organisation), இணைவனம் (Network) என்ற மாறு பட்ட சொற்களைத் தமிழில் உருவாக்கிக் ''கூரியர்'' தமிழ்ப் பதிப்பு பயன்படுத்திவருகிறது.' இவ்வாறு பல்வேறு துறை களிலும் பல புதிய சொற்களை ஆக்கிக்கொடுத்துத் தமிழின் சொற்களஞ்சியத்திற்குக் ''கூரியர்'' இதழ் வளம் சேர்த்துவரு கிறது.

## வாழும் பண்பாடு

இவை மட்டுமன்றி, தமிழ்க் ''கூரியர்'' இதழின் ஆசிரியர் திரு.மணவை முஸ்தபா அவர்களின் பெருமுயற்சியின் விளைவாக ''தமிழரின் வாழும் பண்பாடு'' (the living culture of the Tamils) என்ற மையப் பொருளில் ஒரு ''கூரியர்'' சிறப்பிதழ் 1984 ஆம் ஆண்டு தமிழ் உட்பட 35 உலகமொழிகளில் வெளிவந்தது. இதன் மூலம் தமிழரின் பண்பாட்டுச் சிறப்புகளை ''கூரியர்'' உலகறியச் செய்தது. பல உலகத்தமிழ் மாநாடுகள் சாதிக்க முடியாத சாதனையைத் ''கூரியர்'' தமிழ் இதழ் சாதித்துத் தமிழ்ப்பண்பாட்டின் வாழும் பெற்றியை உலகெலாம் பரவ வகை செய்தது. இதே போன்று, திரு. முஸ்தபா மீண்டும் 5 ஆண்டுகள் அரிதின் முயன்று 1989 இல் ''இந்தியா'' பற்றிய 'கூரியர்' சிறப்பிதழ் 30 உலக மொழிகளில் வெளிவரக் காரணமாக இருந்தார். இது இந்தியாவின் கடந்தகாலச் சிறப்பையும் நிகழ்கால முன்னேற்றத்தையும் உலகுக்குத் தெளிவாக எடுத்துரைத்தது.

இவ்வாறு'கூரியர்' தமிழ் இதழ் உலகெங்கும் வளர்ந்தோங்கும் அறிவியல், கலை, நாகரிக, வரலாற்றுச் செய்திகளை எல்லாம் தமிழில் வகை வகையாக வழங்கித் தமிழ் உலகிற்குத் திருத்தொண்டு செய்து வருகிறது. கடந்த 32 ஆண்டுகளாக அறிவியல் கட்டுரைகளைத் திட்பமுடன் தமிழில் வழங்கி வருவதன் மூலம் 'கூரியர்' இதழ், தமிழ் 'ஓர் அறிவியல் மொழி' என்பதை உலகுக்கு நேரடியாக எண்பித்து வருகிறது.'கூரியர்' இதழ் மூலம் உலகப் பெரும் மொழிகளுக்கு இணையான இடத்தைத் தமிழ் பெற முடிந்தது. இதன் மூலம் இந்திய மொழிகளுள் பன்னாட்டு அரங்கில் ஓர் உயர் இடத்தைப் பெற்ற ஒரே மொழி என்ற தனிப் பெருஞ் சிறப்பும் தமிழுக்குக் கிடைத்துள்ளது. கவிஞர் மு.மேத்தா கூறியிருப்பது போல்,

கூரியர் -
விஞ்ஞான உலகத்தைப்
பார்ப்பதற்கு
தமிழ்த்தாய் அணிந்துகொண்ட
கண்ணாடி அல்ல இது...
கண்!

கூரியர் ஓர்
இதழல்ல...
இயக்கம்!
இது வெறும்
பத்திரிகையல்ல!
பாசறை!

இது...
தன் வாழ்வையெல்லாம்
அறிவியல் தமிழுக்கே
அர்ப்பணித்துக் கொண்ட
மணவை முஸ்தபாவின்
மாபெரும் சாதனை
மனித உழைப்பின் மகத்தான கீர்த்தனை

''கூரியர்
கொடுக்கும் வெளிச்சத்தில்
தமிழ்
பகல் என்னும் பல்லக்கில்
பவனி வருகிறது!''

★ ★ ★

# வளரும் தமிழுக்கோர் மணவையார்

பாவலேறு பெருஞ்சித்திரனார்

இன்றைய நிலையில் தமிழாக்க முறையில், அறிவியல் துறையில் பெரிதும் ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் தமிழியல் பேரறிஞர் மணவை முஸ்தபா அவர்கள் பற்றித் தமிழ் கூறும் நல்லுலகிற்குச் சில விளக்கங்களைக் கூறியாகல் வேண்டும்.

வெறும் இலக்கியங்களை மட்டுமே தெரிந்து, அல்லது அறிந்து, அல்லது ஆய்ந்து தமிழறிஞர்களாக உலா வந்து கொண்டிருப்போரே பொதுமக்களுக்கும் புலமக்களுக்கும் அறிமுகம் ஆகி வருகின்ற இந்நாளில், தமிழ்ச்சொல்லியல், மொழியியல், அறிவியல் ஆகிய கூறுகளை நன்கு உணர்ந்து கொண்டு நம் இயற்றமிழ் மொழியை அறிவியல் மொழியாக வளர்த்து வருவதில் பேருழைப்பை நல்கி வரும் தமிழறிவியல் பேரறிஞர் மணவை முஸ்தபா அவர்கள் அனைவரும் பாராட்டும் வகையில் மிகச் சிறப்பாக பணி செய்து வருகிறார். அவரின் தமிழ்த்தொண்டுக்கே பெருஞ் சிறப்புத் தருவது, தம்மளவில் அவர் எவ்வகை ஆரவாரமும், விளம்பரத்தனமும் தன்முனைப்பும் இன்றி, அமைதியாகப் பாடாற்றி வருவதுதான்.

அவர் எப்பொழுதும் தமிழியலைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது, அவருடன் தொடர்பு கொண்டிருப்பவர்

களுக்கு நன்கு தெரியும். அவர் சார்ந்த இஸ்லாமிய மதவியலில் அவர் சிறந்த ஓர் ஆய்வறிஞராகத் திகழ்கின்றவர் எனினும், அவர் சிந்தனை, பேச்சு, எழுத்து, செயல் அனைத்தும் தமிழ் வளர்ச்சியை அதுவும் அறிவியல் தமிழை வளர்த்தெடுப்பது பற்றியே சுற்றிச் சுழன்று கொண்டிருப்பதை அவரை நெருங்கி பார்ப்பவர் நன்கு விளங்கிக் கொண்டிருக்க முடியும். அறிவியல் தமிழுக்காக அவர் ஆற்றிய, ஆற்றி வருகின்ற பணிகள் அளவிறந்தனவாகும்.

இவரின் தமிழ்த்தொண்டுக்கு ஒரு சான்றாக, 'யுனெஸ்கோ கூரியர்' என்னும் தமிழ்ப் பதிப்பு இதழிகையின் ஆசிரியர் பொறுப்பில் நீண்டகாலமாகப் பணியாற்றி வருவதைக் குறிப்பிட்டே ஆகல் வேண்டும். இவ்விதழின் கண் இவர் கண்டுபிடித்துப் பயன்படுத்திய தூயதமிழ்ச் சொற்களும், அறிவியல், தொழிலியல், நுண்தொழிலியல், வரலாற்றியல், பொருளியல், குமுகவியல் மொழிபெயர்ப்புக் கலைச் சொற்களும் தமிழியல் வளர்ச்சிக்கும் தூய தமிழ் ஆக்கத்திற்கும் உரம் சேர்ப்பவை.

கடந்த 46 ஆண்டுகளாக 33 உலக மொழிகளில் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழின் தமிழ்ப்பதிப்பு ஆசிரியராகக் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து ஆசிரியப் பணியாற்றி வருபவர் இவர் ஒருவர் மட்டுமே என்பது தமிழ்மொழிக்கும் இனத்துக்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பதாகும்.

உலக மொழி இதழ்களில் தமிழ்ப்பதிப்பிற்கு நான்காவது இடத்தைப் பெற்றுத் தந்த பெருமைக்குரியவர் இவர். 1967ஆம் ஆண்டு 'யுனெஸ்கோ கூரியர்' தமிழ்ப் பதிப்பு வெளிவரத் தொடங்கியது. அது தொடங்கிய பத்து ஆண்டுகளுக்குள் அதன் மொழித்திறன், அழகிய வடிவமைப்பு, அச்சுமுறை ஆகியவற்றிற்காக அது நான்காம் இடத்தைப் பெற்று, அந்நிலையை இன்றுவரை தக்கவைத்துக் கொண்டுள்ளதற்கு,

அறிஞர் முஸ்தபா அவர்களின் அயராத உழைப்பு, தமிழறிவு, தமிழ்மொழியை உலகமெலாம் பரப்பவேண்டும் என்னும் நன்னோக்கம், உண்மையான தமிழ்ப்பற்று, தொண்டுள்ளம், அறிவியல் ஈடுபாடு முதலிய சிறப்புத் தகுதிகளே காரணம் ஆகும்.

உலக இதழாகிய 'யுனெஸ்கோ கூரியர்' பெரிதும் அறிவியல் தொடர்பான கட்டுரைகளையே வெளியிட்டு வரும் ஓர் அரிய ஆய்விதழாகும். இதனுள் வெளியிடப் பெற்று வரும் கல்வி, கலை, பண்பாடு, வரலாற்றியல், குமுகவியல் செய்திகளும் கூட அறிவியல் நோக்கோடு வெளிவருவன வாகும். இதனுள் வரும் அறிவியல், இயந்திரவியல், தொழிலியல், தொழில் நுட்பவியல், மருத்துவ இயல் தொடர்பான செய்திகளை நுட்பமாகவும், எல்லார்க்கும் விளங்கும் வகையிலும் வெளிப்படுத்த வேண்டும் என்றால், அவற்றுக்குத் தக்கபடியான புதிய கலையாக்கச் சொற்களை உருவாக்க வேண்டியது மிகவும் முகாமையான செயலாகும். இதனை ஒரு நோக்கமாகவும் இன்றியமையாத் தேவை யாகவும் ஏற்றுக்கொண்டு, ஒவ்வொர் இதழிலும் நூற்றுக் கணக்கான அறிவியல் தமிழ்ச்சொற்களை உருவாக்கும் திறன் மிகக் கடினமான சிந்தனையுடன் கூடிய செயற்பணியைக் கடந்த 26 ஆண்டுகளாகத் தொய்வின்றியும், சலிப்பின்றியும் அறிஞர் மணவை முஸ்தபா அவர்கள் ஆற்றி வருகிறார்கள் என்றால், அவரின் அருந்தமிழ் வளர்க்கும் பெருந்தமிழ்ப் பணியை எவ்வாறு புகழ்ந்துரைப்பது! அவ்வகையில் அவர் இதுவரை உருவாக்கியுள்ள புதுமைச் சொற்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஐந்து இலக்கத்திற்கும் மேலாக எனில் அவரின் இடைவிடா முயற்சியை எவ்வளவு போற்றி யுரைக்கினும் பொருந்துவதன்றோ? அறிஞர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

– தென்மொழி, பிப்–மார்ச்'95

தமிழிற்கே தொண்டு செய்து
தமிழிற்கே வாழுந் தமிழன்;
தமிழிற்கே புகழைச் சேர்த்து
தமிழிற்கே சிறப்புச் செய்தோன்;
தமிழிற்கே உயிராய் ஆகி
தமிழிற்கே உடலாய் நிறபோன்;
தமிழிற்கே உழைத்து ழைத்து
தமிழெனவே ஆனான் வாழி!

**- பாவலர் பாலன்**

# அறிவியல் தமிழின் விடிவெள்ளி